56

INDIAN HISTORY

(IN TAMIL)

FOR FORM II AND STANDARD VII

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 JAN 1943
MADRAS

BY
M. SANJEEVI PILLAI, B.A., L.T.,
AND
N. KRISHNA IYER,
St. Xavier's College, Palamcottah.

A. V. D. PACKIAM PILLAI
TIRUNELVELI :: TUTICORIN

Price As. 10

இந்து தேச சரித்திரம்

இரண்டாம் பாரம்—ஏழாம் வகுப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 JAN 1943
MADRAS

954

8810

ஆசிரியர்கள் :

M. சஞ்சீவி பிள்ளை, B.A., L.T.,

AND

N. கிருஷ்ண ஐயர்

அர்ச் சவேரியார் காலேஜ், பாளையங்கோட்டை.

பதிப்பாளர் :

A. V. D. பாக்கியம் பிள்ளை

திருநெல்வேலி ஜங். : : தூத்துக்குடி

1942

[விலை, அணா 10

காபிரைட்டு]

முதற்பதிப்பு 1942

N44

THE B. N. PRESS, MADRAS.

முகவுரை

மாணவர்கள் உண்மை அறிவும், தேசாபிமானமும் உள்ள வர்களாவதற்குத் தேச சரித்திர அறிவு மிகவும் அவசியமானது. ஆகவே, புராதனமான நமது தேசத்தில் நீண்ட காலமாய் வசித்து வந்த மக்களின் வாழ்க்கை, நாகரிகம், கலை வளர்ச்சி, அரசியல் முறை ஆகியவற்றை நம் மாணவர்கள் படித்து, நமது நாட்டின் பண்டைப் பெருமையையும், அதில் நாளடைவில் ஏற்பட்ட மாறு தல்களையும் உணர்ந்து, சிறந்த தேச பக்தியுள்ளவர்களாக வேண் டும் என்னும் நோக்கத்துடன் இளமையிலேயே மாணவர்களுக்குத் தேச சரித்திர அறிவைப் புகட்ட அரசாங்கத்தார் திட்டம் வகுத் திருக்கின்றனர்.

சென்னைக் கல்வி இலாக்கா அதிகாரிகளால் புதிதாக வெளியி டப்பட்டிருக்கிற சரித்திர பாடத் திட்டத்தை அனுசரித்து, இப் புத்தகம் இரண்டாம் பாரத்திற்காக (ஏழாம் வகுப்புக்கும்) எழுதப் பட்டுள்ளது. இப்புத்தகத்திலுள்ள பாடங்கள் மாணவர்கள் நம் நாட்டுச் சரித்திர உண்மைகளை உற்சாகத்துடன் படித்துணரும்படி எளிய நடையில், சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக் கின்றன. ஒவ்வொரு முக்கிய விஷயத்தையும் விளக்கப் பொருத்த மான இடங்களில் உருவப் படங்களும், தேசப் படங்களும் சேர்க் கப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் விஷயங்களைக் கற்று அப்பி யாசம் செய்வதற்குத் தகுதியான கேள்விகள் ஒவ்வொரு பாடத் தின் முடிவிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தைப் பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைத்து ஆதரவளிக்கும்படி ஆசிரியர்களையும், கல்வி இலாக்கா அதிகாரிகளையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

M. சஞ்சீவி பிள்ளை

N. கிருஷ்ண ஐயர்

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	முகம்மதியப் படையெழுச்சிகள்	1
2.	முகம்மது கோரி	7
3.	அடிமைச் சுல்தான்கள்	10
4.	கில்ஜிச் சுல்தான்கள்—அல்லாவுதீன் கில்ஜி	13
5.	முகம்மது துக்ளக்கு	17
6.	சையத்-லோடி வமிசங்கள்	21
7.	பாமனி ராஜ்யம்	23
8.	விஜய நகரம்	27
9.	சித்தூர் ராஜ புத்திரர்கள்	33
10.	மொகலாய அரசர்கள்—பாபர்	36
11.	ஹுமாயூன்	40
12.	அக்பர் சக்கரவர்த்தியார்	44
13.	ஜஹாங்கீர்	52
14.	ஷாஜஹான்	56
15.	ஔரங்கசீபு	61
16.	மொகலாய ராஜ்யத்தின் அழிவு	65
17.	சிவாஜி	68
18.	மகாராஷ்டிரர்களின் முன்னேற்றமும் வீழ்ச்சியும்	76
19.	சீக்கியர்	83
20.	ஆங்கிலேயர் ஆட்சி	88
21.	ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும்	93
22.	தென்னிந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த யுத்தங்கள்	98
23.	வங்காளத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கம்	109
24.	வங்காளத்தில் ஆங்கிலேயரின் ஆட்சியும் இரட்டை ஆதிக்கமும்	113
25.	வாரன் ஹேஸ்டிங்ஸ்	121
26.	காரன் வாலிஸ் பிரபு—சாஸ்வத நிலவரி ஏற்பாடு	135
27.	ஸர் ஜான் ஷோர்	139
28.	வெல்லெஸ்லி பிரபு—உதவிச் சேனை ஏற்பாடு	143
29.	மிண்டோ பிரபு	153
30.	ஹேஸ்டிங்ஸ் பிரபு	156
	முக்கிய நிகழ்ச்சிகள்	162

இந்து தேச சரித்திரம்

1. முகம்மதியப் படையெழுச்சிகள்

கஜினி மஹ்மூது

கி. பி. 647-ஆம் ஆண்டில் **ஹர்ஷ** சக்கரவர்த்தி இறந்த பின் வட இந்தியாவில் ராஜ புத்திரர்கள் என்னும் ஜாதியார் தோன்றினார்கள். அவர்கள் அனேக ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு ஆண்டுவந்தார்கள். கி. பி. பத்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் ராஜபுத்திரர்களது ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. அவர்கள் வீரமும் போர்த் திறமையும் உள்ள ஜாதியினர் என்றாலும், அவர்களிடையே ஒற்றுமை சிறிதும் இல்லை. ராஜ புத்திரர்கள், ஒருவரோடொருவர் அடிக்கடி சண்டையிட்டு வந்தார்கள். அதனால், அவர்களுடைய பலம் குன்றியது. அவர்களால் ஒரு பலமான சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த முடியவில்லை.

தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் பெரிய சாம்ராஜ்யங்கள் ஏற்படவில்லை. அங்கும் **சாளுக்கியர்கள், ராஷ்டிர கூடர்கள், பல்லவர்கள், சேர சோழ பாண்டியர்கள்** ஆகிய பல வமிசத்தார்கள் தனித்தனி சிறு ராஜ்யங்களை ஏற்படுத்தி ஆண்டு வந்தார்கள். அவர்களும் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டு வந்தார்கள். இவ்வாறு கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இந்தியா முழுமையும் பல சிறு ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டு ஒற்றுமையில்லாமல் இருந்தது. ஆகையால், முகம்மதியர்கள் நம் நாட்டின் வடமேற்கிலுள்ள **கைபர், போலன் கணவாய்**களின் வழியாக இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தார்கள்.

முகம்மது நபி—இஸ்லாம் மதம் பரவுதல்: கி. பி. 570-ஆம் ஆண்டில் அரேபியா தேசத்திலுள்ள **மக்கா** என்னும் பட்டணத்தில் **முகம்மது நபி.** அவதரித்தார். அக்காலத்தில் அராபியர்கள் முரடர்களாயும், கல்வி அறிவில்லாதவர்களாயும் இருந்தார்கள். அவர்கள் பல தெய்வங்களைத் தொழுது வந்தார்கள். முகம்மது நபி அராபியர்களைச் சீர்திருத்த விரும்பினர்; அதன் பொருட்டுத் தமது புதியமதமான இஸ்லாம் மதத்தை ஸ்தாபித்தார். கடவுள் ஒருவரே என்றும், விக்கிரக ஆராதனை செய்யக் கூடாது என்றும், மக்களுக்குள் உயர்வு தாழ்வு இல்லையென்றும், மதுபானம் முதலிய தீய வழக்கங்களை ஒழிக்கவேண்டுமென்றும், தினம் ஐந்துதடவை குறித்தவேளைகளில் கடவுளைத் தொழ வேண்டுமென்றும் முகம்மது நபி ஜனங்களுக்கு உபதேசித்தார். அவருடைய கொள்கைகளை அராபியர்கள் முதலில் விரும்பவில்லை. அவர்கள் முகம்மதுவுக்குப் பல தீங்குகளை இழைத்தார்கள். ஆகையால், முகம்மதுநபி கி.பி.622ல் **மக்காவை** விட்டு **மதீனு**வுக்கு ஓடினர். அந்த வருஷத்திலிருந்துதான் **ஹிஜிரா** என்ற முகம்மதிய சகாப்தம் ஏற்பட்டது. மதீனு நகர வாசிகள் இப்புதிய இஸ்லாம் மதத்தைப் பின்பற்றத் தலைப்பட்டார்கள். முகம்மது நபி தமது கொள்கைகளை எல்லோரும் படித்தறியும்படி **'குர்-ஆன்'** என்னும் புத்தகத்தில் எழுதி வைத்தார். அதுவே இஸ்லாம் மதத்தின் வேத நூலாய் வழங்குகிறது.

எட்டு வருஷங்கள் மதீனுவில் தமது மதத்தைப் பிரசாரம் செய்த பின்னர் முகம்மது நபி மக்காவுக்குத் திரும்பினர். அவ்விடத்திலுள்ள ஜனங்களும் முகம்மதிய மதத்தைத் தழுவினார்கள். நாளடைவில் முகம்மதிய மதம் அரேபியா முழுவதும் பரவிற்று. முகம்மது நபி தமது 62-ஆம் வயதில், கி. பி. 632-ஆம் ஆண்டில், காலம் சென்ருர். இறந்த பின் அவருடைய சீடர்கள் பல அன்னிய நாடுகளுக்குச் சென்று தங்கள் மதத்தைப் பரவச்செய்தார்கள். அதன் பயனாக இஸ்லாம் மதம்,

சிரியா, பாரசீகம், துருக்கிஸ்தானம், எகிப்து முதலிய நாடு களிலும் ஐரோப்பாவிலும் பரவிற்று. முகம்மது நபிக்குப் பின் பாக்தாதின் அரசர்களான **காலீப்பாக்கள்** இஸ்லாம் மதத்தலைவர்கள் ஆனார்கள். அவர்கள் தங்கள் நாட்டிற்கருகி லுள்ள துருக்கி, பாரசீகம், பலுச்சிஸ்தானம் முதலிய நாடுகளை ஜயித்து, இஸ்லாம் மதத்தைப் பரப்பினர். கி. பி. 712-ஆம் ஆண்டில் **முகம்மது காஸிம்** என்ற அராபித் தளகர்த்தர், ஒரு சிறு படையுடன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். அவர் சிந்து மாகாணத்தை ஜயித்து, அதைச் சிறிது காலம் ஆண்டு வந்தார். இவ்வாறாக முதன்முதலில் அராபிய முகம்மதியர்கள் சிந்து மாகாணத்தில் குடியேறினார்கள். அது முதல் இருநூறு வருஷங்கள் வரை அராபியரின் ஆட்சி சிந்து மாகாணத்தில் இருந்து வந்தது.

கஜினி மஹ்மூது (கி. பி. 997 - 1030) : கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டில் அராபியர்களுடைய நாட்டைத் துருக்கியர் கைப்பற்றிக்கொண்டனர். 10-ஆம் நூற்றாண்டில் அவர்கள் பாரசீகத்தைக் கைப்பற்றினார்கள். பின்பு ஆப்கானிஸ்தானத்தையும் ஜயித்து, **கஜினி**யைத் தலைநகராகக்கொண்ட ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள். கி. பி. 986-ஆம் ஆண்டில் **சபக்டிஜின்** என்பவர் கஜினிக்கு அரசரானார். அவர் வட இந்தியாவின் செழிப்பையும் செல்வத்தையும் கேள்வியுற்று, அந்த நாட்டைத் தமது ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ள விருப்பம் கொண்டார். ஆகவே, கி. பி. 991ல் அவர் ஒரு பெரிய சைனியத்துடன் வடமேற்கிலுள்ள கைபர்க் கணவாயின் வழியாகப் பஞ்சாபின்மீது படையெடுத்து வந்தார். அப்பொழுது பஞ்சாபில் **ஜயபாலர்** என்ற ஒரு ராஜபுத்திர மன்னர் ஆண்டு வந்தார். அவர் தமக்கு உதவியாக, டில்லி, ஆஜ்மீர், கன்னோசி ஆகிய நாட்டு மன்னர்களைச் சேர்த்துக்கொண்டு முகம்மதியத் துருப்புகளை எதிர்த்துச் சண்டை செய்தார். ஆனால், சபக்டிஜின் வெற்றியடைந்தார்.

அதனால், சிந்து நதிக்கு மேற்கேயுள்ள பிரதேசம் சபக்டிஜின் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

கஜினி மஹ்மூதுவின் படையெடுப்புகள்: கி. பி. 697-ஆம் ஆண்டில் சபக்டிஜின் இறந்தார். அவருக்குப் பின் அவருடைய மைந்தரான கஜினி மஹ்மூது பட்டத்திற்கு வந்தார். அவர் போர்த் திறமையும் மதப் பற்றும் உள்ளவர்; பணம் சேகரிப்பதில் மிக்க ஆசை கொண்டவர்; இந்திய தேசம் செழிப்பும் செல்வமும் பொருந்தியதென்றும், இந்து கோவில்களில் ஏராளமான ஆபரணங்களும், மற்றும் விலையுயர்ந்த பொருள்களும் உண்டென்றும் கேள்விப்பட்டிருந்தார். ஆகவே, அவர் அந்நாட்டின்மீது படையெடுத்து ஏராளமான திரவியத்தைச்சேகரிக்க விரும்பினர். அதன்பொருட்டு அவர் வட இந்தியாவின்மீது பதினேழு தடவைகள் படையெடுத்து வந்தார்.

கஜினி மஹ்மூது

கி. பி. 1001ல் கஜினி மஹ்மூது முதல் தடவையாக இந்தியாவின்மீது படையெடுத்தார். பஞ்சாபு அரசரான ஜயபாலரை அவர் பெஷாவர் என்னுமிடத்தில் தோற்கடித்துத் தமக்குக் கப்பம் கட்டுமாறு செய்தார். ஜயபாலர் இறந்தபின் அவரது மைந்தரான **அனங்கபாலர்** பஞ்சாபில் அரசரானர். அவர் கி. பி.

1008ல் இந்து அரசர்களுள் சிலரைச் சேர்த்துக்கொண்டு கஜினி மஹ்மூதுவை எதிர்த்தார். நடந்த சண்டையில் அனங்க பாலர் தோற்கடிக்கப்பட்டார். பிறகு மஹ்மூது **நாகர்கோட்டை**யைப் பிடித்து அங்குள்ள கோவிலின் ஏராளமானசெல்வத்தை அபகரித்துச் சென்முர். பின்பு அவர் **மதுராபுரி, மூல்டான், தானேசுரம், கன்னேசி** முதலிய நகரங்களையெல்லாம் கொள்ளையடித்தார். கி. பி. 1022ல் மஹ்மூது பஞ்சாபு முழுவதையும் ஜயித்து, கஜினி ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். தமது 13-ஆம் படையெடுப்பில் கஜினி மஹ்மூது, **குவாலியர், களஞ்சார்க்** கோட்டைகளைக் கைப்பற்றினுர்.

கி. பி. 1024ல் கூர்ஜரத்தின்மீது படையெடுத்து அங்குள்ள **சோமநாதபுரம்** என்னும் ஊரிலுள்ள பிரசித்திபெற்ற **சோமநாதர்** ஆலயத்தைத் தாக்கினுர். கோவிலின் முன்பு அவருடைய சைனியத்துக்கும், இந்து அரசர்களுடைய சைனியங்களுக்கும் கடும்போர் நடந்தது. கடைசியில் இந்துக்கள் தோல்வியடையவே மஹ்மூது அங்கிருந்த ஏராளமான தங்கம், வெள்ளி, வைரம் முதலிய விலையுயர்ந்த பொருள்களை அபகரித்துச் சென்முர்.

கஜினி மஹ்மூது பொருள் திரட்டுவதையே தம்முடைய முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தாரேயொழிய, அவருக்கு இந்தியாவில் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆகையால், அவர் ஒவ்வொரு படையெடுப்பிலும் பல பெரிய கோவில்களைக் கொள்ளையடித்து ஏராளமான பொருள்களைக் கைப்பற்றிக்கொண்டு தம் நாட்டிற்குத் திரும்பிவிட்டார்.

மஹ்மூதுவின் நற்குணங்கள்: மஹ்மூது தாம் கொள்ளையடித்த பொருள்களை நல்வழியில் செலவிட்டார். இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்ற பொருள்களைக்கொண்டு, தமது தலைநகரான கஜினியை அழகான பட்டணமாகச் செய்தார்;

மாடமாளிகைகள், மசூதிகள், வித்தியாசாலைகள், பொருட்காட்சிகள், புஸ்தக சாலைகள் முதலியவைகளை அமைத்தார். அவருக்குக் கல்வியில் விருப்பம் அதிகம். அதனால், அவர் கஜினியில் ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்தினார்; பல கல்விமான்களை ஆதரித்தார். அவர்களில் முக்கியமானவர்கள் ஷாநாமா என்னும் நூலை எழுதிய பர்தௌஸியும், ஆல்புரூனி என்னும் வான சாஸ்திரியுமாவர்.

கஜினி மஹ்மூது கி. பி. 1030ல் மரணமடைந்தார். அதன் பிறகு சுமார் 150 வருஷங்கள் வரை அவருடைய சந்ததியார் கஜினியிலும், பஞ்சாபிலும் ஆண்டு வந்தார்கள். பின்பு கோரி வமிசத்தைச் சேர்ந்த வேறு துருக்கிய வகுப்பினர் கஜினியைக் கைப்பற்றிக்கொண்டனர்.

கேள்விகள் :

1. கி. பி. பத்தாவது நூற்றாண்டில் இந்தியாவின் நிலைமை எவ்வாறு இருந்தது?
2. இஸ்லாம் மதத்தை ஸ்தாபித்தவர் யார்? அவர் அவதரித்த இடம் எது? அம்மதம் எந்தெந்த நாடுகளில் பரவியது?
3. முகம்மதிய மதத்தின் கொள்கைகள் எவை?
4. குறிப்பெழுது:—ஹிஜிரா, குர்-ஆன்.
5. கஜினி மஹ்மூது என்பவர் யார்? அவர் இந்தியாவின்மீது படையெடுத்ததன் நோக்கங்களெவை?
6. சோமநாதபுரப் படையெடுப்பைப் பற்றி உனக்கென்ன தெரியும்? (சுருக்கிக் கூறு)
7. கஜினி மஹ்மூதின் நற்குணங்கள் யாவை?

2. முகம்மது கோரி

கோரி வமிசத்து அரசர்களில் **முகம்மது கோரி** முக்கியமானவர். அவர் பெரிய யுத்த வீரர். அவருக்கு இந்தியாவில் ஒரு முகம்மதிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்றும், முகம்மதிய மதத்தைப் பரவச்செய்ய வேண்டுமென்றும் எண்ணம் இருந்தது. அதன்பொருட்டு அவர் ஒன்பது தடவைகள் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். அவர் முதலில்பஞ்சாபை ஜயித்தார்; அதன்பிறகு இந்துஸ்தான் முழுவதையும் ஜயித்துத் தமது ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ள எண்ணம் கொண்டார்.

முகம்மது கோரி

இந்தியாவின் நிலைமை: கஜினி மஹ்மூது காலத்தில் இருந்த ஒற்றுமைக் குறைவு இன்னும் நீடித்திருந்தது. அக்காலத்தில் வட இந்தியாவில் **டில்லி, ஆஜ்மீர், கன்னோசி** என்னும் மூன்று ராஜபுத்திர ராஜ்யங்கள் பிரபலமடைந்தன. டில்லியை **அனங்க பாலர்** ஆண்டு வந்தார். ஆஜ்மீரைப் **பிருதிவி ராஜர்** ஆண்டு வந்தார். கன்னோசியை **ஜயசந்திரர்** ஆண்டு வந்தார். அனங்க பாலருக்கு ஆண் சந்ததியில்லாததால் அவர் தமது முதுமையில் தமது ராஜ்யத்தைத் தமது பேரராகிய பிருதிவிராஜரிடம் ஒப்படைத்

தார். அதனுல், அவருடைய மருமகனுராகிய ஜயசந்திரருக்குப் பிருதிவிராஜரின்மேல் பொருமை ஏற்பட்டது. ஜயசந்திரரின் குமாரி **சம்யுக்தையின்** சுயம்வரத்தின் போது பிருதிவி ராஜர் சுயம்வர மண்டபத்தில் திடீரென்று தோன்றி, அவளைத் தூக்கித் தமது குதிரையின்மேல் வைத்துக்கொண்டு டில்லிக்குச் சென்று, அங்கு அவளைக் கலியாணம் செய்துகொண்டார். அதனுல், ஜயசந்திரரின் பகை அதிகரித்தது. தம் மருமகனுர் என்று கூட நினையாமல் பிருதிவி ராஜரைத் தொலைத்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஜயசந்திரர் முகம்மது கோரியைத் தமக்கு உதவிக்கு வரும்படி அழைத்தார்.

முகம்மது கோரி இந்தியாவின்மீது படையெடுத்தல்: ஏற்கெனவே இந்தியாவின்மீது படையெடுக்க வேண்டுமென்றிருந்த முகம்மது கோரி, தக்க சமயம் கிடைத்ததென்று சந்தோஷத்துடன் கி. பி. 1191ல் ஒரு பெரும்படையுடன் பிருதிவிராஜரை எதிர்த்துச் சென்ருர். **தானேசுரம்** என்னுமிடத்திற்கு அருகிலுள்ள **தாராவரி** என்னுமிடத்தில் இருவருக்கும் கடும்போர் நடந்தது. ஜயசந்திரரைத் தவிர மற்ற ராஜபுத்திர மன்னர்கள் எல்லாம் பிருதிவிராஜருடன் சேர்ந்துசண்டை செய்தார்கள். முகம்மது கோரி முற்றிலும் தோல்வியடைந்து திரும்பினுர்; ஆனுல், மறு வருஷமே ஒரு பெரிய சேனையுடன் திரும்பி வந்து, அதே இடத்தில் பிருதிவியுடன் சண்டை செய்தார். இந்த யுத்தத்தில் மற்ற ராஜ புத்திர மன்னர்கள் பிருதிவி ராஜருக்கு உதவி புரியவில்லை. பிருதிவி ராஜர் அதிக வீரத்துடன் போர் புரிந்து இறந்தார். முகம்மது கோரி ஜயமடைந்தார். டில்லியும், ஆஜ்மீரும் கோரியின் வசமாயின.

மறு வருஷம் முகம்மது கோரி தம்மை விரும்பி அழைத்த ஜய சந்திரரையும் தோற்கடித்துக்கொன்று **கன்னேசி** நாட்டையும் கைப்பற்றிக்கொண்டார். நாளடைவில் காசி, குவாலியர், கூர்ஜரம் முதலிய நாடுகளும் அவருக்கு உட்பட்டன. வட இந்

தியாவில் மாளவம் நீங்கலாக மற்ற ராஜ்யங்களெல்லாம் அவருக்குக் கீழ்ப்பட்டிருந்தன. ஆனால், அவர் தாம் ஜயித்த ராஜ்யங்களைத் தாமே நேரில் இருந்துகொண்டு ஆளவில்லை. தமது சேனைத் தலைவரான **குத்புதீன்** என்பவரைத் தமக்குப் பிரதிநிதியாக நியமித்துவிட்டு, கோரி ஆப்கானிஸ்தானத்திற்குத் திரும்பிச் சென்றார்.

முகம்மது கோரியின் படையெடுப்பின் பலனாக இந்தியாவில் முதல் முதலாக முகம்மதிய ராஜ்யம் ஏற்படுத்தப்பட்டது; இந்தியாவில் இஸ்லாம் மதம் பரவ ஆரம்பித்தது; நம்நாட்டில் இஸ்லாமிய நாகரிகமும், பழக்க வழக்கங்களும் பரவின. ராஜபுத்திர ராஜ்யங்கள் முகம்மதியர் கைவசமானதும், ராஜபுத்திரர்கள் தங்கள் மதத்தையும் கௌரவத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கங்கையும் யமுனையும் பாயும் செழிப்பான ஹிந்துஸ்தான் சமவெளியை விட்டுச் செழிப்பற்ற தார்ப் பாலைவனத்தில் குடியேறி **மார்வார், பிகானீர்** போன்ற சிறிய ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள். அப்பிரதேசம் இப்பொழுது **ராஜபுதனம்** என்று வழங்கப்படுகிறது.

கி. பி. 1206ல் முகம்மது கோரி ஓர் இரவு அயர்ந்து நித்திரை செய்யும்பொழுது முரட்டு ஜாதியான் ஒருவனால் கொலை செய்யப்பட்டார். அவருக்கு ஆண் சந்ததி இல்லாமையால், குத்புதீன் சுயேச்சை பெற்றுத் தாமே டில்லிக்கு அரசரானார்.

கேள்விகள்:

1. முகம்மது கோரி இந்தியாவின்மீது படையெடுத்ததன் நோக்கங்கள் எவை ?
2. பிருதிவி ராஜருக்கும் ஜயசந்திரருக்கும் பகைமை ஏற்படக் காரணங்கள் எவை ?
3. முகம்மது கோரி இந்தியாவில் ஜயித்த நாடுகள் எவை ?
4. முகம்மது கோரியின் படையெடுப்பினால் ஏற்பட்ட பயன்கள் யாவை ?

3. அடிமைச் சுல்தான்கள்

குத்புதீன் வாலிபத்தில் முகம்மது கோரியிடம் அடிமை யாய் இருந்தவர்; பிறகு தமது யோக்கியதையால் படிப்படியாக உயர்ந்து சேனைத் தலைவராகவும், பின்பு ராஜப் பிரதிநிதியாக வும் நியமிக்கப்பட்டார். முகம்மது கோரி இறந்த பின் அவர் டில்லியில் சுல்தான் பட்டம் வகித்து ஆளத் தொடங்கினர். குத்புதீனும் அவருக்குப் பின் வந்த சில சுல்தான் களும் முதலில் அடிமை யாய் இருந்து பிறகு உயர்ந்த நிலைக்கு வந்த வர்களாதலால், அவர் களுக்கு **அடிமை அரசர்கள்** அல்லது **மாமெலுக் சுல்தான்கள்** என்னும் பெயர் ஏற்பட்டது.



குதுப்மினர்

குத்புதீன் கி.பி. 1206 முதல் 1210 வரை நான்கு வருஷங்களே அரசாண்டார். அவர் சிறந்த போர் வீரர்; ஆனல், ஜனங்களிடத்தில் அன்புள்ளவராய் மிகவும் கருணையுடன் அரசு புரிந்தார். அவர் நாட்டில் அமைதியை நிலை நாட்டி, திறமையாக அரசாங்கம் நடத்தினர். டில்லியில் பல மசூதிகளையும் அரண்மனை களையும் கட்டினர். **குதுப்மினர்** என்ற 240 அடி உயரமுள்ள ஒரு பெரிய ஸ்தூபியை டில்லி நகருக்கருகில் அவர் கட்ட

ஆரம்பித்தார். அதை முடிக்கு முன்னரே அவர் இறந்து போகவே, அவருக்குப் பின் வந்த **அல்டாமஷ்** என்பவர் அதைப் பூர்த்தி செய்தார்.

அல்டாமஷ் (கி. பி. 1210-1236): குத்புதீன் இறந்ததும் அவருடைய அடிமையும் மருமகனுமான அல்டாமஷ் பட்டத்துக்கு வந்தார். அவர் 25 வருஷம் சிறப்பாக ஆட்சி செய்தார். அவர் மாளவம், உஜ்ஜெயினி, குவாலியர் ஆகிய இடங்களை ஜயித்துத் தம் ராஜ்யத்தைப் பெரிதாக்கினர். அவர் காலத்தில் **மங்கோலியர்** என்ற முரட்டு ஜாதியார் துருக்கி ஸ்தானத்திலிருந்து இந்தியாவின்மீது படையெடுத்து வந்தனர். **செங்கிஸ் கான்** என்னும் மங்கோலியத் தலைவர் ஒரு பெரும்படையுடன் வந்து ஆப்கானிஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொண்டு இந்தியாவில் சிந்து நதிக்கு மேற்கேயுள்ள பிரதேசத்தைக் கொள்ளையடித்தார். அல்டாமஷ் அவர்களைத் தோற்கடித்துத் துரத்தினர்.

சுல்தானு ரஜீயா (கி. பி. 1236-40): அல்டாமஷ் இறக்கும் போது தம்முடைய குமாரர்கள் திறமையற்றவர்கள் என்று கருதித் தம்முடைய குமாரியார் **ரஜீயா** என்பவரைப் பட்டத்துக்கு நியமித்தார். அவர் பெண் பாலரயிருந்த போதிலும், சிறப்பாக ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். ஆனல், ஒரு பெண் பிள்ளையால் ஆளப்படுவதை விரும்பாத பிரபுக்கள், அவருக்கு விரோதமாகக் கிளம்பி, அவரைக் கொன்றுவிட்டார்கள்.

நாசருதீன் (கி. பி. 1246-66) ரஜீயாவுக்குப் பிறகு அவருடைய இளைய சகோதரர் **நாசருதீன்** பட்டத்துக்கு வந்தார். அவர் தெய்வ பக்தியும், மதப்பற்றும் உடையவர்; குர்-ஆன் புத்தகத்தைத் தம் கையினலேயே எழுதுவதிலும், ஜெபம் செய்வதிலும் தமது காலத்தைக் கழித்தார். அரசாங்கக் காரியங்களை எல்லாம் அவருடைய மந்திரியும் சேனாதிபதியுமான **கியாஸ் உத்தீன் பால்பன்** என்பவர் நடத்தி வந்தார்.

பால்பன் (*1266-87*) : பால்பன் மிகவும் திறமை வாய்ந்தவர். அவர் இருபது வருஷகாலம் மந்திரியாயிருந்து அரசாங்க அனுபவம் பெற்றவர். நாசருதீன் இறந்ததும் அவர் சுல்தான் ஆனுர். அடிமைச் சுல்தான்களில் மிகச் சிறந்தவர் பால்பன் என்பவரே. அவர் நாட்டில் கலகம் செய்தவர்களை அடக்கி, அமைதியை நிலை நாட்டி, நீதி தவருது ஆட்சி புரிந்தார்.

பால்பன் காலத்தில் **மங்கோலியர்** பலதடவை இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்கள். பால்பன் வடமேற்கு எல்லைப்புறத்தில் ஒரு பெரிய சைனியத்தை வைத்து மங்கோலியர்களைத் தமது ராஜ்யத்தின் அருகில் வாராமல் தடுத்தார்.

பால்பன் ஜனங்களின் நன்மைக்கான பல காரியங்களைச் செய்தார்.அவர் பல புதிய சாலைகளைப் போட்டார்; ரஸ்தாக்களில் திருடர் பயமில்லாமல் செய்தார்; மதுபானத்தை ஒழித்து ஜனங்களை நல்வழிப்படுத்தினுர் ; நாட்டில் கல்வியைப் பரப்ப வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார் ; பல கல்விமான்களை ஆதரித்தார். அவர் குற்றம் செய்தவர்களை வெகு கடுமையாகத் தண்டித்து வந்தார். ஆகையால், ஜனங்கள் யாவரும் பால்பனிடம் பயபக்தியுடன் இருந்து வந்தார்கள்.

பால்பனின் மூத்த குமாரர் மங்கோலியர்களுடன் செய்த போர் ஒன்றில் இறந்தார். அந்த வருத்தத்தைத் தாங்க முடியாமல் பால்பன் உயிர் துறந்தார்.

அவருக்குப்பின் அவர் பேரரான **கைகோபாது** சுல்தான் ஆனுர். அவர் வெகு உல்லாசப் பிரியர்; குடி முதலிய பலகெட்ட பழக்கங்களுடையவர். ஆகையால், அவர் ராஜ்ய காரியங்களைச் சரியாகக் கவனிக்கவில்லை. எனவே, கில்ஜி வமிசத்தைச் சேர்ந்த **ஜலாலுதீன்** என்பவர் தலைமையின் கீழ்ப் பிரபுக்கள் கலகம் செய்து கைகோபாதைக் கொன்றுர்கள். அவருடன் அடிமைச் சுல்தான்களின் ஆட்சி முடிவடைந்தது.

கேள்விகள்:

1. அடிமை வமிசம் என்ற பெயர் ஏற்படக் காரணம் என்ன? அந்த வமிசத்தின் முதல் சுல்தான் யார்?
2. குத்புதீன் ஒரு சிறந்த அரசர். எப்படி?
3. அல்டாமஷின் அரசாட்சி எப்படி முக்கியமானது?
4. பால்பன் மங்கோலியர்களை எவ்வாறு அடக்கினர்?
5. அடிமைச் சுல்தான்களில் பால்பன் மிகவும் மேன்மை பெற்றவர். எப்படி?

---

4. கில்ஜிச் சுல்தான்கள்—அல்லாவுதீன் கில்ஜி

அடிமைச் சுல்தான்களுக்குப் பின் **கில்ஜி** வமிசத்தைச்சேர்ந்தவர்கள் டில்லியில் ஆண்டுவந்தார்கள். கைகோபாது கொலையுண்டபின் **ஜலாலுதீன் கில்ஜி** என்பவர் டில்லிச் சுல்தான் ஆனர். அவரே கில்ஜி வமிசத்தின் முதல் அரசர். அவர் பட்டத்துக்கு வந்தபொழுது அவருக்கு வயது எழுபது. அவர் ஆளும் திறமையற்றிருந்தார். நாட்டிலுள்ள பிரபுக்கள் அவருக்கு அடங்காமல் ஜனங்களைத் துன்புறுத்தி வந்தார்கள். ஜலாலுதீனுடைய சகோதரர் குமாரரான **அல்லாவுதீன்** மிகவும் சாமர்த்தியமுள்ளவர். அவர் கலகம் செய்த பிரபுக்களுடன் சண்டை செய்து அவர்களை அடக்கினர். பின் ஜலாலுதீன், அவரை மாளவ நாட்டை ஜயித்து வரும்படி அனுப்பினர். அல்லாவுதீன் மாளவ நாட்டை ஜயித்ததோடு நிற்காமல், விந்திய மலையைக் கடந்து யாதவநாட்டின் தலைநகரான **தேவகிரி**யைத் திடீரென்று எதிர்த்தார். யாதவ மன்னரான ராமதேவர் அல்லாவுதீனை எதிர்க்க முடியாதென்று அறிந்து டில்லிச் சுல்தானுக்குக் கப்பம் கட்டிவர ஒப்புக்கொண்டார். அல்லாவுதீன் ஏராளமான பொருள்களைத் திரட்டிக்கொண்டு டில்லிக்குத் திரும்பி வந்தார். அப்பொழுது ஜலாலுதீன் அவரை எதிர்கொண்டு அழைக்க வந்தார். அல்லாவுதீன் அவரைத் தந்திரமாகக் கொன்றுவிட்டுத் தாமே சிங்காதனமேறினர்.

அல்லாவுதீன் கில்ஜி (கி. பி. 1296–1316): இவர் போர் செய்வதில் திறமை வாய்ந்தவர், இவரிடம் பெரிய சேனை ஒன்று இருந்தது. இவருடைய அடிமையும் தளகர்த்தருமான **மாலிக்காபூர்** இவரைப்போலவே திறமை வாய்ந்தவர். இவரது ஆட்சியிலும் மங்கோலியர்களின் தொந்தரவு அதிகமாயிருந்தது. அல்லாவுதீன் அவர்களைத் தோற்கடித்துத் துரத்தினார். மேலும், இவர் சிந்து நதிக்கரையில் பல கோட்டைகளைக் கட்டி அவைகளில் பலமான சைனியத்தை வைத்தார். அதனால், மங்கோலியர்களின் உபத்திரவம் நீங்கிற்று.

அல்லாவுதீன்

பின்பு இவர் புதிய நாடுகளை ஜயிக்க எண்ணங் கொண்டார், முதலில் அல்லாவுதீன் கூர்ஜர நாட்டின்மீது படையெடுத்து, கூர்ஜர அரசரைக்கொன்று அந்நாட்டைக் கைப்பற்றினார். கூர்ஜர அரசரின் மனைவியாகிய இராணி கமலா தேவியைச் சிறைபிடித்து, சிறிது காலங்கழித்து அவளை மணஞ் செய்துகொண்டார். பிறகு ராஜபுதனத்தின்மீது படையெடுத்துச் சென்று மேவார் ராஜ்யத்தின் முக்கிய கோட்டையான சித்தூரைக் கி. பி. 1303ல் முற்றுகையிட்டார். அப்பொழுது சித்தூரை ஆண்டுவந்த அரசர் பீம்சிங்என்பவரின் மனைவியான **பத்மினி**யின் அழகைப்பற்றிக் கேள்விப்பட்டு, அவளைத் தமக்கு மணம் செய்வித்தால் தாம் திரும்பிச் சென்றுவிடுவதாகக் கூறினார். பீம் சிங்கு அதற்கு இசையவில்லை. அநேக மாதங்கள் முற்றுகையிட்டுக் கடைசியில் **ராணா பீம்சிங்கை**ச் சிறை பிடித்தார். ஆனால், பத்மினியின் தந்திரத்தால் ராணா சிறை மீட்கப்பட்டார். ராஜபுத்திரர்கள் வீராவேசத்துடன் சண்டைசெய்த போதிலும் கடைசியில் தோற்கடிக்கப்பட்டார்கள். அச்சண்டையில் 30000 ராஜபுத்திரர்கள் இறந்தார்கள். பீம்சிங்கு யுத்த

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 JAN 1943
MADRAS



அல்லாவுத்தின்
இராஜ்ஜியம்.

களத்தில் மாண்டார். பத்மினியும், ராஜபுத்திர ஸ்திரீகளும் விரோதிகள் கையில் அகப்படாமல் தீ வளர்த்து அதில் வீழ்ந்து மடிந்தனர். அல்லாவுதீன் கோட்டைக்குள் சென்ற போது நகர் பாழாயிருந்தது.

தக்காணப் படையெடுப்பு: அப்பால் அல்லாவுதீன் தக்காணம் முழுவதையும் ஜயிக்க எண்ணிக் கி. பி. 1307ல் **மாலிக் காபூர்** என்னும் தளகர்த்தர்வசம் ஒரு பெரிய சேனையை அனுப்பினர். மாலிக்காபூர் மூன்று வருஷ காலமாகச் சுல்தானுக்குக் கப்பம் கட்டாமல் பாக்கி வைத்திருந்த **தேவகிரி** அரசரான **ராமசந்திர தேவரைத்** தோற்கடித்து அவரிடமிருந்து ஏராளமான திரவியத்தை அபகரித்துக்கொண்டு, அவரைச் சுல்தானுக்குக் கப்பம் கட்டும்படி செய்தார். பிறகு **தெலிங்காண** ராஜ்யத்தின் தலைநகரான **வாரங்கலைத்** தாக்கி வெற்றி பெற்றார். வாரங்கல் அரசரும் டில்லிச் சுல்தானுக்குக் கப்பம் கட்டுவதாக ஒப்புக் கொண்டார். பின்னர் மைசூர் நாட்டின் தலைநகரான துவார சமுத்திரத்தைக் கைப்பற்றினர். ஸ்ரீரங்கம், மதுரை, இராமேஸ்வரம் முதலிய இடங்களில் உள்ள ஆலயங்களைத் தாக்கி, அவைகளிலுள்ள ஏராளமான பொன், வெள்ளி, வைர ஆபரணங்களை அபகரித்துக்கொண்டு மிகுந்தசெல்வத்துடன் டில்லிக்குத் திரும்பினர்.

அல்லாவுதீன் ராஜ்யம்: அல்லாவுதீனுடைய ராஜ்யம் வடக்கே பஞ்சாபிலிருந்து தெற்கே மதுரை வரையிலும், மேற்கே கூர்ஜரத்திலிருந்து கிழக்கே வங்காளம் வரையிலும் பரவியிருந்தது. ஆனால், வட இந்தியாவிற்கும் தக்ஷிணத்திற்கும் மத்தியில் விந்திய சாத்பூரா மலைகளும், அடர்ந்த காடுகளும் இருந்தபடியால், இரண்டு பாகத்திற்கும் போக்கு வரவு வசதி இல்லை. அதனல் அல்லாவுதீன் இறப்பதற்குள்ளாகவே தென்னிந்தியா ராஜ்யங்கள் அவருடைய ஆதிக்கத்திலிருந்து விலகி விட்டன. ஆயினும், அல்லாவுதீனே இந்தியா முழுவதையும் ஆண்ட முதல் முகம்மதிய சக்கரவர்த்தியாராவர்.

அல்லாவுதீன் ஆட்சி முறை: அல்லாவுதீன் தமது ராஜ்யத்தைப் பல மாகாணங்களாகப்பிரித்து ஒவ்வொரு மாகாணத்தையும் ஆட்சி செய்ய ஒரு பிரதிநிதியை நியமித்தார். அவர் பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்தார். அவர்கள் அரசர் அனுமதியின்றிச் சந்திக்கக்கூடாது என்று உத்தரவிட்டார்; உணவுப் பொருள்கள் எப்போதும் தாழ்ந்த விலைக்கே விற்கப் படவேண்டுமென்று ஏற்பாடு செய்தார்; உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்காதபடி தடுத்தார்; ஒற்றர்களை நியமித்துக் குற்றம் செய்வோரைக் கண்டுபிடித்து அவர்களைக் கடுமையாகத் தண்டித்தார். ஆனல், இந்துக்கள் முகம்மதியர்களைவிட அதிக வரிகள் கொடுக்கவேண்டியிருந்தது. இவ்வாறு அல்லாவுதீன் டில்லி ராஜ்யத்தைத் திறமையுடன் ஆண்டு வந்தார்.

அல்லாவுதீன் கி. பி. 1316ல் மரணமடைந்தார். அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த **முபாரக்கு** என்பவர் ஆளும் திறமையில்லாதவர். அவர் ராஜ்ய விஷயங்களில் சிரத்தை இல்லாமல் **குஸ்ருகான்** என்ற தமது நண்பருடன் மதுபானத்திலும், களியாட்டத்திலும் காலத்தைக் கழித்தார். அதனல், நாட்டில் கலகமும் குழப்பமும் ஏற்பட்டன. குஸ்ருகான் அரசரைக் கொன்றுவிட்டுத் தாமே சிம்மாசனம் ஏறினர். அச்சமயத்தில் பஞ்சாபில் ஆண்டு வந்த **கியாஸ் உதீன் துக்ளக்கு** என்பவர் டில்லியின்மேல் படையெடுத்து வந்து குஸ்ருகானைக் கொன்று தாமே சுல்தான் ஆனர்.

கேள்விகள் :

1. அல்லாவுதீன் எவ்வாறு பட்டத்திற்கு வந்தார்?
2. மாலிக்காபூரின் தக்காணப் படையெழுச்சியைப்பற்றி எழுது.
3. அல்லாவுதீன் சித்தூரை ஏன் முற்றுகையிட்டார்? அதன் முடிவு என்ன?
4. அல்லாவுதீன் அரசியல் நிர்வாகத்தைப்பற்றி எழுது.

5. முகம்மது துக்ளக்கு

(கி. பி. 1325-51)

துக்ளக்கு வமிசத்தின் முதல் அரசரான **கியாஸ் உதீன் துக்ளக்கு** நான்கு வருஷங்களே டில்லியில் ஆட்சி செய்தார். அவர் காலத்தில் தக்காணம், வங்காளம் முதலிய இடங்களில் கலகங்கள் ஏற்பட்டன. அவைகளை அடக்கிவிட்டுத் தம் தலைநகருக்குத் திரும்பியபோது அவரை வரவேற்பதற்காக அவருடைய மைந்தரான **ஜூனகான்** என்பவரால் போடப்பட்டிருந்த பந்தல் தலைமீது விழுந்ததால் கியாஸ் உதீன் மரணமடைந்தார். பிறகு ஜூனகான் **முகம்மது துக்ளக்கு** என்னும் பெயருடன் சிம்மாசனம் ஏறினர்.

முகம்மது துக்ளக்கு நன்ருகப் படித்தவர்; அரபி, பாரசீக பாஷைகளில் தேர்ச்சி பெற்றவர். இஸ்லாம் மதத்தில் அதிக பற்றுள்ளவர். அவர் பல கல்விமான்களை ஆதரித்தார். ஆடம்பரமற்ற வாழ்க்கையை மேற்கொண்டார். ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணமுடையவர். இவ்வளவு நற்குணங்கள் அமைந்திருந்தும் அவரிடம் பிடிவாதமும், முன்கோபமும் அதிகம்; தீர ஆலோசிக்காமல் எதையும் திடீரென்று செய்யும் சுபாவமுடையவர். பிறர் புத்திமதியைக் கேளாது பிடிவாதமாகத் தம் வழியையே பின்பற்றுவார். தாம் இடும் கட்டளைகளை மீறியவர்களுக்குக் கடுந்தண்டனை விதிப்பார். முன்யோசனையற்ற அவருடைய செயல்களால் பெரிய ஆப்கானிய ராஜ்யம் அடியோடு அழிந்து போயிற்று.

சீன தேசத்தை ஜயிக்க முயன்றது: முகம்மது துக்ளக்குத் தமது சாம்ராஜ்யத்தைப் பெரிதாக்க வேண்டுமென்று எண்ணம் கொண்டார்; ஒரு சேனையைப் பாரசீகத்திற்கும், மற்றொன்றைச் சீனதேசத்திற்கும் அனுப்பினர். இமயமலைகளைக் கடந்து செல்லமாட்டாமல் ஆயிரக் கணக்கான வீரர்கள் குளிராலும் பனியாலும் இறந்தார்கள்.

தேவகிரியைத் தலைநகராகக் கொண்டது: தமது விஸ்தாரமான ராஜ்யத்திற்குத் தலைநகர் மத்தியிலிருக்க வேண்டுமென்று எண்ணி, தேவகிரியைத் தலைநகராக்கினர். அதற்குத் **தௌலதாபாது** எனப் பெயரிட்டு டில்லியில் உள்ள ஜனங்கள் எல்லோரையும் தேவகிரிக்குப் போகும்படி கட்டளையிட்டார். அநேக ஜனங்கள் வழியில் பசியாலும் நோயாலும் வருந்தி இறந்தனர். தேவகிரியின் சீதோஷ்ணம் பிடியாமல் பலர் மாண்டனர். சில நாட்களில் அது தலைநகருக்குத் தகுதியற்ற இடம் என்று நினைத்து முகம்மது துக்ளக்கு மறுபடியும் தம் தலைநகரை டில்லிக்கே மாற்றிக்கொண்டார். குடிகளின் சிரமம் அவருக்குச் சிறிதும் தெரியவில்லை.

மொகலாயர் படையெடுப்பு: அவரது ஆட்சியில் மொகலாயர் அடிக்கடி இந்தியாவின்மீது படையெடுத்து வந்து தொந்தரவு செய்தார்கள். அவர்களுடன் போர் புரிந்து அவர்களை விரட்டாமல் முகம்மது அவர்களுக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார். அதனால், அவர்கள் மறுபடியும் மறுபடியும் வரலானார்கள்.

புது நாணயங்கள்: இத்தகைய வீண் செலவுகளால் அரசாங்கப் பொக்கிஷம் காலியாய்விட்டது. அதனால், அவர் வரிகளை அதிகப்படுத்தினர். செம்பு நாணயங்களை, வெள்ளி நாணயங்களுக்குச் சமமாக உபயோகிக்கலாமென்று உத்தரவிட்டார். மேலும், சிலர் கள்ளத்தனமாகச் செம்பு நாணயங்களைச் செய்தும் வெளியிட்டனர். பலர் வெள்ளி நாணயங்களைப் பத்திரப்படுத்திவிட்டு அரசருடைய பொக்கிஷத்தைச் செப்பு நாணயங்களால் நிரப்பினர். அன்னிய நாட்டு வியாபாரிகள் குறைந்த மதிப்புள்ள செம்பு நாணயங்களை வாங்க மறுத்ததால் அன்னிய நாட்டு வியாபாரம் நின்றுவிட்டது. நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஜனங்கள் வரி செலுத்த முடியாமல் தவித்தனர். வரிகொடுக்க முடியாது பலர் காடுகளுக்கு ஓடி அங்கே மறைந்து

வசித்தனர். முகம்மது அவர்களைத் துரத்திச் சென்று கடுமை யான தண்டனைகளை விதித்தார்.

இம்மாதிரியாக முகம்மது துக்ளக்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாம் வீணாயின: ராஜ்யத்தின் பல பாகத்தி லும் கலகங்கள் ஏற்பட்டன. வங்காளமும், தக்காணமும் சுயேச்சை அடைந்தன. தக்காணத்தில் பாமனி விஜய நகரம் என்னும் இரண்டு ராஜ்யங்கள் ஏற்பட்டன. டில்லி ராஜ்யம் க்ஷீணிக்க ஆரம்பித்தது. முகம்மது துக்ளக்கு இந்து தேசத்தில் ராஜபுத்திரர்களை அடக்குவதற்காகப் போயிருந்தபோது ஜுரம் கண்டு 1351ல் இறந்தார்.

பிரோஜ்ஷா (கி. பி. 1351–88): முகம்மது துக்ளக்கு இறந்த பின் அவருடைய உறவினரான பிரோஜ்ஷா பட்டத் துக்கு வந்தார். அவர் மத வைராக்கியம் உடையவர். தம் மதத்தின்மீதிருந்த பற்றினால் இந்துக்களைக் கொடுமையாகவே நடத்தினார். எனினும், அவர் ஜனங்களுக்கு நன்மையான பல காரியங்களைச் செய்தார். அவர் அரசாட்சியில் ஜனங்கள் சௌக்கியமாய் வாழ்ந்து வந்தார்கள். அவர் வரிப் பளுவைக் குறைத்தார்; நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு உதவும் படி யமுனை, ஸட்லஜ் நதிகளிலிருந்து பல கால்வாய்களை வெட்டு வித்தார்; பல சாலைகள் அமைத்தார்; சத்திரங்கள், பாடசாலை கள், வைத்தியசாலைகள் ஏற்படுத்தினார்; அரசாங்கத்தில் ஊழி யம் செய்தவர்களுக்கும், போரில் காயமடைந்தவர்களுக்கும் உபகாரச் சம்பளம் கொடுத்தார்.

பிரோஜ்ஷா பாது, ஜான்பூர் என்னும் நகரங்களை நிர்மாணித் தார். பிரோஜ்ஷா சாந்த குணமும் தயாளமும் உள்ளவர். சண்டை செய்வதில் உயிர்ச் சேதம், பொருட்சேதம் ஏற்படுவ தால், அவர் போர் செய்வதை ஒழித்தார். அவர் பலமான சைனியத்தை வைத்திருக்கவில்லை. ஆகையால், எல்லைப்புறத்

தில் மங்கோலியர்கள் திரும்பவும் தொந்தரவு செய்ய ஆரம்பித்தார்கள். பிரோஜ்ஷா 37 வருஷம் செம்மையாக அரசாட்சி புரிந்துவிட்டு, கி. பி. 1388ல் இறந்தார்.

தைமூரின் படையெழுச்சி: பிரோஜ்ஷாவுக்குப் பின் வந்த துக்ளக்கு வமிசத்து அரசர்கள் பலமற்றவர்கள். மாளவம், கூர்ஜரம் முதலிய மாகாணங்கள் சுயேச்சை பெற்றன. கடைசித் துக்ளக்கு அரசரான முகம்மது ஷா காலத்தில் **தைமூர்** என்ற மங்கோலிய அரசர் கி. பி. 1398ல் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். அவர் ஒரு பெரிய குதிரைப் படையுடன் சிந்து நதியைக் கடந்து, பஞ்சாபிலுள்ள பட்டணங்களைக் கொள்ளையடித்துக்கொண்டு டில்லியை நோக்கி வந்தார். முகம்மதுஷா தம் சேனையுடன் தைமூரை எதிர்த்துத் தோல்வியுற்றுவிட்டார். தைமூர் டில்லியைக் கைப்பற்றிப் பதினன்கு தினங்கள் அங்குத் தங்கியிருந்து, நகரைக்கொள்ளையிட்டுப்பாழாக்கி, ஜனங்களைப் படுகொலை செய்தார். தைமூர் டில்லியில் தாம் இந்திய சக்கரவர்த்தியார் என்ற பட்டம் சூட்டிக் கொண்டார். இவ்வாறு அவர் இந்தியாவில் ஐந்து மாதம் வரை தங்கி ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்துக்கொண்டு தம் ராஜ்யத்தின் தலைநகரான **சாமர்க்கண்டு** நகரத்திற்குத் திரும்பிச் சென்றார். தைமூரின் படையெடுப்பின் பயனாகத் துக்ளக்கு வமிசம் அழிவடைந்தது. அவர் செய்த போர்களின் பயனாக ஜனங்கள் வெகு காலம் தலையெடுக்க முடியாமல், விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியன நாசம் அடைந்தன. ஜனங்கள் பஞ்சத்தினால் கஷ்டப்பட்டார்கள்.

தைமூர்

கேள்விகள் :

1. துக்ளக்கு வமிசத்தின் முதல் அரசர் யார் ?
2. முகம்மது துக்ளக்கின் குணாதிசயங்கள் எவை ?
3. அவர் தேவகிரியைத் தலைநகராகக் கொள்ளக் காரணம் என்ன ?
4. பிரோஜ்ஷா துக்ளக்கு ஜனங்களுக்குச் செய்த நன்மைகள் எவை ?
5. தைமூர் யார் ? அவர் இந்தியாவின்மீது படையெடுத்த தன் பயன்கள் யாவை ?

---

6. சையத்-லோடி வமிசங்கள்

(கி. பி. 1414–1526)

சையத் வமிசம் (கி. பி. 1414–51): தைமூரின் படையெடுப்புக்குப் பின் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. டில்லி சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகச் சுயாதீனமடைந்து பிரிந்துவிட்டன. டில்லி ராஜ்யம் மிகச் சிறியதாகிவிட்டது. தைமூர் திரும்பிச் செல்கையில் கிஸிர் கான் என்பவரைத் தமது பிரதிநிதியாக இலாகூரில் வைத்துவிட்டுச் சென்றார். **கிஸிர்கான்** சையத் வமிசத்தைச் சேர்ந்தவர். அவர் டில்லியைக் கைப்பற்றிக்கொண்டு சையத் வமிசத்தை ஸ்தாபித்தார். **சையத் வமிசத்தார்கள்** கி. பி. 1414 முதல் 1451 வரையில் சுமார் 37 வருஷங்கள் டில்லியில் அரசாண்டார்கள். அவர்கள் ஆட்சியில் நாட்டில் குழப்பம் அதிகரித்தது. பஞ்சாபிலிருந்த **பலால் லோடி** கி. பி. 1451-ஆம் ஆண்டில் டில்லியைக் கைப்பற்றி **லோடி** வமிசத்தை ஸ்தாபித்தார்.

லோடி வமிசம் (கி. பி. 1451-1526): பலால்லோடி திறமை வாய்ந்தவர். அவர் டில்லியைச் சுற்றியுள்ள கான்பூர், குவாலியர்

முதலிய நாடுகளைத் திரும்பவும் ஜயித்து டில்லி ராஜ்யத்துடன் சேர்த்தார். அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவரது மைந்தரான **சிக்கந்தர் லோடியும்,** தம் தகப்பனுரைப் போலவே சாமர்த்தியமுள்ளவர். அவர் காசி, பீஹார் முதலிய மாகாணங்களை ஜயித்து டில்லியுடன் சேர்த்துக்கொண்டார். அவர் **ஆக்கிரா** நகரத்தை உண்டாக்கினுர்.

இப்ராஹிம் லோடி: அவருக்குப் பின் அவருடைய குமாரர் **இப்ராஹிம் லோடி** கி. பி. 1517ல் சுல்தான் ஆனுர். அவரே லோடி வமிசத்தின் கடைசிச் சுல்தான். அவர் கர்வமும், மூர்க்க குணமும் உள்ளவர். அவர் பிரபுக்களையும், சேனு வீரர்களையும் கடுமையாக நடத்தினுர். ஆகையால், எல்லோரும் அவரை வெறுத்து அவரைத் தொலைப்பதற்கு வழி தேடினுர்கள். சுல்தானுடைய சொந்த சகோதரர்களே அயோத்தியிலும், பீஹாரிலும் கலகம் செய்தார்கள்; மேவார் தேசத்து ராணுவின் தலைமையின் கீழ் ராஜபுத்திரர்களும் கிளர்ச்சி செய்தார்கள். முடிவில் பஞ்சாபு கவர்னராயிருந்த **தௌலத்கான் லோடி** தம் எஜமானருக்கு விரோதமாய்க் கிளம்பிக் காபூலை ஆண்டுவந்த **மொகலாய** அரசரான **பாபரை** இந்தியாவின்மீது படையெடுத்து வரும்படி கேட்டுக்கொண்டார். பாபர் இந்தியாவை ஜயிக்க விருப்பம் கொண்டு, தகுந்த சமயத்தை எதிர்பார்த்திருந்தார். ஆகவே, அவர் ஒரு பெருஞ்சேனையுடன் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். இப்ராஹிம் லோடி ஒரு பெருஞ்சேனையுடன் பாபரைக் கி. பி. 1526ல் டில்லிக்கு அருகிலுள்ள **பானிப்பட்டு** என்னுமிடத்தில் எதிர்த்துப் போர் செய்தார். இதுவே **முதலாவது பானிப்பட்டு யுத்தம்** எனப்படும். சண்டையில் இப்ராஹிம் லோடி தோல்வியுற்றுப் போர்க்களத்தில் மாண்டார். பிறகு பாபர் டில்லிக்கு அரசரானுர். இத்துடன் லோடி வமிசத்தாரின் ஆட்சி முடிவடைந்தது. மொகலாய ஆட்சி ஆரம்பமாயிற்று.

கேள்விகள் :

1. சையத் வமிசத்தின் முதல் அரசர் யார்?
2. ஆக்கிரா நகரம் யார் காலத்தில் உண்டாக்கப்பட்டது ?
3. லோடி வமிசத்தை ஸ்தாபித்தவர் யார் ?
4. பாபர் இந்தியாவின்மீது படையெடுக்கக்காரணம் என்ன?
5. முதல் பானிப்பட்டு யுத்தம் யார் யாருக்கு எந்த வருஷம் நடந்தது ? அதன் முடிவென்ன ?

---

7. பாமனி ராஜ்யம்

முகம்மது துக்ளக்குக் காலத்தில் தக்காணத்தில் கலகங்கள் ஏற்பட்டன. அக்கலகத்தை அடக்கி அமைதியை ஏற்படுத்துவதற்காக **ஹாஸன்** அல்லது **ஜஸர்கான்** என்ற பாரசீக வீரரைச் சுல்தான் அனுப்பினர். அவர் கலகத்தை அடக்கினர். துக்ளக்கின் அந்திய காலத்தில் கி. பி. 1347ல் அவர் தக்காணத்தில் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டார். அந்த ராஜ்யத்திற்குப் **பாமனி ராஜ்யம்** என்பது பெயர். **ஹாஸன், கங்கு** என்ற பிராமணரால் முன்னுக்கு வந்தவர். அவர் **பாமன்ஷா** என்ற பாரசீக அரசரின் வமிசத்தில் பிறந்தவர். ஆதலால், அவர் **அல்லாவுதீன் பாமன்ஷா** என்ற பட்டம் வைத்துக்கொண்டு பாமனி ராஜ்யத்தை ஆட்சி புரிந்தார். பாமனி ராஜ்யம் வடக்கே நர்மதை முதல் தெற்கே துங்கபுத்திரை வரையிலும் வியாபித்திருந்தது. பாமனி ராஜ்யத்திற்கு முதலில் **குல்பர்கா** தலைநகராய் இருந்தது. பின்னுல் பீடார் நகரம் தலைநகராக்கப்பட்டது. பாமனி ராஜ்யத்திற்குக் கிழக்கே இந்து ராஜ்யங்களான **ஒரிஸ்ஸாவும், வாரங்கலும்,** இருந்தன. துங்கபத்திரை நதிக்குத் தெற்கே **விஜயநகரம்** என்ற இந்து ராஜ்யம் பிரபலமடைந்தது. பாமனி அரசர்கள் தெற்கேயுள்ள விஜயநகர அரசர்களுடனும், வடக்கேயுள்ள கூர்ஜரம், மாளவம் முதலிய நாடுகளின் முகம்மதிய அரசர்களுடனும் அடிக்கடி போர் செய்து வந்தார்கள்.

பாமனி ராஜ்யத்தைச் சுமார் 14 சுல்தான்கள் சுமார் 150 வருஷ காலம் ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களுள் **பிரோஜ்ஷா** என்பவரும் **ஆமதுஷா** என்பவரும் முக்கியமானவர்கள்.

பாமினி விஜயநகர ராஜ்ஜியங்கள்



பிரோஜ்ஷா (கி.பி. 1397-1422): எட்டாவது பாமனிச் சுல்தான் பிரோஜ்ஷா திறமையுள்ள அரசர். அவருடைய ஆட்சிக் காலத்தில் பாமனி ராஜ்யம் உன்னத நிலையை அடைந்தது.

அவர் வாரங்கல் நாட்டுடன் போர் தொடுத்து, அந்நாட்டின் பெரும்பாகத்தைத் தமது ராஜ்யத்துடன்சேர்த்துக்கொண்டார். விஜயநகர அரசருடன் போர் புரிந்து வெற்றி பெற்ருர். அவர் ராஜ்யத்தைச் சிறப்புடன் ஆண்டார். பீமா நதிக் கரையில் ஒரு புதிய நகரை அமைத்தார். குல்பர்காவில் அநேக மசூதிகளையும் மாளிகைகளையும் கட்டி, அதை அழகான பட்டணமாகச் செய்தார். அவர் காலத்தில் வியாபாரமும் விவசாயமும் அபிவிருத்தியடைந்தன.

ஆமதுஷா (கி. பி. 1422-35): பிரோஜ்ஷாவிற்குப் பின் பட்டத்துக்கு வந்த அவரது சகோதரரான **ஆமதுஷா,** வாரங்கல் நகரைக் கைப்பற்றினுர். அத்துடன் தெலிங்காணு ராஜ்யம் அழிவுற்றது. அவர் பீடார் என்ற ஓர் அழகான பட்டணத்தைக்கட்டி அதை பாமனி ராஜ்யத்தின் தலைநகராகச்செய்தார். அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர்கள் திறமையற்றவர்கள். அதனுல், நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. பாமனி வமிசத்தின் கடைசிப்பெரிய அரசர் **மூன்ருவது முகம்மதுஷா** (கி. பி. 1463-82). அவரிடம் **முகம்மது கவான்** என்ற பாரசீகப் பிரபு மந்திரியாராய் இருந்தார். அவர் கலகம் விளைவித்த பிரபுக்களை அடக்கி, நாட்டில் அமைதியை ஏற்படுத்தினுர். முகம்மது கவான் நீதியுடனும் திறமையாகவும் நிர்வாகம்நடத்தி வந்தார். அவர் தமது சாமர்த்தியத்தால் அரசாங்கத்தில் மிக்க செல்வாக்குள்ளவரானுர். அவரிடம் பொருமை கொண்ட தக்காணப் பிரபுக்கள் அவருக்கு விரோதமாய்க் கிளம்பி அவரைத் தொலைப்பதற்குப் பல சூழ்ச்சிகள் செய்து வந்தார்கள். அவர்களுடைய தூண்டுதலால் **முகம்மதுஷா** தமது மந்திரியை ராஜத்துரோகி எனக் கருதி 1481ல் கொன்றுவிட்டார். முகம்மதுஷா மறு வருஷம் இறந்தார். அவருக்குப் பிறகு பாமனி ராஜ்யம் சிதறுண்டு **பீரார், பீடார், ஆமதுநகரம், பிஜப்பூர், கோல் கொண்டா** என்ற ஐந்து பிரிவுகளாகப் பிரிந்துபோயிற்று.

பாமனி ராஜ்யத்தின் சிதைவு: கவானிடம் **யூசப் அடில்ஷா** என்ற ஒரு துருக்கியர் அடிமையாய் இருந்தார். அவர் தமது சாமர்த்தியத்தினுல் **பிஜப்பூர்** மாகாணத்திற்கு அதிபதியானுர். கி. பி. 1490-ஆம் வருஷம் பாமனி ராஜ்யம் அழிந்துபோகவே, பிஜப்பூரைத் தனி ராஜ்யமாக ஆள ஆரம்பித்தார். அவர் பிஜப்பூரில் அழகிய கட்டடங்களைக் கட்டினுர். அவர் விஜய நகரத்தின்மீது படையெடுத்துச் சென்று, அந்த அரசரை ஜயித்தார். அவருடைய சந்ததியார்கள் **அடில்ஷாஹி** வமிசத்தினர் என்று வழங்கப்பட்டனர்.

ஆமது நகரில் **நைஜாம்பேரி** என்பவர் ஒரு தனி ராஜ்யத்தை ஏற்படுத்தினுர். அவருடைய வமிசத்தார்கள் **நைஜாம் ஷாக்கள்** என்று வழங்கப்பட்டனர். கவானின் மற்ருேர் அடிமையான **குலிகுட்பு** என்பவர் **கோல்கொண்டா**வைத் தலைநகராகக் கொண்டு **தெலிங்காணத்தை** ஆள ஆரம்பித்தார். பீராரும் தனி ராஜ்யமாயிற்று. அதில் **இமாதுஷாக்கள்** என்ற வமிசத்தார் ஆண்டு வந்தார்கள். **பீடாரைத்** தலைநகராகக்கொண்ட பாமனி ராஜ்யம் மிகச் சிறியதாகிவிட்டது, அதில் **பாரீதுஷாக்கள்** என்ற வமிசத்தினர் ஆட்சி செய்தனர்.

இந்த ஐந்து ராஜ்யங்களின் சுல்தான்களும் தங்களுக்குள் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டதுடன், விஜயநகர அரசர்களுடனும் போர் செய்து வந்தனர்.

விஜய நகரத்துடன் சண்டையிடக் காரணம்: பாமனி ராஜ்யத்தை ஆண்டுவந்த சுல்தான்கள் சுமார் இருநூறு வருஷங்கள் விஜயநகர மன்னர்களோடு போர்புரிந்து வந்தார்கள். கிருஷ்ணு நதிக்கும், துங்கபத்திரை நதிக்கும் இடையிலுள்ள **ரெய்ச்சூர் தோவாய்** என்னும் சமவெளியைக் குறித்துப் பாமனிச் சுல்தான்களும் விஜயநகர மன்னர்களும் பாத்தியம் கொண்டாடினுர்கள், அந்தப் பிரதேசத்தில் புகழ்பெற்ற **ரெய்ச்சூர்**, **முட்கல்** முதலிய

கோட்டைகள் இருந்தன. அதுவே அவர்களுக்குள் ஏற்பட்ட சண்டைக்கு முக்கிய காரணமாகும். முகம்மதுஷா என்பவர் காலத்தில் இச்சண்டை முதலாவதாகத் தொடங்கியது. அது முதல் 200 வருஷகாலம் ஒன்றன்பின் ஒன்ருய்ப் பல யுத்தங்கள் நடந்தன. இரண்டு நாட்டு அரசர்களும் மாறி மாறி வெற்றியும் தோல்வியும் பெற்று வந்தார்கள். கடைசியில் கி. பி. 1565ல் பாமனிச் சுல்தான்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, விஜய நகர மன்னரைத் தோற்கடித்து, முகம்மதிய ராஜ்யத்தைத் தக்ஷிணத்தில் நிலைநாட்டினர்.

கேள்விகள் :

1. பாமனி ராஜ்யம் யாரால் ஸ்தாபிக்கப்பட்டது? அதற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன ?
2. பாமனிச் சுல்தான்களில் மிகச் சிறந்தவர் யார் ?
3. பீடார் யார் காலத்தில் பாமனி ராஜ்யத்தின் தலைநகரமாயிற்று ?
4. பாமினி ராஜ்யம் எந்த ஐந்து ராஜ்யங்களாகப் பிரிந்தது ? அவைகளை ஆண்டு வந்த வமிசத்தார்கள் யார் ?
5. குறிப்பெழுது:—முகம்மது கவான், யூசப் அடில்ஷா, பாமனி விஜயநகர ராஜ்யங்களுக்குள் போர் ஏற்படக் காரணம்.

---

8. விஜய நகரம்

பாமனி ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதற்குச் சில வருஷங்களுக்கு முன் விஜயநகரம் என்ற இந்து ராஜ்யம் துங்கபத்திரை நதிக்குத் தெற்கில் ஸ்தாபிக்கப்பட்டது. பல்லாரி ஜில்லாவில் துங்கபத்திரை நதியின் வடகரையில் **ஆனகொந்தி** என்ற சிறு ராஜ்யம் இருந்தது. அதை ஆண்டு வந்த அரசர்கள் மைசூரில் ஆட்சி புரிந்த ஹாய்சால மன்னர்களுக்கு உட்பட்ட சிற்றரசர்

கள். மாலிக்காபூர் ஹாய்சால அரசரைத் தோற்கடித்த சிறிது காலத்திற்குப்பின்னர் ஹாய்சால வமிசம் அழிந்துவிட்டது. அப்பொழுது ஆனகொந்தியில் ஆண்டுவந்த **ஹரிஹரரும்** அவருடைய சகோதரரும் மந்திரியாருமான **புக்கரும், வித்யாரண்யர்** என்னும் மகானுடைய ஆலோசனையின்பேரில் துங்கபத்திரை நதியின் தென்கரையில் ஹாஸ்பட்டு என்னுமிடத்திற்குஅருகில் விஜயநகரம் என்ற நகரைக் கி. பி. 1336ல் ஸ்தாபனம் செய்தார்கள். அது **வித்தியாரண்ய நகரம்** என்று பெயர் பெறும். அதைச் சுற்றி ஏற்பட்ட ராஜ்யம் விஜய நகர ராஜ்யம் எனப்படும். நாளடைவில் அந்த ராஜ்யம் மிகப் பிரபலமடைந்து, கி. பி. 1565 வரையில் நிலைத்திருந்தது.

விஜய நகரம் : அக்காலத்தில் முகம்மதியர்கள் தக்காணத்தில் மிகவும் வலிமையுள்ளவர்களாய் இருந்ததால், விஜய நகரத்தைச் சுற்றிப் பலமான கோட்டை கொத்தளங்களும், அகழிகளும் அமைக்கப்பட்டிருந்தன. அந்நகரம் 12 மைல் நீளமும், 10 மைல் அகலமும் உள்ளதாய் இருந்தது. அதைச் சுற்றிலும் ஏழு மதில் சுவர்களிருந்தன. ஏழாவது மதிலுக்குள் அரசருடைய அரண்மனை இருந்தது. மதில்களுக்கு இடையில் விசாலமான வீதிகளும் அவற்றின் இரு பக்கங்களிலும் அழகான மாளிகைகளும், மண்டபங்களும் ஒழுங்காகக் கட்டப்பட்டிருந்தன. அழகான கோவில்கள், குளங்கள், நந்த வனங்கள், கல்விச் சாலைகள், வியாபாரஸ்தலங்கள் முதலியன ஒருங்கே அமைந்து நகரத்தை அழகுபடுத்தின. விஸ்தீரணத்திலும், செல்வத்திலும், அழகிலும் விஜய நகரத்திற்கு ஈடான நகரம் அக்காலத்தில் வேறு எதுவும் இல்லை. இன்றைக்கும் பெல்லாரி ஜில்லாவில் **ஹம்பி** என்ற இடத்தில் பாழடைந்த விஜய நகரத்தின் சின்னங்களைக் காணலாம்.

இந்த அழகிய பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு ஹரி ஹரர், புக்கர் இவர்களின் சந்ததியார்கள் சுமார் நூற்

றைம்பது வருஷ காலம் ஆண்டு வந்தார்கள். ஹரிஹரருக்குப் பின் பட்டத்துக்கு வந்த புக்கரின் காலத்திலேதான் விஜய நகரத்திற்கும் பாமனி ராஜ்யத்திற்கும் முதல் முதல் சண்டை ஏற்பட்டது. அதில் புக்கர் தோல்வியடைந்தார். கி. பி. 1486ல் சாளுவ வமிசத்தினர் விஜய நகரில் ஆட்சி செய்யத் தொடங்



விஜயநகர யானைக்கூடம்

(By Kind Permission of the Archaeological Survey of India)

கினார்கள். கி. பி. 1505-ஆம் வருஷம் **நரச நாயக்கர்** என்ற துளுவ வமிசத்துச் சேனைத் தலைவர் அரசரைக் கொன்று பட்டத்துக்கு வந்தார். அவருடைய வமிசத்திற்குத் **துளுவ வமிசம்** என்பது பெயர். துளுவ வமிசத்தில் மிகவும் கீர்த்தி வாய்ந்த அரசர் **கிருஷ்ணதேவ ராயர்.** அவர் காலத்தில் விஜய நகர ராஜ்யம் உன்னத நிலையை அடைந்தது.

கிருஷ்ணதேவ ராயர் (*1509-29*): இவர் விஜய நகர மன்னர்களில் மிக்க பிரசித்தி பெற்றவர். இவர் அழகான உருவமும், கம்பீரமான தோற்றமும், புஜபல பராக்கிரமமும் உடையவர். தம் ராஜ்யத்தை நாநாபக்கத்திலும் விஸ்தாரப்படுத்தினர். முதலில் மைசூரைக் கைப்பற்றித் தமது ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். பின்பு சோழ பாண்டிய ராஜ்யங்களை ஜயித்தார். வடக்கே ஒரிஸ்ஸா வரையில் படையெடுத்துச் சென்று, அதை ஜயித்தார். அப்பால் பிஜப்பூர்ச் சுல்தான் **அடில்ஷாவுடன்** சண்டை செய்து, ரெய்ச்சூர், முட்கல் முதலிய பலமான கோட்டைகளைப் பிடித்துக்கொண்டார். இவ்வாறு தென்னிந்தியா முழுவதையும் வென்று, சக்கரவர்த்தியாராய்விளங்கினர்.

கிருஷ்ணதேவ ராயர்

கிருஷ்ணதேவ ராயரின் பெருமை: கிருஷ்ண தேவ ராயர் தம் ராஜ்யத்தைத் திறமையுடன் ஆட்சி புரிந்தார். ராஜ்ய நிர்வாகத்தில் நிபுணரான **திம்மரசு** என்ற பிராமணர் இவருடைய மந்திரியாய் இருந்தார். அவருக்கு **அப்பாஜி** என்ற பெயரும் வழங்கி வந்தது. இவர் ராஜ்யத்தைப் பல மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு பிரதிநிதியை நியமித்தார். செஞ்சி, தஞ்சாவூர், மதுரை, மைசூர், கன்னடம் முதலிய இடங்

களில் நாய்க்கர் என்னும் தலைவர்களை நியமித்து ஆளும்படி ஏற்பாடு செய்தார். இவர் விவசாய விருத்திக்காகப் பல ஏரிகளும், கால்வாய்களும், குளங்களும் வெட்டுவித்தார். இவர் காலத்தில் இந்தியாவில் வியாபாரம் செய்ய வந்திருந்த போர்த்துகீசியரை ஆதரித்து அவர்களைத் தம் நாட்டில் வியாபாரம் செய்ய அனுமதித்தார். அதனால் அன்னிய நாட்டு வியாபாரம் அதிகரித்தது. நாட்டில் செல்வம் செழித்தது. தாம் ஜயித்த நாடுகளில் அநேக தேவாலயங்களும் கோபுரங்களும் கட்டினார். அதனால் சித்திரக்கலையும், சிற்பமும் முன்னேற்றமடைந்தன.

கிருஷ்ணதேவ ராயர் சிறந்த கல்விமான். தெலுங்கு பாஷையிலும் சம்ஸ்கிருத பாஷையிலும் மிக்க தேர்ச்சி பெற்றவர்; தெலுங்கு பாஷையில் **ஆண்டாள் சரித்திரம்** என்னும் நூலை இயற்றியுள்ளார். இவர் அனேக வித்துவான்களை ஆதரித்தார். இவருடைய சபையில் **அஷ்டதிக்குக் கஜங்கள்** என்று பெயர் பெற்ற எட்டுப் புலவர்கள் இருந்தார்கள். அவர்களில் **அல்லசானி பெத்தன்ன** என்ற ஆந்திர கவியும், **தெனலிராமர்** என்ற விகட கவியும் முக்கியமானவர்கள். கிருஷ்ண தேவராயர் வைஷ்ணவ மதத்தில் விசேஷமான பற்றுடையவர். எனினும், மற்ற மதஸ்தர்களையும் ஆதரித்தார். முகம்மதியருடன் இவர் போர் செய்த போதிலும் முஸ்லீம்களையோ, அவர்களுடைய மதத்தையோ அவமதிக்கவில்லை. இவர் காலத்தில் விஜய நகரத்தின் பெருமை உலகமெங்கும் பரவியது. இவ்வாறு கிருஷ்ண தேவ ராயர் பெரும்புகழுடன் விஜய நகர ராஜ்யத்தை இருபது வருஷ காலம் ஆண்டுவிட்டு, கி. பி. 1529ல் மரண மடைந்தார்.

விஜயநகர ராஜ்யத்தின் அழிவு: கிருஷ்ணதேவ ராயருக்கு ஆண் சந்ததி இல்லை. எனவே, இவருடைய சகோதரர் **அச்சுத ராயரும்**, அவருக்குப்பின் சதாசிவராயரும் பட்டம் வகித்தனர். அவர்கள் திறமையற்றவர்கள். அச்சுதராயரின் ஆட்சியில் பிஜப்

பூர்ச் சுல்தானுன அடில்ஷா தாம் இழந்த ரெய்ச்சூர், முட்கல் கோட்டைகளைத் திரும்ப ஜயித்துக்கொண்டதுடன் விஜய நகர்மீதும் படையெடுத்து வந்து பெருந்தொகையைப் பெற்றுக் கொண்டு திரும்பினர். சதாசிவராயரின் ஆட்சியில் உண்மையில் அவருடைய மந்திரியார் **இராமராயர்** என்பவரே அதிகாரம் வகித்து வந்தார். அவர் வீரமும், பலமும் உடையவர். அவருக்கு முகம்மதியர்களிடம் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. பாமனிச் சுல்தான்களுக்குள் ஏற்பட்ட சண்டைகளில் தலையிட்டு முகம்மதியர்களை அவமரியாதையாக நடத்தினர். நாளடைவில் சுல்தான்கள் எல்லோரும் இராமராயரைத் தங்களுடைய பொது விரோதியாகக் கருதி, எல்லோரும் ஒன்று சேர்ந்து பெரும்படையுடன் விஜயநகரத்தின்மீது படையெடுத்து வந்தார்கள். கி. பி. 1565-ஆம் வருஷம் இரு தரப்பினர்களுக்கும் **தலைக்கோட்டை** என்னும் இடத்தில் ஒரு கடும்போர் நிகழ்ந்தது. இராமராயர் வயது முதிர்ந்தவராயிருந்தபோதிலும், தைரியத்துடன் யுத்த முனையில் நின்று போர் நடத்தினர். அவருக்கே வெற்றி ஏற்படும் போலிருந்தது. அச்சமயத்தில் இராமராயர் எதிரி கையில் அகப்பட்டுக் கொல்லப்பட்டார். விஜய நகரத்தின் சைனியம் ஓட்டமெடுத்தது. முகம்மதியர்கள் விஜய நகரத்திற்குள் பிரவேசித்து ஐந்து மாதங்கள் வரையில் ஊரைக் கொள்ளையடித்து, கோவில்களையும் அரண்மனைகளையும் இடித்துப் பாழாக்கினர்.

தலைக்கோட்டைச் சண்டைக்குப் பிறகு தக்ஷிணத்திலும் தக்காணத்திலும் முகம்மதியர்களின் ஆதிக்கம் வலுத்தது. விஜயநகர சாம்ராஜ்யம் அழிவடைந்தது. விஜயநகர மன்னர் சதாசிவராயர், இராமராயரின் சகோதரரான **திருமலைராயர்** என்பவருடன் **பெனுகொண்டா** என்ற இடத்திற்கு ஓடிவிட்டார். அங்கு அவர் பெயருக்கு மாத்திரம் அரசராயிருந்தார். சதாசிவராயர் இறந்த பின் திருமலைராயர் தாமே அரசரானர். அவர் அறவீடு

வமிசத்தை ஸ்தாபித்தார். கி. பி 1580ல் பெனுகொண்டாவை முகம்மதியர்கள் கைப்பற்றவே, திருப்பதிக்கு அருகிலுள்ள **சந்திரகிரி** என்னும் இடத்திற்குத் தங்கள் தலைநகரை மாற்றிக்கொண்டார்கள். பிஜப்பூர், கோல்கொண்டாச் சுல்தான்கள் அநேக மாகாணங்களைக் கைப்பற்றிக்கொண்டார்கள். மைசூர், தஞ்சாவூர், மதுரை இவ்விடங்களிலிருந்த நாயக்கர்கள் சுயாதீனமடைந்தார்கள்.

கேள்விகள்:

1. விஜய நகரம் யாரால் ஸ்தாபிக்கப்பட்டது ?
2. விஜய நகரம் மற்ற நகரங்களைக்காட்டிலும் எவ்வாறு சிறந்து விளங்கியது ?
3. விஜய நகர மன்னர்களில் பிரசித்தி பெற்றவர் யார் ? அவருடைய அரசாட்சி எப்படிச் சிறப்பு வாய்ந்தது ?
4. கிருஷ்ணதேவ ராயரின் சாம்ராஜ்யம் எது முதல் எது வரை பரவியிருந்தது ?
5. தலைக்கோட்டைச்சண்டை யார் யாருக்கு, எந்த வருஷம் நடந்தது ? அதன் பயன்கள் யாவை ?

---

9. சித்தூர் ராஜ புத்திரர்கள்

முகம்மது கோரியின் படையெழுச்சியின் பயனாக ராஜ புத்திரர்கள் கங்கை யமுனை நதிகள் பாயும் செழிப்பான சமவெளிகளை விட்டு, அரவல்லி மலைக்குக் கிழக்கிலும் மேற்கிலும் குடியேறி, பல ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். **ஜோத்பூர், பிக்கானீர், மார்வார்** ஆகிய ராஜ்யங்கள் அரவல்லி மலைக்கு மேற்கேயுள்ளவை. அரவல்லி மலைக்குக் கிழக்கில் சித்தூரைத் தலைநகராகக் கொண்ட **மீவார்** ராஜ்யமும், **ஜெய்ப்பூரைத்** தலைநகராகக் கொண்ட **அம்பர்** ராஜ்யமும் முக்கிய

மானவை. இந்த ராஜ்யங்கள் டில்லிச் சுல்தான்களுக்குக் கீழ்ப் படாமல் சுயாதீனம் பெற்றிருந்தன. டில்லிச் சுல்தான்கள் மீவாருக்கு அருகிலுள்ள ஆஜ்மீர் ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டு, அங்கிருந்து மீவார் ராஜ்யத்தை அடிக்கடி தாக்கி வந்தார்கள்.

மீவார் ராஜ்யம்: ராஜபுதனத்தில் ஏற்பட்டிருந்த ராஜ புத்திர ராஜ்யங்களில் **மீவார்** ராஜ்யம் மிகப் பழமையானது. அது எட்டாம் நூற்றாண்டில் **பாபா ராவால்** என்ற வீரரால் ஸ்தாபிக்கப்பட்டது. அவரே **சித்தூரை** மீவாருக்குத் தலைநக ராகச் செய்தார். சித்தூரைச் சுற்றிப் பலமான கோட்டை இருந்தது. மீவார் அரசர்களுக்கு **மகா ராணா** என்ற பட்டம் வழங்கி வந்தது. மீவார் ராஜபுத்திரர்கள் தங்களை இராமர் வமிசமாகிய சூரிய குலத்தவர்கள் என்று பெருமை பாராட்டி வந்தனர். **அல்லாவுதீன் கில்ஜி** சித்தூர்க் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றி, தகர்த்தெறிந்தார். எனினும், மீவார் ராஜபுத்திரர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து தங்கள் கோட்டையைப் புதுப்பித்துக்கொண்டு, வெகு காலம் வரை முகம்மதியர்களை எதிர்த்துப் போராடினார்கள்.

மகா ராணா கும்பர் (*கி. பி. 1416-1469*): பதினைந்தாம் நூற்றாண்டில் மீவாரை ஆண்டுவந்த **மகாராணா கும்பர்** காலத்தில் மீவார் ராஜ்யம் மீண்டும் உன்னத நிலைமையை அடைந்தது. அவர் மாளவம், கூர்ஜரம் ஆகிய ராஜ்யங்களை ஜயித்து, அதன் ஞாபகார்த்தமாகப் பெரிய ஜயஸ்தம்பம் ஒன்றைச் சித்தூரில் நாட்டினார். அவர் தமது தாய்ப் பாஷையாகிய ராஜஸ்தானி பாஷையை அபிவிருத்தி செய்தார்; தமது ராஜ்யத்தில் அநேக கோட்டைகளைக் கட்டினார். அவருடைய மனைவியான **மீரா பாய்** ஸ்ரீ கிருஷ்ண பகவான் பேரில் பக்தி மிகுந்த பல பாடல்களை இயற்றியிருக்கிறாள்.

ராணு சங்கிராம் சிங்கு (கி. பி. 1509-28): ராணு கும்பருக்குப் பின் வந்த மீவார் அரசர்களுள் ராணு சங்கிராம் சிங்கு என்ற ராணு சங்கர் பிரசித்தி பெற்றவர். அவர் மற்றைய ராஜ புத்திர அரசர்களை ஒன்று கூட்டி, முகம்மதியர்களை இந்தியாவிலிருந்து விரட்டி, டில்லியில் இந்து சாம்ராஜ்யத்தை மறுபடியும் ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர். அவர் ஒரு பெரிய ராஜ புத்திரப் படையைத் திரட்டி, சுற்றிலும் உள்ள ராஜ்யங்களை ஜயித்தார். மொகலாய வீரரான பாபர் இந்தியாவின்மீது படையெடுத்தபோது அவர் தமது எண்ணம் நிறைவேறுமென்று நினைத்தார். ஆனால், பானிப்பட்டு யுத்தத்தில இப்ராஹிம் லோடியை வென்ற பின். பாபர் டில்லியில் தமது ராஜ்யத்தை ஏற்படுத்தினதைக் கண்டு ஏமாற்றமடைந்தார். அதனால், அவர் பாபருடன் போர் தொடுத்தார். கி. பி. 1527ல் **பாத்பூர் சிக்ரி** என்ற இடத்திற்கு அருகிலுள்ள **கான்வாஹா** என்ற இடத்தில் சண்டை நடந்தது. அதில் ராணுசங்கரின் சந்ததியார்கள் மீண்டும் பலமடைந்து, மொகலாய சக்கரவர்த்திகளுடன் அடிக்கடி போர் புரிந்தார்கள்.

கேள்விகள் :

1. ராஜபுதனத்தில் தோன்றிய பிரதான ராஜ்யங்கள் எவை ?
2. அவைகளில் முக்கியமானது எது? அதன் தலைநகர் எது ?
3. சித்தூர்க் கோட்டையைக் கைப்பற்றிய முகம்மதிய மன்னர் யார் ?
4. மகா ராணுகும்பர் ஜயஸ்தம்பம் நாட்டக் காரணம் என்ன ?
5. ராணுசங்கரின் நோக்கம் யாது ?
6. ராணுசங்கரை யார் எந்த இடத்தில் தோற்கடித்தார் ?

10. மொகலாய அரசர்கள்—பாபர்

(கி. பி. 1526-30)

பாபர் கி. பி. 1482-ஆம் வருஷம் தைமூரின் வமிசத்தில் பிறந்தார். அவர் தாய் செங்கிஸ்கான் வமிசத்தைச் சேர்ந்த வள். தைமூர் இறந்ததும் அவருடைய பெரிய ராஜ்யம் பல சிறிய ராஜ்யங்களாகச் சிதறிப் போயிற்று. அவற்றில் **பர்கான** என்னும் பிரிவிற்குப் பாபரின் தகப்பனர் அரசரானர். அவர் இறந்ததும் கி. பி. 1494ல் பாபர் பட்டத்துக்கு வந்தார். அப்பொழுது அவருக்கு வயது 12. அவர் வெகு பராக்கிரமசாலி; தேக வலிமையும், மனே தைரியமும் உள்ளவர்.



பாபர்

பாபர் காபூல் மன்னராதல்: பாபர் புதிய நாடுகளை ஜயித்துத் தம் ராஜ்யத்தைப் பெரிதாக்கிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கம் கொண்டார். **சாமர்க்கண்டு** என்ற மாகாணத்தை ஆண்டு வந்தவருடைய சிற்றப்பன் இறந்து போனவுடன் பாபர் அதைக் கைப்பற்ற முயன்ருர். ஆனல், முடியவில்லை. அவர் சிறுவரானபடியால், அவருடைய பிரபுக்களே அவருக்கு விரோதமாகக் கிளம்பி, அவரைப் பர்கான நாட்டை விட்டுத் துரத்திவிட்டார்கள். பின்பு பல வருஷங்கள் வரை அவர் பல விதமான கஷ்டங்களை அனுபவித்தார். பின்பு கி. பி. 1504ல் ஒரு பெரிய சைனியத்துடன் இந்து குஷ் மலையைக் கடந்து வந்து, காபூல் நகரைக் கைப்பற்றிக்கொண்டு, ஆப்கானிஸ்தானத்தில் தமது ஆட்சியை ஏற்படுத்தினர். அப்பொழுது இந்தியாவின்


இந்தியாவின் நிலைமை
1526
சாமர்க்கண்டு
பதக்ஷான்
கஜினி
காபூல்
காஷ்மீர்
லாகூர்
பானிப்பட்
டில்லி
கண்வா
ஆக்ரா
குவாலியர்
ஜான்பூர்
யமுனை
கங்கை
திபேத்
பிரம்மபுத்திரா
சிந்துநதி
மூல்டான்
ராஜபுதனம்
சித்தூர்
சண்டேரி
மாளவம்
கூர்ஜரம்
பீஹார்
வங்காளம்
கோதாவரி
கிருஷ்ணா
காவேரி
அரபிக்கடல்
வங்காளகுடாக் கடல்
இந்துமஹா
சமுத்திரம்

செல்வத்தையும் செழிப்பையும் பற்றிக் கேள்விப்பட்டு, இந்தியாவை ஜயித்து ஆளவேண்டும் என்ற எண்ணம் கொண்டார். ஆகையால், அவர் இந்தியாவின்மீது படையெடுப்பதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

பாபரின் இந்தியப் படையெழுச்சி : டில்லியில் லோடி வமிசத்தினர் ஆட்சிபுரிந்துகொண்டிருக்கையில் பாபர் பஞ்சாபின்மீது இரண்டு மூன்று தடவை படையெடுத்து வந்தார். டில்லிச் சுல்தான் இப்ராஹிம் லோடியின்மீது வெறுப்புக்கொண்ட அவருடைய மாமன் **அல்லாவுதீன்** என்பவரும் **தௌலத்கான்** என்ற பஞ்சாபு கவர்னரும், டில்லியின்மீது படையெடுத்துவந்து பானிப்பட்டு என்னுமிடத்தில் இப்ராஹிம் லோடியைத் தோற்கடித்தார். இந்தியச் சண்டைகளில் முதலாவது பீரங்கி உபயோகிக்கப்பட்டது இச்சந்தர்ப்பத்திலேதான். பாபரின் படை இப்ராஹிமின் படையைவிடச் சிறியதாயினும் பலமும் திறமையும் வாய்ந்தது. மேலும், பாபர் நடுவில் பீரங்கிகளையும், இடையிடையே கைத்துப்பாக்கி வீரர்களையும், இரண்டுபக்கங்களிலும் குதிரைப்படையையும் நிறுத்திவைத்திருந்தார். லோடியின் யானைப்படை பீரங்கிகளால் சிதறடிக்கப்பட்டது. வெருண்டு ஓடின யானைகள் லோடியின் ஆப்கானிய வீரர்களில் பலரை நசுக்கிக் கொன்றன. இந்தக் குழப்பத்தில் பாபரின் துப்பாக்கிப்படையும், குதிரைப்படையும் எதிரிகளைத் தாக்கி அவர்களில் பலரைக் கொன்றன. இப்ராஹிம் லோடியும் கொல்லப்பட்டார். **டில்லியும் ஆக்கிராவும்** பாபர் வசமாயின. பாபர் டில்லிக்கு அரசராகி **மொகலாய** ராஜ்யத்தை அங்கு ஸ்தாபித்தார்.

பாபரும் ராஜ புத்திரர்களும் : டில்லிக்கு அரசரான பிறகும் பாபரின் கஷ்டங்கள் நீங்கவில்லை. இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதியைத் தாங்காது அவருடன் வந்திருந்த துருக்கியரும் ஆப்கானியரும் தங்கள் நாட்டிற்குத்திரும்பிச்செல்லவிரும்பினர்

கள். தம்முடன் இருக்க இஷ்டமில்லாதவர்களை பாபர் திரும்பி அவர்கள் நாட்டிற்கு அனுப்பிவிட்டார். பாபர் இப்ராஹிம் லோடியைத் தோற்கடித்துவிட்டுத் தம் நாட்டிற்குத் திரும்பி விடுவார் என்று எண்ணியிருந்த சித்தூர் அரசரான ராணு சங்கர், பாபர் டில்லியில் ராஜ்யத்தை ஸ்தாபித்ததைக் கண்டு பெரிதும் ஏமாற்றமடைந்தார். அவர் மற்ற ராஜ புத்திரர்களை யும் சேர்த்துக்கொண்டு ஆக்கிராவை நோக்கிப் புறப்பட்டார். பாபர் ஒரு பெரிய சேனையுடன் சென்று **கான்வாஹா** என்னு மிடத்தில் அவர்களை எதிர்த்துச் சண்டை செய்து வெற்றி பெற்றார். ராணு சங்கர் இறந்தார். ராஜ புத்திரர்கள் **சாண்டரி** என்னும் கோட்டையைப் பலப்படுத்திக்கொண்டு பாபரை மீண்டும் எதிர்த்தனர். பாபர் அக்கோட்டையை முற்றுகை யிட்டுக் கைப்பற்றிக்கொண்டார். அதன்பிறகு மாளவம் அவர் கைவசமாயிற்று.

பீஹாரிலும் வங்காளத்திலும் உள்ள ஆப்கானியர்கள் பாபருக்கு விரோதமாகக் கிளம்பினார்கள். கி. பி. 1529ல் பாபர் அவர்களைத் தோற்கடித்து, அந்த நாடுகளை ஜயித்துக்கொண் டார். இந்த வெற்றிகளால் பாபரின் ராஜ்யம் வங்காளம் வரை பரவியது.

பாபரின் மரணம்: பாபர் நான்கு வருஷங்களே அரசாண் டார். அவர் தாம் ஜயித்த ராஜ்யத்தை ஒழுங்குபடுத்திச் செம்மையாக ஆட்சி செய்தார். அவர் தம் ராஜ்யத்திற்கு ஆக்கிரா நகரத்தைத் தலைநகராக வைத்துக்கொண்டார். அங்கே அழகிய அரண்மனைகளையும், நந்தவனங்களையும், கட்டடங்களையும் அமைத்து, அதை அழகான பட்டணமாகச்செய்து, அங்கே வசித்து வந்தார். வாலிபத்தில் பாபருக்கு **ஸஹீர் உதீன் முகம்மது** என்ற பெயர் இருந்தது. அவர் சிங்கத்தைப்போன்ற வீரமுடையவராயிருந்தபடியால், அவருக்குப் **பாபர்** (சிங்கம்) என்ற பெயர் ஏற்பட்டது. அவர் பாரசீக பாஷையில் தேர்ச்சி

பெற்றவர். அவருக்குக் கவி பாடும் திறமையும் இருந்தது. அவர் பல கல்விமான்களையும் ஆதரித்தார். அவர் தம்முடைய சரித்திரத்தைத் தாமே துருக்கி பாஷையில் எழுதிவைத்திருக்கின்றார்.

பாபர் தெய்வ பக்தி மிகுந்தவர். அவருடைய மூத்த குமாரர் ஹுமாயூன் வியாதியுற்று மரணத் தறுவாயில் இருந்தார். ஒரு பெரியார் பாபரிடம் வந்து அவர் சிறந்ததாகக் கருதும் பொருளைக்கடவுளுக்குக் காணிக்கையாகச்செலுத்தினால் ஹுமாயூன் உயிர் பிழைப்பார் என்று கூறினார். பாபருக்கு ஹுமாயூன்மீது அளவில்லாத அன்பு இருந்தது. அவர் எப்படியாவது தமது குமாரர் உயிர் பிழைத்தால் போதுமெனக் கருதினார். தம் உயிரினும் சிறந்தது ஒன்றுமில்லை என்று சொல்லி அதையே கொடுப்பதாகச் சபதம் செய்தார். அவ்வாறே அவர் ஹுமாயூன் படுக்கையை மூன்று முறை வலம் வந்து, தம் குமாரருக்குப் பதிலாகத் தம்மை அழைத்துக்கொள்ளும்படி கடவுளைப் பிரார்த்தித்தார். அதற்கிணங்கினாற்போல ஹுமாயூன் சௌக்கியமடைந்தார்; பாபர் நோயுற்றுக் கி. பி. 1530ல் மரணமடைந்தார்.

கேள்விகள் :

1. பாபர் எந்த வமிசத்தைச் சேர்ந்தவர்? அவருடைய இளமைப் பருவ வாழ்க்கை வரலாறு யாது?
2. பாபர் எவ்வாறு டில்லி அரசரானார்?
3. பானிப்பட்டுச் சண்டையில் பாபர் வெற்றி அடைந்ததற்குக் காரணம் என்ன?
4. பாபர் வட இந்தியா முழுவதையும் எவ்வாறு தமது ஆட்சிக்கு உட்படுத்தினார்?

11. ஹுமாயூன் (கி. பி. 1530-40 ; 1555-56)

ஹுமாயூனின் கஷ்டங்கள் : பாபருக்குப் பின் அவருடைய குமாரர் ஹுமாயூன் பட்டத்திற்கு வந்தார். அவர் பாபரைப் போல மனோதிடமும் விடாமுயற்சியும் உடையவரல்லர் ; சுக வாழ்க்கையில் விருப்பமுள்ளவர். அவர் பட்டத்திற்கு வந்ததும் அவருக்குப் பல கஷ்டங்கள் நேரிட்டன. அவருடைய சகோதரரான **காம்ரான்,** காபூல், காண்டஹார், பஞ்சாபு ஆகிய மாகாணங்களைப் பிடித்துக்கொண்டார். ஆகையால், ஹுமாயூனுக்கு ஆப்கானிஸ்தானத்திலிருந்து உதவி வர மார்க்கமில்லாமல் போயிற்று. தவிர வங்காளத்திலும் பீஹாரிலும் ஆப்கானியர்கள் கலகங்களைச் செய்து வந்தனர். கூர்ஜர நாட்டு அரசரான **பகதூர்ஷா,** சக்கரவர்த்தியாருக்கு விரோதமாகக் கிளம்பினார்.

ஹுமாயூன்

ஹுமாயூன் முதலில் பீஹாருக்குச் சென்று ஆப்கானியத் தலைவர் **முகம்மது** என்பவரை **லக்ஷ்மணபுரி** என்னுமிடத்தில் தோற்கடித்தார். பிறகு வங்காளத்திற்கு அதிபதியாகிய **ஷேர்கானிடமிருந்து சூனர்க்** கோட்டையை முற்றுகை செய்து பிடித்துக்கொண்டார். அச்சமயத்தில் கூர்ஜர நாட்டு மன்னரான பகதூர்ஷா என்பவர் மாளவத்தைக் கைப்பற்றிக்கொண்டு, ராஜபுதனத்தின்மீதும் படையெடுத்தார்.

ராஜபுத்திரத் தலைவர்கள் மொகலாய சக்கரவர்த்தியைத் தங்களுக்கு உதவி புரியும்படி வேண்டினார்கள். ஹுமாயூன் தமது சைனியத்துடன் மாளவத்தை நோக்கிச் சென்றார். அதற்

குள் பஹதூர்ஷா **சித்தூர்**க் கோட்டையைப் பிடித்துப் பாழாக்கி விட்டார். பகதூர்ஷா சித்தூரை விட்டுத் திரும்பி வரும்போது ஹுமாயூனைச் சந்தித்தார். மாளவத்தின் தலைநகரான **மாண்டு** என்னும் நகருக்கருகில் நடந்த சண்டையில் பகதூர்ஷா தோல்வியடைந்து ஓடி, **டையூ** என்ற பட்டணத்தில் வியாபாரம் செய்துவந்த போர்த்துகீசியரிடம் சென்று அடைக்கலம் புகுந்தார். இவ்வாறு ஹுமாயூன் மாளவம், கூர்ஜரம் என்ற நாடுகளை ஜயித்துக்கொண்டார். ஆனால், அவற்றை ஆளுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யாமல் தம் நாட்டிற்குத் திரும்பவே, பகதூர்ஷா போர்த்துகீசியரின் உதவியைப் பெற்று, முதலில் கூர்ஜரத்தையும் பின்பு மாளவத்தையும் மீட்டுக் கொண்டார்.

ஹுமாயூனும் ஷெர்கானும்: ஹுமாயூன் கூர்ஜரத்திலிருந்த பொழுது, ஷெர்கான் மீண்டும் பலமடைந்து, சுனார்க் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார். ஹுமாயூன் உடனே சென்று அவரை அடக்காமல் சிறிது காலம் சுகமாகக் காலங் கழித்தார்; பின் தம் சைனியத்துடன் வங்காளத்திற்குச் சென்றார். ஷெர்கான் அவரை எதிர்க்காமல் வங்காளத்திற்குள் நுழையும்படி விட்டு, பின்னர் அவர் வங்காளத்தை விட்டு டில்லிக்குத் திரும்ப முடியாதபடி பாதைகளை அடைத்துவிட்டார். ஹுமாயூனுக்கு உதவியாக டில்லியிலிருந்து ஒருவரும் வரமுடியவில்லை. ஷெர்கான் ஹுமாயூனின் சேனையைக் கி. பி. 1539ல் பக்ஸார் என்னுமிடத்திற்கு அருகிலுள்ள **சௌன்ஸா** என்னுமிடத்தில் சந்தித்துத் தோற்கடித்தார். ஹுமாயூன் ஒரு தண்ணீர்த் துருத்திக்காரன் உதவியால் கங்கை நதியைக் கடந்து ஆக்கிராவிற்குச்சென்றார். மறு வருஷத்தில் ஹுமாயூன் ஷெர்கானுடன் **கன்னோசி** என்னுமிடத்தில் சண்டை செய்து தோல்வியடைந்தார். அப்பால் அவர் இலாகூரில் அரசு புரிந்த தம் தம்பி **காம்ரா**னிடம்சென்று தமக்கு உதவிபுரியும்படி வேண்

டிக்கொண்டார். காம்ரான் இச்சமயத்திலும் தம் சகோதரரிடம் பொருமைகொண்டு உதவி செய்ய மறுத்தார். ஆதலால், ஹுமாயூன் உயிர் பிழைக்க எங்கேனும் ஓடும்படி நேரிட்டது.

அக்பரின் பிறப்பு: ராஜ்யத்தை இழந்த ஹுமாயூன் சிந்து மாகாணத்திலும், ராஜபுதனத்திலும் இரண்டு வருஷங்களுக்குமேல் அலைந்து திரிந்து பல கஷ்டங்களை அனுபவித்தார். இந்த நிலைமையில் அவரது மனைவியாராகிய **ஹமீடாபீகம், அமரக் கோட்டை** என்னுமிடத்தில் கி. பி. 1542ல் ஓர் ஆண் குழவியை ஈன்ருள். அக்குழந்தைக்கு **அக்பர்** என்று பெயர் இடப்பட்டது. சிறிது காலம் ஹுமாயூன் ராஜபுத்திர அரசர்களுடனும், சிந்துவில் ஆண்ட அமீர்களுடனும் தங்கிய பிறகு பாரசீகம் சென்றடைந்தார். பாரசீகச் சக்கரவர்த்தியின் உதவியால் ஹுமாயூன் தம் தம்பி காம்ரானிடமிருந்த காபூலையும், காண்டஹாரையும் கைப்பற்றி அரசாட்சி செய்தார்.

ஷெர்ஷாவின் ஆட்சி: (கி. பி. 1540–45) கன்னேசிச் சண்டையில் தோற்றுப்போய்ஹுமாயூன் ஓடிப்போகவே, **ஷெர்கான், ஷெர்ஷா** என்னும் பெயருடன் டில்லிச் சுல்தான் ஆனர். அவர் ஐந்து வருஷ காலம் திறமையுடன் அரசுபுரிந்து ஜனங்களுக்கு அநேக நன்மைகளைச் செய்தார். நிலங்களை அளந்து அவற்றின் விளைவுக்குத் தக்கபடி வரியை விதித்தார். பக்ஷபாதமின்றி நியாயம் வழங்கி வந்தார். அநேக புதிய சாலைகளை அமைத்தார். சிந்து நதிலிருந்து வங்காளம் வரை போடப்பட்ட சாலை அவற்றுள் முக்கியமானது. சாலையின் ஓரங்களில் நிழல் தரும் மரங்களும், சத்திரங்களும், கிணறுகளும் அமைக்கப்பட்டன. நாட்டில் திருடர் பயமின்றி ஜனங்கள் வாழ்ந்து வந்தனர். அவர், தம் பெயரால் நாணயங்களை அச்சிட்டுவழங்கினர். அவர் காலத்தில் வியாபாரமும் விவசாயமும் செழித்தோங்கின. அவர் காலத்தில் குதிரைகள் மூலமாகத் தபால்களை அனுப்புவதற்குத்

தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவர் ஹிந்துக்களையும், முஸ்லீம்களைப்போலவே சமமாகப் பாவித்து வந்தார். ஆகையால், அவரது ஆட்சியில் ஜனங்கள் சௌக்கியமாயும் சந்தோஷமாயும் வாழ்ந்து வந்தார்கள்.



ஹுமாயூன் சமாதி

By permission of the Archaeological Survey of India

ஷெர்ஷா, பஞ்சாபு, மாளவம், மார்வார் ஆகிய நாடுகளைக் கைப்பற்றித் தமது ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். அவர் சித்தூரைப் பிடித்துக்கொண்டு, பண்டல் கண்டிலுள்ள களிஞ்சார் என்னும் கோட்டையை முற்றுகை செய்யும்போது தற்செயலாய் ஒரு துப்பாக்கி வெடித்ததனால் அடிபட்டு இறந்தார்.

ஹுமாயூன் டில்லி ராஜ்யத்தை மீண்டும் அமைத்தல்: ஷெர் ஷாவின் சந்ததியார்கள் பத்து வருஷங்கள் டில்லி ராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். அவர்கள் திறமையற்றவர்கள். ஆகையால், பல மாகாணங்களில் கலகங்கள் உண்டாயின. அச்சமயம் ஹுமாயூன் ஒரு பெரும்படையுடன் காபூலை விட்டு டில்லியை நோக்கி வந்தார். கி. பி. 1555ல் **ஸர்ஹிண்டு** என்னும் இடத்தில் அப்பொழுது டில்லியை ஆண்டு வந்த **ஸிக்கந்தர்ஷா** என்பவரைத் தோற்கடித்து, மீண்டும் டில்லிக்கு அரசரானார். ஆனால், அவரது இரண்டாவது ஆட்சி ஆறு மாதத்திற்குமேல் நீடித்திருக்கவில்லை. கி. பி. 1556ல் அவர் அரண்மனையின் மெத்தைப் படியில் வழுக்கி விழுந்து காயமடைந்து இறந்துபோனார். அவரது சமாதி இன்றைக்கும் டில்லியில் அழகுடன் விளங்குகிறது.

கேள்விகள்:

1. ஹுமாயூன் பட்டத்துக்கு வந்ததும் அவருக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் எவை?
2. ஹுமாயூன் எவ்வாறு தம் ராஜ்யத்தை இழந்தார்?
3. அக்பர் எந்த இடத்தில், எந்த வருஷம் பிறந்தார்?
4. ஷெர்ஷா செய்த சீர்திருத்தங்கள் எவை?
5. டில்லியில் மொகலாய ஆட்சி எவ்வளவு காலம் இல்லாமலிருந்தது? திரும்பவும் எப்படி ஸ்தாபிக்கப்பட்டது?

---

12. அக்பர் சக்கரவர்த்தியார்

(கி. பி. 1556-1605)

இரண்டாவது பானிப்பட்டு யுத்தம்: ஹுமாயூன் இறந்ததும் அவருடைய குமாரர் அக்பர் பட்டத்திற்கு வந்தார். அப்பொழுது அவருக்கு வயது பதின்மூன்று. ஆகையால், அவருடைய மாமனான **பைராம்கான்** என்பவர் அவருக்குப் பிரதிநிதியாய் இருந்து அரசாங்கத்தை நடத்தி வந்தார். வங்காளத்தில் ஷெர்

ஷாவின் வமிசத்தைச் சேர்ந்த ஒருவர் ஆண்டு வந்தார். அவரிடம் **ஹேமு** என்னும் ராஜபுத்திர வீரர் மந்திரியாய் இருந்தார். அவர் வட இந்தியாவில் இந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பினர். அவர் ஒரு சேனையுடன் வந்து டில்லியையும் ஆக்கிராவையும் கைப்பற்றிக்கொண்டு, தாமே அரசரெனவிளம்பரம் செய்தார். பைராம்கான் ஒரு பெருஞ்சேனையுடன் ஹேமுவை எதிர்த்துச்சென்று, கி. பி. 1556ல் **பானிப்பட்டு** என்னுமிடத்தில் அவரைத்தோற்கடித்துக் கொன்றார். அதன் பிறகுதான் அக்பர் டில்லிக்கு அரசரானர். இரண்டாவது பானிப்பட்டுச் சண்டையில் அடைந்த வெற்றியினல் மொகலாய ராஜ்யம் டில்லியில் மீண்டும் ஸ்திரப்படுத்தப்பட்டது.

அகபர்

பைராம்கான் ஹேமுவை அக்பரின் விருப்பத்திற்கு மாருகக்கொன்றார். மேலும், அவர் அக்பரைத் தமக்கு அடங்கிநடக்கும்படி செய்துவந்தார். இதை விரும்பாத அக்பர் கி. பி. 1560ல் பைராம்கானை வேலையிலிருந்து நீக்கிவிட்டுத் தாமே ராஜாங்கக்காரியங்களை நேரில் கவனிக்க ஆரம்பித்தார். பைராம்கான் அதனுல் கோபங்கொண்டு கலகம் செய்தார். அக்பர் அவரை அடக்கி மக்காவுக்கு யாத்திரை போகும்படி செய்தார். வழியில் பைராம்கான் அவருடைய விரோதிகளில் ஒருவரால் கொல்லப்பட்டார்.

அக்பரின் வெற்றிகள் : அக்பர் பட்டத்திற்கு வந்தபோது, பஞ்சாபு மாகாணமும், டில்லியைச் சுற்றியுள்ள பிரதேசமுமே

அவருக்குச் சொந்தமாயிருந்தன. பைராம்கான் வேலையை விட்டு நீங்கு முன்பே குவாலியர், ஆஜ்மீர், ஜான்பூர் மாகாணங்கள் ஜயிக்கப்பட்டு டில்லி ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டன. கி. பி. 1562ல் அக்பர் மாளவத்தை ஜயித்தார். பின்பு **கொண்டுவான** நாட்டை ஆண்டுவந்த இராணி **துர்க்காவதி**யுடன் போர் புரிந்து அந்த நாட்டையும் ஜயித்துக்கொண்டார். மீவார் ராஜ்யத்தின் ராணுவாகிய **உதயசிங்கு** அக்பரிடம் விரோதம்பாராட்டி வந்தார். ஆகையால், அக்பர் கி. பி. 1567-ஆம் வருஷம் மீவாரின் தலைநகராகிய சித்தூரை முற்றுகை செய்தார். ராணு உதய சிங்கு தைரியம் பொருந்தியவர் அல்லர். அவர் தம் சேனாதிபதி யான **ஜயமாலி**டம் சித்தூரை ஒப்புவித்துவிட்டு அரவல்லிமலைப பிரதேசத்திற்கு ஓடிவிட்டார். ஜயமால் வீரத்துடன் கோட்டையைக் காத்துவந்தார். ஆனால், அவர் தற்செயலாய்க் கொல்லப்படவே, அக்பர் கோட்டையை எளிதில்கைப்பற்றிக்கொண்டார். ராஜ புத்திர ஸ்திரீகள் தீக்குளித்தனர். பிறகு அக்பர் **ராந்தம்பர்க்** கோட்டையையும், **களஞ்சார்க்** கோட்டையையும் பிடித்துக்கொண்டார்.

சித்தூரை விட்டுப் போன ராணு உதயசிங்கு, அரவல்லி மலைப் பிரதேசத்தில் **உதயபுரம்** என்ற ஒரு புதிய நகரை உண்டாக்கிக்கொண்டு அக்பருக்கு அடங்காமல் வெகு காலம் போர் செய்தார். கி. பி. 1572ல் உதயசிங்கு இறந்தபின் அவர் குமாரர் **ராணு பிரதாபசிங்கு** பட்டத்துக்கு வந்தார். சித்தூரை மீட்டுக் கொள்ளும்பொருட்டு அவர் அக்பருடன் 25 வருஷ காலம் சண்டை செய்தார் ; மீவார் தேசத்தின் பெரும்பாகத்தைக் கைப்பற்றினர். கி. பி. 1597ல் அவர் இறந்த பின்புதான் அப் பிரதேசம் அக்பரின் ஆட்சிக்கு உட்பட்டது.

பிறகு அக்பர் கூர்ஜரம், வங்காளம், பீஹார், ஓரிஸ்ஸா முதலிய மாகாணங்களை ஆண்டுவந்த ஆப்கானிய அரசர்களைத்


அக்பர்
இராஜ்ஜியம்
காபூல்
பெஷாவர்
கண்டஹார்
முல்டான்
பானிபட்
டில்லி
ஜெயபுரி
சிக்ரி
ஜோதிபுரி
ஆக்ரா
அமாக்கோட்டை
ஆஜ்மீர்
குவாலியர்
சித்தூர்
உதயபுரி
அலகபாத்
காசி
பாடலி
புத்திரம்
கவுர்
சண்டேரி
உஜ்ஜினி
ஆமதாபாத்
அசிர்கார்
சூரத்
தய்யு
பம்பாய்
ஆமதுநகர்
கோவா
விஜயநகர்
ராஜமஹேந்திரம்
மைசூர்
கொச்சி
கொல்லம்
அரபிக்கடல்
வங்காளகுடாக்
கடல்
இந்துமஹா
சமுத்திரம்.

தோற்கடித்து, அந்த மாகாணங்களைத் தமது ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். அக்பரின் சகோதரர் காபூலை ஆண்டு வந்தார். அவர் அக்பருக்கு விரோதமாகக் கிளம்பவே, அக்பர், அவரை அடக்கினர். அப்பால் அவர் இறந்து போகவே, காபூலும் மொகலாய ராஜ்யத்திற்கு உட்பட்டது. பின்னர் அக்பர் காஷ்மீர், சிந்து, காண்டஹார் ஆகிய மாகாணங்களை ஒவ்வொன்ருக ஜயித்துக்கொண்டார். இவ்வாருக அக்பருடைய சாம்ராஜ்யம் வடமேற்கில் ஹிந்துகுஷ் மலையிலிருந்து தெற்கே விந்தியமலை வரையிலும் பரவியிருந்தது. அவரது ஆட்சிக் காலத்தில் ஆக்கிரா மொகலாய சாம்ராஜ்யத்தின் தலைநகராய் இருந்தது. ஆயினும், அவர் தாம் புதிதாய்க் கட்டிய பாத்பூர்சிக்ரி என்னும் நகரத்தையே தமது முக்கிய இருப்பிடமாகக் கொண்டார்.

அக்பரின் தக்காணப் படையெடுப்பு : அக்பர் தக்காணத்தையும் ஜயிக்க விரும்பினர். அப்பொழுது தக்காணத்தில் பாமனி ராஜ்யம் ஐந்து பிரிவுகளாய்ப் பிரிந்திருந்தது. அக்பர் அவற்றுள் வடகோடியிலிருந்து ஆமது நகரை ஜயிப்பதற்காகத் தமது குமாரர் **மூராது** என்பவரை ஒரு சேனையுடன் அனுப்பினர். அப்பொழுது ஆமது நகரைச் **சாந்து பீபி** என்னும் ராணி ஆண்டுவந்தாள். அவள் வீரத்துடன் போர் புரிந்து, வெகு தைரியமாகக் கோட்டையைக் காத்து வந்தாள். எனவே, மொகலாயர்களால் ஆமது நகரைக் கைப்பற்ற முடியவில்லை. இருந்தாலும், சாந்து பீபி பீரார் மாகாணத்தை மொகலாயர்களுக்குக் கொடுத்து அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டாள். இந்தச் சமாதானத்தை விரும்பாத ஆமது நகரப் பிரபுக்கள் சாந்து பீபிக்கு விரோதமாகக் கலகம் செய்து அவளைக் கொன்றுவிட்டனர். கி. பி. 1600ல் அக்பர் திரும்பவும் படையெடுத்துச் சென்று, ஆமது நகரைக் கைப்பற்றினர். பின்பு தக்காணத்திலுள்ள காண்டேஷ் நாட்டையும் வென்று, அக்பர் தம் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார்.

அச்சமயத்தில் வட இந்தியாவில் அக்பரின் குமாரரான **ஸலீம்** கலகம் செய்ததால், அக்பர் தக்காணப் படையெடுப்பை நிறுத்திவிட்டுத் தம் தலைநகருக்குத் திரும்பினர்.

அக்பரின் குணாதிசயங்கள்: அக்பர் தேக திடமும் விடா முயற்சியும் உள்ளவர்; புத்தி நுட்பமும் தயாள குணமும் நிறைந்தவர். அவர் தைரியமாக யுத்தம் செய்த போதிலும் தமது விரோதிகளிடம் கொடூரமாக நடந்துகொள்ளவில்லை. அவர் தமது பகைவர்களையும் மதித்து மரியாதை செய்தார். அதனால், அவர்களுடைய அன்பையும் சிநேகத்தையும் பெற்றார். அவருக்குக் கல்வியிலும், சித்திர வேலையிலும், சங்கீதத்திலும் பிரியம் அதிகம். அவர் அநேக வித்துவான்களை ஆதரித்தார். **டான்ஸன், ராஜா பிர்பால்** முதலிய சங்கீத வித்துவான்களும், புகழ் பெற்ற பாரசீகக் கவிஞர்களாகிய **அபுல் பாஸல், அபுல் பைஸி** என்னும் சகோதரர்களும் முக்கியமானவர்கள். அபுல் பாஸல் **'அக்பர் நாமா'** என்னும் காவியத்தை எழுதியுள்ளார். அதிலிருந்து அக்பருடைய ஜீவிய சரித்திரத்தையும், அரசியல் முறைகளைப்பற்றியும் நாம் தெரிந்துகொள்கிறோம். ஹிந்தி பாஷையில் இராமாயணத்தைச் செய்யுளாக இயற்றிய **துளசி தாஸர்** என்னும் பிரசித்தி பெற்ற கவிஞரும் அக்பர் காலத்தில் வசித்து வந்தார்.

அக்பர் பாரபக்ஷமற்றவர். அவர் இந்துக்களையும் முகம்மதியர்களையும் ஒரே விதமாக நடத்தி வந்தார். அவர்களுக்கு விதித்திருந்த **ஜிஸியா** என்னும் மத வரியை நீக்கினர். இந்துக்களை உயர்ந்த உத்தியோகங்களில் அமர்த்திக்கொண்டார். இவ்வாறு அவர் இந்துக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றார்.

அக்பர் இஸ்லாம் மதத்தில் அதிக அபிமானம் உள்ளவர். ஆனல், அவருக்கு மத வைராக்கியம் என்பது சிறிதேனும் இல்லை. ஒவ்வொரு மதத்திலும் நல்ல அமிசங்கள் உண்டு என்

பது அவரது துணிபு. ஒவ்வொரு மதத்திலுமுள்ள விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வதில் அவருக்குப் பிரியம் அதிகம்; அதன் நிமித்தம் தமது சபைக்குச் சகல மதஸ்தர்களையும் வரவழைத்து, அவர்களைப் பிரசங்கங்கள் செய்யச் சொல்லிக் கேட்டு, வெவ்வேறு மதத்தின் முக்கிய கொள்கைகளையும் தெரிந்துகொண்டார். அவர் இந்துக்களும் முகம்மதியர்களும் பேதமில்லாமல் ஐக்கியப்பட்டு அனுசரிக்கும்படியாக, **தீன் இலாஹி** என்ற ஒரு புதிய மதத்தை ஏற்படுத்த முயன்று வந்தார்.

அக்பரும் ராஜபுத்திரர்களும்: அக்பர் பெரிய ராஜதந்திரி. அவர் இந்துக்கள் அதிகமான இந்நாட்டைச் சமாதானமாக ஆட்சி செய்ய வேண்டுமெனில் இந்துக்களை ஆதரித்து அவர்களது நட்பைப்பெற வேண்டுமென்பதை அறிந்து கொண்டார். ராஜபுத்திரர் விசேஷபலமும் தைரியமும் வாய்ந்தவராயிருந்தனர். ஆகையால், அக்பர் ராஜபுத்திரர்களை வெகு கண்ணியமாகவும், அன்புடனும் நடத்திவந்தார்; ராஜபுத்திரர்களும் மொகலாயர்களும் விவாக சம்பந்தம் செய்துகொண்டால் இரு ஜாதியாரும் ஒன்றுபட்டு அவர்களுக்குள்ள விரோதமும் பகையும் நீங்கும் என்று எண்ணினர். அதன்பொருட்டு அவர் கி.பி. 1562ல் **ஜயபுரத்தை** ஆண்டு வந்த **பீஹாரிமால்** என்பவரின் குமாரியை மணம் செய்து கொண்டார். அதன் பிறகு பிக்கானீர், ஜெய்சால்மீர் இளவரசிகளையும் மணம் செய்துகொண்டார்; கி. பி. 1574ல் தமது குமாரர் ஸலீம் என்பவருக்கு **ராஜா பகவன் தாஸ்** என்பவரின் குமாரி **ஜோதிபாயை** மணம் செய்வித்தார். அவர்தம் ராஜ்யத்தில் இந்துக்களுக்கு உயர்ந்த பதவிகளை அளித்தார். அவர்களுள் **பகவன் தாஸ், மான் சிங்கு, தோடர்மால், பிர்பால்** என்பவர்கள் முக்கியமானவர்கள்.

அக்பரின் ஆட்சி முறை: அக்பர் தம் சாம்ராஜ்யத்தைச் செம்மையாக ஆட்சி புரிந்தார். தமது விசாலமான ராஜ்யத்தைப்

பதினைந்து மாகாணங்களாகப் பிரித்தார். அவைகளுக்குச் **சுபாக்கள்** என்பது பெயர். ஒவ்வொரு சுபாவிலும் பல ஜில்லாக்கள் அடங்கியிருந்தன. அக்பர் ஒவ்வொரு சுபாவிலும் **சுபேதார்** என்ற கவர்னரை நியமித்தார். வரி வசூலிப்பதற்காகத் **திவான்** என்ற மந்திரியும், வழக்குகளை விசாரணை செய்வதற்குக் **காஜிகள்** என்னும் நியாயாதிபதிகளும், குற்றம் செய்பவர்களைக் கண்டு பிடிப்பதற்குக் **கொத்தவால்கள்** என்னும் போலீஸ் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டார்கள். அக்பர் ஒவ்வொரு சுபாவிலும் உத்தியோகஸ்தர்கள் தங்கள் இலாக்காக்களின் நிர்வாகத்தை ஒழுங்காக நடத்தி வருகிறார்களாவென்று தாமே நேரில் கவனித்து வந்தார். கிராமங்களில் கிராம அதிகாரிகளே சகல அதிகாரங்களையும் வகித்து வந்தார்கள். அவர்களுக்கு உதவி செய்யும்பொருட்டுப் பஞ்சாயத்தார்கள் நியமிக்கப் பட்டார்கள்.

அக்பர் தமது இராணுவத்தை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்தார். அவரிடம் பெரிய சைனியம் இருந்தது. சேனைத் தலைவர்களுக்கு **மான்சப்தார்கள்** என்பது பெயர். மான்சப்தார்களுக்கு ஜாகீர் (நில மானியம்) கொடுக்கும் வழக்கத்தை நிறுத்தி அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்தார். அவருடைய சைனியத்தில் பீரங்கிப் படையும் இருந்தது.

அக்பர் தமது மந்திரியான **ராஜாதோடர்மால்** என்னும் ராஜபுத்திர பிரபுவின் உதவியால் ஒரு சிறந்த நிலவரித் திட்டத்தை ஏற்படுத்தினர். நிலங்கள் சரியாக அளக்கப்பட்டு அவைகளின் செழிப்புக்குத் தக்கவாறு வரி விதிக்கப்பட்டது. ஒவ்வொரு நிலச்சுவானுக்கும் அவனுக்குச் சொந்தமான நிலத்தின் விஸ்தீரணம், அவன் செலுத்த வேண்டிய தீர்வை முதலிய விவரங்கள் குறிப்பிட்ட **பட்டா** கொடுக்கப்பட்டது. பத்து வருஷங்களின் விளைவின் சராசரியில் மூன்றில் ஒரு பங்கு நிலத் தீர்வையாக

வசூலிக்கப்பட்டது. தீர்வையைத் தானியமாகவும் ரொக்கமாக வும் செலுத்தலாம். சாகுபடி செய்யப்படாத நிலங்களுக்குத் தீர்வை விதிக்கப்படவில்லை. அரசாங்க உத்தியோகஸ்தர்களே வரி வசூல் செய்து வந்தார்கள். அக்பர் சுங்க வரியையும், ஏற்று மதி இறக்குமதி வரியையும் குறைத்தார். இவ்விதச் சீர்திருத்தங் களினுல் நாட்டில் விவசாயமும் வியாபாரமும் அதிக முன் னேற்றம் அடைந்தன.

அக்காலத்தில் இந்து ஸ்திரீகள் கணவன் இறந்ததும் அவ னுடன் **உடன்கட்டை** ஏறுவது வழக்கமாய் இருந்தது. அதற்குச் **சககமனம்** என்பது பெயர். அக்கொடிய வழகத்தை நிறுத்த அக் பர் பெருமுயற்சி செய்தார்; மேலும், பாலிய விவாகத்தைத் தடுத்து, விதவா விவாகத்தைச் சட்ட பூர்வமாகச் செய்தார். அக்பர் இவ்வாறு ஜனங்களுக்கு அநேக நன்மைகள் செய்து கொண்டு பெரும்புகழுடன் சுமார் ஐம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அவர் காலத்தில் மொகலாய சாம்ராஜ்யம் உன்னத நிலையை அடைந்திருந்தது. ஜனங்கள் அவரை அக்பர் மஹா சக்கரவர்த்தியார் என்று வழங்கினர்கள்.

ஆனல், அக்பரின் அந்திய காலத்தில் அவருக்குப் பல துன் பங்கள் ஏற்பட்டன. அவருடைய மூன்று பிள்ளைகளில் இருவர் இறந்தனர். மூத்த குமாரராகிய ஸலீம், அக்பர் தக்காணத்தில் போர் செய்து வருகையில் அவருக்கு விரோதமாகக் கிளம்பி ஞர். அக்பர் அக்கலகத்தை அடக்கி **ஸலீமை** வங்காளத்திற்குச் சுபேதாராக நியமனம் செய்தார். இருந்த போதிலும், ஸலீம் அக்பரிடம் துவேஷம் கொண்டு அவருக்கு உதவியாயிருந்த அவருடைய உற்ற நண்பரான அபுல் பாஸலை வஞ்சகமாய்க் கொலை செய்தார். அதனுல் அக்பர் வருத்தமடைந்தார். கி. பி. 1605-ஆம் ஆண்டில் தமது அறுபத்து மூன்ரும் வயதில் அக்பர் மரணமடைந்தார்.

கேள்விகள் :

1. இரண்டாவது பானிப்பட்டுச் சண்டை யார் யாருக்கு எந்த வருஷம் நடந்தது? அதன் முக்கியம் என்ன?
2. அக்பர் ஜயித்த நாடுகள் எவை?
3. அக்பர் இந்துக்களை எவ்வாறு நடத்தினர்?
4. அக்பரின் குணாதிசயங்கள் எவை?
5. அக்பர் ராஜ புத்திரர்களின் நட்பை எவ்வாறு அடைந்தார்?
6. அக்பரின் சாம்ராஜ்யம் எவ்வாறு பிரித்து ஆளப்பட்டது?
7. அக்பருடைய நிலவரிச் சீர்திருத்தங்கள் யாவை? இவ்விஷயத்தில் அவருக்கு உதவியாயிருந்தவர் யார்?
8. குறிப்பெழுது :—(1) சாந்து பீபி, (2) அபுல் பாஸல், (3) தீன்-இலாஹி.

---

13. ஜஹாங்கீர்

(கி. பி. 1605-1627)

அக்பருக்குப் பின் அவருடைய குமாரர் **ஸலீம்** என்பவர் **ஜஹாங்கீர்** (உலகத்தை ஜயித்தவர்) என்ற பெயருடன் சிம்மாசனம் ஏறினர். அவர் சிறந்த கல்விமான்; புத்திக்கூர்மையும் வீரமும் படைத்தவர்; சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவர். ஆனல், அவர் மதுபானப் பிரியர். அவர் தமது காலத்தைக் குடிப்பதிலும், சிற்றின்பத்திலும் கழித்தார். ஆகையால், அரசாங்கக் காரியங்களைச் சரிவரக் கவனிக்க முடியவில்லை. ஆயினும், அவர் தம் தந்தையாரின் அரசாங்கத் திட்டங்களையே பின்பற்றி வந்தார். அவருடைய தாயார் ஒரு ராஜபுத்திர ஸ்திரீ. ஜஹாங்கீரும் ஒரு ராஜபுத்திர இளவரசியை மணம் செய்துகொண்டார். ஆகையால், அவரும் தந்தையாரைப்போலவே ராஜ புத்திரர்களிடமும், மற்ற இந்துக்களிடமும் அன்பாய் நடந்துகொண்டார்.

நூர்ஜஹான்: ஜஹாங்கீர் சிறுவராயிருந்த போதே நூர்ஜஹான் என்னும் பாரசீக மாதை மணக்க விரும்பினர். நூர்ஜஹான் அதிக அழகும் திறமையும் வாய்ந்தவள். அவளுடைய தந்தையார் அக்பர் சம்ஸ்தானத்தில் வேலை பார்த்து வந்தார்.

ஜஹாங்கீர்

நூர்ஜஹான்

அக்பருக்கு இந்த விவாகத்தில் இஷ்டமில்லை. ஆகவே, அக்பர் நூர்ஜஹானை வங்காளத்து நவாபாயிருந்த **ஷேர் ஆப்கன்** என்பவருக்கு மணம் செய்து கொடுத்து, வங்காளத்திற்கு அனுப்பி விட்டார்.

ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்து இரண்டு வருஷமான போது ஷேர் ஆப்கன் இறந்துபோகவே, அவருடைய மனைவி

நூர்ஜஹானைத் தம் அரண்மனைக்கு வரவழைத்துக்கொண்டார். ஆறு வருஷங்கள் வரை அவள் ஜஹாங்கீரை மணம் செய்து கொள்ள மறுத்தாள். அதன் பிறகு அவளை மணந்து பட்டத்து ராணியாக்கினர்.

நூர்ஜஹான் என்னும் பதத்திற்கு **ஜகஜ்ஜோதி** என்பது பொருள். நூர்ஜஹான் அழகில் ஈடுபட்ட ஜஹாங்கீர், அரசாங்க விஷயங்கள் யாவற்றையும் அவளிடம் ஒப்புவித்தார். நூர்ஜஹான் புத்திசாலித்தனமும் திறமையும் உள்ளவள். அவள் கலகங்களை அடக்கிக் கண்டிப்புடனும் ஒழுங்குடனும் ராஜ்யத்தை நடத்திவந்தாள். அவள் தன் தந்தையாரை முதல் மந்திரியாக்கினள்; தன் சகோதரருக்கும் ஓர் உயர்ந்த பதவியை அளித்தாள். பிற்காலத்தில் நாணயங்களும் அவள் பெயராலே வழங்கி வந்தன.

ஜஹாங்கீரின் புத்திரர்கள்: ஜஹாங்கிருக்கு நான்கு புத்திரர் இருந்தனர். அவர்களில் **குஸ்ரு** என்ற மூத்த குமாரர் தகப்பனருக்கு விரோதமாகக் கலகம் செய்தார். ஜஹாங்கீர் கலகத்தை அடக்கி, குஸ்ருவைச் சிறையிலடைத்தார். குஸ்ரு தம் சகோதரர் **குர்ரம்** என்பவரின் சூழ்ச்சியால் கொல்லப்பட்டார்.

குர்ரம் ஜஹாங்கிரின் மூன்றும் புதல்வர். அவர் சிறந்த போர் வீரர்; அதிக சாமர்த்தியம் உள்ளவர். அவர் கி.பி. 1614ல் ஒரு படையுடன் சென்று, பிரதாப சிங்கிற்குப் பின் மீவாரை ஆண்டுவந்த அமார்சிங்கு என்பவரைத் தோற்கடித்து, அடக்கினர். ஜஹாங்கீர் காலத்தில் தக்காணத்திலுள்ள ஆமது நகரில் **மாலிக் ஆம்பர்** என்பவர் கிளர்ச்சி செய்து வந்தார். கி.பி. 1620ல் குர்ரம் ஒரு சைனியத்துடன் சென்று மாலிக் ஆம்பரைத் தோற்கடித்து, ஆமது நகரைக் கைப்பற்றிக்கொண்டார். அதன் பிறகு ஜஹாங்கீர் அவருக்கு **ஷாஜஹான்** (உலக அரசர்) என்ற பட்டத்தை வழங்கினர்.

நூர்ஜஹானுக்கு அவளது முதல் கணவரான ஷெர் ஆப்கனிடம் பெற்ற ஒரு பெண் இருந்தாள். அவளை மணம் செய்துகொள்ளும்படி குர்ரத்தை வற்புறுத்தினுள். குர்ரம் அவள்விருப்பத்திற்கு இணங்காமல் அவளுடைய சகோதரியின் புதல்வியான **மும்தாஜ் மஹால்** என்பவளை மணம் செய்துகொண்டார். நூர்ஜஹான் தன் குமாரத்தியை ஜஹாங்கீரின் கடைசி மைந்தரான **ஷாரியர்** என்பவருக்கு மணம் செய்வித்துத் தன் மருமகனுக்கே பட்டம் கட்ட வேண்டுமென்று சூழ்ச்சிகள் செய்ய ஆரம்பித்தாள். ஆனல் அவளுடைய சகோதரர் தம் மருமகன் ஷாஜஹானுக்குப் பட்டம் கிடைக்க வேண்டுமென்று முயற்சி செய்தார். அதனுல் நாட்டில் இரு கட்சிகள் ஏற்பட்டுக் குழப்பமாய் இருந்தது. சக்கரவர்த்தியின் சேனுதிபதியான **மகபத்கான்** முதலில் நூர்ஜஹானுக்கு உதவியாய் இருந்தார். அவர் ஷாஜஹானைத் தோற்கடித்து அடக்கினர். ஆனல், நூர்ஜஹானிடம் ஏற்பட்ட பொருமையால் மகபத்கான் ஷாஜஹான் கட்சியில் சேர்ந்துகொண்டு கி. பி. 1626ல் ஜஹாங்கீரைச் சிறைபிடித்தார். நூர்ஜஹான் அவரைத் தந்திரமாக ஏமாற்றித் தன் கணவரை விடுவித்தாள். ஜஹாங்கீர் கி. பி. 1627ல் மரணமடைந்தார்.

ஆங்கிலேயரது வருகை: இந்தியாவுடன் வியாபாரம் செய்வதற்காகக் கி. பி. 1600-ஆம் வருஷம் இங்கிலாந்தில் ஒரு வர்த்தகச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அச்சங்கத்தார்களுக்குச் சில வியாபார உரிமைகளைப் பெறுவதற்காக ஜஹாங்கீர் காலத்தில் அவருடைய சபைக்கு இரண்டு ஆங்கிலேயர்கள் வந்தார்கள். அவர்களில் **வில்லியம் ஹாக்கின்ஸ்** என்பவர் ஆங்கில வியாபாரிகளுக்குச் **சூரத்து** நகரில் பண்டக சாலை கட்டிக்கொண்டு வியாபாரம் செய்ய அனுமதி பெறுவதற்காக வந்தார். போர்த்துகீசியரின் தூண்டுதலின் பேரில் மொகலாய சக்கரவர்த்தி அவரது வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. அவர்

இரண்டு வருஷங்கள் இந்தியாவில் தங்கியிருந்தார். அதன் பின்னர் ஜஹாங்கீர் காலத்தில் இங்கிலாந்தில் ஆட்சிபுரிந்த **முதலாம் ஜேம்ஸ் மன்னர்** கி. பி. 1615ல் **ஸர் தாமஸ் ரோ** என்பவரை மொகலாயசக்கரவர்த்தியின் சபைக்குத் தூதராக அனுப்பினர். அவருடைய முயற்சியால் ஆங்கிலேய வர்த்தகர்கள் இந்தியாவில் பல இடங்களில் வர்த்தக சாலைகளைக் கட்டிக்கொண்டு வியாபாரம் செய்ய அனுமதிகிடைத்தது. ஸர்தாமஸ்ரோ இந்தியாவில் மூன்று வருஷம் தங்கியிருந்தார். இவ்விரு ஆங்கிலேயர்களும் தாங்கள் இந்தியாவில் கண்டவைகளைப் பற்றி விவரமாக எழுதிவைத்திருக்கிறார்கள். அவைகளிலிருந்து ஜஹாங்கீர் ஆட்சியைப் பற்றியும் அக்காலத்து நம் நாட்டின் நிலைமையைப் பற்றியும் தெரிந்துகொள்கிறோம்.

கேள்விகள்:

1. ஜஹாங்கீர் அரசாங்க நிர்வாகத்தை நூர்ஜஹானிடம் ஒப்படைக்கக் காரணம் என்ன?
2. ஷாஜஹான் என்னும் பெயர் யாருக்கு ஏன் வழங்கப்பட்டது?
3. ஷாஜஹான் கலகம் செய்யக் காரணமென்ன?
4. வில்லியம் ஹாக்கின்ஸ் எதற்காக இந்தியாவுக்கு வந்தார்?
5. குறிப்பு எழுது:-(1) நூர்ஜஹான், (2) ஸர் தாமஸ்ரோ.

---

14. ஷாஜஹான்

(கி. பி. 1627 - 1658)

ஜஹாங்கீர் காலத்திலேயே அவருடைய மூத்த குமாரர்களிருவரும் இறந்து போனார்கள். ஆகையால், மூன்றாம் குமாரராகிய **குர்ரம்** என்னும் **ஷாஜஹான்** பட்டத்துக்கு வந்தார். அவருக்குவிரோதமாக அவருடைய சகோதரர் ஷாரியார் கிளம்பவே, ஷாஜஹான் அவரையும் அவருடைய குழந்தைகளையும் கொன்று, தமக்குப் போட்டியில்லாமல் செய்துகொண்டார்.

ஹாஜஹான் தைரியமும் திறமையும் வாய்ந்தவர். தமது தந்தையார் காலத்திலேயே அவர் பல சண்டைகளைச் செய்து வெற்றியடைந்து, புகழ் பெற்றிருந்தார். அவர் காலத்தில் மொகலாய ராஜ்யம் மிகச் செழிப்பாயிருந்தது. ஷாஜஹான் ஆடம்பரப் பிரியர். அவர் பல அழகான கட்டடங்களும், நகரங்களும் கட்டி, என்றும் அழியாத புகழைச்சம்பாதித்துக்கொண்டார்.

மும்தாஜ் மஹால்

ஷாஜஹான்

ஷாஜஹானின் கட்டடங்கள் : ஷாஜஹானுடைய பொக்கிஷத்தில் ஏராளமான பணம் இருந்தது. அவர் ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவிட்டு ஓர் அழகிய **மயிலாசனம்** அமைத்தார். அந்த ஆசனம் தங்கத்தால் செய்யப்பட்டு, வைரங்கள், முத்துக்கள், இரத்தினங்கள், மரகதங்கள் முதலியவை பதிக்கப்பட்டு அழகாய்இருந்தது. அதைக் கி. பி. 1739ல் இந்தியாவின்

மேல் படையெடுத்து வந்த **நாதர்ஷா** என்பவர் பாரசீகத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

அவருடைய முப்பது வருஷ ஆட்சிக்குள் அநேக அழகான சித்திர வேலைப்பாடுகள் அமைந்த கட்டடங்களையும், மண்டபங்



தாஜ் மஹால் கட்டடம்

களையும்கட்டினார். ஆக்கிரா நகருக்கருகில், யமுனைநதிக்கரையில் **ஷாஜஹான் பாது** என்ற அழகிய நகரைக் கட்டினார். ஆக்கிரா நகரில் **முத்து மசூதி**யையும், டில்லியில் **ஜம்மா மசூதி**யையும், '**திவானி காஸ்**' என்னும் அரண்மனையையும் அமைத்தார். ஆனால், அவர் கட்டிய **தாஜ் மஹால்** உலகத்தின் ஏழு அதிசயங்

களில் ஒன்ருகக் கருதப்படுகிறது. அது அவருடைய மனைவி **முக்தாஜ் மஹாலின்** சமாதியின்மேல் கட்டப்பட்டது. நூர் ஜஹானுடைய சகோதரர் மகளாகிய மும்தாஜ் மஹால் என்ற அழகிய ஸ்திரீயை ஷாஜஹான் மணம் செய்திருந்தார். அவளிடம் அளவற்ற அன்புகொண்டிருந்தார். அவள் மரணத்தறுவாயில் வாக்கு அளித்தப்படி அவள் இறந்தபின் ஷாஜஹான் வேறு விவாகம் செய்துகொள்ளவில்லை. அவள் ஞாபகார்த்தமாகத்தான் **தாஜ் மஹால்** என்னும் அழகிய கோரி கட்டப்பட்டது. அது ஆக்கிரா நகரில் யமுனை நதிக்கரையில் ஒரு பெரிய தோட்டத்தின் நடுவில் அமைந்திருக்கிறது. அது இரத்தினங்கள் இழைத்த சலவைக்கற்களால் அமைந்து பார்ப்பவர் கண்களைக் கவரக்கூடிய அழகையுடையது. அதைக் கட்டிமுடிக்க இருபத்திரண்டு வருஷங்கள் ஆயின என்றும், முப்பது லக்ஷம் ரூபாய் செலவு ஆயின என்றும் சொல்லப்படுகிறது. அதைப்போல அழகு வாய்ந்த கட்டடம் உலகத்தில் வேறென்றுமில்லை என்று சொல்லலாம். ஆகையால், உலகத்தில் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து அதைப் பார்த்து அதிசயித்துச் செல்லுகின்ருர்கள்.

ஷாஜஹானின் வெற்றிகள் : ஷாஜஹான் ஆட்சியில் வங்காளத்தில் **கான்ஜகான்லோடி** என்றஆப்கானியர் அவருக்குவிரோதமாகக் கலகம் செய்தார். தக்காணத்தில் ஆமது நகரை ஆண்டு வந்த ஆம்பரின் குமாரரும் அவருடன் சேர்ந்துகொண்டார். ஷாஜஹான், கான் ஜகான் லோடியைத் தோற்கடித்த பின் ஆமது நகரின்மீது படையெடுத்து அதை வென்று மொகலாய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். பிஜப்பூர், கோல் கொண்டாச் சுல்தான்களும் ஷாஜஹானுக்குக்கீழ்ப்படிந்து அவருக்குக் கப்பம் கட்டுவதாக வாக்களித்தார்கள். ஆனால், ஷாஜஹான் **காந்தஹாரை** இழந்தார்.

வாரிசுப் போர் : ஷாஜஹானுக்குத் **தாரா, ஷூஜா, ஔரங்கசீபு, மூராது** என்ற நான்கு குமாரர்கள் இருந்தார்கள். ஷாஜ

ஹான் அவர்களுள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மாகாணத் திற்குக் கவர்னராக நியமித்திருந்தார். கி. பி. 1657ல் ஷாஜ ஹான் வியாதியால் பீடிக்கப்பட்டார்.

மூத்தவரான **தாரா** வெகு நல்லவர். அவர் தகப்பனுருக்கு உதவியாக ஆக்கிராவில் இருந்து ராஜ்ய காரியங்களைப் பார்த்து வந்தார். ஷாஜஹான் தமக்குப் பின் சக்கரவர்த்தியாகத் தாராவை நியமித்தார். உடனே அவருடைய மற்றப் பிள்ளை கள் தனித்தனியே பட்டத்திற்காகப் போர் தொடுத்தார்கள். **ஷூஜா** வங்காளக் கவர்னராய் இருந்து வந்தார். அவர் சேனை யுடன் சென்று தாராவை எதிர்த்தார். ஆனல், தோல்வி யடைந்து ஓடிவிட்டார். மூன்றும் மைந்தரான **ஔரங்கசீபு** தந்திரசாலி. அவர் தக்காணத்தில் கவர்னராயிருந்து ஆண்டு வந்தார். **மூராது** கூர்ஜர மாகாணத்தில் கவர்னராயிருந்தார். ஔரங்கசீபு தமக்கு ராஜ்யத்தில் ஆசை இல்லையென்றும், மூரா துக்கு டில்லிச் சிம்மாசனம் கிடைக்க உதவி புரிவதாகவும் சொல்லி அவரைத் தம் கட்சியில் சேர்த்துக்கொண்டார். பிறகு இருவருமாய்த் தாரா, ஷூஜா இருவரையும் தோற்கடித் துக் கொன்றனர்.

பிறகு ஔரங்கசீபு தமது தம்பியான மூராதைக் கொஞ்ச காலம் சிறையில் அடைத்து வைத்துப்பிறகு கொன்றுவிடும்படி செய்தார். அவர் தம் தந்தையாரையும் அரண்மனையிலேயே சிறைப்படுத்தினர். ஷாஜஹான் ஏழு வருஷங்கள் காவலி லிருந்து கி. பி. 1666ல் மரணமடைந்தார்.

கேள்விகள் :

1. ஷாஜஹான் எவ்வாறு பட்டத்திற்கு வந்தார் ?
2. அவரது குணுதிசயங்கள் எவை ?
3. ஷாஜஹான் 'கட்டடப் பிரியர்' என்று வழங்கப்படக் காரணம் என்ன ?
4. ஷாஜஹான் அடைந்த வெற்றிகள் யாவை ?

15. ஔரங்கசீபு

(கி. பி. 1658 - 1707)

ஔரங்கசீபு தம் சகோதரர்களை வென்று, தந்தையாரைச் சிறையில் அடைத்துவிட்டுக் கி. பி. 1658ல் சிம்மாசனம் ஏறினர். அப்போது அவருக்கு வயது நாற்பது. அவர் மொகலாய சாம் ராஜ்யத்தைச் சுமார் ஐம்பது வருஷ காலம் ஆண்டு வந்தார்.

ஔரங்கசீபின் குணாதிசயங்கள்: ஔரங்கசீபு மிகவும் திறமை வாய்ந்தவர். அவர் காலத்தில் அநேக நாடுகளை ஜயித்து மொகலாய சாம்ராஜ்யத்தை உன்னத நிலைமைக்குக் கொண்டு வந்தார். அவர் ஷாஜஹான் காலத்தில் தக்ஷிணத்தில் ராஜப் பிரதிநிதியாய் இருந்தவராதலால், அரசியல் முறையில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் இஸ்லாம் மதத்தில் அதிக பிரியமுள்ள வர். இஸ்லாம் மதத்தின் வேதப் புத்தகமாகிய குர்-ஆனை நன்ரு கப் படித்தறிந்தவர். அதில் கூறியபடியே தம் வாழ்க்கையை நடத்தி வந்தார். தர்பாரில் வீற்றிருக்கும்பொழுது மாத்திரம் ராஜ உடைகளையும் ஆபரணங்களையும் அணிந்துகொள்வார். மற்ற நேரங்களில் சாதாரண உடைகளையே அணிவார். அவர் மதுபானம் செய்வதில்லை. அரசாங்கவருமானத்தில் கொஞ்சமும் தம் செலவிற்கு எடுத்துக்கொள்ள மாட்டார். தம் செலவிற்குக் குல்லாக்கள் தைத்தும், குர்-ஆனைத் தம் கையால் எழுதி அப் பிரதிகளை விற்றும் பணம் சம்பாதிப்பார். அவர் எந்தக் காலத் திலும் ஜெபம் செய்வதை விடுவதே இல்லை. அவர் மத சம்பந்த மான விரதங்கள் எல்லாவற்றையும் தவருமல் அனுஷ்டித்து வந்தார்.

அவர் மத வைராக்கியம் உள்ளவர். இஸ்லாம் மதத்தைப் பரப்புவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தார். அவர் பல பழைய மசூதிகளைப் பழுது பார்த்துப் புதுப்பித்தார். பல புதிய மசூதிகளும் கட்டப்பட்டன. அக்பர் சக்கரவர்த்தியார் நீக்கிய

ஜிஸ்யா வரியை மறுபடியும் இந்துக்கள் மீது விதித்தார். ஆனல் அரசாங்க உத்தியோகத்திலும் இராணுவத்திலும் சேவை

ஔரங்கசீபு

By premission of the Archaeological Survey of India

செய்தவர்கள் இவ்வரியினின்றும் விலக்கப்பட்டனர். கி. பி. 1672ல் **ஜாத்துகளும், சத்னுமிகளும்** கலகம் செய்தார்கள்.


ஔரங்கசீப்
இராஜ்ஜியம்
1700.
காபூல்
காஷ்மீரம்
பஞ்சாப்
ஸிந்துநதி
ஸிந்து
டெல்லி
ஆக்ரா
கங்காநதி
அலகபாத்
மொகலாய
இராஜ்ஜியம்
வங்காளம்
நர்மதை
மகாநதி
மஹாராஷ்டிரம்
கோதாவரி
கர்நாடகம்
மைசூர்
அரபிக்கடல்
வங்காளகுடாக்
கடல்
இந்துமஹா
சமுத்திரம்

மேலும், ஔரங்கசீபு ராஜபுத்திரர்களின் ஆதரவையும் இழந்தார். கி. பி. 1679ல் ஜோதிபுரத்து அரசர் **ஜஸ்வந்தசிங்கு** இறந்ததும், அவருடைய குமாரர் **அஜித்சிங்கை** ஔரங்கசீபு சிறைபிடித்து ராஜ்யத்தை அபகரிக்க முயன்றார். ஆனால், அச் சிறுவர் உதயபுரியை ஆண்டுவந்த ராணுவால் காப்பாற்றப் பட்டார். ஔரங்கசீபு மேவார் நாட்டின்மீது படையெடுத்து ராஜபுத்திரர்களுடன் சண்டை செய்து உதயபுரியை அழித் தார். அதனால், ராஜபுத்திரர் அனைவரும் ஒன்று சேர்ந்து, சக்கரவர்த்திக்கு விரோதமாகக் கலகம் செய்யத் தலைப்பட்டார் கள். சீக்கிய மத குருவான **தேஜ் பஹதூர்** என்பவரை ஔரங்க சீபு சிறை பிடித்துக் கொன்றார். அதனால், சீக்கியரும் அவர் மீது பகைமை கொண்டனர். தக்ஷிணத்தில் இருந்த மகாராஷ் டிரர்களும் அவருக்கு விரோதமாகக் கிளம்பினார்கள். மேலும், ஔரங்கசீபு **ஷீயா** வகுப்பு முகமதியர்களின் ராஜ்யங்களான பிஜப்பூர், கோல்கொண்டா முதலியவைகளை அழித்தார். இவ் வாறு ஔரங்கசீபிடம் பல நற்குணங்கள் பொருந்தியிருந்தும், அவர் பலருடைய பகையைத் தேடிக்கொண்டதால், அது அவருடைய ராஜ்யத்தின் அழிவுக்கு முக்கிய காரணமாயிற்று.

ஔரங்கசீபின் தக்காணப் படையெடுப்பு: ஔரங்கசீபு காலத்தில் தக்காணத்தில் பிஜப்பூர், கோல்கொண்டா என்ற இரண்டு முகம்மதிய ராஜ்யங்கள் இருந்தன. ஷீயா என்ற வகுப்பைச் சேர்ந்த முஸ்லீம் சுல்தான்கள் அவைகளை ஆண்டு வந்தார்கள். ஔரங்கசீபு அந்த ராஜ்யங்களை ஜயித்து மொகலாய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ள விருப்பம் கொண்டார். கி. பி. 1685ல் அவர் ஒரு பெரிய சேனையுடன் சென்று பிஜப்பூர் நகரை முற்றுகையிட்டுப் பிடித்துக்கொண்டார். அத்துடன் அங்கே ஆண்டு வந்த **அடில்ஷாஹி** வமிசம் முடிவடைந்தது. பிஜப்பூர் நகரம் அவருடைய வீரர்களால் அழிக்கப்பட்டு நாசம் அடைந்தது. கி. பி. 1687ல் ஔரங்கசீபு கோல்கொண்டாவை

எதிர்த்தார். கோல்கொண்டாவைச் சுலபத்தில் பிடிக்க முடியவில்லை. கடைசியில் லஞ்சம் கொடுத்து, கோல்கொண்டா வீரர்களில் சிலரைக் கைவசம் பண்ணிக்கொண்டு, கோட்டைக்குள் புகுந்து அதைக் கைப்பற்றிக்கொண்டார். இவ்வாறு ஔரங்கசீபு தக்காணத்திலுள்ள இரண்டு ராஜ்யங்களையும் ஜயித்துத் தம் சாம்ராஜ்யத்தைப் பெரிதாக்கிக்கொண்டார். அவருடைய ஆட்சியின் முடிவில் மொகலாய ராஜ்யம் காஷ்மீரத்திலிருந்து தெற்கே **காவேரி** நதி வரையில் பரவியிருந்தது.

ஆனால், பிஜப்பூர் கோல்கொண்டா ராஜ்யங்கள் அழியவே மகாராஷ்டிரர்கள் என்னும் ஜாதியார் பலம் பெற்று முன்னேறினார்கள். அவர்கள் மொகலாய ராஜ்யத்தைச் சிதைக்க வழி தேடி வந்தார்கள். ஔரங்கசீபு தக்காணத்திற்கு வரும் முன்னரே புகழ்பெற்ற மகாராஷ்டிர வீரரான **சிவாஜி** இறந்துவிட்டார். அவருடைய குமாரர் **சாம்பாஜி** மகாராஷ்டிரத்தில் ஆட்சி புரிந்து வந்தார். ஔரங்கசீபு சாம்பாஜியையும், அவர் குமாரர் **ஷாஹு**வையும் பிடித்துச் சிறையிலிட்டார். எனினும், மகாராஷ்டிர வீரர்கள் மொகலாயருக்குச் சொந்தமான மாகாணங்களில் **சௌத்து** வரி வசூலிக்கத் தொடங்கினார்கள். ஔரங்கசீபு வயது காலத்தில் அவர்களை அடக்கத்திறமை இல்லாமலிருந்தார். மொகலாய சேனையின் பெருமையும் பலமும் குறைந்து போயின. வட இந்தியாவில் **சீக்கியர்கள்** என்ற ஜாதியார் பிரபலமடைந்து வந்தார்கள். மேலும், ஔரங்கசீபின் குமாரர்களே அடிக்கடி கலகம் செய்யலானார்கள். அதனால், மனமுடைந்த ஔரங்கசீபு, கி. பி. 1707ல் ஆமது நகரில் மரணமடைந்தார்.

கேள்விகள் :

1. ஔரங்கசீபிடம் அமைந்திருந்த நற்குணங்கள் எவை ?
2. அவர் இந்துக்களின் நட்பை எவ்வாறு இழந்தார் ?
3. அவர் தக்காணத்தில் ஜயித்த நாடுகள் எவை ?
4. ஔரங்கசீபு காலத்தில் மொகலாய ராஜ்யம் எதுவரை பரவியிருந்தது ?

16. மொகலாய சாம்ராஜ்யத்தின் அழிவு

ஔரங்கசீபின் ஆட்சியிலேயே மொகலாய சாம்ராஜ்யம் க்ஷீணிக்கத் தொடங்கியது. அவர் காலத்திற்குப்பின் மொகலாய சாம்ராஜ்யத்தின் வலிமை படிப்படியாகக் குறையத் தொடங்கியது. ஔரங்கசீபுக்குப் பின் வந்த சக்கரவர்த்திகள் முற்றிலும் திறமையற்றவர்கள். அவர்கள் காலத்தில் மகாராஷ்டிரர்களும், ராஜ புத்திரர்களும், சீக்கியர்களும் பலமடைந்து, மொகலாய ராஜ்யத்திற்கு விரோதமாகக் கலகம் செய்து வந்தார்கள். முன் சக்கரவர்த்திகளுக்கு அடங்கியிருந்த சுபேதார்களும் தாங்கள் செலுத்த வேண்டிய கப்பங்களைச் செலுத்தாமல் நாளடைவில் சுயாதீனம் அடைந்தார்கள். ஆகவே, மொகலாய சாம்ராஜ்யம் பலவீனமடைந்தது.

பஹதூர்ஷா (கி. பி. 1707-12): ஔரங்கசீபு இறந்தபின்னர் அவருடைய குமாரர்கள் பட்டத்திற்காகச் சண்டையிட்டார்கள். கடைசியில் அவருடைய மூத்த குமாரர் **மூவாஸாம், பஹதூர்ஷா** என்று பட்டப்பெயருடன் கி. பி. 1707ல் சிம்மாசனம் ஏறினர். அவர் மகாராஷ்டிரர்களோடும் ராஜ புத்திரர்களோடும் சமாதானம் செய்துகொண்டார். **சாம்பாஜி** தம் மைந்தரான **சாஹு**வைச் சிறையினின்று விடுவித்தார்; தக்காணத்தில் சௌத்து வரி வசூலிக்கவும் அவருக்கு அனுமதி கொடுத்தார்; ஜோதிபுரத்தின் அரசருக்குச் சுதந்திரத்தை அளித்து, ராஜபுத்திரர்களைச் சிநேகம் செய்துகொள்ள முயன்றார். அவர் காலத்தில் பஞ்சாபில் சீக்கியர் என்னும் ஜாதியார் பலமடைந்து, மொகலாய ராஜ்யத்திற்குள் புகுந்து, பல ஊர்களை நாசம் செய்தனர். பஹதூர்ஷா மூன்று வருஷங்கள் போராடிய பின்புதான் அவர்களைச் சற்று அடக்க முடிந்தது. பஹதூர்ஷா ஐந்து வருஷங்களே ஆட்சி செய்து வந்தார்.

முகம்மதுஷா: (கி. பி. 1719–1748): பஹதூர்ஷா கி. பி. 1712ல் இறந்ததும் நான்கு பேர்கள் ஒருவர் ஒருவராய்க் கி. பி.

1719 வரையில் டில்லியில் அரசாண்டார்கள். அதன்பின் **முகம்மதுஷா** பட்டத்திற்கு வந்தார். அவருடைய காலத்தில் அநேக மாகாணங்கள் மொகலாய சாம்ராஜ்யத்திலிருந்து பிரிந்து சுயாதீனம் பெற்றன. தட்சிணத்தில் கவர்னராய் இருந்த **நிஜாம்-உல்-முல்கு** கி. பி. 1723ல் **ஹைதராபாது** ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டு சுயாதீனம் அடைந்தார். நிஜாமைப் போலவே வங்காளத்தை ஆண்ட **அலிவர்டிகானும்** அயோத்தியை ஆண்ட **ஸாடட் ஆலிகான்** என்பவரும் சுயாதீனம் அடைந்தார்கள். அதனுல் மொகலாய சாம்ராஜ்யம் மிகவும் சிறியதாய்விட்டது.

நாதர்ஷாவின் படையெழுச்சி (கி. பி. 1738): இச்சமயத்தில் பாரசீக அரசரான **நாதர்ஷா** இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தார்; மொகலாயச் சேனையைத் தோற்கடித்துவிட்டு, டில்லி நகரை அடைந்து சில நாட்கள் தங்கியிருந்தார். முகம்மதுஷா அவருக்குக்கீழ்ப்படிந்து ஏராளமான பணம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். ஒரு நாள் நாதர்ஷா இறந்துவிட்டார் என்ற ஒரு பொய் வதந்தி கிளம்பியதால், டில்லிஜனங்கள் அவருடைய படை வீரர்களில் சிலரைக் கொன்றுவிட்டார்கள். அதனுல், நாதர்ஷா அதிக கோபமடைந்து, டில்லி மக்களைக்கொல்லும்படி தம் போர் வீரர்களுக்கு உத்தரவிட்டார். ஒரு நாள் முழுவதும் பாரசீக வீரர்கள் ஆண், பெண், குழந்தைகள் என்று பாராமல் கணக்கிட முடியாத ஜனங்களைக் கொன்ருர்கள்; வீடுகளையும், மாளிகைகளையும் இடித்தும், தீ வைத்தும் பாழாக்கினுர்கள்; ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்தார்கள். டில்லி நகர் பாழாக்கப்பட்டது. நாதர்ஷா, அரண்மனையைக் கொள்ளையிட்டுப் பொக்கிஷத்திலுள்ள பொருள்களையும், ஷாஜஹான் சக்கரவர்த்தியால் செய்யப்பட்ட மயிலாசனத்தையும், விலை மதிக்க முடியாத **கோஹினூர்** வைரத்தையும் கைப்பற்றிக் கொண்டு தம் நாட்டிற்குத் திரும்பிச் சென்ருர். இப்படையெழுச்சியால் மொகலாய சாம்ராஜ்யம் மேலும் க்ஷீணதசையை

அடைந்தது. முகம்மதுஷா செல்வமும் செல்வாக்கும் இழந்து, பெயருக்கு மட்டும் சக்கரவர்த்தியாகச் சிறிது காலம் இருந்து கி. பி. 1748ல் மரணமடைந்தார்.

அவருக்குப் பின் வந்த **ஆமதுஷா** திறமையற்றவர். அவர் காலத்தில் மகாராஷ்டிரர்கள் பலமடைந்து, வட இந்தியாவி லும் தங்கள் ராஜ்யத்தைப் பரவச் செய்தார்கள். கி. பி. 1759ல் **ஷாஆலம்** என்பவர் சக்கரவர்த்தியானர். அவரது ஆட்சியில் **ஆமதுஷா அப்தாலி** என்ற ஆப்கானியர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். அவருக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் கி. பி. 1761ல் **பானிப்பட்டில்** கடும்போர் நடந்தது. அதில் மகா ராஷ்டிரர்கள் தோல்வியடைந்தார்கள். அதுவே மூன்ருவது பானிப்பட்டு யுத்தம் எனப்படும். ஆமதுஷா இந்தியாவில் ராஜ் யத்தை ஸ்தாபிக்கவில்லை. அவர் தமது நாட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். ஷாஆலம் சில காலம் ஆங்கிலேயரின் பாது காப்பிலும், பின் மகாராஷ்டிரர்களின் பாதுகாப்பிலும் இருந்து விட்டு, பல துன்பங்களை அனுபவித்து, கி.பி. 1806ல் இறந்தார். அவருடன் மொகலாய ராஜ்யம் அழிந்தது. ஷாஆலத்திற்குப் பின் அவர் மைந்தர் இரண்டாம் அக்பரும், அவருக்குப் பின் அவருடைய குமாரர் **பஹதூர்ஷா**வும் பெயரளவில் சக்கரவர்த்தி களாய் இருந்தார்கள். பஹதூர்ஷாவே மொகலாய வமிசத்துக் கடைசி சக்கரவர்த்தியாவர். கி. பி. 1857ல் இந்திய சிப்பாய் கள் ஆங்கிலேயருக்கு விரோதமாய்க் கலகம் செய்தபொழுது அவர்கள் பஹதூர்ஷாவைத் தங்கள் தலைவராக நியமித்துக் கொண்டார்கள். அந்தக் கலகம் அடக்கப்பட்டபின் பஹதூர் ஷா இரங்கூனுக்கு அனுப்பப்பட்டுக் கி. பி. 1862ல் அங்கே மரணமடைந்தார். அவரோடு மொகலாய வமிசம் அழிவுற் றது.

கேள்விகள் :

1. **மொகலாய சாம்ராஜ்யத்தின் அழிவுக்குக் காரணங்கள் யாவை ?**

2. முகம்மதுஷா காலத்தில் சுதந்திரமடைந்த மாகாணங்கள் எவை ?
3. நாதர்ஷாவின் படையெடுப்பினுல் ஏற்பட்ட பயன்என்ன?
4. குறிப்பு :—(1) மூன்ருவது பானிப்பட்டுச் சண்டை, (2). ஷா ஆலம், (3) மொக்லாய வமிசத்தின் கடைசி அரசர்

---

17. சிவாஜி

மகாராஷ்டிரர் : தற்காலத்தில் பம்பாய் மாகாணம் என்று வழங்கும் பிரதேசத்தில் **மகாராஷ்டிரர்** என்ற ஜாதியார் வசித்து வந்தார்கள். அவர்களுடைய நாட்டிற்கு **மகாராஷ்டிரம்** என்று பெயர் வழங்கியது. மகாராஷ்டிர நாடு மலைகளும் பள்ளத் தாக்குகளும் உள்ள பிரதேசம். அப்பிரதேசத்தில் ஜனங்கள் போக்குவரவுக்குச் சௌகரியமான பாதைகள் இல்லை. மகா ராஷ்டிரர்கள் தேக வலிமையும், மனே தைரியமும் உள்ளவர் கள் ; உழைப்பும் சுறுசுறுப்பும் உள்ளவர்கள். அவர்கள் திறமை வாய்ந்த போர் வீரர்களாயும், குதிரை வீரர்களா யும் இருந்தார்கள். அவர்கள் ராஜபுத்திரர்களைப்போல இந்து மதத்தில் மிக்க அபிமானம் உள்ளவர்கள். அவர்கள் குன்று களின்மீது கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வசித்து வந்தார் கள். அவர்கள் எவ்விதமான மலைகளையும், செங்குத்தான சிக ரங்களையும் எளிதிற் கடந்து செல்வார்கள். மலைகளிலுள்ள ரக சியப் பாதைகளை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். ஆகை யால், விரோதிகள் அவர்களைத் தோற்கடித்து அவர்களுடைய மலை நாட்டை ஜயிப்பது மிகவும் கடினமாயிருந்தது. பாமனி ராஜ்யம் பிரிந்து, ஆமது நகரம், பீஜப்பூர் முதலிய அநேக ராஜ் யங்கள் உண்டானபோது மகாராஷ்டிர வீரர்கள் அவைகளின் படைகளில் சேர்ந்து உத்தியோகம் வகித்து வந்தனர்.

சிவாஜி: அவர்களில் பான்ஸ்லே வமிசத்தைச் சேர்ந்த **ஷாஜி பான்ஸ்லே**என்பவர் முதலில் ஆமது நகர்ச்சுல்தானிடமும் ஆமது நகர் அழிந்தபிறகு பீஜப்பூர்ச் சுல்தானிடமும் சேனைத் தலைவரா

யும் மந்திரியாயும் அமர்ந்திருந்தார். அவருக்குச் **சிவாஜி** என்ற குமாரர் பிறந்தார். ஷாஜியின் மனைவி **ஜீஜிபாய்** தேவகிரியை ஆண்ட யாதவ வமிசத்தைச் சேர்ந்த ஓர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவள். சிவாஜி கி. பி. 1627-ஆம் வருஷம் **சிவனேரி** என்னும் கோட்டையில் பிறந்தார். ஷாஜி முதலில் ஆமது நகரச்சுல்தானிடம் வேலை பார்த்து வந்தார். அவருக்குப் புனு நகரத்தைச் சுற்றியுள்ள பிரதேசம் ஜாகீராக அளிக்கப்பட்டிருந்தது. ஷாஜி அடிக்கடி அயல் இடங்களுக்குச் செல்லவேண்டியிருந்தது. ஆகையால், சிவாஜி தம் தாயின் பாதுகாப்பில் புனுவில் வளர்ந்து வந்தார். இயற்கையிலேயே சிவாஜி அஞ்சா நெஞ்சமும், புஜபல பராக்கிரமமும், விடாமுயற்சியும் உடையவர். புனு ஜாகீரை மேல் பார்த்து வந்த **தாதோஜி கொண்டதேவ்** எனும் பிராமணர் அவருக்கு வில்வித்தை, வாள் வித்தை, குதிரையேற்றம், மல் யுத்தம் முதலியவற்றைக் கற்பித்தார். சிவாஜி எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அவருடைய தாய் **ஜீஜிபாய்** அவருக்கு இராமாயணம், மகா பாரதம் முதலிய இதிகாசங்களிலிருந்து பல வீரர்களுடைய கதைகளை அடிக்கடி சொல்லி வந்தாள். சிவாஜி

சிவாஜி

அக்கதைகளைக் கேட்டு அவைகளில் சொல்லப்பட்ட வீரர்**களைப்போலத் தாமும் அரிய** செயல்களைச் செய்து கீர்த்தி

பெற வேண்டுமென்று அவாக்கொண்டார். இளமைப் பருவம் முதல் சிவாஜி நல்லொழுக்கமும் நற்குணமும் உடையவராயும் இந்து மதத்தில் பற்றுடையவராயும் இருந்தார். அக்காலத்தில் மகாராஷ்டிரர்களிடையே **துக்காராம், இராமதாஸ்** என்ற இரு பெரியார் இந்து மதப் பிரசாரம் செய்து வந்தனர். அவர்களுடைய போதனையால் மகாராஷ்டிரர்களுக்குள்ளே ஒற்றுமையும், தேச பக்தியும், தெய்வ பக்தியும் ஏற்பட்டு வந்தன. அவர்களுடைய உபதேசங்களைக்கேட்டுச் சிவாஜி அதிக தெய்வபக்தியும் மதப்பற்றும் உள்ளவரானார். அவர் ஒரு பொழுதும் தாயின் புத்திமதியைத் தட்டி நடப்பதில்லை; எந்தக் காரியத்தைச் செய்யுமுன்பும், தம் குல தேவதையாகிய **பவானி தேவி**யைத் தொழுது வேண்டிக்கொள்ளுவார். அவர் மகாராஷ்டிரர்களை வரையும் ஒன்று சேர்க்க வேண்டுமென்றும், இந்து மதத்தையும் இந்துக்களையும் முஸ்லீம்களின் ஆதிக்கத்தினின்று விடுவிக்க வேண்டுமென்றும் எண்ணங் கொண்டார்.

சிவாஜியும் பிஜப்பூர்ச் சுல்தானும்: சிவாஜி வாலிபராய் இருக்கும்பொழுதே பல வீரர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குத் தலைவரானார். கி. பி. 1647ல் அவர் முதன்முதல் **தோர்ன** என்ற கோட்டையைப் பிடித்தார். பிறகு **ராஜ்கார், புரந்தர்** என்னும் கோட்டைகளைப் பிடித்துக்கொண்டார். கி. பி. 1655-ஆம் வருஷத்திற்குள் சிவாஜி நாற்பது கோட்டைகள் அடங்கிய ராஜ்யத்திற்கு அதிபதியானார். அவர் ராஜகார் கோட்டையைப் பலப்படுத்தி அதைத் தமது தலை நகராக்கிக்கொண்டார். சிவாஜி பிடித்த கோட்டைகளில் பல, பிஜப்பூர்ச் சுல்தானுக்குச் சொந்தமானவை. ஆகையால், சுல்தான் மிகவும் கோபமடைந்து, சிவாஜியை அடக்கத் தம் சேனாதிபதி **அப்ஸல்கான்** வசம் ஒரு பெருஞ்சேனையை அனுப்பினார். சிவாஜி அவருடைய சேனையை எளிதில் வெல்ல முடியாதென்று கண்டு அப்ஸல்கானுடன் சமாதானம் செய்துகொள்ளுவதாகச்

சொல்லி அனுப்பினுர். அப்ஸல்கான் சிவாஜியைத் தந்திரமாகப் பிடிப்பதற்கு ஒரு சூழ்ச்சி செய்து, அவரைத் தனியே சந்திக்கும்படி கூறினுர். சிவாஜி அதில் ஏதோ சூது இருக்கிறது என்று அறிந்து, தம் ஆடைக்குள் இருப்புக் கவசமணிந்து, தம் கையில் புலி நகம் என்னும் ஆயுதத்தை வைத்திருந்தார். பிரதாபகார் கோட்டை வாயிலில் இருவரும் சந்தித்தனர். இருவருக்கும் அங்கு ஒரு சண்டை ஏற்பட்டது. அதில் சிவாஜி தம் புலி நகத்தால் அப்ஸல்கானைக் குத்திக் கொன்றுவிட்டார். அதையறிந்த சிவாஜியின் போர் வீரர்கள் பிஜப்பூர்ச்சேனையை எதிர்த்து முறியடித்தார்கள். அதன் பிறகு சிவாஜி பிஜப்பூர்ச் சுல்தானுக்குச் சொந்தமான பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார். பிஜப்பூர்ச் சுல்தான் சிவாஜியை அடக்கப் பல தடவைகள் முயன்றும் முடியாததால், அவருடன் சமாதானம் செய்துகொண்டு, அவரைக் கொங்கண நாட்டிற்கு அரசராக ஒப்புக்கொண்டார்.

சிவாஜியும், ஔரங்கசீபும்: இதன் பிறகு சிவாஜி தக்காணத்திலுள்ள மொகலாய நாடுகளில் பிரவேசித்துக் கொள்ளையடிக்கத் தொடங்கினர். சிவாஜியின் பலமும் செல்வாக்கும் அதிகரித்து வருவதைக் கண்டு, ஔரங்கசீபு அவரது வலிமையைக் குறைக்க எண்ணி, கி. பி. 1662ல் **ஷெயிஸ்ட கான்** என்ற தம் சேனுதிபதியை ஒரு பெரிய சைனியத்துடன் அனுப்பினுர். ஷெயிஸ்டகான் புனுவைக் கைப்பற்றிக்கொண்டு அங்கு ஓர் அரண்மனையில் தங்கியிருந்தார். மொகலாயரோடு எதிர்த்துப் போர் செய்வது அசாத்தியமென்று சிவாஜிக்குத் தோன்றவே. அவர் அவர்களைத் தந்திரமாக ஜயிக்க எண்ணினுர். ஒரு நாளிரவு சிவாஜி மாறுவேஷம் பூண்டு சில வீரர்களுடன் ஒரு கலியாண ஊர் வலத்தில் கலந்துகொண்டார். ஷெயிஸ்டகான் தங்கியிருந்த வீட்டின் அருகில் வந்ததும், திடீரென்று அதற்குள் நுழைத்து அங்கிருந்

தவர்களைத் தாக்கினர். ஷெயிஸ்டகான் ஜன்னல் வழியாய் வெளியே குதித்து ஓடினர். ஆயினும், சிவாஜியின் கத்தி வீச்சால் அவருடைய கைவிரல்கள் மூன்று துண்டிக்கப்பட்டன. ஷெயிஸ்டகான் புனுவை விட்டு ஓடிப்போகவே, மொகலாய சேனை எளிதில் தோற்கடிக்கப்பட்டது.

சிவாஜி கி. பி. 1664ல் **சூரத்து** நகரைத் தாக்கி ஏராளமான செல்வத்தைக் கொள்ளையடித்தார். ஔரங்கசீபு சிவாஜியை ஜயிக்கும்படி மறுபடியும் ஒரு பெருஞ்சேனையை **ராஜா ஜயசிங்கர்** என்பவர் வசம் அனுப்பினர். சிவாஜி கி. பி. 1665ல் **புரந்தர்** என்னுமிடத்தில் அவருடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி சக்கரவர்த்திக்கு இருபது கோட்டைகள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். பீஜப்பூர் ராஜ்யத்தில் சௌத் வரியை வசூலித்துக்கொள்ள அவருக்கு உரிமை கொடுக்கப்பட்டது. பின்னர் ஔரங்கசீபின் அழைப்புக்கு இணங்கிச் சிவாஜி ஆக்கிராவுக்குச் சென்றர். ஔரங்கசீபு தமக்குரிய மரியாதையான முறையில் தம்மை வரவேற்கவில்லை என்ற கோபங் கொண்டு சிவாஜி ஔரங்கசீபைச் சபையிலேயே தூஷித்தார். சக்கரவர்த்தி சினங்கொண்டு சிவாஜியைச் சிறையில் அடைத்துவிட்டார். சிவாஜி தந்திரமாக ஒரு பட்சணக் கூடையில் உட்கார்ந்து சிறையினின்றும் தப்பி வெளியேறினர்; பிறகு மாறுவேடம் பூண்டு தம் நாட்டிற்குத் திரும்பினர்.

கி. பி. 1674-ஆம் வருஷம் சிவாஜி **ராஜ்கார்** என்னுமிடத்தில் தாம் மகாராஷ்டிரர்களுக்கு மகாராஜா என்று பட்டம் சூட்டிக்கொண்டார். இவ்வாறு சிவாஜி பல வீரச்செயல்கள் புரிந்து ஒரு மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார். அதன் பிறகு அவர் மற்றும் ஒரு முறை சூரத்து நகரைக் கொள்ளையடித்தார். ஒரு கப்பற்படையைத் தயாரித்து மக்காவிற்குச் செல்லும் யாத்திரிகக் கப்பல்களையும் வழிப்பறி செய்தார். பின்பு அவர் கர்நாடகத்தின்மீது படையெடுத்துச் சென்று, வேலூர்,

செஞ்சி முதலிய கோட்டைகளைக் கைப்பற்றினர். தஞ்சாவூர் ஏற்கெனவே சிவாஜியின் தகப்பனருக்கு, பிஜப்பூர்ச் சுல்தானல் ஜாகீராக அளிக்கப்பட்டிருந்தது. அதைத் தம் சகோதரர் **வெங்காஜி** என்பவரின் பொறுப்பில் ஒப்புவித்தார்; பிஜப்பூர், கோல்கொண்டாச் சுல்தான்களைத் தமக்குப் பெருந்தொகைகள் கப்பம் கட்டும்படி செய்துகொண்டார்.



[By kind permission of the Archaeological Survey of India

செஞ்சிக்கோட்டை

சிவாஜியின் அடக்குமுறை: சிவாஜி ராஜ்ய பரிபாலனத்திலும் மிக்க திறமை வாய்ந்திருந்தார். அவர் தமது சாம்ராஜ்யத்தை இந்துசாஸ்திர முறைப்படி ஒழுங்காக ஆட்சி புரிந்தார். அவர் காலத்தில் மகாராஷ்டிர ராஜ்யம் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சிவாஜி தாமே நேரில் ஆண்டு வந்த பிரதேசத்திற்கு **ஸ்வராஜ்யம்** என்றும், தாமே நேரில் ஆளாமல் வரி

வசூல் மாத்திரம் செய்து வந்த நாட்டிற்கு **மொகலாய்** என்றும் பெயர்கள் வழங்கி வந்தன. மொகலாய்ப் பிரதேசங்களிலிருந்து **சௌத்து** என்ற நாலிலொரு பங்கு வரி வசூலிக்கப்பட்டது. சில இடங்களில் **சர்தேஷ்முகி** என்னும் பத்திலொரு பங்கு வரி சௌத்துடன் வசூலிக்கப்பட்டது.

சிவாஜியின் ராஜ்யம் பதினைந்து ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு கோட்டை உண்டு. அங்குள்ள அதிகாரி ஜில்லாவின் அரசியலைக் கவனித்து வந்தார். கிராமங்களில் பஞ்சாயத்துச் சபைகளிருந்தன. சிவாஜி நிலங்களைச் சரிவர அளந்து அவைகளின் விளைவில் மூன்றில் ஒரு பங்கு தீர்வையாகக் கட்ட வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்; நிலச்சுவான்கள் நேரிலேயே அரசாங்க உத்தியோகஸ்தர்களிடம் வரி கொடுக்கும்படி செய்தார். குடியானவர்கள் ஆறு மாதம் பயிர்த்தொழில் செய்வார்கள்; வேலை இல்லாத காலத்தில் இராணுவத்தில் சேர்ந்துகொண்டு அயல் நாடுகளின்மேல் படையெடுத்துச் செல்வார்கள்.

சிவாஜியின் இராணுவ நிர்வாக முறையும் மிகச் சிறப்பாய் அமைந்திருந்தது. அவர் சேனையைப் பல பாகங்களாகப் பிரித்து அவைகளுக்குத் தகுந்த உத்தியோகஸ்தர்களை நியமித்தார். சாரணர்களும், ஒற்றர்களும் அவருடைய படையில் இருந்தார்கள். அவரிடம் சிறந்த குதிரைப் படையும் கப்பற்படையும் இருந்தன. அவர் கோட்டைகளை அடிக்கடி பழுது பார்த்துப் பலப்படுத்தி வந்தார். யுத்த வீரர்களின் நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்குச் சில கண்டிப்பான விதிகளைச் செய்தார். படை வீரர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகும்பொழுது பயிர்களை அழிக்கவும், குடியானவர்களை வருத்தவும் கூடாது. யுத்த காலத்திலும் மகாராஷ்டிர வீரர்கள் ஸ்திரீகள், குழந்தைகள் முதலியவர்களுக்கு யாதொரு தீங்கும் செய்யலாகாது. முகம்மதிய நாடுகளைத் தாக்கிக் கொள்ளையடித்

தலும், மசூதிகளையும் குர்ஆனையும் அவமதித்தலும் கூடா என்று கட்டளையிட்டார்.

மந்திரி சபை: சிவாஜியின் அரசியலில் அரசருக்கு ஆலோசனை கூறுவதற்கு எட்டு மந்திரிகள் (அஷ்டப் பிரதானிகள்) அடங்கிய ஒரு மந்திராலோசனை சபை அமைக்கப்பட்டிருந்தது. அதில் பிரதான மந்திரிக்குப் **பீஷ்வா** என்பது பெயர். மற்ற ஒவ்வொரு மந்திரியும் ஒவ்வோர் இலாக்காவின் நிர்வாகத்தை நடத்தி வந்தனர். அரசாங்க சம்பந்தமான அந்தரங்க விஷயங்களைக் கவனிப்பவர் ஒரு **மந்திரி**; இராணுவ விஷயங்களைக் கவனிப்பவர் **சேனாதிபதி**; வருமான விஷயங்களைக் கவனிப்பவர் **அமாத்தியர்** என்ற பொக்கிஷ மந்திரி; அயல் நாட்டு விவகாரங்களைக் கவனிப்பவர் ஒரு மந்திரி; யுத்த விஷயங்களுக்கு ஒரு மந்திரியும், கோவில்களையும் தர்ம சொத்துக்களையும் மத சம்பந்தமான இதர காரியங்களையும் கவனிக்க ஒரு மந்திரியும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். நியாய விசாரணை செய்யும் பொருட்டு ஒரு **பிரதம நியாயாதிபதி**யும் அவருக்குக் கீழ்ப் பல நீதிபதிகளும் நியமிக்கப்பட்டார்கள். சிவாஜி அரசாங்கக் காரியங்கள் எல்லாவற்றையும் தாமே நேரில் கவனித்து வந்தார். அவருடைய மந்திரிகள் அவர் இடும் கட்டளைகளை நிறைவேற்றி வந்தார்கள்.

மகாராஷ்டிரர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் அடிக்கடி போர்கள் நிகழ்ந்த போதிலும், ஆட்சி முறையில் சிவாஜி ஜாதி மத வித்தியாசம் பாராட்டாமல் எல்லாக் குடிகளையும் சமமாக நடத்தினார். அதனால், அவரிடம் எந்த மதத்தினருக்கும் விரோதமில்லாமல் இருந்தது.

சிவாஜி ஆறு வருஷ காலமே அரசாட்சி செய்து கி. பி. 1680-ஆம் வருஷம் தமது ஐம்பத்து மூன்றும் வயதில் மரணமடைந்தார்; இறப்பதற்குள், மகாராஷ்டிர ஜாதியை ஒற்றுமைப்படுத்தி, அவர்களுக்குத் தேசாபிமானமும் மதாபிமான

மும் ஊட்டி, மகாராஷ்டிர தேசத்தை உன்னத நிலைக்குக் கொண்டுவந்தார்.

கேள்விகள் :

1. மகாராஷ்டிரர்களின் குணாதிசயங்கள் யாவை ?
2. சிவாஜியின் குணாதிசயங்கள் யாவை ?
3. ஔரங்கசீபு சிவாஜியைச் சிறைப்படுத்திய வரலாறு யாது ?
4. சிவாஜியின் ஆட்சி முறை எப்படிப்பட்டது ?
5. குறிப்பெழுது:—(1) அப்ஸல்கான், (2) ஷெயிஸ்டகான், (3) சௌத்து.

---

18. மகாராஷ்டிரர்களின் முன்னேற்றமும் வீழ்ச்சியும்

சாம்பாஜி: சிவாஜிக்குப் பின் அவருடைய குமாரர் **சாம்பாஜி** பட்டத்திற்கு வந்தார். அவர் சிவாஜியைப் போல் திறமை வாய்ந்தவரல்லர். கி. பி. 1689ல் ஔரங்கசீபு சாம்பாஜியையும், அவருடைய புதல்வரான **சாஹு** என்னும் சிறுவரையும் கைதியாக்கிக்கொண்டார். பின் சாம்பாஜி மொகலாய சக்கரவர்த்தியிடம் மரியாதையில்லாமல் நடந்துகொண்டதால் கொல்லப்பட்டார். சாஹு டில்லியிலேயே சிறை வைக்கப்பட்டிருந்தார்.

சாஹு : ஔரங்கசீபு இறந்ததும் சாஹு விடுதலையடைந்து, மகாராஷ்டிர ராஜ்யத்திற்கு அரசரானார். அவர் சிறுவராயிருந்ததாலும், நெடுங்காலம் சிறையிலே இருந்ததாலும் அவருக்கு அரசியல் முறைகளில் சிறிதும் அனுபவமில்லை. ஆகையால், அவருடைய முதல் மந்திரியாகிய **பாலாஜி விசுவநாத ராவ்** என்ற பிராமணர் அரசாங்கத்தை நடத்திவந்தார். பாலாஜி விசுவநாத ராவ் கி. பி. 1714 முதல் 1720 வரையில் பீஷ்வா


மஹாராஷ்டிரர்
இராஜ்ஜியம்
காபூல்
பிஷாவர்
கண்டஹார்
லாகூர்
முல்டான்
பானிப்பட்
டில்லி
ரோஹில்கண்ட்
ஜோதிபுரி
ஆக்ரா
குவாலியர்
அலஹாபாத்
காசி
பாடலிபுத்திரம்
முர்ஷிதாபாத்
இந்தூர்
பரோடா
பருகச்சா
தையு
சூரத்
பம்பாய்
பூனா
பீஜப்பூர்
கொல்காப்பூர்
மசூலிப்பட்டிணம்
அரபிக்கடல்
வங்காளகுடாக்
கடல்
சென்னை
மங்களூர்
ஸ்ரீரங்கபட்டிணம்
புதுச்சேரி
மாஹி
கள்ளிக்கோட்டை
கொச்சி
இந்துமஹா
சமுத்திரம்

பதவியை வகித்து, திறமையுடன் ஆட்சி புரிந்து வந்தார். அவர் கால முதல் அவரது சந்ததியார்களே வமிச பரம்பரையாகப் பீஷ்வா பதவியை வகித்து வந்தனர். நாளடைவில் பீஷ்வாக் களின் அதிகாரமும் செல்வாக்கும் வளர்ச்சியடைந்து பீஷ்வாக் களே மகாராஷ்டிர ராஜ்யத்தின் தலைவர்கள் ஆனார்கள்.

பாலாஜி விஸ்வநாத ராவ் மகாராஷ்டிர வீரர்களுக்குள் ஒற் றுமையை ஏற்படுத்தி அவர்கள் சாஹுவின் ஆட்சியை ஒப்புக் கொள்ளும்படி செய்தார். **முகம்மது ஷா** மொகலாய சக்கரவர்த் தியாவதற்கு உதவி செய்து, மகாராஷ்டிரர்கள் தக்காணத் தில் சௌத்து, சர்தேஷ்முகி என்ற வரிகளை வசூலிப்பதற்கு உரி மையைப் பெற்றார்.

பாஜிராவ் (கி. பி. 1720-40): பாலாஜி விஸ்வநாதராவ் இறந் ததும் அவருடைய குமாரர் **பாஜிராவ்** இரண்டாவது பீஷ்வா ஆனார். பீஷ்வாக்கள் எல்லோரிலும் அவரே மிக்க திறமைவாய் ந்தவர். அவர் வட இந்தியாவில் க்ஷீணதசையை அடைந்துவந்த மொகலாய ராஜ்யத்தை வேரறுத்துவிட்டு, மகாராஷ்டிர சாம் ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டார்; ஒரு பெரிய படையைத் திரட்டிக் கூர்ஜரம், மாளவம், பண் டல்கண்டு, ஒரிஸ்ஸா ஆகிய மாகாணங்களை ஜயித்து வரும் படி அனுப்பினார். தாமே ஒரு சேனையுடன் டில்லி வரை சென்று, ஏராளமான பொருள்களைக் கவர்ந்துகொண்டு திரும்பினார். ஹைதராபாதை ஆண்டுவந்த நிஜாம்-உல்-முல்கு என்பவரோடு போர் புரிந்து அவரை அடக்கினார். பீஷ்வாவின் சகோதரர் போர்த்துகீசியரைத் தோற்கடித்து அவர்களிட மிருந்து பம்பாய்க்கு அருகிலுள்ள **பஸ்ஸீன்** கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார். அவருடைய தளகர்த்தர்கள் பல புதிய ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள். **புனாவில் பீஷ்வா** ஆட்சி புரிந்தார். **பரோடா** ராஜ்யத்தைக் **கெய்க்வாரும்**, **இந்தூர்** ராஜ்யத் தை **ஹோல்காரும்**, **குவாலியர்** ராஜ்யத்தை **ஸிந்தியாவும்**, **நாகபுரி**

ராஜ்யத்தை **பான்ஸ்லே**யும் ஆண்டு வரலானார்கள். மற்றைய நாலு மகாராஷ்டிரத் தலைவர்களும் முதலில் பீஷ்வாவைத் தலைவராக ஏற்றுக்கொண்டு அவருடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தார்கள். நாளடைவில் அவர்களுடைய அதிகாரம் அதிகரித்து வரவே, அவர்கள் தங்களுடைய நாடுகளைச் சுயேச்சையுடன் ஆண்டு வரலானார்கள். மகாராஷ்டிர ராஜ்யம் ஐந்து பாகங்களாகப் பிரிந்து போய்விட்டது, நாளடைவில் அவைகளுக்குள் ஒற்றுமைக் குறைவு ஏற்படக் காரணமாயிருந்தது.

பாலாஜி பாஜி ராவ்: கி. பி. 1740ல் பாஜிராவ் இறந்ததும் அவருடைய குமாரர் **பாலாஜி பாஜி ராவ்** பீஷ்வா ஆனார்—அவருடைய காலத்தில் அரசருக்குச் சிறிதும் அதிகாரம் இல்லாமல் போயிற்று. சாஹு வயது முதிர்ந்து தளர்ந்து போயிருந்தார். அவருக்குப் புத்திர சந்ததி இல்லை. அவர் தமக்குப் பின் பீஷ்வாக்களே மகாராஷ்டிர ராஜ்யத்தை ஆளவேண்டுமென்று சாஸனம் ஒன்று எழுதி வெளியிட்டார். அதனால், சாஹு இறந்த பின் **பாலாஜி பாஜி ராவ்** சர்வ அதிகாரத்துடன் அரசாட்சியை நடத்தி வந்தார். அரச வமிசத்தைச் சேர்ந்தவர் ஒருவர் **சத்ரா** என்ற சிறிய ராஜ்யத்தில் ஆண்டு வரலானார். மகாராஷ்டிர நாடு முழுவதும் பீஷ்வாவின் அதிகாரத்தின்கீழ் வந்தது. பாலாஜி பாஜிராவ் தம் தகப்பனாரைப் போலவே திறமை வாய்ந்தவர். அவருடைய காலத்தில் மகாராஷ்டிர ராஜ்யம் உன்னத நிலையை அடைந்தது. **ஜாத்து** ஜாதியினரும், ராஜ புத்திரத் தலைவர்களும் மகாராஷ்டிரர்களுக்குஉதவியாயிருந்தனர்.பீஷ்வாவின் சகோதரர் **இரகுநாத ராவ்** வங்காளத்தின்மீது படையெடுத்துச் சென்று அதன் தலைநகராகிய **மூர்ஷிதாபா**தைக்கொள்ளையடித்தார். மேலும், அவர் பஞ்சாபிற்குச் சென்று ஆப்கானியர்களுக்குச் சொந்தமான **இலாகூ**ரைப் பிடித்துக்கொண்டு, **ரோஹில் கண்டு** நாட்டையும் கொள்ளையடித்தார்; கர்நாடகத்திலும் ஒரு ராஜ்யம் ஸ்தாபித்துக்கொண்டார். பாலாஜி பாஜிராவ்

காலத்தில் மகாராஷ்டிரர்கள், மொகலாய ராஜ்யத்திலும், வங்காளத்திலும், பீஹாரிலும் சௌத்து வரி வசூலித்தார்கள். ஹைதராபாது நிஜாமும், அவர்களுக்கு அடங்கிக் கப்பம் செலுத்தினர். டில்லிச் சக்கரவர்த்தியும் மகாராஷ்டிரர்களின் ஆதரவில் வந்து சேர்ந்தார். மகாராஷ்டிரரின் ஆதிக்கம் நாடெங்கும் பரவியிருந்தது. பாலாஜி பாஜிராவ் டில்லியில் ஒரு பெரிய இந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று விரும்பினர். அதற்காக அவர் தம் சேனதிபதி **சதாசிவ ராவ்** என்பவரை வடக்கே அனுப்பினர். அச்சமயத்தில் டில்லிச் சக்கரவர்த்தியான **ஆலம் கீர்** கொலை செய்யப்படவே, அவரது புதல்வரான **ஷாஆலம்** பயந்து வங்காளத்துக்கு ஓடிப் போய்விட்டார். இவ்வாறு டில்லியில் அரசாங்கத்தைக் கவனிக்க மன்னரில்லாமல் குழப்பமாயிருந்தது.

மூன்றும் பானிப்பட்டு யுத்தம் (கி. பி. 1761): ஆப்கானிய அரசரான **ஆமதுஷா அப்தாலி** கி. பி. 1756ல் மொகலாய சாம்ராஜ்யத்தின்மீது படையெடுத்து வந்தார். அவர் பஞ்சாபை ஜயித்து, ஓர் ஆப்கானியக் கவர்னரை நியமித்து, அதை ஆண்டு வரும்படி செய்தார். அந்தப் பிரதிநிதியை வென்றுதான் இரகுநாதராவ் பஞ்சாபை மகாராஷ்டிர ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். ஆகவே, பஞ்சாபை மீட்டுக்கொள்ளும்பொருட்டு ஆமதுஷா கி. பி. 1759ல் ஒரு பெரும்படையுடன் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார். மகாராஷ்டிரரிடம் பகை கொண்ட ரோகில்லர்களும், அயோத்தி நவாபும், மற்றும் பல முகம்மதிய சிற்றரசர்களும் ஆமதுஷா பக்கம் சேர்ந்துகொண்டார்கள். சதாசிவ ராவ் கட்சியில் ராஜ புத்திரர்களும் மற்ற இந்துக்களும் சேர்ந்தார்கள். பீஷ்வாவின் மைந்தரும் படையுடன் சென்ருர். கி. பி. 1761ல் **பானிப்பட்டு** என்னுமிடத்தில் ஒரு பயங்கரமான சண்டை நடந்தது. அதுதான் மூன்ருவது **பானிப்பட்டு யுத்தம்** என்று வழங்கப்படுகிறது. மகாராஷ்டிரர்

கள் அதிக வீரத்துடன் சண்டை செய்தார்கள். ஆனால், கடைசியில் முகம்மதியர்கள் வெற்றி பெற்றார்கள். சதாசிவ ராவும், பீஷ்வாவின் மைந்தரும் கொல்லப்பட்டனர். மகாராஷ்டிர சேனை முறியடிக்கப்பட்டது. ஆயிரக் கணக்கான மகாராஷ்டிர வீரர்கள் இச்சண்டையில் மடிந்தார்கள். இச்செய்தியைக் கேட்டதும் பீஷ்வா பாலாஜி பாஜி ராவ் மனம் உடைந்து இறந்தார்.

பானிப்பட்டு யுத்தத்தின் விளைவு: இத்தோல்வியால் மகாராஷ்டிரர்களின் பலமும் செல்வாக்கும் அழிந்தன. அவர்கள் வட இந்தியாவில் ஜயித்த நாடுகளையெல்லாம் இழக்க நேரிட்டது. பீஷ்வாக்களின் அதிகாரம் குறைந்து, மற்றைய மகாராஷ்டிரத் தலைவர்கள் பிரபலமடைந்தார்கள். மகாராஷ்டிரத் தலைவர்களுக்குள் இருந்த ஒற்றுமை போய்விட்டது. மொகலாய ராஜ்யம் சீர்குலைந்து போயிற்று. ஆமதுஷா இந்தியாவிலிருந்து ஆட்சி செய்யாமல், ஆப்கானிஸ்தானத்திற்குத் திரும்பவே, வட இந்தியா முழுவதும் கலகங்கள் ஏற்பட்டுக் குழப்பமாயிருந்தது. இந்த நிலைமை ஏற்கெனவே கர்நாடகத்தில் தங்களுடைய ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கு வங்காளத்திலும் தங்களுடைய அதிகாரத்தை நிலை நாட்டுவதற்கு அனுகூலமாயிருந்தது.

பிற்கால பீஷ்வாக்களும் ஆங்கிலேயர்களும்—மாதவராவ் (கி.பி. *1761-72*): பீஷ்வாபாலாஜி பாஜிராவ் இறந்ததும் அவர் குமாரர் **மாதவ ராவ்** பீஷ்வா ஆனார். மூன்றாவது பானிப்பட்டு யுத்தத்திற்குப்பின் சிறிது காலம் வரையில் மகாராஷ்டிரர்கள் தலையெடுக்க முடியவில்லை. ஆயினும், நான்காவது பீஷ்வா மாதவ ராவ் மீண்டும் மகாராஷ்டிரரின் ஆதிக்கத்தைப் பெருகச் செய்தார். அவர் பட்டத்துக்கு வந்தபோது அவருக்கு வயது 17. ஆகையால், அவருடைய சிறியதகப்பனாராகிய இரகு நாதராவ் அவருக்கு இடைஞ்சல்கள் செய்து வந்தார். ஆனால், **நான**

பர்னவிஸ் என்னும் பிராமண மந்திரியின் உதவியால் மாதவ ராவ் விரோதிகளை அடக்கி ராஜ்யத்தை விஸ்தரித்தார். **மகதாஜி சிந்தியா** அவருக்கு உதவியாய் இருந்தார். அவர் ராஜபுதனம் ரோஹில்கண்டு என்னும் நாடுகளை வென்று, டில்லியையும் கைப்பற்றினர். அலஹபாதில் ஆங்கிலேயர் பாதுகாப்பிலிருந்த மொகலாய அரசரான ஷா ஆலம் என்பவரை மீண்டும் டில்லியில் அரசராக்குவதாகக் கூறித் தம்முடைய பாதுகாப்பில் வைத்துக்கொண்டார். அதனல் மகாராஷ்டிரரின் அதிகாரம் மீண்டும் தலையெடுத்தது. மாதவ ராவ் மைசூரை ஆண்டு வந்த ஹைதர் அலியையும், நிஜாம் மன்னரையும் தோற்கடித்து அவர்களிடமிருந்து கப்பம் பெற்றார்.

மாதவராவ் II: கி.பி. 1772ல் மாதவ ராவ் இறந்துபோகவே, அவர் தம்பி **நாராயண ராவ்** பீஷ்வா ஆனர். ஒரு வருஷத்திற்குள் அவருடைய சிறிய தகப்பனராகிய இரகுநாத ராவ் என்ற **இரகுபா** அவரைக் கொலை செய்வித்துத் தாமே பீஷ்வா ஆனர். மகாராஷ்டிரத் தலைவர்கள் **நானபர்னவிஸ்** என்ற மந்திரியின் தலைமையில் ஒன்று சேர்ந்து, இரகுநாத ராவை ஒழித்துவிட்டு, நாராயண ராவின் புதல்வராகிய **மாதவ நாராயண ராவ்** என்பவரைப் பீஷ்வா ஆக்கவேண்டுமென்று கலகம் செய்தனர். இரகுநாத ராவ் பம்பாயிலிருந்த ஆங்கிலேயரின் உதவியைப் பெற்றார். நானபர்னவிஸ் கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸின் உதவியை நாடினர். இரகுநாத ராவுக்கு ஆங்கிலேயர்கள் உதவி செய்யவே, நானபர்னவிஸ் ஆங்கிலேயருடன் சண்டை செய்தார். கடைசியில் உடன்படிக்கை ஏற்பட்டு ஆங்கிலேயர்கள் **சால்செட்டு** என்னுமிடத்தை அடைந்தார்கள். இரகுநாத ராவுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டது. **மாதவ ராவ்** பீஷ்வா ஆனர். நானபர்னவிஸ் ராஜதந்திர நிபுணர். அவர் திறமையுடன் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். அவர் மகாராஷ்டிரர்களை ஒன்று சேர்த்துக்

கர்டா என்னுமிடத்தில் நிஜாமைத் தோற்கடித்து, அவரிடமிருந்து ஏராளமான பணமும் சில நாடுகளும் பெற்றுக் கொண்டார். அவர் இருக்குமளவும் மற்றைய மகாராஷ்டிரத் தலைவர்கள் பீஷ்வாவின் அதிகாரத்திற்கு அடங்கி நடந்தார்கள். கி. பி. 1795ல் **பீஷ்வா மாதவராவ்** தற்கொலை புரிந்து இறந்தார். அவருக்கு ஆண் சந்ததியில்லாததால், இரகுநாதராவின் மைந்தரான **இரண்டாம் பாஜிராவ் II** பட்டத்திற்கு வந்தார். அவரே கடைசி பீஷ்வா. நானுபர்னுவிஸ் கி. பி. 1800ல் இறந்தார். அத்துடன் மகாராஷ்டிரரின் ஒற்றுமையும் ஆதிக்கமும் க்ஷீணிக்கத் தொடங்கின. அப்பொழுது வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாயிருந்தார். அவர் ஏற்படுத்திய ஏகாதிபத்திய உடன்படிக்கையை பாஜி ராவ் ஒப்புக்கொண்டார். ஆனால், கி. பி. 1818ல் அவர் ஆங்கிலேயருடன் போர் புரிந்து தோற்கடிக்கப் பட்டார். அவருடைய நாடுகள் ஆங்கிலேயரால் கைப்பற்றப் பட்டு, பம்பாய் ராஜதானியாக்கப்பட்டது. சிவாஜியின் சந்ததியார் ஒருவர் **சதாரா**வில் பெயரளவில் அரசராயிருந்தார். ஸிந்தியா, பான்ஸ்லே, ஹோல்கார் என்ற மகாராஷ்டிரத் தலைவர்களும் ஆங்கிலேயர்களுடன் சண்டை செய்து தோல்வியடைந்தார்கள். அவர்களுடைய நாடுகளில் பெரும்பாகம் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தில் இணைக்கப்பட்டன. இவ்வாறு மகாராஷ்டிரர்களின் அதிகாரம் அழிந்தது.

கேள்விகள் :

1. பீஷ்வாக்கள் யாவர்? முதல் பீஷ்வா யார்? கடைசி பீஷ்வா யார்?
2. பாஜி ராவ் காலத்தில் மகாராஷ்டிரர்கள் அடைந்த வெற்றிகள் யாவை?
3. மூன்றும் பானிப்பட்டு யுத்தத்தின் விளைவுகள் யாவை?
4. குறிப்பெழுது :—(1) நானுபர்னுவிஸ், (2) ரகுநாத ராவ்.

19. சீக்கியர்கள்

இராமானந்தர்: ஸ்ரீமத் ராமானுஜருடைய சிஷ்யர்களில் ஒருவராகிய இராமானந்தர் பதினைன்காம் நூற்றாண்டின் கடைசியில் வசித்து வந்தார். அவர் பல ஜாதியினரையும் தம் சிஷ்யர்களாகச் சேர்த்துக்கொண்டார். **கபீர் தாஸ்** என்ற முஸ்லீம் நெசவுகாரர் அவருடைய சிஷ்யராய் இருந்தார். கபீர் இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒற்றுமைப்படுத்த முயன்றார். "இந்துக்களுக்கும், முகம்மதியர்களுக்கும் கடவுள் ஒருவரே. அவரை ஒரே விதமாகத் தொழ வேண்டும்," என்று கபீர் போதித்து வந்தார்.

குரு நானக்கு: கபீர்தாஸரின் மதபோதனையைக் கேட்ட நானக்கு இந்துக்களையும் முகம்மதியர்களையும் ஒரே மதத்தினராகச் செய்ய எண்ணினார். நானக்கு, கி. பி. 1469ல் இலாகூருக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தார். அவர் இந்து, இஸ்லாம் ஆகிய இரு மதங்களின் கொள்கைகளையும் தொகுத்து ஒன்றுபடுத்திப் புதிய மதம் ஒன்றை ஸ்தாபித்தார். அம்மதத்திற்கு, **சீக்கிய மதம்** என்பது பெயர். நானக்கு ஜாதி பேதத்தையும், விக்கிரக ஆராதனையையும் முற்றிலும்

குரு நானக்கு

வெறுத்தார். அவர் கடவுள் ஒருவரே என்றும், இந்துக்களும் முஸ்லீம்களும் வேற்றுமை இல்லாது கடவுளை ஒரேமாதிரியாகத் தொழவேண்டுமென்றும் போதித்தார். நல்ல எண்ணம், நல்ல வாக்கு, நல்ல செய்கை இவைகளைக் கொள்ளுவதே முக்தி அடைவதற்கு மார்க்கம் என்றும் அவர் உபதேசித்தார். அவருக்கு அநேக சிஷ்யர்கள் ஏற்பட்டார்கள். அவர்களுக்குச் **சீக்கியர்கள்** (சிஷ்யர்கள்) எனப் பெயர் வழங்கலாயிற்று. சீக்கிய மதத்தின் முக்கிய கொள்கைகள் அடங்கிய வேதபுத்தகத்திற்கு **ஆதிக் கிரந்தம்** என்பது பெயர். **குரு நானக்கு** கி. பி. 1539ல் பரகதியடைந்தார்.

சீக்கிய மதம் பரவுதல்: குரு நானக்கிற்குப் பின் ஒருவர் பின் ஒருவராய்ப் பல குருக்கள் ஏற்பட்டுச் சீக்கியர்களுக்குத் தலைமை வகித்து, மதபோதனை செய்து வந்தார்கள். இப்புதிய மதத்தைப் பஞ்சாபிலுள்ள அநேக இந்துக்களும் முகம்மதியர்களும் தழுவினார்கள். **குரு அங்காட்டு** என்பவர் குருமுகி என்ற பாஷையை உண்டாக்கினார். சீக்கியர்களின் ஆதிக்கிரந்தம் அந்த எழுத்துக்களிலேயே எழுதப்பட்டிருக்கிறது. **இராமதாஸ்** என்ற நான்காம் குரு, அக்பரின் அனுமதி பெற்று, **அமிர்தசரஸ்** என்னும் நகரைக் கட்டி, அதன் நடுவே ஒரு குளமும் பொற்கோயிலும் அமைத்தார். அதுமுதல் அமிர்தசரஸ் சீக்கியர்களின் புண்ணிய ஸ்தலங்களில் முக்கியமானதாய் இருந்து வருகிறது. அக்பரின் காலத்திற்குப் பிறகு சீக்கியர்களுக்கு முகம்மதியர்களால் பல விதத் துன்பங்கள் ஏற்பட்டன. ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்தபொழுது குரு **அர்ஜுனர்** ஐந்தாம் சீக்கிய குருவாயிருந்தார். அவர்தாம் சீக்கியர்களின் வேத புத்தகமான **ஆதிக் கிரந்தம்** என்பதை எழுதி வைத்தவர். ஜஹாங்கீருக்கு விரோதமாக அவருடைய குமாரர் **குஸ்ரு** கலகம் செய்த போது குரு அர்ஜுனர் அவருக்கு உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, கி. பி. 1606ல் சக்கரவர்த்தியின் உத்தரவால் கொல்லப்பட்டார். அவ

ருடன் சில சீக்கியர்களும் கொல்லப்பட்டார்கள். அக்காலம் முதல் சீக்கியர்கள் மொகலாய அரசர்களின் விரோதிகளானார்கள். ஆறும் குருவான **ஹரிகோவிந்தர்** சீக்கியர்களுக்கு யுத்தப் பயிற்சி செய்வித்து, மொகலாயருடன் சண்டை செய்தார். ஜஹாங்கீர் ஹரிகோவிந்தரைக் கைது செய்து பன்னிரண்டு வருஷம் சிறை வைத்தார்.

தேஜ் பகதூர் : சீக்கிய மதம் மேன்மேலும் பரவி வருவதைக் கண்ட முகம்மதியர்கள் அதைப் பரவவொட்டாமல் தடுத்தார்கள். ஒளரங்கசீபு ஒன்பதாம் குருவான தேஜ்பகதூர் என்பவரைச் சிறைப்படுத்திக் கி. பி. 1675ல் அவரைக் கொலை செய்வித்தார்.

குரு கோவிந்த சிங்கு : தேஜ் பகதூரின் குமாரரும் பத்தாம் குருவுமான **குரு கோவிந்தர்** தம் தந்தையாரின் கொலைக்குப் பழிவாங்கவேண்டுமென்று விரும்பினார். சீக்கியர்களுக்கு யுத்தப் பயிற்சி செய்வித்து, பலமான சீக்கிய சேனை ஒன்றைத் தயார் செய்தார்; சீக்கியர்களுக்குச் **சிங்கு** (சிங்கம்) என்ற பெயரைக் கொடுத்தார்; சீக்கியர்கள் மதுபானம்செய்தல், இலாகிரிவஸ்துக்களை உபயோகித்தல் முதலிய துர்ப்பழக்கங்களை விட்டுவிடவேண்டுமென்று ஆணையிட்டார். அவர்கள் தலைமயிரைக் கத்தரிக்கலாகாதென்றும், தலையில் ஒரு மரச் சீப்பைச் செருகிக் கொள்ளவேண்டுமென்றும், கூரிய கைவாளும் கையில் இரும்பு வளையமும் எப்பொழுதும் தரித்துக்கொள்ள வேண்டுமென்றும் விதிகள் ஏற்படுத்தப்பட்டன. சீக்கியர் எல்லோரும் சேர்ந்த மகா சபைக்குக் **கால்ஸா** என்பது பெயர். அந்தக் கால்ஸாவுக்குக் கீழே பன்னிரண்டு **மிஸில்கள்** என்ற சபைகள் இருந்தன. ஒவ்வொரு மிஸிலின் தலைவருக்கும் **ஸர்தார்** என்பது பெயர். ஒவ்வொரு சர்தாரும் ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டு பதினாயிரம் வீரர்களுக்குத் தலைவராய் விளங்கினார்.

கி. பி. 1708ல் குரு கோவிந்த சிங்கு ஓர் ஆப்கானியரால் கொல்லப்பட்டார். அவருடன் சீக்கிய குருக்களின் பரம்பரை முடிவடைந்தது. அவருக்குப்பின் **பண்டா** என்பவர் சீக்கியர்களின் தலைவரானார். **பஹதூர்ஷா** சக்கரவர்த்தியாரின் காலத்தில் அவர் சீக்கிய சேனையை மொகலாய ராஜ்யத்திற்குள் நடத்திச் சென்று மசூதிகளையும் நகரங்களையும் இடித்துப் பாழ்படுத்தி, வஞ்சம் தீர்த்துக்கொண்டார். கி.பி. 1751ல் அவர் கைதி செய்யப்பட்டுச் சக்கரவர்த்தியால் கொல்லப்பட்டார். மூன்றாவது பானிப்பட்டுச் சண்டைக்குப் பிறகு டில்லி சக்கரவர்த்தி, மகாராஷ்டிரர்கள் ஆகியவர்களின் அதிகாரம் குறையவே, சீக்கியர்கள் பலமடைந்து பஞ்சாபு நாடு முழுவதையும் நாளடைவில் கைப்பற்றிக் கொண்டார்கள். இரஞ்சித் சிங்கு காலத்தில் அவர்களுடைய பிரதாபம் வட இந்தியா முழுவதும் பரவியது.

இரஞ்சித் சிங்கு

இரஞ்சித்சிங்கு: சீக்கிய ஸர்தார்கள் ஏற்படுத்திய ராஜ்யங்களில் பன்னிரண்டு முக்கியமானவை. அவைகளில் ஒன்றை ஆண்டுவந்த ஸர்தார் **சத்தர் சிங்கு** என்பவரின் புதல்வர் இரஞ்சித்சிங்கு சிறந்த வீரர்; மிக்க திறமையுள்ளவர்; தமது இருபதாம் வயதிலேயே மற்றைய சர்தார்களை அடக்கி அவர்களுக்குத் தலைவரானார். பிறகு அவர் **மஹாராஜா** என்றுபட்டம்சூட்டிக் கொண்டார். அவர் சீக்கியர்களை எல்லாம் ஒன்று சேர்த்துப் பஞ்சாபில் ஒரு பலம் பொருந்திய சீக்கிய ராஜ்யத்தை ஸ்தாபித்து ஆண்டுவந்தார். **இலாகூர்** அவருடைய தலைநகராயிருந்தது. அவர் ஐரோப்பிய நிபுணர்களைக் கொண்டு தமது சேனைக்கு நவீன

முறையில் ராணுவப் பயிற்சி அளித்தார். பீரங்கி கொண்டு யுத்தம் செய்ய அவர்கள் கற்றுக்கொண்டார்கள். இரஞ்சித்சிங்கு கி. பி. 1509ல் ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு அவர்களுடன் சிநேகமாய் இருந்து வந்தார். அவர் காஷ்மீரம், பெஷாவர், மூல்தான் முதலிய பிரதேசங்களை ஜயித்துத் தம்முடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். அவர் கி. பி. 1839ல் இறந்தார். சீக்கியர்களின் கட்டுப்பாடு குறைந்து, பலம் குன்றியது. சீக்கியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் யுத்தங்கள் ஏற்பட்டு, அவைகளின் பயனாகக் கி. பி. 1849ல் பஞ்சாபு ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இப்பொழுதும் சீக்கியர்கள் இந்திய இராணுவத்தில் சிறந்த வீரர்களாய் விளங்குகிறார்கள்.

கேள்விகள் :

1. சீக்கிய மதத்தை ஸ்தாபித்தவர் யார்? அவர் போதித்த முக்கிய கொள்கைகள் யாவை?
2. சீக்கியர்களுக்கு மொகலாயர்மீது பகைஏற்படக் காரணம் என்ன?
3. சீக்கியர்களைச் சிறந்த போர்வீரர்களாகச் செய்தவர்யார்?
4. இரஞ்சித்சிங்கு சிறந்த அரசர் என்பதை விளக்கிக்காட்டு.
5. குறிப்பெழுது:—(1) ஆதிக்கிரந்தம், (2) அமிர்த சரஸ், (3) கால்ஸா.

20. ஆங்கிலேயர் ஆட்சி

ஐரோப்பிய வியாபாரிகள் இந்தியாவுக்கு வருதல்: ஆதிகாலத்தி லிருந்தே இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் வியாபாரம் நடந்துவந்திருக்கிறது இந்தியாவிலிருந்து ஏராளமான வாசனைத் திரவியங்கள், அவுரி, பட்டு, மஸ்லின் துணிகள், காஷ்மீர்ச் சால்வைகள், அரிசி, சர்க்கரை, முத்துக்கள் ஆகிய பொருள்கள் ஐரோப்பாவிலுள்ள தேசங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன. ஐரோப்பிய வியாபாரிகள் பாதரசம், கண்ணுடி, இரும்புச் சாமான்கள் முதலியவைகளை இந்தியாவிற்குக் கொண்டு வந்து விற்று வந்தார்கள். இந்த வியாபாரம் பின் வரும் மூன்று பாதைகளின் வழியாகப் பதினைந்தாம் நூற்ருண்டு வரையில் நடைபெற்று வந்தது.

தரை மார்க்கம்: வியாபாரக் கூட்டத்தார்கள் ஒட்டகங்களிலும் கோவேறு கழுதைகளிலும் சரக்குகளை ஏற்றிக்கொண்டு, வடமேற்கிலுள்ள கணவாய்களைக் கடந்து, ஆப்கானிஸ்தானம், துருக்கிஸ்தானம், பாரசீகம், ஆசியா மைனர் முதலிய நாடுகளின் வழியாகக் **கான்ஸ்டான்டி நோபிள்** (இஸ்தான்புல்) என்னும் பட்டணத்திற்குப் போவார்கள். அங்கிருந்து இத்தாலி தேசத்திலுள்ள வெனிஸ், ஜினேவா முதலான வியாபாரஸ்தலங்களுக்குக் கொண்டு போவார்கள்.

தரையும் தண்ணீரும் கலந்த மார்க்கம்: மற்ெருரு மார்க்கம், சிந்து நதியின் முகத்துவாரத்திலிருந்து அரபிக்கடல், பாரசீக வளை குடா வழியாக மெஸபொட்டேமியா நாட்டிலுள்ள பாக்தாது, ஸிரியா நாட்டிலுள்ள டமாஸ்கஸ் நகரங்களுக்குச்சென்று அங்கிருந்து மத்தியதரைக் கடற்கரைக்குச் சென்றது.

கடல் மார்க்கம்: மூன்ருவது மார்க்கம் அரபிக்கடல், செங்கடல் வழியாக எகிப்து நாட்டை அடைந்து, அந்நாட்டின் முக்கிய துறைமுகமாகிய அலெக்ஸாண்டிரியாவுக்குச் சென்றது.

அவ்விடத்திலிருந்து வெனிஸ், ஜினேவா நகர வியாபாரிகள் இந்தியச் சாமான்களை வாங்கி ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துக்கொண்டு போவார்கள். ஆகையால், அக்காலத்தில் மத்திய தரைக் கடலையடுத்த பட்டினங்கள் செல்வம் மிகுந்து பிரசித்தி பெற்றிருந்தன. இவ்வியாபாரத்தை நடத்தி வந்தவர்கள் ரோமானியரும் அராபியருமே.



பழைய வியாபார மார்க்கங்கள்.

போர்த்துகீசியரின் வருகை: பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் துருக்கியர்கள் தென்மேற்கு ஆசியாவில் பலமடைந்து கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றிக்கொண்டனர். வியாபாரப் பாதைகளும் அவர்கள் வசமாயின. அவர்கள், அராபியர்கள் தங்கள் நாட்டின் வழியாக வியாபாரம் செய்வதைத்

தடுத்தார்கள். ஆகவே, ஐரோப்பிய வர்த்தகர்கள் துருக்கியர் மூலமாகவே வியாபாரம் செய்ய வேண்டியதாயிற்று. ஐரோப்பியர்களுக்கு வியாபாரத்தில் கிடைத்து வந்த இலாபம் குறைய ஆரம்பித்தது. எனவே, அவர்கள் இந்தியாவுடன் நேரில் வியாபாரம் செய்ய வேண்டி, இந்தியாவிற்கு ஒரு புதிய கடல் மார்க்கத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யலானார்கள்.

புதிய கடல் மார்க்கம்: அக்காலத்தில் கப்பல் ஓட்டுவதில் சிறந்து விளங்கிய போர்த்துகீசியர் அம்முயற்சியில வெற்றி பெற்றனர். **வாஸ்கோ ட காமா** என்ற போர்த்துகீசிய மாலுமி போர்த்துகல் நாட்டிலிருந்து கப்பலில் புறப்பட்டு ஆப்பிரிக்காக் கண்டத்தின் தென்கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றி, இந்து மகா சமுத்திரத்தைக் கடந்து, கி. பி. 1498-ஆம் ஆண்டில் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள **கள்ளிக்கோட்டை**யை அடைந்தார். முதல் முதல் இந்தியாவுக்குக் கடல் மார்க்கத்தைக் கண்டு பிடித்தவர் இவரே. கள்ளிக்கோட்டையில் அரசராயிருந்த **ஸாமரின்** என்பவர் வாஸ்கோடகாமாவை நன்குவரவேற்று, போர்த்துகீசியர் அங்கு வியாபாரம் செய்ய அனுமதியளித்தார். அதுமுதல் போர்த்துகீசியர்கள் இந்தியாவிற்கு அடிக்கடி வரலாயினர். அவர்களுக்குக் கொச்சி அரசரின் ஆதரவும் கிடைத்தது. அவர்கள் இந்தியாவில் பற்பல இடங்களில் பண்டக சாலைகளை ஏற்படுத்திக்கொண்டு, வர்த்தகம் செய்தனர். அவைகளில் மேற்குக் கரையிலுள்ள **கொச்சி, கண்ணனூர், கோவா, டையூ, டாமன், சூரத்து** என்னும் நகரங்களும், கிழக்குக் கரையிலுள்ள **மைலாப்பூ**ரும் முக்கியமானவை. போர்த்துகீசியர்களுக்கு முன் மேற்குக் கரைப் பிரதேசங்களில் வியாபாரம் செய்து வந்த அராபியர்களுக்கு வியாபார ஆதாயம் குறைய ஆரம்பித்தது. ஆகவே, அராபியர்களுக்கும், போர்த்துகீசியர்களுக்கும் போட்டியும் சண்டைகளும் ஏற்பட்டன. போர்த்துகீசியர் தங்களுடைய பண்டகசாலைகளைச்சுற்றிக்

கோட்டைகளும், இராணுவங்களும் ஏற்பாடு செய்தனர். முடிவில் அராபியரின் வியாபாரமும் செல்வாக்கும் குன்றிவிட்டன. போர்த்துகீசியர் சுமார் நூறு ஆண்டுகள் யாதொரு போட்டியுமின்றி இந்தியாவில் வியாபாரம் செய்து அதிக இலாபம் அடைந்தார்கள்.



ஐரோப்பா-இந்தியா வியாபார வழிகள்

நாளடைவில் இவர்களுக்கு வியாபாரத்தில் ஊக்கம் குன்றி இந்தியாவில் தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. **ஆல்புகர்க்கு** என்ற போர்த்துகீசியக் கவர்னர் கி.பி. 1510ல் பிஜப்பூர்ச் சுல்தானிடமிருந்து **கோவா** என்னும் துறைமுகத்தைக் கைப்பற்றினர். பிறகு பாரசீகக்குடாவி

லிருக்கும் **ஆர்மஸ்** என்னும் வியாபாரஸ்தலத்தையும் மலேயாத் தீபகற்பத்திலுள்ள **மலாக்கா**வையும் பிடித்தார். போர்த்துகீசிய வியாபாரிகள் கிழக்கிந்தியத் தீவுகளிலும் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தினர். இவ்வாருகப் பதினாருவது நூற்றாண்டு முழுவதும் போர்த்துகீசியரின் ஆதிக்கம் ஓங்கி நின்றது. அதன் பின் டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர்கள் ஆகிய வேறு ஐரோப்பிய நாட்டினர்களும் இந்தியாவுக்கு வந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுள் டச்சுக்காரர்களுக்கும் போர்த்துகீசியருக்கும் பலத்த போட்டி ஏற்பட்டது. அதனுல் போர்த்துகீசியரின் வியாபாரம் ஒடுங்கிவிட்டது, தற்காலத்தில் இந்தியாவில் **கோவா, டையூ, டாமன்** என்ற மூன்று இடங்களே போர்த்துகீசியருக்குச் சொந்தமாயிருக்கின்றன.

டச்சுக்காரர்கள்: போர்த்துகீசியருக்குப் பின் இந்தியாவுக்கு வியாபாரம் செய்ய வந்தவர்கள் டச்சுக்காரர்கள். அவர்கள் ஐரோப்பாவிலுள்ள **ஹாலந்து** தேசத்தைச்சேர்ந்தவர்கள். அவர்கள் கப்பல் ஓட்டுவதில் தேர்ந்தவர்கள். அக்காலத்தில் அவர்களிடம் ஒரு பலமான கப்பற்படை இருந்தது. அவர்கள் இந்தியாவுக்கு வந்து போர்த்துகீசியருடன் சண்டை செய்து, அவர்களுடைய வர்த்தக ஸ்தலங்களுள் பலவற்றைக் கைப்பற்றிக்கொண்டார்கள். தாங்களே பல இடங்களில் புதியனவாகப் பண்டகசாலைகளையும் அமைத்துக்கொண்டார்கள். இந்தியாவின் மேற்குக் கரையில் **சூரத்து, கொச்சி** என்னுமிடங்களும், கிழக்குக் கரையில் **நாகப்பட்டினம், பழவேற்காடு, மசூலிப்பட்டினம், தூத்துக்குடி, சிஞ்சூரா** என்னுமிடங்களும் டச்சுக்காரரின் முக்கிய வியாபாரஸ்தலங்களாயிருந்தன. மேலும் **ஜாவா, சுமத்திரா** என்னும் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் சென்று வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். வாசனைத் திரவிய வியாபாரத்தில் அவர்களுக்கு ஏராளமான இலாபம்கிடைத்தது. பின்னர் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் அவர்களுக்குப் போட்டியாய் வியா

பாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அதனால், பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதியில் டச்சுக்காரரின் வியாபாரம் அழியத் தொடங்கியது. அவர்கள் ஆங்கிலேயருடன் போட்டியிடச்சக்தியின்றி, இந்தியாவிலிருந்து விலகிக்கொண்டு, கிழக்கு இந்தியத் தீவுகளில் போய்த்தங்கி அவைகளைக் கைப்பற்றிக்கொண்டனர். ஜாவாவின் தலைநகரான **பட்டேவியா** அவர்களுடைய முக்கிய வியாபார ஸ்தலமாய் இருந்து வந்தது. இப்பொழுது இந்தியாவில் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான இடம் ஒன்றுமில்லை.

கேள்விகள் :

1. ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும ஆதி காலத்தில் இருந்த வியாபார மார்க்கங்கள் எவை ?
2. இந்தியாவுக்குக் கடல் மார்க்கம் யாரால் எப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டது ?
3. போர்த்துகீசியரின் வியாபாரம் ஏன் அழிந்துபோயிற்று ?
4. டச்சுக்காரர்கள் ஏன் இந்தியாவை விட்டு விலகிக்கொண்டார்கள் ?

---

21. ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும்.

போர்த்துகீசியரும், டச்சுக்காரரும் இந்தியாவுடன் வியாபாரம் செய்து இலாபம் அடைந்ததைக் கண்ட ஆங்கிலேயரும், இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய விரும்பினுர்கள். கி. பி. 1600ல் லண்டன் நகர வியாபாரிகள் சிலர் ஒன்று சேர்ந்து இந்தியாவுடன் வர்த்தகம் செய்வதன் நிமித்தம் ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். அப்பொழுது இங்கிலாந்தை ஆண்டுவந்த எலிஸபெத்து ராணியாரிடமிருந்து அவர்கள் ஓர் உரிமைச் சாஸனம் பெற்றுர்கள். அதன்படி இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் ஏகபோக உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அந்த வியாபாரச் சங்கத்தார் கடல் மார்க்கமாக நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்தியாவுக்கு வந்தார்கள். அப்

பொழுது டில்லியில் **ஜஹாங்கீர்** என்னும் மொகலாய சக்கர வர்த்தி ஆண்டு வந்தார். அவருடைய அனுமதியைப் பெற்று, கி. பி. 1612ல் அவர்கள் மேற்குக் கரையிலுள்ள **சூரத்திலும்,** கிழக்குக் கரையிலுள்ள மசூலிப்பட்டினத்திலும் பண்டக சாலைகள் கட்டிக்கொண்டார்கள். கி. பி. 1615ல் இங்கிலாந்தை ஆண்டுவந்த **முதலாம் ஜேம்ஸ்** என்பவர் **வில்லியம் ஹாகின்ஸ், ஸர் தாமஸ் ரோ** என்னும் ராஜ தூதர்களை மொகலாய சக்கர வர்த்தியிடம் அனுப்பினர். அவர்கள் ஜஹாங்கீரிடமிருந்து ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வியாபாரம் செய்வதற்கு வேண்டிய பல உரிமைகளைப் பெற்றார்கள். அதன்பின் அவர்கள் இன்னும் பல பண்டகசாலைகளை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

டச்சுக்காரர்களுடன் சண்டை: ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்தபொழுது போர்த்துகீசியரின் பலம் குன்றி டச்சுக்காரர்கள் மிகுந்த பலமடைந்திருந்தார்கள். டச்சுக்காரர்கள் வியாபாரம் செய்து வந்த கிழக்கு இந்தியத் தீவுகளுக்கு ஆங்கிலேயர்கள் சென்றபொழுது அவர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களைத் தோற்கடித்து அத்தீவுகளிலிருந்து விரட்டிவிட்டார்கள். டச்சுக்காரர்கள் கி. பி. 1623ல் **அம்பாய்னு** என்னுமிடத்தில் சில ஆங்கிலேயரைக் கொலை செய்தார்கள். ஆகவே, ஆங்கிலேயர்கள் கிழக்கு இந்தியத் தீவுகளை விட்டு வெளியேறி, இந்தியாவுடன் வியாபாரம் செய்வதிலேயே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தலானர்கள்.

சென்னைப்பட்டினம்: அச்சமயம் தென்னிந்தியாவின் கிழக்குக் கரையில் ஆங்கிலேயக் கம்பெனியின் பிரதிநிதியாக **ஸர் பிரான்ஸிஸ் டே** என்பவர் இருந்தார். அவர் சந்திரிகிரியில் ஆண்டு வந்த **ஸ்ரீரங்கராய**ரிடம் சிற்றரசராயிருந்த செங்கற்பட்டு நாயக்கரிடமிருந்து கி. பி. 1639ல் சில கிராமங்களை விலைக்கு வாங்கினர். அங்கு ஒரு பண்டகசாலையைக் கட்டி அதைப் பாது

காக்கும்பொருட்டு ஒரு கோட்டையையும் கட்டி வைத்தார். அதை விற்றவரின் தகப்பனுருடைய பெயர் **சென்னப்ப நாயக்கர்.** அது பற்றியே அந்த இடத்தில் கட்டப்பட்ட பட்டினத்திற்குச் **சென்னைப் பட்டினம்** என்ற பெயர் ஏற்பட்டது. அக்காலத்தில் அது செம்படவர் வசிக்கும் சிறு கிராமமாய் இருந்தது. அவ்வூரிலிருந்த நாட்டாண்மைக்காரனுடைய பெயரையொட்டி அது **மதராஸ்** எனவும் வழங்கப்பட்டு வந்தது. அவ்விடத்தில் கட்டப்பட்ட கோட்டைக்கு **ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை** என்பது பெயர். ஆங்கிலேய வர்த்தகர்கள் கோட்டைக்கு உள்ளும், அவர்களுடன் வியாபாரம் செய்து வந்த இந்தியர்கள் கோட்டைக்கு வெளியேயும் வசித்து வந்தார்கள். நாளடைவில் சென்னை பெரிய நகரமாய் வளர்ந்து விட்டது.

பம்பாய்: பம்பாய்த் தீவு வெகு காலம் போர்த்துகீசியர்களுக்குச் சொந்தமாயிருந்தது. கி. பி. 1661-ஆம் வருஷம் ஆங்கிலேய மன்னரான **இரண்டாம் சார்லஸ்** போர்த்துகீசிய மன்னருடைய புத்திரியை மணம் செய்துகொண்டார். அப்பொழுது பம்பாய் நகரம் போர்த்துகல் இளவரசியாருக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்டது. சார்லஸ் அரசர் பம்பாயைக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குக் கொடுத்துவிட்டார். பம்பாய் ஒரு சிறந்த இயற்கைத் துறைமுகம். ஆங்கிலேயக் கம்பெனியார் அங்கு ஒரு பண்டகசாலையை அமைத்துக்கொண்டு வியாபாரம் செய்து வரலானர்கள். நாளடைவில் பம்பாய் ஒரு பெரிய நகரமாகி, இப்பொழுது இந்தியாவிலேயே மிகப் பெரிய துறைமுகப் பட்டினமாய் விளங்குகிறது.

கல்கத்தா: மேற்கூறிய இடங்களைத் தவிர, **பாட்ன, டாக்கா, காஸிம்பஸார், மசூலிப்பட்டினம், ஸெயின்ட் டேவிட் கோட்டை** என்னும் இடங்களிலும் ஆங்கிலேயருடைய வியாபார ஸ்தலங்கள் இருந்தன. கி. பி. 1651ல் ஆங்கிலேயர் வங்காளத்தில் வரியின்றி

வியாபாரம் செய்யும் உரிமையை ஷாஜஹான் சக்கரவர்த்தியாரிடமிருந்து பெற்ருர்கள். **ஹூக்ளி** நதிக் கரையில் அவர்கள் ஒரு பண்டகசாலையைக் கட்டிக்கொண்டு வியாபாரம் செய்து வந்தார்கள். கி. பி. 1690ல் **ஜாப்சார்னக்கு** என்னும் ஓர் ஆங்கிலேய வியாபாரி ஹூக்ளி நதியின் கிழக்குக் கரையிலுள்ள மூன்று கிராமங்களை வங்காள நவாபிடமிருந்து விலைக்கு வாங்கினர். அக்கிராமங்களில் ஒன்றுக்குக் **காளி கட்டம்** என்பது பெயர். அந்த இடத்தில் உண்டான பட்டினத்திற்குக் **கல்கத்தா** என்ற பெயர் ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் அங்கே பண்டகசாலையை அமைத்துக்கொண்டு அதைச் சுற்றி ஒரு கோட்டையைக் கட்டினர்கள். அக்கோட்டை அக்காலத்தில் இங்கிலாந்தில் ஆண்டுவந்த **வில்லியம்** என்ற அரசரின் பெயரால் **வில்லியம் கோட்டை** என்று வழங்கப்பட்டது.

ஐக்கியக் கிழக்கு இந்திய வியாபாரச் சங்கம் : கிழக்கு இந்திய வியாபாரச் சங்கத்தார் இந்தியாவில் வியாபாரம் செய்து அதிக இலாபம் அடைவதைக்கண்ட மற்ற ஆங்கிலேய வியாபாரிகள் பொருமை கொண்டு கிழக்கிந்திய வியாபாரச் சங்கத்திற்குப் போட்டியாக மற்ருெரு வியாபாரச் சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, இந்தியாவிற்கு வந்து வியாபாரம் செய்யலானர்கள். அதனல், இரு சங்கங்களுக்கும் வியாபாரத்தில் போட்டி ஏற்பட்டு நஷ்டம் உண்டாயிற்று. அதனல் ஏற்பட்ட துன்பங்களை உணர்ந்து கி.பி. 1708-ஆம் வருஷம் இவ்விரு வியாபாரச் சங்கங்களும் **ஐக்கியக் கிழக்கு இந்திய வியாபாரச் சங்கம்** என்ற பெயருடன் ஒரே சங்கமாகச் சேர்க்கப்பட்டன. அச்சங்கத்தாருக்கு இந்தியாவிலும் கிழக்கு இந்தியத் தீவுகளிலும் வியாபாரம் செய்யும் ஏகபோக உரிமை **ஆன்** என்னும் ஆங்கிலேய அரசியரால் அளிக்கப்பட்டது.

பிரெஞ்சுக் கிழக்கு இந்தியக் கம்பெனி : ஆங்கிலேயரைப் போலவே பிரெஞ்சுக்காரர்களும் கி. பி. 1664ல் ஒரு வியாபாரச்

சங்கத்தை அமைத்து, இந்தியாவுடன் வியாபாரம் செய்யத் தொடங்கினர்கள். அவர்கள் மொகலாய சக்கரவர்த்தியிடம் அனுமதி பெற்று, **சூரத்து, மசூலிப்பட்டினம்** என்னுமிடங்களில் பண்டகசாலைகளைக் கட்டிக்கொண்டார்கள். பிரெஞ்சு கவர்னரான **மார்ட்டின்** கி. பி. 1674ல் பிஜப்பூர்ச் சுல்தானிடமிருந்து கிழக்குக் கடற்கரையில் மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கினர். அவைகளில் ஒன்றுக்குப் **புதுச்சேரி** என்பது பெயர். மார்ட்டின் அக்கிராமங்களைச் சுற்றி ஒரு பலமுள்ள கோட்டையைக் கட்டி, அதைப் பிரெஞ்சுக்காரரின் முக்கிய வியாபாரஸ் தலமாகச் செய்தார். பின்னர்க் கிழக்குக் கரையில் **காரைக்கால்** என்னுமிடத்திலும், வங்காளத்தில் **சந்திரநாகூர்** என்னுமிடத்திலும், மேற்குக் கரையில் **மாஹி** என்னுமிடத்திலும் பிரெஞ்சுக்காரர்கள் வியாபாரஸ்தலங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

கேள்விகள் :

1. ஆங்கிலேயக்கிழக்கு இந்திய வர்த்தகச்சங்கம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ?
2. ஆங்கிலேயர்கள் எங்கெங்கே பண்டகசாலைகளை ஏற்படுத்திக்கொண்டார்கள் ?
3. சென்னைப்பட்டினமும், பம்பாயும், கல்கத்தாவும் கம்பெனியாருக்குக் கிடைத்த வரலாறு யாது ?
4. ஐக்கிய இந்திய வியாபாரச்சங்கம் எவ்வாறு ஏற்பட்டது ?
5. பிரெஞ்சுக்காரர்களின் வியாபாரஸ்தலங்கள் எவ்விடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன ?

22. தென்னிந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த யுத்தங்கள்

பிரெஞ்சு இந்திய வர்த்தகச் சங்கத்தாரும் ஆங்கிலேய வர்த்தகச் சங்கத்தாரும் சிறிது காலம் வரை சமாதானமாகவேயிருந்து வியாபாரம் செய்து வந்தார்கள். ஆனால், நாளடைவில் அவர்களுக்குள் போட்டி ஏற்பட்டதுடன் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிட்டுக்கொண்டு ஒருவரோடொருவர் சண்டை செய்யவும் ஆரம்பித்தார்கள். மேலும், ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை ஏற்பட்டபோதெல்லாம் இந்தியாவிலும் அவர்களுக்குள் போர் நிகழ்ந்தது. **டூமாஸ்** என்பவர் புதுச்சேரிக் கவர்னராயிருந்த காலத்தில் பிரெஞ்சுக்காரர்கள் இந்திய மன்னர்களின் காரியங்களில் தலையிட்டுத் தங்களுடைய பலத்தையும் செல்வாக்கையும் அதிகப்படுத்திக்கொண்டார்கள். டூமாஸுக்குப்பின் **டியூப்ளே** புதுச்சேரிக் கவர்னர் ஆனார். அவர் புத்தி நுட்பமும் திறமையும் உள்ளவர். அவருடைய சாமர்த்தியத்தினாலேதான் **சந்திரநாகூர், மாஹி** என்னும் வியாபாரஸ்தலங்கள் பிரபலமடைந்தன. அவர் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து துரத்திவிட்டுப் பிரெஞ்சு அரசாட்சியை ஸ்தாபிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டார். அதற்காக அவர் சுதேச மன்னர்களுடன் நட்புச் செய்துகொண்டார். மேலும், பல இந்தியப் போர் வீரர்களை ஐரோப்பிய யுத்த முறைகளில் பழக்கி ஒரு பெரும்படையையும் தயாரித்தார். அவர் பிரெஞ்சுக்காரரின் வியாபார முன்னேற்றத்திற்கு இடைஞ்சலாயிருந்த

டியூப்ளே

ஆங்கிலேயரைத் தாக்குவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

முதல் கர்நாடக யுத்தம்: கி. பி. 1744ல் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை ஏற்பட்டது. ஆகையால், இந்தியாவிலும் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது பிரெஞ்சுக்காரருக்கு உதவியாய் **லாபோர்டனே** என்னும் தளகர்த்தர் மொரிஷியஸ் தீவிலிருந்து ஒரு கப்பற்படையுடன் புதுச்சேரிக்கு வந்தார். அதை எதிர்ப்பதற்காகக் கி. பி. 1746ல் ஆங்கிலேயரும் ஒரு கப்பற்படையை அனுப்பினர். ஆங்கிலேயரின் படை தோற்கடிக்கப்பட்டது. அப்பால் லாபோர்டனே சென்னையை முற்றுகை செய்து, அதைக் கைப்பற்றிக்கொண்டார். லாபோர்டனே ஏராளமான பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்னையை ஆங்கிலேயருக்குத் திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்று விரும்பினர். ஆனால், டியூப்ளே அதற்குச் சம்மதிக்கவில்லை. இருவருக்கும் அது காரணமாக மனவருத்தம் ஏற்படவே, லாபோர்டனே தம் கப்பற்படையுடன் திரும்பிச் சென்றுவிட்டார்.

ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் தமதுநாட்டில் சண்டை செய்வதைக் கர்நாடக நவாபான **அன்வருதீன்** விரும்பவில்லை. பிரெஞ்சுச் சேனை சென்னையை முற்றுகை செய்தபொழுது நவாபு அதை ஆட்சேபித்தார். டியூப்ளே தாம் சென்னையைக் கைப்பற்றி நவாபுக்குக் கொடுத்துவிடுவதாக வாக்களித்தார். முற்றுகை முடிந்ததும் அன்வருதீன் சென்னைக் கோட்டையைத் தம்மிடம் கொடுத்துவிடும்படி கேட்டார். டியூப்ளே அதற்கு இணங்கவில்லை. அதனல் நவாபு சென்னையைப் பிரெஞ்சுக்காரரிடமிருந்து கைப்பற்றி அவர்களைத் தண்டிப்பதற்காகத் தம் புதல்வரை ஒரு பெரும்படையுடன் அனுப்பினர். மயிலாப்பூருக்கு அருகில் உள்ள **அடையாற்றின்** கரையில் **செந்தோம்** என்னுமிடத்தில் சண்டை நடந்ததில் பிரெஞ்சுக்கா

ரர் வெற்றி பெற்றனர். இந்தியர்களோடு ஐரோப்பியர்கள் செய்த முதல் போர் இதுவேயாகும். இச்சண்டையினால் சரியான யுத்தப் பயிற்சி பெறாத இந்தியச் சேனைகளை எளிதில் தோற்கடித்துவிடலாம் என்பதை ஐரோப்பியர்கள் தெரிந்து கொண்டார்கள்.

டியூப்ளே அதிக தைரியம் அடைந்து புதுச்சேரிக்குப் பக்கத்தில் ஆங்கிலேயருக்குச் சொந்தமான **ஸெயின்ட்டேவிட்** கோட்டையையும் கைப்பற்ற முயன்றார். ஆனால், ஆங்கிலேயர்கள் வீரத்துடன் சண்டை செய்ததால், அம்முயற்சி பலிக்கவில்லை. கி. பி. 1748ல் ஆங்கிலேயருக்கு உதவியாக இங்கிலாந்திலிருந்து **மேஜர் லாரென்ஸ்** என்பவரின் தலைமையின்கீழ் ஒரு பெரிய சேனையும் கப்பற்படையும் வந்தன. அப்படையின் உதவியால் ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை செய்தனர். ஆனால், புதுச்சேரியைப் பிடிக்க முடியவில்லை. இதற்கிடையில் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சமாதானம் ஏற்பட்டதால், இந்தியாவிலும் சண்டையை நிறுத்தவேண்டியதாயிற்று. ஐரோப்பாவில் செய்த உடன்படிக்கையின்படி, பிரெஞ்சுக்காரர்கள் சென்னையை ஆங்கிலேயருக்குத் திரும்பிக் கொடுத்துவிட்டனர். இவ்வாறு முதல் கர்நாடக யுத்தம் முடிவடைந்தது.

இந்த யுத்தத்தின் பயனாகப் பிரெஞ்சுக்காரரின் பிரதாபம் நாடெங்கும் பரவியது. அது முதல் சுதேச மன்னர்கள் தங்களுக்குள் சண்டை ஏற்பட்ட சமயங்களிலெல்லாம் யுத்த முறைகளில் தேர்ச்சி பெற்ற பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினார்கள்.

இரண்டாம் கர்நாடக யுத்தம்: முதலாம் கர்நாடக யுத்தம் தொடங்கியபோது, **இராபர்ட்டுக் கிளைவ்** என்ற ஓர் ஆங்கிலேய வாலிபர் கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனியில் குமஸ்தாவாக நியமிக்கப்பட்டு இந்தியாவுக்கு வந்தார். அவர் கி. பி. 1726-ஆம்

வருஷம் இலண்டன் நகரத்தில் பிறந்தனர். சிறுவராய் இருந்த பொழுது பள்ளிக்குச்சென்று கல்விகற்காமல் துஷ்டர்களுடன் சேர்ந்துகொண்டு பல தீச்செயல்களைச் செய்து வந்தார். அவருடைய துஷ்டத்தனத்தைச் சகிக்கமாட்டாத அவருடைய ஏழைப் பெற்றோர்கள், அவர் ஒன்றுக்கும் உதவாதவர் எனக் கருதி, அவரை எங்கேயாவ்து ஒழித்துவிடத்தீர்மானித்து, இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அவர் கி. பி. 1744ல் சென்னைக்கு வந்து சேர்ந்தார். அவர் அஞ்சாத நெஞ்சம் படைத்தவர்; விசேஷ தைரியமும் புத்திக் கூர்மையும் உள்ளவர். பிரெஞ்சுக்காரர்கள் சென்னையைக் கைப்பற்றிய பொழுது அவர் மாறு வேடம் தரித்து ஸெயின்டேவிட் கோட்டைக்குத் தப்பியோடினார். ஸெயின்டேவிட் கோட்டையைப் பிரெஞ்சுக்காரர் பிடிக்க முயன்ற பொழுது கிளைவ் வெகு தைரியமாகச் சண்டை செய்தார். அவருடைய வீரத்

இராபர்ட்டுக் கிளைவ்

தை மெச்சிச் சென்னைக் கவர்னர் அவருக்கு இராணுவத்தில் ஓர் உத்தியோகம் கொடுத்தார். அவர் எடுத்தகாரியத்தை எப்படியாவது நிறைவேற்றும்குணமுடையவர். அவருடைய திறமையினாலும் தளரா ஊக்கத்தாலும் அவர் நாளடைவில் சேனைத்தலைவரும், பின்னர்க் கவர்னரும் ஆனார்.

முதல் கர்நாடக யுத்தம் முடிவடைந்து இரண்டு வருஷங்களுக்குள் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் மறுபடியும் போர் ஆரம்பித்தது. ஔரங்கசீபுக்குப்பின் ஹைதராபாதில் ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொண்ட **நிஜாம்-உல்-முல்கு** கி. பி. 1748ல் இறந்தார். உடனே அவருடைய இரண்டாம் குமாரரான **நாஸர்ஜங்கு** என்பவர் பட்டத்துக்குவந்தார். ஆனால்,

இறந்து போன நிஜாமின் பேரரான **முஸபர் ஜங்கு** தாமே பட்டத்துக்கு உரியவர் என்று போட்டியாய்க் கிளம்பினர்.

அதே சமயத்தில் கர்நாடகத்திலும் பட்டத்தைக் குறித்துச் சண்டை உண்டாற்று. கர்நாடகம் நிஜாம் மன்னரின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. கி. பி. 1743ல் நிஜாம்-உல்-முல்கு **அன்வருதீன்** என்பவரைக் கர்நாடக நவாபாக நியமித்திருந்தார். நிஜாம் இறந்ததும் பழைய கர்நாடக நவாபின் வமிசத்தைச் சேர்ந்த **சந்தா சாகிபு** என்பவர் தமக்குக் கர்நாடகப் பட்டம் கிடைக்கவேண்டுமென்று கலகம் செய்தார். முஸபர் ஜங்கும் சந்தா சாகிபும் ஒன்று சேர்ந்துகொண்டு, புதுச்சேரியிலிருந்த டியூப்ளேயைத் தங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டினர்கள். டியூப்ளே அவர்கள் விருப்பத்திற்கிணங்கி, **புஸ்ஸி** என்னும் தளகர்த்தர் வசம் ஒரு பெரிய சேனையை அனுப்பினர். புஸ்ஸி அன்வருதீனுடன் **ஆம்பூர்** என்னுமிடத்தில் சண்டை செய்து அவரைத் தோற்கடித்தார். அன்வருதீன் போரில் இறந்தார். அவருடைய புதல்வர் **முகம்மது அலி** என்பவர் பிரெஞ்சுக்காரர்களுக்குப் பயந்து திருச்சிராப்பள்ளிக்கு ஓடினர். சந்தா சாகிபு கர்நாடக நவாபாக **ஆற்காட்டில்** முடி சூட்டப்பட்டார்.

முகம்மது அலி

இதுவரை ஆங்கிலேயர் ஒரு கட்சியிலும் சேராமலிருந்தனர்; ஆனல், பிரெஞ்சுக்காரரின் உதவியைக்கொண்டு நவாபு பட்டம் பெற்ற சந்தாசாகிபு தங்களைக் கர்நாடகத்திலிருந்து துரத்திவிடுவார் என்று பயந்தார்கள். அச்சமயத்தில் திருச்சிராபள்ளிக் கோட்டையில் ஒளிந்திருந்த முகம்மது அலி தமக்கு உதவிசெய்யும்படி ஆங்கிலேயரை வேண்டினர். ஆகவே, சென்னையிலிருந்து முகம்மது அலிக்கு உதவியாக ஒரு சிறு படை அனுப்

பப்பட்டது. ஹைதராபாது நிஜாமான நாஸர்ஜங்கு தமக்கு விரோதமாகக் கிளம்பியவர்களைத் தண்டிக்கும்பொருட்டு ஒரு பெரிய சேனையுடன் ஆற்காட்டின்மேல் படையெடுத்துச் சென்றார். ஆங்கிலேயர்கள் அவருக்கு உதவியாக ஒரு சேனையை அனுப்பினார்கள். நாஸர்ஜங்கு கர்நாடகத்திற்கு வந்ததும் முஸபர் ஜங்கு பயந்து அவரிடம் சரணமடைந்தார். ஆனால், சில மாதங்களில் நாஸர்ஜங்கு ஒரு சிற்றரசரால் கொலை செய்யப்பட்டார். அவர் இறந்ததும் முஸபர்ஜங்கு ஹைதராபாது நிஜாமாக்கப்பட்டார். ஆனால், முஸபர்ஜங்கு தம் நாட்டிற்குத் திரும்பி வரும் வழியில் கொலை செய்யப்பட்டு இறந்தார்.

முஸபர்ஜங்குடன் துணையாகச்சென்ற பிரெஞ்சு தளகர்த்தரான புஸ்ஸி, உடனே நாஸர்ஜங்கின் இளைய சகோதரரான **ஸலபத்ஜங்கு** என்பவரை நிஜாம் ஆக்கினார். அதற்குக் கைம்மாருக நிஜாம் பிரெஞ்சுக்காரருக்குக் கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஆகிய ஜில்லாக்கள் அடங்கிய **வட சர்க்கார்** நாட்டைக் கொடுத்தார். தவிர, அவர் டியூப்ளேயைக் கர்நாடகத்தின் கவர்னராக நியமித்தார். இவ்வாருகப் பிரெஞ்சுக்காரர் ஹைதராபாதிலும், கர்நாடகத்திலும் மிகுந்த செல்வாக்கை அடைந்தனர்.

ஆற்காட்டு முற்றுகை: பிறகு சந்தாசாகிபும் பிரெஞ்சுக்காரரும் முகம்மதுஅலி ஒளிந்துகொண்டிருந்த திருச்சிராப்பள்ளிக் கோட்டையை முற்றுகை செய்தனர். அக்கோட்டையை அவர்கள் பிடித்து, முகம்மது அலியைத் தோற்கடித்துவிட்டால், சந்தா சாகிபும் பிரெஞ்சுக்காரரும் கர்நாடகத்தில் பலம் அடைந்துவிடுவார்கள்; ஆங்கிலேயரின் நிலைமை மிகவும் மோசமாகிவிடும். ஆகையால், ஆங்கிலேயர்கள் முகம்மது அலியை எவ்வாறேனும் காப்பாற்ற வேண்டுமென்று கருதினார்கள்.

இத்தகைய நெருக்கடியான சமயத்தில் **இராபர்ட்டுக் கிளைவ்** சென்னைக் கவர்னரிடம் சென்று ஓர் அரிய யோசனை கூறினார்.

அதாவது, சந்தாசாகிபு தமது பெருஞ்சேனையுடன் திருச்சிராப் பள்ளிக்கோட்டையை முற்றுகை செய்து வருவதால், அவ ருடைய தலைநகரான ஆற்காட்டில் போதிய படைப் பலம் இராதென்றும், ஆகையால் ஆங்கிலேயர்கள் ஆற்காட்டைத் தாக்கினால் எளிதில் கைப்பற்றிவிடலாம் என்றும், அவ்வாறு செய்தால் சந்தா சாகிபு திருச்சிராப்பள்ளி முற்றுகையைத் தளரவிட்டுத் தம் படையுடன் ஆற்காட்டை மீட்பதற்காக வரக்கூடுமென்றும், அச்சமயத்தில் திருச்சிராப்பள்ளிக்கு ஓர் ஆங்கிலேயப் படையை அனுப்பி முற்றுகையை விடுவித்து முகம்மது அலியைக் காப்பாற்றிவிடலாமென்றும் ஒரு நல்ல யோசனை கூறினார். சென்னைக் கவர்னர் அவரது யோசனையை மெச்சி, அவரையே ஒரு சிறு படையுடன் ஆற்காட்டைக் கைப் பற்ற அனுப்பினார். அப்படையில் இருநூறு ஆங்கிலேய வீரர் களும், முந்நூறு இந்தியச் சிப்பாய்களுமே இருந்தனர். ஆங்கி லேயச் சேனை வருவதை அறிந்த ஆற்காட்டுச் சைனியம் கோட்டையை விட்டு ஓடிவிட்டது. ஆகையால், கிளைவ் ஆற் காட்டை எளிதில் பிடித்துக்கொண்டார். சந்தா சாகிபு ஆற் காட்டை மீண்டும் கைப்பற்ற வரக்கூடுமென்று எண்ணிக் கிளைவ் கோட்டை மதில்களைச் செப்பனிட்டு, பலப்படுத்திக் கொண்டு, முற்றுகைக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சேகரித்து வைத்துக்கொண்டார்.

அவர் எதிர்பார்த்ததுபோலவே தமது தலை நகரான ஆற் காடு பிடிபட்டதை அறிந்த சந்தாசாகிபு, தமது குமாரர் **ராஜா சாகிபு** தலைமையின்கீழ்ப் பதினாயிரம் போர் வீரர்களடங்கிய ஒரு சேனையை ஆற்காட்டை மீட்பதற்காக அனுப்பினார். அச்சேனை ஐம்பது நாள் ஆற்காட்டை முற்றுகை செய்து பிடிக்க முயன் றது. ஆனால், ராஜாசாகிபின் முயற்சி பலிக்கவில்லை. அச்சமயம் கிளைவுக்கு உதவியாக ஓர் ஆங்கிலேயப் படை வந்து சேர்ந்தது. உடனே கிளைவ் தமது வீரர்களுடன் கோட்டையை விட்டு

வெளியேறி, ராஜா சாகிபின் படையைத் தாக்கவே, அப்படை ஓட்டம் பிடித்தது. கிளைவ் அவரைத் துரத்திச் சென்று, கி. பி. 1751ல் **ஆரணி** என்னுமிடத்தில் தோற்கடித்தார்.

திருச்சிராப்பள்ளி முற்றுகையின் விடுதலை : பிறகு கிளைவ் ஆற்காட்டில் தக்க பாதுகாப்பு வைத்துவிட்டு, சென்னையி லிருந்து வந்த **மேஜர் லாரென்ஸ்** என்பவருடன் சேர்ந்துகொண்டு திருச்சிராப்பள்ளியை நோக்கிச் சென்றார். வழியில் எதிர்ப்பட்ட பிரெஞ்சு சேனையைக் **காவிரிப்பாக்கம்** என்னுமிடத்தில் முறியடித் தார் ; பின்னர்த் திருச்சிராப்பள்ளியை அடைந்து, அங்கு முற்றுகை செய்துகொண்டிருந்த சந்தாசாகிபையும், பிரெஞ்சுக் காரரையும் தோற்கடித்துத் துரத்தினர். சந்தாசாகிபு தப்பி யோடித் தஞ்சாவூர் அரசரிடம் அடைக்கலம் புகுந்தார். ஆனால், அந்த அரசருடைய சேனைத் தலைவரால் அவர் கொல்லப்பட் டார். முகம்மது அலி கர்நாடக நவாபு ஆனர்.

ஆற்காட்டு முற்றுகைக்குப் பின் ஆங்கிலேயரின் பலமும் மதிப்பும் அதிகரித்தன. பிரெஞ்சுக்காரரின் அதிகாரமும் செல் வாக்கும் குறையலாயின. கி. பி. 1754-ஆம் வருஷம் ஐரோப்பா வில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சமாதானம் ஏற் பட்டது. இந்தியாவிலும் போர் நிறுத்தப்பட்டது. சிறிது காலத் திற்குப் பிறகு கிளைவ் இங்கிலாந்திற்குச் சென்றார். அவர் இந்தி யாவில் அடைந்த வெற்றிகளுக்காகப் பல மரியாதைகளைப் பெற்றார்; **'ஆற்காட்டு வீரர்'** என்று பலராலும் போற்றப்பட் டார்.

டியூப்ளேயின் வீழ்ச்சி : இந்தியாவில் ஒரு பெரிய பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டுமென்று டியூப்ளே செய்த முயற்சிகள் வீணாயின. கர்நாடக யுத்தங்களில் அதிக பொருள் செலவானபடியால் பிரெஞ்சு வியாபாரச் சங்கத்தார் அவர்மீது பல குற்றங்களைச் சாட்டி அவரை வேலையினின்றும் நீக்கிவிட்

டார்கள். அவர் மனமுடைந்து, பல துன்பங்களை அனுபவித்து, வறுமையால் உயிர் துறந்தார்.

மூன்றும் கர்நாடக யுத்தம்: ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் செய்துகொண்ட சமாதானம் நெடுநாள் நீடித்திருக்கவில்லை. கி. பி. 1756ல் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் ஒரு யுத்தம் தொடங்கி, ஏழு வருஷ காலம் மும்முரமாய் நடந்தது அதை **ஏழாண்டுப் போர்** என்பர். அதன் தொடர்பாக இந்தியாவிலும் அவர்கள் சண்டை செய்ய ஆரம்பித்தார்கள்.

கி. பி. 1758ல் பிரெஞ்சுத் துரைத்தனத்தார் **கௌண்டு டி லாலி** என்பவரைக் கவர்னராக இந்தியாவுக்கு அனுப்பினர்கள். அவர் ஒரு பெருஞ்சேனையுடன் ஐரோப்பாவினின்றும் வந்தார். அவர் முதலில் **ஸெயின்ட்டேவிட்** கோட்டையைப் பிடித்தார். அதன்பின் அவர் சென்னையை முற்றுகை செய்யப் புறப்பட்டார்; ஹைதராபாதிலிருந்து **புஸ்ஸி**யைத் தமக்கு உதவியாக வரும்படி அழைத்தார். இருவருமாகச் சென்னையை ஆறு மாதம் வரை முற்றுகை செய்தனர். **மேஜர் லாரென்ஸ்** ஸெயின்ட்ஜார்ஜ் கோட்டையை ஆறுமாதகாலம் தைரியமாய்க் காத்துவந்தார். இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்த கிளைவ், அச்சமயம் வங்காளத்திலிருந்தார். புஸ்ஸி ஹைதராபாதை விட்டுக் கர்நாடகத்திற்குச் சென்றதையறிந்து, கிளைவ் வடசர்க்காரைத் தாக்கும்படி **கர்னல் போர்டு** என்பவரின் தலைமையில் ஒரு பெரும்படையை அனுப்பினர். அச்சேனை பிரெஞ்சுக்காரர்களைப் பலவிடங்களில் தோற்கடித்து, வட சர்க்காரைக் கைப்பற்றியது. மசூலிப்பட்டினம் ஆங்கிலேயர் வசமாயிற்று. ஹைதராபாது நிஜாமான **ஸலபத்ஜங்கு** ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, வடசர்க்கார் ஜில்லாக்களை ஆங்கிலேயருக்கே கொடுத்துவிட்டார். அது முதல் **வடசர்க்கார்** ஆங்கிலே

யர்கள் வசத்திலேயே இருந்து வருகிறது. அதுவே சென்னை மாகாணத்திற்கு அடிப்படையாயும் இருந்தது.

அச்சமயத்தில் சென்னையிலிருந்த ஆங்கிலேயருக்கு உதவியாக இங்கிலாந்திலிருந்து **ஸர் அயர்கூட்டு** என்னும் தளகர்த்தர் ஒரு கப்பற்படையுடன் வந்து சேர்ந்தார். பிரெஞ்சுத் தளகர்த்தரான லாலிக்குப்போதுமான கப்பற்படைப்பலம் இல்லை. ஆகையால், அவர் சென்னையை விட்டுத் தம் சேனையுடன் புதுச்சேரிக்கு ஓடவேண்டியதாயிற்று. **ஸர் அயர்கூட்டு** அவரைத்துரத்திச் சென்று, கி. பி. 1760ல் **வந்தவாசி** என்னுமிடத்தில் தோற்கடித்து, புஸ்ஸியையும் சிறைபிடித்தார். லாலி தப்பியோடிப் புதுச்சேரியை அடைந்தார். கூட்டு, புதுச்சேரியையும் தாக்கி, அதைப் பிடித்து, அங்கிருந்த கோட்டையை இடித்துத் தரை மட்டமாக்கினர். லாலி கைது செய்யப்பட்டு, இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.

கி. பி. 1763ல் ஐரோப்பாவில் **பாரிஸ்** நகரில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி இந்தியாவிலும் சண்டை நிறுத்தப்பட்டது. புதுச்சேரி, சந்திரநாகூர், காரைக்கால் என்னும் இடங்கள் பிரெஞ்சுக்காரருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன. அவை இப்பொழுதும் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமாய் இருந்து வருகின்றன. மூன்றும் கர்நாடக யுத்தத்தின் முடிவில் பிரெஞ்சுக்காரருடைய அதிகாரமும் செல்வாக்கும் அழிந்து போயின; ஆங்கிலேயரின் பெருமையும் அதிகாரமும் அதிகரித்தன.

பிரெஞ்சுக்காரர் தோல்வியடையக் காரணங்கள்: கர்நாடகப் போர்களின் ஆரம்பத்தில் பிரெஞ்சுக்காரர் சிறிது ஜயமடைந்தபோதிலும் கடைசியில் ஆங்கிலேயரே வெற்றியடைந்தனர். இராபர்ட்டுக்கிளைவ், ஸர் அயர்கூட்டு, மேஜர் லாரென்ஸ் போன்ற திறமையுள்ள தளகர்த்தர்கள் பிரெஞ்சுக்காரரிடம் இல்லை. ஆங்கிலேயரிடம்பலமான கப்பற்படை இருந்தது. அவர்

கள் கப்பற்சண்டையில் தேர்ந்தவர்கள். பிரெஞ்சுக்காரரிடம் சரியான கப்பற்படை இல்லை. ஸெயின்ட் டேவிட் கோட்டை, சென்னைப் பட்டினம், புதுச்சேரி ஆகிய இடங்களில் நடந்த சண்டைகளில் தரைப் படையைவிடக் கப்பற்படையே முதன்மை பெற்றிருந்தது. டியூப்ளே புதுச்சேரிக் கவர்னராய் வந்ததிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் வியாபாரத்தைக் கவனியாமல், சண்டையிடுவதிலேயே காலத்தைக் கழித்ததால், அவர்களுக்குப் பணமுடை ஏற்பட்டது. பிரான்ஸ் அடிக்கடி ஐரோப்பியப் போர்களில் ஈடுபட்டிருந்ததால் இந்தியாவில் நடந்த சண்டைகளுக்கு அதிக உதவி புரிய முடியவில்லை. மேலும், பிரெஞ்சு நாட்டினர் இந்தியாவிலிருந்த தங்கள் கம்பெனி அதிகாரிகளுக்குப் போதுமான ஆதரவு அளிக்கவில்லை. ஆகவே, பிரெஞ்சுக்காரர் கர்நாடக யுத்தங்களில் வெற்றி பெற முடியவில்லை. இந்தியாவில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்று செய்த முயற்சி வீணாயிற்று.

கேள்விகள் :

1. டியூப்ளேயின் நோக்கம் யாது ?
2. ஸாந்தோம் சண்டை எவ்வாறு இந்திய சரித்திரத்தில் முக்கியமானது ?
3. இரண்டாம் கர்நாடக யுத்தத்தின் காரணங்கள் எவை ?
4. இராபர்ட்டுக் கிளைவின் இளமைப் பருவத்தைப் பற்றிச் சுருக்கி எழுது.
5. கிளைவுக்கு 'ஆற்காட்டு வீரர்' என்று பெயர் வரக் காரணம் என்ன ?
6. திருச்சிராப்பள்ளியை யார் எதற்காக முற்றுகை செய்தார்? அது எவ்வாறு விடுவிக்கப்பட்டது ?
7. பிரெஞ்சுக்காரருக்கு வட சர்க்கார் ஜில்லாக்கள் எவ்வாறு கிடைத்தன ? அவை எப்பொழுது ஆங்கிலேயர் வசமாயின ?
8. மூன்றும் கர்நாடக யுத்தத்தில் ஆங்கிலேயர் அடைந்த வெற்றிகள் யாவை ?
9. கர்நாடக யுத்தங்களில் பிரெஞ்சுக்காரர் தோல்வியடையக் காரணங்கள் எவை ?

23. வங்காளத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கம்

மொகலாய ராஜ்யம் க்ஷீணமடைந்த சமயத்தில் **அலிவர்டிகான்** என்னும் இராணுவ வீரர், வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா என்னும் நாடுகளை ஒன்றுசேர்த்து, ஒரு ராஜ்யமாக்கி, அதற்கு **மூர்ஷிதாபாது** என்னும் பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு திறமையுடன் அரசாட்சி செய்து வந்தார். அவர் காலத்தில் ஆங்கிலேயர் எவ்விதக் கஷ்டமுமின்றி வங்காளத்தில் வியாபாரம் செய்து வந்தனர். அவர் கி. பி. 1756ல் இறந்து போகவே, அவருடைய பேரரான **ஸிராஜ் உத்தௌலா** என்பவர் நவாபு ஆனார். அவர் ஆங்கிலேயர்மீது வெறுப்புற்று, அவர்களை வங்காளத்திலிருந்து துரத்திவிட வேண்டுமென்று எண்ணினார்.

கி. பி. 1756ல் ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் தொடங்கிற்று. சந்திரநாகூரிலிருந்த பிரெஞ்சுக்காரர்கள் கல்கத்தாவிலிருந்த **வில்லியம் கோட்டை**யைத் தாக்கக்கூடுமென்று பயந்து, ஆங்கிலேயர்கள் முன்னெச்சரிக்கையாக அக்கோட்டைச் சுவர்களைப் பழுது பார்த்து, பலப்படுத்திக்கொண்டார்கள். கோட்டையைப் பழுது பார்க்கக் கூடாதென்றும், புதிய மதில்களையெல்லாம் இடித்துவிட வேண்டுமென்றும் ஸிராஜ் உத்தௌலா உத்தரவிட்டார். ஆங்கிலேயர் அக்கட்டளையைப் பொருட்படுத்தவில்லை. மேலும், நவாபின் கோபத்திற்குப் பயந்து **கிருஷ்ணதாஸ்** என்ற ஒரு பணக்கார வியாபாரி ஆங்கிலேயரின் பாதுகாப்பிலிருந்தார். நவாபு அவரைத் தம்மிடம் ஒப்புவிக்கும்படி ஆங்கிலேயரைக் கேட்டார். அதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. இதனால் நவாபு கோபங்கொண்டு ஒரு பெருஞ் சேனையுடன் சென்று **காஸிம் பஜாரி**லுள்ள ஆங்கிலேயரின் பண்டக சாலையைக் கைப்பற்றிக்கொண்டு, வில்லியம் கோட்டையைத் திடீரெனத் தாக்கினார். ஆங்கிலேயர்களிடம் நவாபுடன் சண்டை செய்வதற்குப் போதுமான படையில்லை. ஆகையால்

டிரேக்கு என்னும் வங்காளக் கவர்னரும், மற்றும் பல ஆங்கிலேயரும் தங்கள் மனைவி மக்களுடன் படகுகளிலேறி, தப்பியோடினர். கோட்டை எளிதில் பிடிக்கப்பட்டு, அதிலிருந்த ஆங்கிலேயர் சிறை செய்யப்பட்டனர்:

நவாபு கல்கத்தாவைப் பிடித்துக்கொண்ட செய்தி சென்னைக்கு எட்டியதும் இராபர்ட்டுக்கிளைவ் ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு கிழக்குக் கடற்கரையோரமாகக் கல்கத்தாவுக்குச் சென்றார். **வாட்ஸன்** என்னும் கப்பற்படைத் தலைவர் கடல் மார்க்கமாய் ஒரு கப்பற்படையுடன் கிளைவுக்கு உதவியாகச் சென்றார். இவர்கள் வங்காளத்தை அடைந்து, கல்கத்தாவை எளிதில் பிடித்துக்கொண்டு, ஹூக்ளிப் பட்டினத்தைச் சூறையாடினார்கள். நவாபு ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டார். ஆங்கிலேயர் முன் போலவே, வங்காளத்தில் வரியின்றி வியாபாரம் செய்து வரலாமென்று உத்தரவு கொடுத்தார்.

நவாபு சமாதானம் செய்துகொண்ட போதிலும், கிளைவ் அவர்மீது நம்பிக்கை கொள்ளவில்லை. அவர் பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து உதவி பெறலாம் என்று சந்தேகித்தார். ஆகையால், கிளைவ் பிரெஞ்சுக்காரர்களை வங்காளத்திலிருந்து துரத்திவிடும்படி நவாபைக் கேட்டார். நவாபு அதற்குச் சம்மதிக்கவில்லை. இச்சமயத்தில் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை ஆரம்பமாயிற்று. கிளைவ் வங்காளத்தில் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான சந்திரநாகூரைத் தாக்கிக் கைப்பற்றினார். அதனால், சிராஜ் உத் தௌலா ஆங்கிலேயரின்மீது கோபங்கொண்டார். அதனால், மறுபடியும் போர் மூண்டது.

மீர்ஜாபரின் சூழ்ச்சி: சிராஜ் உத் தௌலாவின் சேனைத் தலைவரான **மீர்ஜாபர்,** தாம் நவாபாக வேண்டுமென்று சதியாலோசனை செய்தார். அதையறிந்த கிளைவ் மீர்ஜாபருடன் ஓர்

இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி சிராஜ் உத்தௌலாவைத் தோற்கடிக்க மீர்ஜாபர் உதவி செய்யவேண்டுமென்றும், ஆங்கிலேயர் மீர்ஜாபரை வங்காள நவாபாக்க வேண்டுமென்றும், மீர்ஜாபர் கப்பெனியாருக்கும் கிளைவுக்கும் ஒரு பெருந்தொகையையும் ஆங்கிலேயருக்கு அனேக வியாபார உரிமைகளையும் கொடுக்க வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. இந்தத் துரோகமான ஏற்பாட்டை **அமீர்சந்து** என்னும் வியாபாரிசெய்துவைத்தான். அதற்கு வெகுமதியாக அவனுக்கு 30 லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகக் கிளைவ் ஒரு பொய்ப் பத்திரம் எழுதி அதில் கையொப்பிட்டுக் கொடுத்தார். வாட்ஸன் அதில் கையெழுத்துச் செய்ய மறுக்கவே, கிளைவ் தாமே அவருடைய கையெழுத்தையும் போட்டுக் கொடுத்தார். பின்னர் அமீர்சந்துக்குயாதொரு தொகையும் கொடுக்கப்படவில்லை.

பிளாஸிச் சண்டை: மீர்ஜாபருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி கிளைவ் ஒரு சேனையுடன் நவாபின் தலைநகராகிய **மூர்ஷிதாபாதை** நோக்கிச் சென்ருர். அதையறிந்த சிராஜ்-உத்தௌலா ஒரு பெருஞ்சேனையுடன் பிளாஸி என்னும் இடத்தில் ஆங்கிலேயரை எதிர்த்தார். அவருக்கு உதவியாக ஒரு பிரெஞ்சு சேனையும் வந்திருந்தது. இரு திறத்தாருக்கும் கி. பி. 1757ல் ஒரு பெரிய சண்டைநடந்தது. நவாபு முற்றிலும் தோற்கடிக்கப்பட்டு ஓட்டமெடுத்தார். வழியில் மீர்ஜாபரின் மைந்தர் அவரைக் கொன்றுவிட்டார். சண்டை முடியும் வரையில் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த மீர்ஜாபர், நவாபு ஓடிவிட்டதையறிந்து, கிளைவினிடம் வந்து சேர்ந்துகொண்டார்.

கிளைவ் மூர்ஷிதாபாதுக்குச், சென்று மீர்ஜாபரை நவாபாக்கினர். மீர்ஜாபர் கிளைவுக்கும் கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்கும் ஏராளமான வெகுமதிகளைக் கொடுத்தார். கல்கத்தாவைச் சுற்றியுள்ள **இருபத்துநான்கு பர்கானங்கள்** என்னும் பிரதேசத்தையும் கம்பெனியாருக்கு இனமாகக் கொடுத்தார்.

சிறிது காலத்திற்குப் பிறகு அந்த இடங்களுக்காகக் கம்பெனியார் தமக்குச் செலுத்த வேண்டிய வரியைக் கிளைவுக்குச் சொந்தமாகக் கொடுத்துவிடும்படி உத்தரவு செய்தார். ஆகையால், அந்தப் பிரதேசத்திற்குக் **கிளைவின் ஜாகீர்** எனப் பெயர் வந்தது. கிளைவ் தமது ஆயுள் பரியந்தம் அதை அனுபவித்து வந்தார். கி. பி. 1758ல் கிளைவ் வங்காளக் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

வங்காளத்தில் கம்பெனியாரின் செல்வாக்கு: இவ்வாறு பிளாஸி யுத்தத்தின் பயனாக வங்காளத்திலும் ஆங்கிலேயரின் ஆதிக்கம் ஏற்பட்டது. 24 பர்காணங்களே ஆங்கிலேயருக்கு வங்காளத்தில் முதன்முதலாகக் கிடைத்த பிரதேசமாகும். அதுவே வங்காள மாகாணத்திற்கு ஆரம்பமாயும், ஆங்கிலேயருக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட சாம்ராஜ்யத்திற்கு அடிப்படையாயும் இருந்தது. ஆங்கிலேயர்களுக்கு முதன்முதல் வங்காளத்தில் நிலம் கிடைத்தது பெரிய அதிர்ஷ்டமேயாகும். கங்கை நதியும் அதன் உபநதிகளும் பாய்வதால், வங்காளம் நீர்வளமும் நிலவளமும் பொருந்தியது. அது நல்ல விளைச்சலும் ஜனநெருக்கமுமுள்ள பிரதேசம். அங்குள்ள நதிகளும் கால்வாய்களும் கப்பல் படகு போக்கு வரவுக்கு இலாயக்கானவை. கப்பல் ஓட்டுவதில் தேர்ந்தவர்களான ஆங்கிலேயர்கள் கடல் மார்க்கமாய் வந்து முதலில் கடற்கரையோரங்களிலிருந்த பட்டினங்களில் தங்கிப் பின்னர்க் கொஞ்சம் கொஞ்சமாக உள்நாட்டில் பரவுவதற்கு அநுகூலமாயிருந்தது. வங்காளத்தின் சீதோஷ்ண நிலைமை மிகவும் மெல்லியதான நூல் நூற்றுத் துணி நெய்வதற்கு ஏற்றது. ஆகையால், அக்காலத்தில் '**டாக்கா மஸ்லின்**' போன்ற மெல்லிய அடைகளின் நெசவுக்கு வங்காளம் பேர் போனது. ஆகையால், ஆங்கிலேயர்கள் துணி வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். எனவே, வங்காளத்திலிருந்து ஆங்கிலேயருக்கு ஏராளமான லாபம் கிடைத்தது.

கேள்விகள் :

1. ஸிராஜ் உத்தௌலாவுக்கும் ஆங்கிலேயருக்கும் சண்டை ஏற்படக் காரணங்கள் எவை ?
2. மீர்ஜாபர் செய்த சூழ்ச்சி யாது ?
3. பிளாஸிச் சண்டை யார் யாருக்கு எப்பொழுது நடந்தது ? அதன் பயன்கள் யாவை ?
4. வங்காளத்தில் நாடு கிடைத்தது ஆங்கிலேயருக்குப் பெரிய அதிர்ஷடமாகும். ஏன் ?

24. வங்காளத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கமும் இரட்டை ஆட்சியும்

மீர்ஜாபரின் ஆட்சி : மீர்ஜாபருக்கு நாட்டையாளும் திறமை சிறிதேனும் இல்லை. அவர் ஆங்கிலேயரின் உதவியை நாடியே காலங்கழிக்க வேண்டியதாயிற்று. அப்படி உதவி கோரிய பொழுதெல்லாம் கிளைவுக்கும் மற்றும் கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்கும் ஏராளமான பொருளை வழங்கவேண்டியிருந்தது. இவ்விதமாக ஆங்கிலேயருக்குக் கொடுத்த வெகுமதிகளாலும், மற்றைய வீண் ஆடம்பரச் செலவுகளாலும், மீர்ஜாபருக்குப் பணக் கஷ்டம் ஏற்பட்டது. அதனுல், அவர் குடிகளுக்குக் கடுமையாக வரி விதிக்கவும், வியாபாரிகளைத் துன்புறுத்தவும் ஆரம்பித்தார். ஆகையால், நாட்டில் கலகங்கள் ஏற்பட்டன. ஆங்கிலேயரின் உதவியைக் கொண்டு அவைகளை அடக்க வேண்டியிருந்தது.

ஆங்கிலேயர் மீர்ஜாபரை வங்காள நவாபாக நியமித்த பொழுது டில்லியிலிருந்த மொகலாயச் சக்கரவர்த்தியிடம் உத்தரவு பெறவில்லை. மேலும், மீர்ஜாபர் பழைய நவாபுகளைப் போல டில்லிச்சக்கரவர்த்திக்குக் கப்பங் கட்டவில்லை. அதனுல், கோபங்கொண்ட சக்கரவர்த்தி தமது குமாரர் வசம் ஒரு சைனி

யத்தை அனுப்பினர். அவர் அயோத்தி நவாபான **ஷூஜா-உத்-தௌலா** என்பவரைத் துணை சேர்த்துக்கொண்டு கி.பி. 1758ல் வங்காளத்தின்மீது படையெடுத்து வந்தார். மீர்ஜாபர் பயந்து ஆங்கிலேயரின் உதவியை நாடினர். கிளைவ் ஓர் ஆங்கிலேயச் சேனையை அனுப்பி அவ்விருவரையும் தோற்கடித்தார். மீர் ஜாபரின் உதவிக்காக அனுப்பப்பட்ட ஆங்கிலேயச் சேனையின் செலவுக்கு அவரால் பணம் கொடுக்க முடியவில்லை. அதனால், அவருக்கும் ஆங்கிலேயருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. மீர்ஜாபர் வங்காளத்தில் **சிஞ்சூரா** என்னுமிடத்திலிருந்த டச்சுக்காரர்களுடன் இரகசியமாக ஒப்பந்தம் செய்துகொண்டு ஆங்கிலேயரை வங்காளத்திலிருந்து துரத்தி விட முயன்றார். ஆங்கிலேயரிடம் பொறாமை கொண்டிருந்த டச்சுக்காரர்கள் அதற்கிணங்கி, ஜாவாவிலிருந்து ஒரு கப்பற் படையை வரவழைத்தார்கள். அதையறிந்த கிளைவ் அப்படை வருமுன்னரே, **கர்னல் போர்டு** என்பவர் வசம் ஒரு சேனையை அனுப்பினர். போர்டு டச்சுக்காரர்களைத் தோற்கடித்துச் சிஞ்சூராவைப் பிடித்துக்கொண்டார். டச்சுக்காரர்கள் இனிச் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிடுவதில்லையென்று ஒப்புக்கொண்டு, ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டார்கள். சிஞ்சூரா அவர்களுக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டது. மீர்ஜாபர் கிளைவிடம் மன்னிப்புக் கோரினர். கிளைவ் மீர்ஜாபரை மன்னித்தார். கி. பி. 1760ல் கிளைவ் தேக அசௌக்கியம் காரணமாக இரண்டாவது முறை இங்கிலாந்திற்குச் சென்றார்.

மீர்காஸிம்: கிளைவ் இந்தியாவை விட்டுச் சென்ற சில மாதங்களுக்குள் மொகலாய சக்கரவர்த்தியாரான இரண்டாம் ஷா ஆலமும் அயோத்தி நவாபும் மறுபடியும் வங்காளத்தின் மீது படையெடுத்து வந்தார்கள். ஆங்கிலேயர்மீது வெறுப்புற்றிருந்த மீர்ஜாபர், மொகலாய மன்னருடன் சமாதானம்

செய்துவிட எண்ணினர். ஆங்கிலேயர் அவரை அவ்விதம் செய்யவிடாமல் **காப்டன் நாக்ஸ்** என்பவர் வசம் ஒரு படையை அனுப்பினர்கள். அப்படை எதிரிகளைப் பாட்னுவில் சந்தித்துத் தோற்கடித்தது. பின்னர் ஆங்கிலேயர்கள் மீர்ஜாபரின் மருமகனுரான **மீர்காஸிமு**டன் ஓர் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு, அவரை நவாபாக நியமித்தார்கள். ஆங்கிலேயர் தம்மை நவாபாகச் செய்ததற்காக மீர்காஸிம் வருஷத்தில் ஐம்பது லக்ஷம் ரூபாய் வரும்படி கிடைக்கக்கூடிய **சிட்டகாங்கு, பர்துவான், மிட்னுபூர்** என்னும் மூன்று ஜில்லாக்களை ஆங்கிலேயருக்கு வெகுமதியாகக் கொடுத்தார்.

மீர்காஸிம் தைரியமும் திறமையும் வாய்ந்தவர். அவர் தம்முடைய காரியங்களைத் தாமே கவனித்துச் செவ்வையாய் ஆட்சி புரியலானர். அவர் செலவுகளைக் குறைத்து வருமானத்தை அதிகப்படுத்தினர். அவர் மீர்ஜாபர் காலத்தில் ஏற்பட்ட கடன்களையெல்லாம் தீர்த்துவிட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்க்கலானர். அவர் தமக்கும் ஆங்கிலேயருக்கும் விரோதம் ஏற்படா வண்ணம் எவ்வளவோ ஜாக்கிரதையாக நடந்துகொண்டபோதிலும் சிறிது காலத்திற்குள் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது.

மீர்காஸிமுடன் சண்டைக்குக் காரணங்கள்: மீர்ஜாபர் காலத்தில் நடந்து வந்ததுபோலக் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் மீர்காஸிமிடம் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்தார்கள். அதனுல் மீர்காஸிம் ஆங்கிலேயரிடம் வெறுப்படைந்தார். ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியார் மொகலாய மன்னரின் அனுமதி பெற்று ஏற்றுமதிவரி, இறக்குமதிவரி, சுங்கவரி முதலியவரிகள்செலுத்தாமல் வியாபாரம் செய்து வந்தார்கள். மீர்ஜாபர் காலத்தில் கம்பெனியேயன்றி, கம்பெனி உத்தியோகஸ்தர்களும் தங்கள் சொந்தச் சரக்குகளை வரியில்லாமல் வியாபாரம் செய்யலானர்கள். எனவே, அந்நிய தேச வியாபாரிகள்

வரி செலுத்தாமல் வியாபாரம் செய்யும்போது சுதேச வியாபாரிகள் மட்டும் கடுமையான வரி செலுத்தி வந்ததனால் இந்தியரின் வியாபாரம் க்ஷீணிக்கலாயிற்று. மேலும், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் சுதேச வர்த்தகர்களிடமிருந்து லஞ்சம் வாங்கிக்கொண்டு, ஆங்கிலேயக் கொடியை அவர்களுக்குக் கொடுத்து நவாபுக்கு வரி செலுத்தாமல் வர்த்தகம் செய்வதற்கு உதவி செய்தார்கள். அதனால் நவாபின் வருமானம் குறைந்தது. இந்நிலைமையைச் சீர்திருத்த எண்ணி மீர்காஸிம் கம்பெனியார் மாத்திரந்தான் வரி செலுத்தாமல் வியாபாரம் செய்யலாம் என்றும், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் செய்யும் சொந்த வியாபாரத்திற்கு வரி செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டார். ஆனால், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் நவாபின் உத்தரவை மீறி முன்போலவே வரி செலுத்தாமல் வியாபாரம் செய்து வரலானார்கள். ஆகவே, மீர்காஸிம் தம் ராஜ்யத்தில் எவரும் வரி செலுத்தாமலே வியாபாரம் செய்யலாம் என்று உத்தரவிட்டார். அதனால், ஆங்கிலேய வியாபாரிகளில் சிலருக்குக் கிடைத்து வந்த லஞ்ச வரும்படி போய்விட்டது. ஆகையால் ஆங்கிலேயருக்கு மீர்காஸிமிடம் கோபம் ஏற்பட்டது. நாளடைவில் இருதிறத்தாரும் சண்டைக்குத் தயாரானார்கள்.

மீர்காஸிமுக்கும் ஆங்கிலேயருக்கும் சண்டை: மீர்காஸிம் ஆங்கிலேயருடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருக்காமல் தமது அதிகாரத்தை நிலைநாட்ட முயற்சிசெய்தார். அதன்பொருட்டு அவர் தமது தலைநகரை மூர்ஷிதாபாதிலிருந்து கல்கத்தாவுக்கு முந்நூறு மைல் வடக்கேயுள்ள, **மாங்கீர்** என்னும் பட்டினத்திற்கு மாற்றிக்கொண்டார். மேலும், மீர்காஸிம் டில்லிச்சக்கரவர்த்தியான ஷாஆலம், அயோத்தி நவாபான ஷூஜா-உத்-தௌலா என்பவர்களுடன் நட்புக்கொண்டார். மீர்காஸிமிடம் கோபங்கொண்ட ஆங்கிலேயர்கள் மீர்ஜாபாரை மறுபடியும் நவாபு ஆக்கினார்கள். மீர்காஸிம் ஆங்கிலேயர்களை இந்தியாவி

லிருந்து துரத்திவிடும்பொருட்டு டில்லிச் சக்கரவர்த்தியையும் அயோத்தி நவாபையும் தமக்கு உதவி செய்யும்படி அழைத்தார். அதையறிந்த ஆங்கிலேயர் **பாட்னு**வைக் கைப்பற்றிக் கொண்டார்கள். நவாபு தமது சேனையை அனுப்பிப் பாட்னுவைத் திரும்பப் பிடித்துக்கொண்டார். அங்கிருந்த சுமார் இரு நூறு ஆங்கிலேயர் சிறை செய்யப்பட்டனர். பின்னர்க் கல்கத்தாவிலிருந்து ஓர் ஆங்கிலேயச் சேனை **மேஜர் ஆடம்ஸ்** என்பவரின் தலைமையின்கீழ் அனுப்பப்பட்டது. அச்சேனை **மூர்ஷிதாபாதை**க் கைப்பற்றிக்கொண்டு மீர்காஸிமின் சைனியத்தைக் **கெரியா, உதுவனல்லா** என்னுமிடங்களில் தோற்கடித்தது. மீர்காஸிம் பாட்னுவுக்கு ஓடிவிட்டார். மேஜர் ஆடம்ஸ் மாங்கீரை நோக்கிச்சென்றார். ஆங்கிலேயர் மாங்கீரைத்தாக்கினால் மீர்காஸிம் தம்மிடமிருக்கும் ஆங்கிலேயக் கைதிகளையெல்லாம் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினர். அதை லக்ஷியம் செய்யாமல் ஆடம்ஸ் மாங்கீரைக் கைப்பற்றவே, மீர்காஸிம் மிகுந்த கோபங்கொண்டு தம் வசமிருந்த ஆங்கிலேயக் கைதிகளையெல்லாம் கொன்றுவிட்டார். பிறகு ஆங்கிலேயச் சேனை பாட்னுவை நோக்கிச் சென்று அதைப் பிடித்துக்கொள்ளவே, மீர்காஸிம் அயோத்திக்கு ஓடிப்போய்விட்டார்.

கி. பி. 1764ல் மீர்காஸிம் அயோத்தி நவாபையும், ஷா ஆலம் சக்கரவர்த்தியையும் சேர்த்துக்கொண்டு ஒரு பெரும் படையுடன் பாட்னுவை நோக்கிவந்தார். **ஸர் ஹெக்டர், மன்ரோ** என்னும் ஆங்கில தளகர்த்தர்கள் அம்மூவரையும் **பக்ஸார்** என்னுமிடத்தில் சந்தித்துத் தோற்கடித்தனர். மீர்காஸிம் போர்க்களத்திலிருந்து போன இடந்தெரியாமல் ஓடிப்போய்விட்டார். அயோத்தி நவாபும், மொகலாய சக்கரவர்த்தியும் ஆங்கிலேயரிடம் சரண்புகுந்தனர். பக்ஸார்ச்சண்டை பிளாஸிச்சண்டைக்கு அடுத்தபடியாக முக்கியமானது. இந்தச் சண்டையினால் மொகலாயர்களின் அதிகாரம் அடியோடு சிதைவுற்றது. கல்கத்தா

முதல் டில்லி வரையுள்ள பிரதேசம் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டது. பீஹார் மாகாணம் முழுவதும் ஆங்கிலேயரின் கைவசம் வந்தது. இவ்வாறு பக்ஸார் வெற்றி வட இந்தியாவில் ஆங்கிலேயருடைய அதிகாரம் வளருவதற்கு முக்கிய காரணமாய் இருந்தது.

அலஹாபாது உடன்படிக்கை (கி. பி. 1765): பக்ஸார்ச் சண்டை முடிவடைந்த சமயத்தில் கிளைவ் கம்பெனி அதிகாரிகளால் இரண்டாம்முறை வங்காளக்கவர்னராகவும், சேனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டு, இந்தியாவுக்கு வந்தார். அவர் அலஹாபாது என்னுமிடத்தில் ஷா ஆலத்துடனும், ஷுஜா-உத்-தௌலாவுடனும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி அயோத்தி நவாபு ஆங்கிலேயருக்குப் போரில் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடாக ஐம்பது லக்ஷம் ரூபாய் கொடுத்தார். அயோத்தி ராஜ்யம் நவாபுக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டது. யமுனைக்கும் கங்கைக்கும் மத்தியிலுள்ள அலஹாபாது, கோரா என்னும் ஜில்லாக்கள், அயோத்தி ராஜ்யத்தினின்று பிரிக்கப்பட்டு மொகலாயச் சக்கரவர்த்திக்குக் கொடுக்கப்பட்டன. ஷா ஆலம் ஆங்கிலேயக் கம்பெனியாருக்கு வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா என்னும் மாகாணங்களில் வரி வசூல் செய்யும் உரிமையை அளித்தார். அதற்காக ஷாஆலத்திற்கு ஆங்கிலேயர் வருஷந்தோறும் இருபத்தாறு லக்ஷம் ரூபாய் கொடுத்து வர வேண்டுமென்று ஏற்பாடாயிற்று. அலஹாபாது உடன்படிக்கை இந்திய சரித்திரத்தில் மிகவும் முக்கியமானது. ஏனெனில், அதன் பயனாக மொகலாயச்சக்கரவர்த்தி ஆங்கிலேயருக்கு அடங்கி, அவர்களிடமிருந்து உபகாரச்சம்பளம் பெற்றுக் காலங்கழிக்கலானார். ஆங்கிலேயக் கம்பெனியார் வங்காளத்தில் **திவானி உரிமை** பெற்று நவாபுடன் கூட ஆட்சி செலுத்தலானார்கள்.

வங்காளத்தில் இரட்டை ஆட்சி: கி. பி. 1765ல் மீர்ஜாபர் இறக்கவே, அவருடைய குமாரர் **நாஜிம்-உத்-தௌலா** வங்காள நவாபு ஆக்கப்பட்டார். அவர் பெயருக்கு மட்டிலேதான் நவாபாய் இருந்தார். கிளைவ் அவருடன் ஓர் ஏற்பாடு செய்து கொண்டார். அதன்படி நியாய விசாரணை செய்வதும் உள்நாட்டில் அமைதியைப் பாதுகாப்பதும் நவாபைச் சேர்ந்த கடமைகளாயின. வரி வசூலிப்பதும், சேனைகளை வைத்து நாட்டைப் பாதுகாப்பதும் கம்பெனியாரின் பொறுப்பில் விடப்பட்டன. இவ்விதமாக நாட்டின் துரைத்தனம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நவாபாலும் கம்பெனியாராலும் நடத்தப்பட்டு வந்தது. இவ்விதமான இருதலைப்பட்ட துரைத்தன அமைப்புக்கு **இரட்டை ஆட்சி** என்பது பெயர்.

இரட்டை ஆட்சியின் கெடுதல்கள்: கிளைவ் ஏற்படுத்திய இரட்டை ஆட்சியால் பல கெடுதல்கள் சம்பவித்தன. வரி வசூல் செய்யும் உரிமையை ஆங்கிலேயருக்கு விடுமுன் நவாபு தாமே வரி வசூல் செய்து வந்தார். புதிய ஏற்பாட்டின்படி கிளைவ் வரி வசூலுக்காக இரண்டு உதவி நவாபுகளையும், அவர்களுக்கு உதவியாகத் **திவான்கள்** என்ற இந்திய உத்தியோகஸ்தர்களையும் நியமித்தார். இதற்கு முன் ஜமீந்தார்கள் குடிகளிடமிருந்து வரி வசூல் செய்து அதில் ஒரு பாகத்தைத் தாங்கள் வைத்துக்கொண்டு மீதிப் பணத்தை நவாபுக்கு ஒழுங்காகச் செலுத்தி வந்தார்கள். மேலும், அவர்கள் தங்களுடைய குடிகளின் இலாப நஷ்டங்களில் ஈடுபட்டு, அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து வந்தார்கள். புதிய முறை ஏற்பட்ட பின்னர் கம்பெனியார் வரி வசூலை வருஷாவருஷம் ஏலத்தில் விட்டு அதிகமான தொகைக்கு ஏலம் எடுப்பவர்களிடம் வரி வசூல் செய்யும் அதிகாரத்தை விட்டுவிட்டார்கள். ஒரு வருஷம் வரி வசூலை ஏலமெடுத்தவருக்கு மறு வருஷமும் அவ்வுரிமை கிடைக்குமென்ற நிச்சயமில்லாதபடியால் ஏலமெடுத்

தவர்கள் கொஞ்சமும் இரக்கமின்றிக் குடிகளைத் துன்புறுத்தித் தாங்கள் கம்பெனியாருக்குச் செலுத்த வேண்டிய வரியில் பதின்மடங்கு அதிகமான வரியை ஜனங்களிடமிருந்து வசூலித்தார்கள். மேலும், வரி வசூல் செய்து வந்த அதிகாரிகள் கம்பெனியாருக்குச் சேரவேண்டிய பணத்தை ஒழுங்காகச் செலுத்தாமல், பெரும்பாகத்தைத் தாங்களே வைத்துக்கொண்டார்கள். அதனால் கம்பெனியார் செலவுக்குப் போதுமான பணமில்லாமல் கஷ்டப்பட நேர்ந்தது. இரட்டையாட்சியில் நியாய விசாரணைக்கென்று **நாஜிம்கள்** என்ற உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் ஆட்சியில் கிராமப் பஞ்சாயத்துச் சபைகள் அழிந்துபோகவே நியாய விசாரணை சரியாக நடக்காமல் குற்றங்கள் அதிகரித்தன. மேலும், நாட்டில் ஏற்படும் குழப்பங்களை அடக்குவதற்கு நவாபு ஆங்கிலேயரின் உதவியையே நாடவேண்டியிருந்தது. வங்காளத்தில் இவ்விதமான இரட்டை ஆட்சி ஏழு வருஷகாலம் நடந்து வந்தது. பின் அது கைவிடப்பட்டது.

கிளைவின் இதர சீர்திருத்தங்கள் : கிளைவ் துரைத்தனத்திலும் இராணுவத்திலும் சில சீர்திருத்தங்கள் செய்தார். கம்பெனி உத்தியோகஸ்தர்கள் சொந்தமாக வியாபாரம் செய்யக்கூடாது என்றும், லஞ்சம், வெகுமதி முதலியன வாங்கக்கூடாது என்றும் திட்டம் செய்தார். அதற்கு ஈடாக அவர்களுடைய சம்பளங்களை உயர்த்தினார். போரில் இறந்த வீரர்களின் குடும்ப சம்ரக்ஷணைக்காக இராணுவச் சகாய நிதி ஏற்படுத்தினார். போர் வீரர்கள் பெற்று வந்த இரட்டைப் படியை நிறுத்தி இராணுவச் செலவைக் குறைத்தார். அப்பொழுது போர் வீரர்கள் கலகஞ் செய்தார்கள். கிளைவ் அக்கலகத்தை எளிதில் அடக்கினார்.

கிளைவின் மரணம் : கிளைவ் கி. பி. 1767ல் தேக அசௌக்கியத்தினால் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். அங்கே

அவருடைய விரோதிகள் அவர்மீது பல குற்றங்கள் சாட்டி அவரை விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள். கடைசியில் பார்லிமெண்டு சபையார் அவர்மீது குற்றமில்லையென்று தீர் மானித்து அவரைக் கௌரவப்படுத்தினார்கள். ஆயினும், அவர் மனம் நொந்து தற்கொலை புரிந்துகொண்டு இறந்தார்.

கேள்விகள் :

1. மீர்காஸிம் ஆங்கிலேயருக்குக் கொடுத்த ஜில்லாக்கள் எவை ?
2. மீர்காஸிமுக்கும் ஆங்கிலேயருக்கும் சண்டை ஏற்படக் காரணங்கள் யாவை ?
3. பக்ஸார்ச் சண்டை யார் யாருக்கு எந்த வருஷம் நடந்தது ? அதன் முக்கியம் என்ன ?
4. அலஹபாது உடன்படிக்கையின் நிபந்தனைகள் யாவை ?
5. 'இரட்டை ஆட்சி' என்பது என்ன ? அதனால் ஏற்பட்ட கெடுதல்கள் யாவை ?
6. கிளைவ் செய்த சீர்திருத்தங்கள் யாவை ?

25. வாரன் ஹேஸ்டிங்ஸ்

(கி. பி. 1772-85)

வாரன் ஹேஸ்டிங்ஸ், கிளைவைப் போலவே தமது பதினெட்டாம் வயதில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியில் ஒரு குமாஸ்தாவாக வேலையில் அமர்ந்து கி. பி. 1772ல் இந்தியாவுக்கு வந்தார். அவர் தம் திறமையினாலும், புத்திசாலித்தனத்தாலும் உயர்ந்த பதவிகளை அடைந்தார். கி. பி. 1772ல் அவர் வங்காளக் கவர்னர் ஆனார்.

வங்காளத்தின் நிலைமை : கிளைவ் சென்றபின் அவர் ஏற்படுத்தின இரட்டை ஆட்சி முறை சரியாக் நடைபெறவில்லை. அதனால், குடிகள் மிகவும் துன்பம் அடைந்தார்கள். கி. பி. 1770ல் வங்காளத்தில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. பஞ்

சத்தில் வருந்திய ஜனங்கள் சருகுகளையும் புல்லையும் தின்றும் உயிர் பிழைப்பது அரிதாயிற்று. சுமார் ஒரு கோடி ஜனங்கள் பசியால் இறந்தார்கள். நாடெங்கும் கொள்ளையும் நோயும் அதிகரித்தன. கம்பெனி உத்தியோகஸ்தர்கள் திரும்பவும் சொந்தமாக வியாபாரம் செய்யவும் லஞ்சங்களையும் பரிசுகளை யும் பெறவும் ஆரம்பித்தார்கள். கம்பெனியாரின் பொருளா தார நிலைமையும் மிகவும் சீர்கெட்டுப்போயிருந்தது. ஆகையால், வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னரானதும் பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

வாரன்ஹேஷ்டிங்ஸ்

வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்கள்: அவர் முதன் முதலில் கிளைவ் ஏற்படுத்திய இரட்டை ஆட்சி முறையை ஒழித்தார். ஒவ்வொரு நிலச்சுவானும் கட்டவேண்டிய வரிப்ப ணம் இவ்வளவுதான் என்று வரையறுக் கப்பட்டது. வரிகள் வசூலிப்பதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த திவான் களை ஒழித்து, ஒவ்வொரு ஜில்லாவிலும் **கலெக்டர்** என்னும் ஆங்கிலேய அதிகாரி யை நியமனம் செய்தார். நிலவரி இலாக் காவை மேற்பார்வையிட மூன்று அங்கத் தினர்கள் கொண்ட **ரெவின்யூபோர்டு** என் னும்சபையைக்கல்கத்தாவில் ஏற்படுத்தி னர். கலெக்டர்கள் சிவில் கிரிமினல் வழக்குகளையும் விசாரித்து நியாயமளிக்க அதிகாரம் பெற்றனர்கள். அவர்களுக்கு இந்துக் கள் சட்டத்தையும், முகம்மதியர்கள் சட்டத்தையும் விளக்கிக் கூறுவதற்காக இந்து பண்டிதர்களும், முகம்மதிய மௌல்வி களும் நியமிக்கப்பட்டார்கள். ஜில்லா நியாயஸ்தலங்களின் தீர்ப்புக்களை ஒப்புக்கொள்ளாமல் மேல் விசாரணை கோருபவர் களுக்காகக் கல்கத்தாவில் **கிரிமினல் அப்பீல் கோர்ட்டு** ஒன்றும்,

சிவில் அப்பீல் கோர்ட்டு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. ஹேஸ்டிங்ஸ் போலீஸ் இலாக்காவைச் சீர்திருத்தி அமைத்து, நாட்டிலிருந்த கொள்ளைக்காரர்களை அடக்கி, கள்ளர் பயமில்லாதபடி செய்தார். சுங்க வரிகளைக் குறைத்தும், போக்கு வரவுக்கான சாதனங்களைச் சீர்திருத்தியும் வியாபாரத்தைப் பெருக்கினர்.

ஹேஸ்டிங்ஸ் பணம் சேகரித்த விதம்: கம்பெனியாரின் பொக்கிஷம் காலியாய் இருந்தபடியால், ஹேஸ்டிங்ஸ் துரைத்தன இலாக்காவின் செலவைக் குறைத்து, வருமானத்தை அதிகப்படுத்த வழி தேடினர். மூன்ரும் பானிப்பட்டு யுத்தத்திற்குப் பிறகு, மகாராஷ்டிரர்கள் மீண்டும் பலமடைந்து, டில்லியைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அவர்கள் தலைவரான **மகதாஜி சிந்தியா** என்பவர் அலஹபாதிலுள்ள ஷா ஆலத்தை டில்லிக்கு வரும்படி கூறித் தமது பாதுகாப்பில் வைத்துக்கொண்டார். ஆகையால், ஹேஸ்டிங்ஸ் அவருக்குக் கொடுத்து வந்த 26லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளத்தை நிறுத்திவிட்டார். இத்துடன் கம்பெனியார் வசத்திலிருந்த மொகலாயச் சக்கரவர்த்திக்குச் சொந்தமான **கோரா, அலஹபாது** ஜில்லாக்களை 50 லக்ஷம் ரூபாய்க்கு அயோத்து நவாபுக்கு விற்றுவிட்டார். வங்காள நவாபின் உபகாரச் சம்பளம் குறைக்கப்பட்டது.

அயோத்திக்கு வடமேற்கில் இமயமலையடிவாரத்தில் **ரோஹில் கண்டு** என்னும் நாட்டில் **ரோஹில்லர்** என்னும் ஆப்கானிய ஜாதியார் ஆண்டு வந்தனர். அயோத்தி நவாபு, வளப்பம் மிகுந்த அந்த நாட்டை ஜயித்துத் தம் நாட்டுடன் சேர்த்துக்கொள்ள விரும்பினர். ஆகையால், அவர் ரோஹில்லர்களை அடக்குவதற்கு ஓர் ஆங்கிலேயப் படையைக் கொடுத்து உதவுமாறு ஹேஸ்டிங்ஸைக் கேட்டுக்கொண்டார். வாரன் ஹேஸ்டிங்ஸ் அவ்வாறே ஒரு சேனையை அனுப்பி ரோஹில்லர்களைத் தோற்கடிக்க உதவி செய்தார். அதற்காக நவாபு ஆங்கி

லேயருக்கு நாற்பது லக்ஷம் ரூபாய் கொடுத்தார். ரோஹில் கண்டு அயோத்தியுடன் சேர்க்கப்பட்டது.

ஒழுங்கு முறைச் சட்டம் : இவ்வாறு ஹேஸ்டிங்ஸ் பல வகைகளில் பணம் சம்பாதித்தும் கம்பெனியாரின் பணக் கஷ்டம் நீங்கவில்லை. ஏனென்றால், அவர்கள் அநேக யுத்தங்கள் செய்ய வேண்டியிருந்தது. அதனால், அவர்கள் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் கடன் வாங்கித் துரைத்தனத்தை நடத்தவேண்டியிருந்தது. இவ்விதம் ஏற்பட்ட கடனைத் தீர்க்கும்படி **கம்பெனி அதிகாரிகள்** இங்கிலாந்திலுள்ள **பார்லிமெண்டு** சபையாரை **ஒரு கோடி ரூபாய்** கடன் கொடுத்து உதவும்படி கேட்டுக்கொண்டார்கள். கம்பெனியின் விவகாரங்கள் தாறுமாறாய் இருப்பதாகக் கேள்விப்பட்டிருந்த பார்லிமெண்டார், ஒரு சபையாரை நியமித்து, அவர்களை இந்தியாவுக்குச் சென்று கம்பெனியின் நிலைமையை அறிந்து வரும்படி அனுப்பினார்கள். அவர்கள் இந்தியாவுக்கு வந்து விசாரித்துக் கம்பெனியின் காரியங்கள் சரியாக நடைபெறவில்லையென்றும், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் வீணான காரியங்களில் தலையிட்டுக் கொண்டு கம்பெனியின் விவகாரங்களைச் சரிவரக் கவனிக்கவில்லையென்றும், அவர்கள் அக்கிரமமான வழிகளில் தங்கள் சொந்தத்திற்குப் பணம் சம்பாதித்து வருகிறார்கள் என்றும் பார்லிமெண்டாரிடம் தெரிவித்துக்கொண்டார்கள், அதுமுதல் பார்லிமெண்டார் கம்பெனியின் விவகாரங்களைத் தங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக்கொள்ளுவதாகத் தீர்மானித்தார்கள். அதற்கிணங்கக் கம்பெனியின் ஆட்சியை ஒழுங்குபடுத்துவதற்காகக் கி. பி. 1773ல் **ரெகுலேட்டிங் ஆக்டு** என்னும் **ஒழுங்கு முறைச் சட்டத்தை** இயற்றினார்கள்.

ஒழுங்குமுறைச் சட்டத்தின் ஷரத்துகள் : அச்சட்டத்தின்படி கம்பெனியார், பார்லிமெண்டாரின் உத்தரவின்றி இந்தியாவில் சண்டை சமாதானம் முதலியன செய்யக்கூடாது. கம்பெனி

யின் வரவு செலவு கணக்குகளை யெல்லாம் பார்லிமெண்டாரிடம் ஒப்புவிக்கவேண்டும். கம்பெனியார் ஏற்படுத்தும் சட்ட திட்டங்களைப் பரிசீலனை செய்யவும், ரத்துச் செய்யவும் அதிகாரம் பார்லிமெண்டாருக்கு உண்டு. கம்பெனி உத்தியோகஸ்தர்கள் சொந்த வியாபாரம் செய்யவும், வெகுமானங்கள் பெற்றுக்கொள்ளவும் கூடாது. **வங்காளக் கவர்னர்** ஆங்கிலேயருடைய இந்திய நாடுகளுக்கெல்லாம் தலைவராகி, **கவர்னர் ஜெனரல்** என்னும் பட்டம் வகிப்பார். சென்னை, பம்பாய் முதலிய இடங்களில் இருந்த கவர்னர்கள், கவர்னர் ஜெனரலின் அதிகாரத்துக்கு உட்பட்டு நடக்கவேண்டும். கவர்னர் ஜெனரலுக்கு உதவியாக நான்கு அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு மந்திராலோசனை சபை ஏற்படுத்தப்பட்டது. துரைத்தன விவகாரங்கள் எல்லாம் அச்சபையின் தீர்மானப்படியே நடக்கவேண்டும். கவர்னர் ஜெனரலும், அவருடைய சபை அங்கத்தினர்களும் ஐந்து வருஷங்கள்தான் உத்தியோகம் பார்க்கலாம். கவர்னர் ஜெனரலையும்அவருடையசபைஅங்கத்தினர்களையும் நியமிக்கும் அதிகாரம் பார்லிமெண்டாரைச் சேர்ந்தது. கல்கத்தாவில் **'சுப்ரீம் கோர்ட்டு'** என்னும் தலைமை நீதி மன்றம் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு நான்கு ஆங்கிலேய நீதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் ஆங்கிலேயச் சட்டத்தின்படி நீதி செலுத்த வேண்டுமென்று ஏற்பாடாயிற்று. **ஸர் எலிஜா இம்பே** தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இந்த ஏற்பாட்டின்படி கம்பெனி அதிகாரிகள் பார்லிமெண்டின் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டார்கள். கல்கத்தா ஆங்கில இந்திய சாம்ராஜ்யத்திற்குத் தலைநகராக்கப்பட்டது. ஒழுங்கு முறைச் சட்டம் கி. பி. 1774ல் அமுலுக்கு வந்தவுடன் வங்காளக்கவர்னராயிருந்த **வாரன்ஹேஸ்டிங்ஸ்** முதல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவருடைய மந்திராலோசனை சபைக்கு **மான்ஸன், கிளாவரிங், பிரான்சிஸ், பார்வெல்**

என்னும் நால்வரும் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

ஹேஸ்டிங்ஸின் கஷ்டங்கள்: ஒழுங்கு முறைச் சட்டத்தின் படி ஹேஸ்டிங்ஸ் தமது மந்திராலோசனை சபையின் தீர்மானப்படியே அரசியலை நடத்த வேண்டியிருந்தது. அவருக்கு உதவியாக அமைக்கப்பட்ட சபையில் **பார்வெல்** நீங்கலாக மற்ற மூவரும் அவருக்கு விரோதமாய் இருந்தனர். அவர் முதல் இரண்டு வருஷங்களில் செய்தவற்றையெல்லாம் கண்டித்தனர். அவர்கள் ஹேஸ்டிங்ஸ் தமது இஷ்டப்படி ஒன்றும் செய்யவொட்டாமல் தடுத்தார்கள். மந்திராலோசனை சபையில் ஒற்றுமையில்லாததை அறிந்து சிலர் ஹேஸ்டிங்ஸ்மீது குற்றஞ்சாட்டினர். அவர்களில் முதன்மையானவர் **ராஜா நந்த குமார்** என்பவர். அவர் ஹேஸ்டிங்ஸ் பழைய மீர் ஜாபரின் மனைவியிடமிருந்து லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டினர். ஆனால் அக்குற்றம் ருஜுவாகவில்லை. அதற்கிடையில் ராஜா நந்த குமார் பொய்க் கையெழுத்திட்டதாக ஒரு கல்கத்தா வியாபாரியால் குற்றஞ் சாட்டப்பட்டார். அவ்வழக்கு, சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டு, நந்த குமாருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதன் பின்னர் ஹேஸ்டிங்ஸ்மீது ஒருவரும் குற்றம் சாட்டத் துணியவில்லை. மந்திராலோசனை சபையில் அவருக்கு விரோதமாயிருந்த மான்ஸன் என்பவரும், மறு வருஷம் கிளாவரிங் என்பவரும் இறந்துவிட்டபடியால் ஹேஸ்டிங்ஸின் கட்சி பலமடைந்தது. கி. பி. 1780ல் அவருடைய முக்கிய விரோதியான பிரான்சிஸ் இங்கிலாந்திற்குச் சென்றுவிடவே, ஹேஸ்டிங்ஸ் முதன்மை பெற்று விளங்கினர்.

முதல் மகாராஷ்டிர யுத்தம் (கி. பி. 1778-81): வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரல் ஆனதும், ஆங்கிலேயருக்கும்

மகாராஷ்டிரருக்கும் ஒரு பெரியயுத்தம் நேர்ந்தது. கி.பி. 1772ல் நான்காம் பீஷ்வாவான **மாதவ ராவ்** புத்திர சந்ததியில்லாமல் இறந்துபோகவே அவருடைய சகோதரர் **நாராயணராவ்** பீஷ்வா ஆனார். அவருடைய சிறிய தகப்பனாரான **ரகோபா** என்ற **இரகுநாத ராவ்** தந்திரமாக நாராயண ராவைக் கொன்றுவிட்டுத் தாமே பீஷ்வா ஆனார். நாராயண ராவ் இறந்த சில நாட்களுக்குப்பின் அவருடைய மனைவி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தைக்கு **இரண்டாம் மாதவ ராவ்** என்று பெயரிட்டு அக்குழந்தையே நியாயமான பீஷ்வா என்று பல மகாராஷ்டிரத் தலைவர்கள் கலகம் செய்தார்கள். அவர்களுடைய கட்சியில் பிரதானமாயிருந்தவர் **நானா பர்னவிஸ்** என்பவர். இரகுநாத ராவ் அவர்களுக்குப் பயந்து தமக்கு உதவி புரியும்படி கவர்னரைக் கேட்டுக்கொண்டார். பம்பாய்க் கவர்னர் அவருடன் **சூரத்து** என்னுமிடத்தில் கி. பி. 1775ல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ஆங்கிலேயர் இரகுநாதராவுக்கு உதவி செய்யவேண்டுமென்றும், அதற்காக அவர் பம்பாய்க்கு அருகிலுள்ள **ஸால்ஸெட்டு, பஸ்ஸீன்** என்னும் தீவுகளை ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி கவர்னர் ஜெனரலின் உத்தரவு இல்லாமல் பம்பாய்க் கவர்னர் இத்தகைய உடன்பாட்டைச் செய்துகொள்ள அதிகாரமில்லை. இதையறிந்த **நானா பர்னவிஸ்** கவர்னர் ஜெனரலோடு **புரந்தர்** என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ஆங்கிலேயர் மகாராஷ்டிர விவகாரங்களில் தலையிடாதிருந்தால், அவர்களுக்கு **ஸால்ஸெட்டு** என்னுமிடத்தைக் கொடுப்பதாக அவர் ஒப்புக்கொண்டார். இவ்விரண்டு உடன்படிக்கைகளையும் பற்றி இங்கிலாந்திலுள்ள கம்பெனி அதிகாரிகளிடம் ஆலோசனை கேட்டதில், அவர்கள் சூரத்து உடன்படிக்கையை ஒப்புக்கொண்டார்கள்.

ஆகவே, பம்பாய்க் கவர்னர் இரகுநாதராவுக்கு உதவியாக ஒரு சேனையைப் புனுவுக்கு அனுப்பினர். அச்சேனை **மகதாஜீ சிந்தியா** என்னும் மகாராஷ்டிரத் தலைவரால் முறியடிக்கப் பட்டது. இத்தோல்வியை அறிந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் கல்கத் தாவிலிருந்து ஒரு பெரிய படையை அனுப்பினர். அப்படை இந்தியாவின் தலைநகரான **குவாலிய**ரைப் பிடித்துக்கொண்டது. பின்பு ஆங்கிலேயர்கள் மகாராஷ்டிர சைனியத்தைத் தோற் கடித்து **ஆமதாபாது, கல்யாண், பஸ்ஸீன்** என்னுமிடங்களைக் கைப்பற்றிக்கொண்டார்கள். மறு வருஷம் நடந்த சண்டை யில் ஆங்கிலேயர் பெருந்தோல்வியடைந்தார்கள். ஆகவே, இரு திறத்தாரும் கி. பி. 1782ல் **ஸால்பை** என்னுமிடத்தில் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன்படி மாதவ ராவ் பீஷ்வாவாக ஒப்புக்கொள்ளப்பட்டார். **ஸால்ஸெட்டு** ஆங்கி லேயருக்கும், **புரோச்சு** நகரம் சிந்தியாவுக்கும் கொடுக்கப்பட் டன. இரகுநாதராவுக்கு வருஷத்திற்கு மூன்று லக்ஷ ரூபாய் உப காரச் சம்பளம் கொடுக்கப்பட்டது. மகாராஷ்டிரர்கள் தங்கள் ராஜ்யத்தில் ஆங்கிலேயரைத் தவிர வேறெந்த ஐரோப்பியரை யும் ஏற்றுக்கொள்ளுவதில்லை என்று வாக்களித்தனர். இவ் வாருக முதல் மகாராஷ்டிர யுத்தம் முடிவடைந்தது.

ஹைதர்அலி: மைசூர் ராஜ்யம் வெகுகாலமாக விஜயநகர ராஜ்யத்தில் அடங்கியிருந்தது. தலைக்கோட்டைச் சண்டைக் குப்பின் விஜயநகர ராஜ்யம் சீர்குலைந்ததும், மைசூர் சுயாதீன மடைந்தது. அந்நாட்டை **உடையார்** என்னும் ஓர் இந்து அரச வமிசத்தினர் ஆண்டு வந்தனர். கி. பி. 1766ல் மைசூர் அரசர் இறந்துபோகவே, அவருடைய சேனைத் தலைவரான **ஹைதர்அலி** என்பவர் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டார். ஹைதர்அலி ஒரு முகம்மதியப் போர் வீரரின் மைந்தர். அவர் முதலில் மைசூர் அரசரின் குதிரைப்படையில் ஒரு போர் வீரராக அமர்ந் தார். அவர் மிக்க தைரியமும் திறமையும் வாய்ந்தவர்;

எழுதப்படிக்கத் தெரியாதவராயினும், புத்திக்கூர்மையுள்ளவர்; நாளடைவில் தமது வீரத்தாலும், விடாமுயற்சியாலும் படிப் படியாய் உயர்ந்து சேனைத் தலைவரானார். மைசூர் அரசர் இறந்தபொழுது அவருடைய குமாரர் சிறுவராய் இருந்தபடியால், மந்திரியே அதிகாரம் செலுத்தி வந்தார். ஹைதர் அலி அந்த மந்திரியை நீக்கிவிட்டு, அரசரையும் சிறையிலடைத்துவிட்டுத் தாமே அரசரானார்.

ஹைதர் அலி

ஹைதர் ஒருபெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்து, அதை ஆளவேண்டுமென்று விருப்பம் கொண்டார். அதற்காக அவர் ஒரு பெரிய சைனியத்தைத் தயார் செய்து பிரெஞ்சுக்காரர்களைக் கொண்டு அதற்குப் பயிற்சி அளித்தார்.

முதல் மைசூர் யுத்தம்: ஹைதர்அலி தம் ராஜ்யத்தைப் பெரிதாக்க எண்ணிப் பக்கத்திலுள்ள நாடுகளின்மீது படையெடுத்தார்; மேற்குக் கரையோரமாயுள்ள கோயமுத்தூர், மலையாளம், கானரா ஜில்லாக்களை வென்று, தமது நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். அவருடைய அதிகார வளர்ச்சியைக் கண்ட ஆங்கிலேயரும், ஹைதராபாது நிஜாமும், மகாராஷ்டிரர்களும் ஒன்று சேர்ந்து ஹைதரை எதிர்த்துச் சண்டைசெய்து அவரை அடக்கத் தீர்மானித்தார்கள்.

மூன்று விரோதிகளோடும் ஒரே சமயத்தில் சண்டை செய்வது அசாத்தியம் என்று எண்ணி, ஹைதர்அலி அவர்களைப் பிரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். ஆங்கிலேயருடன் சேராமல் விலகியிருக்கும் பட்சத்தில் நிஜாமுக்குத் தாம் கர்நாடகம் முழுவதையும் கைப்பற்றிக் கொடுப்பதாகச் சொல்லி அவரைப் பிரித்துவிட்டார்; மகாராஷ்டிரர்களுக்கும் ஏராள

மான பணத்தைக் கொடுத்து, அவர்களை ஆங்கிலேயரின் கட்சியிலிருந்து விலகிக்கொள்ளும்படி செய்தார். அதனால், ஹைதர் அலியுடன் ஆங்கிலேயர்கள் மாத்திரம் தனிமையாகச் சண்டை செய்ய வேண்டியதாயிற்று.

ஹைதர்அலி கர்நாடகத்தின்மீது படையெடுத்தார். கர்னல் ஸ்மித்து என்ற ஆங்கிலேய தளகர்த்தர், அவரைச் **செங்கம்மா**, திருவண்ணுமலை என்ற இடங்களில் தோற்கடித்தார். அவரைக் கண்டு பயந்த நிஜாம் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்து கொண்டார். ஆனுல், ஹைதர் பயப்படாமல், கர்நாடகத்தில் நுழைந்து பல இடங்களைக் கொள்ளையடித்தார். கி. பி. 1769ல் அவர் திடீரென்று சென்னையைத் தாக்கினர். அவரை எதிர்த்துச் சண்டை செய்யப் போதிய படைகள் இல்லாததால், சென்னைக் கவர்னர் அவருடன் சமாதானம் செய்துகொண்டார். **சென்னைப்பட்டின உடன்படிக்கை**யின்படி யுத்தத்தில் கைப்பற்றப் பட்ட இடங்கள் அவரவருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன. இனி ஏற்படும் சண்டைகளில் ஒருவருக்கொருவர் உதவி புரிய வேண்டுமென்று இரு திறத்தார்களும் ஒப்புக்கொண்டனர். இவ்வாருக முதல் மைசூர் யுத்தம் முடிவடைந்தது.

இரண்டாம் மைசூர் யுத்தம் (கி. பி. 1780-84): சென்னைப் பட்டின உடன்படிக்கை ஏற்பட்ட சிறிது காலத்திற்குள் மகாராஷ்டிரர்கள் மைசூரின்மீது படையெடுத்தார்கள். உடன் படிக்கையின்படி ஹைதர்அலி ஆங்கிலேயரைத் தம் உதவிக்கு வரும்படி கேட்டுக்கொண்டார். அவர்கள் உதவி செய்ய மறுத்துவிட்டார்கள். ஹைதர்அலி ஆங்கிலேயரின்மீது கோபங் கொண்டு, அவர்களுடன் சண்டை செய்வதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார்.

கி. பி. 1778ல் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை ஆரம்பித்தது. உடனே தென் இந்தியாவில் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான **புதுச்சேரி, மாஹி**

என்னுமிடங்களை ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்டனர். மாஹி ஹைதருடைய ராஜ்யத்திலிருந்தது. அத்துறைமுகத்தின் வழியாகத்தான் ஹைதருக்குத் தேவையான போர்க் கருவிகள் மேனாட்டிலிருந்து வருவது வழக்கம். ஹைதருடைய உத்தரவை மீறி ஆங்கிலேயச்சேனை மைசூர் வழியாகச் சென்று மாஹியைக் கைப்பற்றிக்கொள்ளவே ஹைதர் கோபங்கொண்டு ஒரு பெரும்படையுடன் சென்று, முதலில் கர்நாடகத்தைத் தாக்கினார். இவ்வாறு இரண்டாம் மைசூர் யுத்தம் ஆரம்பமாயிற்று.

முதலில் ஹைதர் அலி காஞ்சீபுரத்தைக் கைப்பற்றிச் சென்னையை நோக்கி வந்தார். **கர்னல் பெய்லி**, பக்ஸார் வீரரான **ஹெக்டர் மன்ரோ** என்னும் ஆங்கிலேயத் தளகர்த்தர்களின் கீழிருந்த சேனையைப் **போளிலூர்** என்னுமிடத்தில் தோற்கடித்தார். பிறகு ஆர்க்காட்டையும் மற்றும் சில கோட்டைகளையும் கைப்பற்றினார். இதையறிந்த ஹேஸ்டிங்ஸ் வந்தவாசி வீரரான **ஸர் அயர்கூட்டு** என்பவரை ஒரு படையுடன் கர்நாடகத்திற்கு அனுப்பினார். அவர் ஹைதரை பரங்கிப்பேட்டைப்,போளிலூர்,சோளிங்கபுரம்,ஆரணி ஆகிய இடங்களில் தோற்கடித்தார்.

திப்புச் சுல்தான்

அதற்குள் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் சமாதானம் ஏற்பட்டது. கி. பி. 1782ல் ஹைதர் இறந்து போகவே, அவர் மைந்தரான **திப்பு** மைசூர்ச் சுல்தான் ஆனார். அவர் யுத்தத்தை விடாது நடத்தி வந்தார்; மேற்குக் கரையில் ஆங்கிலேயர் வசமிருந்த மங்களூரை முற்றுகை செய்து கைப்பற்றிக்கொண்டார்; அதை விடுவிக்க வந்த ஆங்கிலேயச் சேனையையும் தோற்

கடித்தார். பின்னர் இரு கட்சியாரும் **மங்களூரில்** சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி இரு திறத்தினரும் தாம் ஜயித்த இடங்களையும், சிறை பிடித்த கைதிகளையும் திருப்பிக்கொடுக்க ஒப்புக்கொண்டனர். இவ்வாறாக இரண்டாவது மைசூர் யுத்தம் முடிவடைந்தது.

ஹேஸ்டிங்ஸ் பணம் சம்பாதித்த வழிகள் : கி. பி. 1775ல் அயோத்தி நவாபான ஷூஜா-உத்-தௌலா இறந்து போகவே, அவருடைய புதல்வரான **அஸப்-உத்-தௌலா** நவாபானார். உடனே ஆங்கிலேயர் அவருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன்படி நவாபு ஆங்கிலேயச் சேனைக்காகக் கொடுக்க வேண்டிய பணம் அதிகப்படுத்தப்பட்டது. காசி நாடு அயோத்தி ராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டு, புதிதாக ஒருவர் அதற்கு அரசராக நியமிக்கப்பட்டார். இறந்துபோன நவாபின் மனைவியாரும், தாயாரும் இருபது லக்ஷம் பவுன்களையும், ஆபரணங்களையும், சில குடும்ப நிலங்களையும் எடுத்துக்கொள்ளும்படி ஏற்பாடாயிற்று.

ராஜா செயித்சிங்கு : காசியரசரான **ராஜா செயித் சிங்கு** கம்பெனியாருக்கு வருஷந்தோறும் இருபத்திரண்டரை லக்ஷம் ரூபாய் கப்பம் கட்டி வந்தார். கி.பி. 1778ல் மகாராஷ்டிரருடன் யுத்தம் ஆரம்பமான பொழுது ஹேஸ்டிங்ஸ் காசி அரசரைக் கப்பத்திற்கு மேல் ஐந்து லக்ஷம் ரூபாய் கொடுக்கும்படி கேட்டார். செயித்சிங்கு அவ்வாறே கொடுத்தார். மறு வருஷமும் அவரிடமிருந்து அதிக தொகை வசூலிக்கப்பட்டது. அதுமுதல் ஒவ்வொரு வருஷமும் அதிக தொகை கொடுக்கும்படி ஹேஸ்டிங்ஸ் கேட்க, செயித்சிங்கு மறுத்தார். ஹேஸ்டிங்ஸ் கோபங்கொண்டு தாமே நேரில் காசிக்குச்சென்று ராஜா செயித்சிங்கைக் கைது செய்து, வேறொருவரைக் காசிக்கு அரசராக்கினார். புதியவராகப் பட்டம் பெற்றவர் ஹேஸ்டிங்ஸ் கேட்டபடி வருஷத்திற்கு 40 லக்ஷம் ரூபாய் கப்பம் கட்டிவர ஒப்புக்கொண்டார்.

அயோத்தி பீகங்கள்: அயோத்தி நவாபான அஸப்-உத்-தௌலா ஆங்கிலேயருக்குச் செலுத்தவேண்டிய பணத்தைச் சரிவரச் செலுத்தவில்லை. ஹேஸ்டிங்ஸ் நவாபைக் கம்பெனியாருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்கும்படி வற்புறுத்தினர். நவாபு தம்முடைய தந்தையாரின் சொத்துக்களையெல்லாம், தமது தாயாரும் பாட்டியாருமாகிய **பீகங்கள்** எடுத்துக்கொண்டபடியால் தம்மிடம் பணம் இல்லையென்றும், அவற்றைத் தமக்குத் திருப்பி வாங்கிக் கொடுத்தால் தாம் செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் செலுத்துவதாகவும் சொன்னர். ஹேஸ்டிங்ஸ் அதற்கிசைந்து, ஓர் ஆங்கிலேயப் படையை அனுப்பி, பீகங்களைச் சிறையிலிட்டு, பலவந்தம் பண்ணி அவர்களிடமிருந்த ஏராளமான திரவியத்தை அபகரித்துக்கொண்டார்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்து திரும்புதல்: ஹேஸ்டிங்ஸ் காசியரசர் விஷயமாயும், அயோத்தி பீகங்கள் விஷயமாயும், ரோஹில்லர்கள் விஷயமாயும் கொடுமையாய் நடந்துகொண்ட விவரங்களை அவருடைய விரோதியாகிய **பிரான்சிஸ்** என்பவர் பார்லிமெண்டாரிடம் தெரியப்படுத்தினர். இங்கிலாந்திலுள்ள அதிகாரிகள் அவருடைய நடவடிக்கைகளைப் பற்றிப் பலமாகக் கண்டித்து எழுதினர்கள். அதனல் கி. பி. 1785ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, இங்கிலாந்திற்குச் சென்ருர். அங்கே பார்லிமெண்டு சபையார் அவர்மீது பல குற்றங்கள் சாட்டி ஏழு வருஷகாலம் விசாரணை செய்தார்கள். முடிவில் அவர்மீது கொண்டுவரப்பட்ட குற்றச் சாட்டுகளெல்லாம் தள்ளப்பட்டு, அவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குச் செய்த நன்மைகளுக்காக அவருக்கு வருஷத்திற்கு மூவாயிரம் பவுன் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டது. ஹேஸ்டிங்ஸ் வெகு காலம் சுகமாய் வாழ்ந்திருந்து கி. பி. 1818ல் இறந்தார்.

பிட்டு இந்தியா சட்டம் (கி.பி. 1784.): கம்பெனியார் இந்திய மன்னர்களுடன் சரியாய் நடந்துகொள்ளவில்லை என்று தெரிந்து பார்லிமெண்டு சபையார்கள் கம்பெனியாரின் அதிகாரத்தை மேலும் குறைக்க எண்ணினுர்கள். மேலும், ஒழுங்கு முறைச் சட்டத்திலும் அநேக குறைகள் காணப்பட்டன. கவர்னர் ஜெனரல் மந்திராலோசனை சபையினரில் பெரும்பாலோருடைய அபிப்பிராயப்படியே துரைத்தனம் நடத்தவேண்டியிருந்தது. கம்பெனி நீதிஸ்தலங்களுக்கும், சுப்ரீம் கோர்ட்டுக்கும் உள்ள சம்பந்தம் ஒழுங்குமுறைச் சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. அதனுல், அவைகளுக்குள் சங்கடங்கள் ஏற்பட்டன. இத்தகைய குறைகளை நீக்குவதற்காக அப்பொழுது இங்கிலாந்தின் முதல் மந்திரியாரான **பிட்டு** என்பவர் கி. பி. 1784ஆம் வருஷம் பார்லிமெண்டில் ஒரு புதியசட்டத்தை ஏற்படுத்தினுர். அதற்குப் **பிட்டு இந்தியா சட்டம்** என்பது பெயர்.

அதன்படி கவர்னர் ஜெனரலின் மந்திராலோசனை சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்ருக்கப்பட்டது. கவர்னர் ஜெனரல் அவசரமான காலங்களில் தம் மந்திராலோசனை சபைத் தீர்மானங்களுக்கு விரோதமாகவும் நடந்துகொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டது. கம்பெனியாரின் துரைத்தனக் காரியங்களை மேற்பார்க்க, இங்கிலாந்தில் **மேல் விசாரணை சபை** (Board of Control) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அச்சபை ஆறு அங்கத்தினர்கள் அடங்கியது. அவர்களின் உத்தரவில்லாமல் இந்தியத் துரைத்தனத்தார் யாதொரு முக்கியமான ஏற்பாடும் செய்யக்கூடாது. கம்பெனியார் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் பார்லிமெண்டாரின் அனுமதியின்றித் தலையிடக்கூடாது என்று விதி ஏற்பட்டது. இச்சட்டம் ஏற்பட்டதுமுதல் கம்பெனியார் பேருக்கு மாத்திரம் இந்திய அரசியல் விஷயங்களைக் கவனித்து வந்தார்களேயொழிய, உண்மையில் ஆட்சி செய்தவர்கள் மேல் விசாரணை சபையாரே.

கேள்விகள் :

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னராய் இருந்தபொழுது செய்த சீர்திருத்தங்கள் யாவை ?
2. ஹேஸ்டிங்ஸ் கம்பெனியின் பொருளாதார நிலைமையை எவ்வாறு சீர்ப்படுத்தினார் ?
3. ரெகுலேட்டிங் ஆக்டு எந்த வருஷம் இயற்றப்பட்டது? அது ஏற்படக் காரணமென்ன ? அதன் முக்கிய ஷரத்துகள் யாவை ?
4. முதல் மகாராஷ்டிர யுத்தத்தின் காரணங்களும், முக்கிய சம்பவங்களும் எவை ?
5. முதல் மைசூர் யுத்தம் ஏற்படக்காரணம் என்ன ? அதன் முடிவென்ன ?
6. இரண்டாவது மைசூர் யுத்தத்தின் முக்கிய காரணங்கள் எவை ? அது எந்த உடன்படிக்கையால் முடிவடைந்தது ?
7. பிட்டு இந்தியா சட்டம் ஏற்படக்காரணம் என்ன? அதனால் ஏற்பட்ட மாறுதல்கள் யாவை?
8. குறிப்பெழுது:—(1) ஹைதர் அலி, (2) நந்தகுமார், (3) செயித் சிங்கு, (4) அயோத்தி பீகங்கள்.

26. காரன்வாலிஸ் பிரபு

சாஸ்வத நிலவரி ஏற்பாடு

காரன்வாலிஸ் பிரபு (*கி. பி. 1886–93*): வாரன் ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்து சென்ற பிறகு காரன்வாலிஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் இந்தியாவுக்கு வந்தபொழுது சுதேச மன்னர்களுடைய விவகாரங்களில் தலையிடக்கூடாது என்ற நிபந்தனையுடன் வந்தார். ஆனால் அவர் தமது **தலையிடாக் கொள்கையைச்** சீக்கிரம் கைவிட வேண்டியதாயிற்று.

மூன்றும் மைசூர் யுத்தம் (*கி. பி. 1790–92*): மைசூரை ஆண்டு வந்த திப்புச் சுல்தான் தமது ராஜ்யத்தைப் பெரிதாக்க

எண்ணி மைசூரைச் சுற்றியுள்ள **குடகு, மலையாளம்** முதலிய பிரதேசங்களைப் பிடித்துக்கொண்டார். கி. பி. 1790ல் அவர் திருவாங்கூர் ராஜ்யத்தின்மீது படையெடுத்தார். திருவாங்கூர் மன்னரின் ஆங்கிலேய நண்பரான காரன்வாலிஸ் அவருக்கு உதவி செய்ய முன் வந்தார். ஹைதராபாது நிஜாமும், மகா ராஷ்டிரர்களும் திப்புவின் வலிமையைக் குறைக்க ஆங்கிலே யர் பக்கம் சேர்ந்தார்கள். திப்பு ஆங்கிலேயரை இந்தியாவி லிருந்து துரத்துவதற்குப் பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடி ஞர். அதையறிந்த காரன்வாலிஸ் பிரபு தாமே ஒரு பெரிய ஆங்கிலேயச் சேனையுடன் மைசூரின்மீது படையெடுத்துச் சென்ருர். அவர் **பங்களூரைப்** பிடித்துக்கொண்டு மைசூரின் தலை நகராகிய **ஸ்ரீரங்கபட்டணத்தை** முற்றுகை செய்தார். தந்திரசாலியான திப்பு ஆங்கிலேயருடன் சமாதானத்திற்கு வந்தார். கி.பி. 1792ல் **ஸ்ரீரங்கபட்டணத்தில்** ஓர் உடன்படிக்கை நடந்தது. அதன்படி யுத்தத்தில் ஏற்பட்ட நஷ்டத்திற்காகத் திப்பு மூன்று கோடி ரூபாயும், தம்முடைய ராஜ்யத்தில் பாதியும் கொடுக்கச் சம்மதித்தார். திப்புவிடம் அப்பொழுது பணம் இல்லாததால் முழுத்தொகையையும் கொடுக்கும் வரை அவருடைய பிள்ளைகளில் இருவரை ஆங்கிலேயரிடம் ஜாமீனக ஒப்புவிக்க வேண்டுமென்று முடிவாயிற்று. குடகு ராஜ்யம் சுயேச்சை நாடாகத் திப்புவால் ஒப்புக்கொள்ளப்பட்டது. திப்புவினிடமிருந்து கிடைத்த இடங்களை ஆங்கிலேயர் தம் துணைவர்களான நிஜாமோடும், மகாராஷ்டிரர்களோடும் பகிர்ந்துகொண்டனர். அதனுல், ஆங்கிலேயருக்கு மலையாளம்,

காரன்வாலிஸ் பிரபு

திண்டுக்கல், சேலம் ஜில்லாக்கள் கிடைத்தன. நிஜாமுக்குக் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர் ஆகிய ஜில்லாக்கள் கொடுக்கப்பட்டன. மகாராஷ்டிரர்களுக்குக் கிருஷ்ணு நதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசம் கொடுக்கப்பட்டது. இவ்வாருகத் திப்புச் சுல்தானின் ராஜ்யமும் பலமும் ஒடுக்கப்பட்டன.

சாஸ்வத நிலவரி ஏற்பாடு: காரன்வாலிஸ் பிரபு மிக்க திறமை வாய்ந்தவர். அவர் ஜனங்களுக்கு நன்மையான பல சீர் திருத்தங்களைச் செய்தார். அவைகளுள் மிக முக்கியமானது, **சாஸ்வத நிலவரித் திட்டம்** என்பது. மொகலாய சக்கரவர்த்தி கள் காலம் முதல் ஜமீந்தார்களே வரி வசூல் செய்து வந்தார்கள். கம்பெனியாருக்குத் திவானி உரிமை கிடைத்த பின் வரி வசூல் செய்யும் உரிமையை ஏலம் போட்டு, அதிக தொகைக்கு ஏலம் கேட்பவர்களிடம் அதை ஒப்ப டைத்து, அவர்களிடமிருந்து மொத்தமாகப் பணம் பெற்று வந்தார்கள். இம்முறையில் பலவித ஊழல்கள் இருந்தன. ஏலம் எடுத்த ஜமீந்தார்கள் ஏழைக்குடிகளை வருத்தித்தாங்கள் விரும் பியவாறு அளவு கடந்த வரியை வசூலித்து வந்தார்கள். கம் பெனியாருக்குத் தாங்கள் கட்ட வேண்டிய பணத்தையும் ஒழுங்காகக் கட்டாமல் ஏமாற்றிவந்தார்கள். இதனுல், விவசாயி களுக்கும் கம்பெனியாருக்கும் கஷ்டம் ஏற்பட்டது. இக்குறை களை நிவர்த்தி செய்யும்பொருட்டுக் காரன்வாலிஸ் பிரபு நிலை யான நிலவரித் திட்டத்தை ஏற்பாடு செய்தார்.

அதன்படி நிலவரி வசூல் உரிமையை ஏலம் போடும் வழக் கம் கைவிடப்பட்டது. ஜமீந்தார்கள் வருஷந்தோறும் அரசாங் கத்தாருக்குக் கொடுக்க வேண்டிய தொகை சாஸ்வதமாக நிச் சயிக்கப்பட்டது. ஜமீந்தார்கள் குடிகளிடமிருந்து வசூலிக்க வேண்டிய தொகை எவ்வளவு என்பதும் நிர்ணயிக்கப்பட் டது. நிலத்தீர்வை என்றும் மாற்றப்படாது என்று சட்டம்

செய்யப்பட்டது. ஜமீந்தார்களுக்குப் பரம்பரைப் பாத்திய மும் அளிக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டினுல் குடிகள் ஜமீந்தார்கள் மூலமாக அரசாங்கத்தாருக்கு ஸ்திரமான நிலவரியைச் செலுத்தி வரலானுர்கள். ஜமீந்தார்கள் குடியானவர்களைக் கஷ்டப்படுத்தி அதிக தொகையை வசூல் செய்ய முடியாமற்போயிற்று. தங்கள் நிலங்களிலிருந்து எவ்வளவு வருமானம் வந்தபோதிலும், அதைத் தாங்களே அடையலாம் என்று ஏற்பட்டதால், குடியானவர்கள் பயிர் செய்வதில் அதிக ஊக்கம் காட்டலானுர்கள். அதிக நிலங்கள் உழுது பயிர் செய்யப்பட்டன. விவசாயம் விருத்தியடைந்தது. ஜமீந்தார்களுக்கும், அரசாங்கத்தாருக்கும் தங்களுக்கு வருஷத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்பது நிச்சயமாய் ஏற்பட்டது. இந்தச் சாஸ்வத நிலவரித் திட்டம் வங்காளத்தில் மாத்திரம் இன்றும் அமுலில் இருந்து வருகிறது. சென்னை மாகாணத்திலும் இவ்வித ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று அப்பொழுது சென்னைக் கவர்னராயிருந்த **வில்லியம் பெண்டிங்கும்**, கலெக்டர் **தாமஸ் மன்ரூவும்** முயற்சி செய்தார்கள். ஆனுல், கம்பெனியின் மேலாதிகாரிகள் அதற்கிணங்கவில்லை. வங்காளம் தவிர இதர மாகாணங்களில் **ரயத்துவாரி** என்ற முறை அனுசரிக்கப்படுகிறது. இதன்படி சர்க்காரே குடியானவர்களிடம் நேரில் வரிவசூல் செய்கிருர்கள்; அடிக்கடி வரியையும் மாற்றிக்கொள்ளுகிருர்கள்.

இதர சீர்திருத்தங்கள்: வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் கலெக்டர்கள், வரி வசூல், நியாய விசாரணை ஆகிய இரண்டையும் கவனித்து வந்தார்கள். இந்த இரண்டு பொறுப்புகளையும் ஒரே அதிகாரி வகிப்பது சரியல்ல என்று நினைத்துக் காரன்வாலிஸ் ஜில்லாக் கலெக்டரிடமிருந்து நியாய விசாரணை அதிகாரத்தைப் பிரித்து, **ஜில்லா ஜட்ஜுகள்** என்னும் உத்தியோகஸ்தரிடம் ஒப்படைத்தார். மேலும், அவர்

இந்தியர்களின் சட்டங்களை ஒழுங்குபடுத்தினார். கம்பெனி உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களை உயர்த்தி, அவர்கள் சொந்த வியாபாரம் செய்யக்கூடாது என்றும், லஞ்சம் வாங்கக் கூடாது என்றும் உத்தரவிட்டார். நாட்டில் அமைதியைப் பாதுகாக்கப் போலீஸ் இலாக்காவையும் சீர்திருத்திஅமைத்தார்.

கேள்விகள் :

1. மூன்றாவது மைசூர் யுத்தத்தின் காரணங்கள் எவை? அதன் முடிவில் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்த நாடுகள் எவை?
2. 'சாஸ்வத நிலவரித் திட்டம்' என்பது என்ன? அதனால் ஏற்பட்ட நன்மைகள் யாவை?
3. காரன்வாலிஸ் பிரபு செய்த இதர சீர்திருத்தங்கள் யாவை?

27. ஸர் ஜான் ஷோர் (கி. பி. 1793 - 98)

கி. பி. 1793ல் காரன்வாலிஸ் பிரபு இங்கிலாந்துக்குச் சென்றார். அவருக்குப் பின் **ஸர் ஜான் ஷோர்** என்பவர் கவர்னர் ஜெனரலானார். அவர் இந்திய விஷயங்களில் அனுபவம் உள்ளவர். அவர் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் **தலையிடாக் கொள்கையைப்** பின்பற்றினார். அவர் நாட்டில் அமைதியைப் பரப்பவும் வியாபாரத்தை விருத்தி செய்யவும் பெரும்பாடு பட்டார். ஆனால், அவர் மேற்கொண்ட தலையிடாக் கொள்கையினால் கம்பெனியாரின் மதிப்புக் குன்றியது. ஆங்கிலேயர் வலிமையற்றுப் போய்விட்டார்கள் என்று எண்ண இடமுண்டாயிற்று.

மஹாராஷ்டிரத் தலைவர்கள் : ஸர் ஜான் ஷோர் காலத்தில் மஹாராஷ்டிரர் மிக்க பலமடைந்தனர். **மகதாஜி சிந்தியா** என்னும் மஹாராஷ்டிரத் தலைவர் வட இந்தியாவில் மிக்க செல்வாக்குடன் அரசு புரிந்து வந்தார். டில்லி அவர் வசம்

இருந்தது. முகலாய சக்கரவர்த்தியான **ஷாஆலம்** அவருடைய பாதுகாப்பிலிருந்தார். கி. பி. 1794ல் சிந்தியா இறந்து போகவே, அவருடைய சகோதரரின் பேரரான **தௌலத்து ராவ் சிந்தியா** பட்டத்துக்கு வந்தார்.

புனவில் **நான பர்னவிஸ்** பீஷ்வாவுக்கு உதவியாயிருந்த படியால், பீஷ்வாவின் அதிகாரம் மேம்பாடு அடைந்திருந்தது. ஆனால், ஹோல்கார், பான்ஸ்லே முதலிய மகாராஷ்டிரத் தலைவர்கள் பீஷ்வாவின் அதிகாரத்திலிருந்து விலகி, சுயேச்சையாகத் தங்கள் செல்வாக்கையும் அதிகாரத்தையும் அதிகப்படுத்திக் கொள்ள முயன்றார்கள். நான பர்னவிஸ் சிறந்த ராஜ தந்திரி. அவர் மகாஷ்டிரர்களின் ஒற்றுமைக்கு ஆபத்து வந்துவிட்டதெனப் பயந்து, அவர்களை ஒன்று சேர்த்து, அவர்களின் உதவியைக்கொண்டு ஹைதராபாது ராஜ்யத்தின்மீது படையெடுத்தார்.

கர்தாச் சண்டை: ஆங்கிலேயரின் நண்பரான நிஜாம் தமக்கு உதவி புரியும்படி கம்பெனியாரை வேண்டினர். ஆனால், ஸர் ஜான் ஷோர் தலையிடாக் கொள்கையை அனுசரிக்க உறுதி கொண்டிருந்தபடியால், நிஜாமுக்கு உதவியளிக்க மறுத்துவிட்டார். மகாராஷ்டிரர்கள் நிஜாமின் சைனியத்தைக் **கர்தா** என்னுமிடத்தில் கி. பி. 1795ல் சந்தித்துத் தோற்கடித்தார்கள். நிஜாம் தம் ராஜ்யத்தில் ஒரு பாகத்தையும், யுத்தச் செலவுக்காக மூன்று கோடி ரூபாய்களையும் மகாராஷ்டிரர்களுக்குக் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார். இந்த வெற்றியின் பயனக மகாராஷ்டிரர்களின் செல்வாக்கு அதிகரித்தது. நான பர்னவிஸ் பெரும்புகழ் அடைந்தார்.

ஆங்கிலேயர்கள் தமக்குச் சமயத்தில் உதவி செய்யவில்லை என்று அவர்கள்மீது கோபங்கொண்டு நிஜாம், பிரெஞ்சுக்காரர்களுடன் நட்புச் செய்துகொண்டு, அநேக பிரெஞ்சுக்காரர்களைத் தம் உத்தியோகத்தில் அமர்த்திக்கொண்டார்.

திப்புச்சுல்தான் ஆங்கிலேயருக்கு விரோதமாகப்பிரெஞ்சுக் காரரிடம் நட்புக்கொண்டு அவர்களைக் கொண்டு தம் சைனியத் திற்கு யுத்தப் பயிற்சி செய்வித்தார். ஹோல்கார், சிந்தியா ஆகியவர்களின் சேனைகளும் பிரெஞ்சுக்காரரால் பயிற்சியளிக் கப்பட்டு வந்தன.

இரண்டாம் பாஜிராவ் : நானு பர்னுவிஸ் பீஷ்வாவை மிகவும் கட்டுப்படுத்தி வந்தார். பீஷ்வா தம்மை நானு பர்னுவிஸின் ஆதிக்கத்தினின்றும் விடுவித்துக்கொள்ள முயன்றும் பலிக்க வில்லை. அதனுல் வெறுப்படைந்து பீஷ்வா **இரண்டாம் மாதவ ராவ்** கி. பி. 1795ல் தம் மாளிகையின் மேல் மாடியிலிருந்து கீழே விழுந்து உயிர் துறந்தார். அவருக்குப் பின் இரகுநாத ராவின் குமாரரான **இரண்டாம் பாஜிராவ்** பீஷ்வாவானுர்.

அஹல்யா பாய் (கி. பி. 1765–95): ஸர் ஜான் ஷோர் கவர்னர் ஜெனரலாக இருக்கையில் **இந்தூர்** என்னும் மகா ராஷ்டிர நாட்டில் அஹல்யா பாய் என்னும் அரசி ஆண்டு வந் தாள். வீரத்திலும் புத்தியிலும் இவள் சம்யுக்தை, பத்மினி போன்றவள். தனது கணவரும் புத்திரனும் இறந்து போகவே அஹல்யா பாய் இந்தூர் நாட்டை முப்பது வருஷங்கள் திறமை யாக அரசாட்சி செய்தாள். **துக்காஜிராவ் ஹோல்கார்** என்ற தன் உறவினரைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டு, அவரைத் தன் மந்திரியாகவும் சேனுதிபதியாகவும் நியமித்துக்கொண்டாள். அஹல்யா பாய் நீதி வழுவாமல் அரசு செலுத்தி வந்தாள்; வழக்குகளைத் தானே நேரில் விசாரித்து நியாயம் வழங்கி வந் தாள்; தன் உத்தியோகஸ்தர்களில் சிலர் இலஞ்சம் வாங்கினதை யறிந்து அவர்களை வேலையை விட்டு நீக்கினுள்; அவர்கள் கலகம் செய்யவே அக்கலகத்தைத் திறமையுடன் அடக்கி, கலகத் தலை வர்களை நாட்டினின்றும் விரட்டிவிட்டாள். அவளுடைய நாட் டின் மீது படையெடுத்து வந்த ராஜபுத்திரர்களைத் தோற்கடித் துத் துரத்தினுள். அகல்யாபாய் தெய்வ பக்தியில் சிறந்தவள்.

அவள் ஜனங்களின் சௌகரியத்துக்காகப் பல குளங்கள், கோயில்கள், தர்ம சத்திரங்கள் முதலியவைகளைக் கட்டினுள். இத்தகைய உத்தம குணங்கள் பொருந்திய இராணியின் கீர்த்தி அக்காலத்தில் நாடெங்கும் பரவியிருந்தது. இக்காலத்தும் அவள் ஞாபகம் இந்தூரில் போற்றப்பட்டு வருகிறது.

ஸாடட் அலி அயோத்தி நவாபாதல்: ஸர் ஜான் ஷோர் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றி வந்த போதிலும், அயோத்தி விவகாரங்களில் தலையிட நேர்ந்தது. அயோத்தி நவாபான அஸப்-உத்-தௌலா கி. பி. 1797ல் இறக்கவே, பட்டத்தைக் குறித்து இருவர் சண்டையிட்டனர். ஸர் ஜான் ஷோர் அவர்களுள் ஒருவரான ஸாடட் அலி என்பவரை ஆதரித்து அவரை நவாபாக்கினுர். ஷோர் அவருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி நவாபு ஆங்கிலேயருக்கு அலஹபாதைக் கொடுத்தார். தமது சைனியம் முழுவதையும் ஆங்கிலேயரின் அதிகாரத்தில் விட்டு வைப்பதாக ஒப்புக்கொண்டார். நவாபு கட்ட வேண்டிய கப்பம் வருஷத்திற்கு 76 லக்ஷம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

கேள்விகள்:

1. ஸர் ஜான் ஷோர் சுதேச மன்னர்கள் சம்பந்தமாக அனுஷ்டித்த கொள்கை யாது? அதனுல் ஏற்பட்ட பயன் என்ன?
2. அஹல்யா பாய் ஒரு சிறந்த அரசி என்பது எவ்வாறு தெரிகிறது?
3. கர்தாச் சண்டை யார் யாருக்கு ஏற்பட்டது? ஏன்?
4. அலஹபாது ஆங்கிலேயருக்கு எவ்வாறு கிடைத்தது?

28. வெல்லெஸ்லி பிரபு

உதவிச் சேனை ஏற்பாடு

ஸர் ஜான் ஷோருக்குப் பிறகு **மார்க்விஸ் ஆப் வெல்லெஸ்லி** கவர்னர் ஜெனரலாய் வந்தார். அவர் இந்தியாவில் ஆங்கிலேயரின் அதிகாரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர். அவர் தலையிடாக் கொள்கையை விட்டுச் சுதேச மன்னர்களை ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று தீர்மானித்தார்.

இந்தியாவின் நிலைமை: ஸர் ஜான் ஷோர் மேற்கொண்டிருந்த தலையிடாக் கொள்கையின் காரணத்தால் சுதேச சம்ஸ்தானங்களில் ஆங்கிலேயரின் செல்வாக்குக் குறைந்து பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு ஓங்க ஆரம்பித்தது. சுதேச மன்னர்கள் ஒற்றுமையில்லாமல் அடிக்கடி தங்களுக்குள் சண்டை செய்து வந்தார்கள். அயோத்தி நவாபும், கர்நாடக நவாபும் திறமையற்றவர்களாயிருந்தார்கள். மொகலாய சக்கரவர்த்தியாகிய ஷாஆலம் சிறைப்பட்டிருந்தார். மகாராஷ்டிரர்களின் சமஷ்டியில் சண்டைகளும் சச்சரவுகளும் நிறைந்திருந்தன.

வெல்லெஸ்லி பிரபு

உதவிச்சேனை ஏற்பாடு: ஆகையால், வெல்லெஸ்லி பிரபு சுதேச மன்னர்களுக்குள் இருந்துவந்த போர்களை நிறுத்தி, எல்லோரையும் ஆங்கிலேயரின் பாதுகாப்பின்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்று தீர்மானித்தார். இந்தியா முழுவதும் ஓர் ஏகாதிபத்திய ஆட்சியின்கீழ் வந்தால்தான் நாட்டில் போர்த் தொல்லைகள் நீங்கி அமைதியும் குடிகளுக்குச் சுகமும் ஏற்படு

மென்பதை உணர்ந்தார். அதன்பொருட்டு அவர் ஒரு புது முறையைக் கையாண்டார். அதற்கு **உதவிச்சேனை ஏற்பாடு,** அல்லது **சப்ஸிடியரி ஸிஸ்டம்** என்பது பெயர். உதவிச்சேனை ஏற்பாட்டின்படி உடன்படிக்கை செய்துகொண்ட சுதேச மன்னர்கள் ஆங்கிலேயரின் அனுமதியின்றி மற்றெவருடனும் சண்டையோ சமாதானமோ செய்துகொள்ளக்கூடாது. ஆங்கிலேயரல்லாத மற்ற எந்த ஐரோப்பியரையும் தங்கள் உத்தியோகத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. சுதேச மன்னர்கள் தங்களுடைய பாதுகாப்பின்பொருட்டுத் தங்கள் நாட்டில் ஓர் ஆங்கிலேயச் சேனையை வைத்துக்கொள்ள வேண்டும். அச்சேனையின் நிமித்தம் ஏற்படும் செலவுகளை அந்தச் சுதேச மன்னர்களே ஆண்டுதோறும் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு சுதேச மன்னரும் தம் நாட்டில் ஓர் ஆங்கிலேய ஸ்தானிகரை (Resident) ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக ஆங்கிலேயர்கள் சுதேச மன்னர்களின் நாட்டில் உள் நாட்டுக் கலகங்களை அடக்கவும், அன்னிய விரோதிகளால் தீங்கு ஏற்படாமல் தங்கள் நாட்டைப் பாதுகாக்கவும் உதவி செய்ய வேண்டும். ஆனால், சுதேச சம்ஸ்தானங்களின் உள்நாட்டு அரசியலில் ஆங்கிலேயர் தலையிடக்கூடாது என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த ஏற்பாட்டினால் சுதேச மன்னர்கள் ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் சுயாதீனத்தை இழந்ததோடு தங்களுடைய ராஜ்யங்களைப் பாதுகாப்பதற்கு ஆங்கிலேயரின் உதவியை எதிர்பார்க்கும்படி ஏற்பட்டது. ஆனால், அவர்கள் விரோதிகள் பயமின்றி நாட்டை ஆண்டு வரலானார்கள். நாட்டில் அமைதியும் ஒழுங்கான ஆட்சியும் ஏற்பட்டதால், வியாபாரம் விருத்தியடைந்தது. பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் நீங்கிற்று.

வெல்லெஸ்லி பிரபு உதவிச்சேனை ஏற்பாட்டை இந்திய அரசர்கள் ஒப்புக்கொண்டு ஆங்கிலேயருடன் சமாதானமாக இருக்கும்படி வற்புறுத்தினர். இந்த ஏற்பாட்டை முதன் முதல் ஒப்புக்கொண்டவர் **ஹைதராபாது நிஜாம்.** ஸர் ஜான் ஷோர் உதவி செய்ய மறுத்ததால், நிஜாம் மன்னர் ஆங்கிலேயரிடம் கோபமுற்று, பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினரல்லவா? வெல்லெஸ்லி அவரைச் சமாதானம் செய்து, கி. பி. 1798ல் அவர் உதவிசசேனை ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளும்படி செய்தார். நிஜாம் தம்மிடத்திலிருந்த பிரெஞ்சுச் சேனைகளை அனுப்பிவிட்டுத் தம் நாட்டில் ஓர் ஆங்கிலேயப் படையை ஏற்றுக்கொண்டார். அதன் செலவுக்காக நிஜாம் தமக்கு மைசூர் யுத்தங்களில் கிடைத்த கர்நூல், கடப்பை, பல்லாரி, அனந்தப்பூர் என்னும் நான்கு ஜில்லாக்களையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார். அந்த ஜில்லாக்களுக்கு அதுமுதல் **'கொடுக்கப்பட்ட ஜில்லாக்கள்'** அல்லது **'ஸீடட்டிஸ் டிரிக்ட்ஸ்'** என்ற பெயர் ஏற்பட்டது.

அயோத்தி நவாபான **ஸாடட் அலியும்** கி. பி. 1801ல் உதவிச்சேனை ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு, தம் நாட்டில் ஓர் ஆங்கிலேயச் சேனையை வைத்துக்கொண்டார். அதன் செலவுக்காகக் கங்கை யமுனை நதிகளுக்கு இடையிலுள்ள **ஆக்கிரா தோவாப்** பிரதேசத்தையும், **ரோஹில் கண்டு** நாட்டையும் கொடுத்தார்.

நான்காம் மைசூர் யுத்தம் (கி. பி. 1898-99): நிஜாமும் அயோத்தி நவாபும் செய்துகொண்டதைப்போல உதவிச்சேனை உடன்படிக்கை செய்துகொள்ளும்படி வெல்லெஸ்லி பிரபு திப்புச் சுல்தானைக் கேட்டுக்கொண்டார். திப்பு அதற்கு உடன்படவில்லை. மேலும் அவர் மூன்றும் மைசூர் யுத்தத்தில் தமக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கும் அவமானத்திற்கும் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்றும், ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து

துரத்திவிட வேண்டுமென்றும் எண்ணங்கொண்டார். அவர் ஆப்கானிய அரசரான **ஜாமன்ஷா**வையும் பிரெஞ்சுத் தலைவரான **நெப்போலியன் போனபார்ட்டி**என்பவரையும் தமக்குதவிசெய்யும் படி கேட்டுக்கொண்டார். நெப்போலியன் ஐரோப்பிய யுத்தங் களில் ஈடுபட்டிருந்ததால், திப்புவுக்கு உதவியளிக்க முடிய வில்லை. ஆப்கானிய அமீரும் உதவிசெய்ய முன்வரவில்லை. வெல் லெஸ்லி பிரெஞ்சுக்காரரிடம் திப்பு எவ்விதச் சம்பந்தமும்வைத் துக்கொள்ளக் கூடாது என்றும் ஆங்கிலேயருடன் நட்பாய் இருக்கும்படியாகவும் கேட்டுக்கொண்டார். திப்புச் சுல்தான் ஆங்கிலேயரை வெறுத்து, மூன்றும் மைசூர் யுத்தத்தில் தாம் இழந்த நாடுகளைத் திரும்ப அடைவதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்யலானுர். அதையறிந்த வெல்லெஸ்லி திப்புவுடன் போர் தொடுத்தார். நிஜாமும் மகாராஷ்டிரர்களும் ஆங்கிலேய ருக்கு உதவியாக வந்தார்கள். வெல்லெஸ்லி கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு வந்து யுத்த ஏற்பாடுகளைத் தாமே நேரில் செய்து வந்தார். சென்னையிலிருந்து ஒரு சேனையும், பம்பாயிலிருந்து ஒரு சேனையும் மைசூரை நோக்கிச் சென்றன. திப்பு, சென்னையி லிருந்து வந்த சேனையை **மாளவல்லி** என்னுமிடத்தில் எதிர்த் துச் சண்டை செய்து தோல்வியடையவே, அவர் ஸ்ரீரங்க பட்டணத்தை நோக்கி ஓட்டம்பிடித்தார். ஆங்கிலேயப் படை கள் அவரைப் பின் தொடர்ந்து **ஸ்ரீரங்கபட்டணத்**தை முற் றுகை செய்தன. கோட்டைச்சுவரின் ஒரு பாகம் வெடி மருந்தி னுல் தகர்த்தெறியப்பட்டது. திப்பு வீராவேசத்துடன் போர் புரிந்து கோட்டை வாயிலில் உயிர் துறந்தார். அதன் பிறகு ஆங்கிலேயர் அக்கோட்டையை எளிதில் பிடித்துக்கொண் டனர். மைசூர் ராஜ்யம் ஆங்கிலேயர் வசமாயிற்று.

ஆங்கிலேயர் மைசூர் ராஜ்யத்தின் பெரும்பாகத்தைத் தாங்களும்,நிஜாமுமாகப்பங்கிட்டுக்கொண்டார்கள். மீதியிருந்த பாகம் ஹைதருக்கு முன் மைசூரில் ஆண்டுவந்த உடையார்

வமிசத்தைச் சேர்ந்த **கிருஷ்ணராஜ உடையார்** என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. அவர் ஐந்து வயது சிறுவராதலால் அவருக்காக ஆட்சியை நடத்துவதற்குப் **பூர்ணய்யா** என்பவர் மந்திரியாக நியமிக்கப்பட்டார். அவர் திப்புவினிடம் மந்திரியாய் இருந்து மிகுந்த அனுபவம் உள்ளவர். அரசியல் காரியங்களை மேற்பார்வை செய்ய ஓர் ஆங்கிலேய ஸ்தானிகரும் நியமிக்கப்பட்டார். நான்காம் மைசூர் யுத்தத்தின் முடிவில் ஆங்கிலேயருக்குக் கன்னடமும், கோயம்புத்தூரும் கிடைத்தன. திப்புவின் பிள்ளைகள் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு, வேலூருக்கு அனுப்பப்பட்டார்கள்.

சென்னை மாகாணம்: வெல்லெஸ்லி பிரபு காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு இன்னும் ஏராளமான நாடுகள் கிடைத்தன. கர்நாடக நவாபான முகம்மதுஅலி கி.பி. 1795ல்இறந்துபோகவே, அவர் புதல்வர் **உம்தத்-உல்-உம்ரா** என்பவர் நவாபானர். அவரும் கி. பி. 1801ல் பிள்ளையில்லாமல் இறந்தார். ஆகையால், வெல்லெஸ்லி நவாபின் குடும்பத்தார்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவிட்டு, **கர்நாடகம்**முழுவதையும் ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். **தஞ்சாவூரி**ல் பல நூற்றுண்டுகளாக விஜய நகர அரசர்களுக்குட்பட்டு நாயக்க மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அப்பால் சிவாஜியின் சந்ததியைச் சேர்ந்த மகாராஷ்டிர அரசர்கள் நூற்றைம்பது ஆண்டுகளாக அரசு செலுத்தி வந்தார்கள். அவர்களில் கடைசி அரசர் சந்ததியில்லாமல் இறந்துபோகவே அவர் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பட்டத்தைக் குறித்துச் சண்டைசெய்தனர். வெல்லெஸ்லி அவர்கள் இருவருக்கும் உபகாரச் சம்பளம் கொடுத்துவிட்டு, கி. பி. 1809ல் தஞ்சாவூரை ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்.

இவ்வாருகத் தற்போதுள்ள சென்னை மாகாணம் வெல்லெஸ்லி பிரபு காலத்தில் பூர்த்தி அடைந்தது. கி. பி. 1759ல்

கர்நாடக யுத்தத்தில் ஆங்கிலேயருக்கு வட சர்க்கார் ஜில்லாக்கள் கிடைத்தன. அதுவே சென்னை மாகாணத்தின் அடிப்படையாகும். கி. பி. 1792ல் காரன்வாலிஸ் காலத்தில் மூன்றும் மைசூர் யுத்தத்தின் முடிவில் மலையாளம், சேலம், மதுரை ஜில்லாக்கள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. கி. பி. 1798ல் நான்காம் மைசூர் யுத்தத்தின் முடிவில் வெல்லெஸ்லி கன்னடம், கோயம்புத்தூர் ஜில்லாக்களை ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். வெல்லெஸ்லியின் உதவிச் சேனை ஏற்பாட்டினால் நிஜாமிடமிருந்து கர்நூல், கடப்பை, பெல்லாரி, அனந்தப்பூர் என்னும் ஜில்லாக்கள் கிடைத்தன. கடைசியாகக் கர்நாடகமும் தஞ்சாவூர் ராஜ்யமும் சேர்க்கப்படவே, இப்பொழுது சென்னை ராஜதானியென்று வழங்கும் மாகாணம் முழுவதும் ஆங்கிலேயருக்குச் சொந்தமாய்விட்டது.

இரண்டாம் மகாராஷ்டிர யுத்தம் (கி.பி. 1803): உதவிச் சேனை உடன்படிக்கை செய்துகொள்ளும்படி மகாராஷ்டிரத் தலைவர்களை வெல்லெஸ்லி வற்புறுத்தினார். ஆனால், ராஜ தந்திர நிபுணரான நானாபர்னவிஸ், பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் உதவிச் சேனை ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளாதபடி தடுத்தார். அந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டால் மகாராஷ்டிரர் சுதந்திரத்தை இழப்பதுடன், நாளடைவில் தங்கள் ராஜ்யம் முழுவதையுமே இழக்க நேரிடுமென்று நானாபர்னவிஸ் தெரிந்துகொண்டார். ஆனால் கி.பி.1800ல் நானாபர்னவிஸ் இறந்துபோனார். மகாராஷ்டிரத் தலைவர்களுக்குள் ஒற்றுமைகுறைந்தது. அவர்கள் பீஷ்வாவுக்குக்கீழ்ப்படியாமல் ஒருவரோடொருவர் சண்டையிடலானார்கள். அக்காலத்தில் மகாராஷ்டிர சமஷ்டியில் ஐந்து தலைவர்கள் இருந்தார்கள். அவர்களின் தலைவரான பீஷ்வா என்பவர் புனாவிலும், கெயிக்வார் ப்ரோடாவிலும், ஹோல்கார் இந்தூரிலும், சிந்தியா குவாலியரிலும், பான்ஸ்லே நாகபுரியிலும் ஆண்டு வந்தார்கள்.

நானுபர்னுவிஸ் இறந்ததும் பீஷ்வா இரண்டாம் பாஜி ராவ் ஹோல்காரோடு சண்டையிட்டு அவர் சகோதரரைக் கொன்றுவிட்டார். ஹோல்கார் **ஜஸ்வந்த ராவ்** கோபங்கொண்டு, ஒரு பெரும்படையுடன் புனுவின்மீது படையெடுத்துச் சென்று பீஷ்வாவைத் தோற்கடித்துத் துரத்திவிட்டு வேருெருவரைப் பீஷ்வாவாக நியமித்தார். பீஷ்வா பாஜிராவ் பம்பாய்க்குச் சென்று ஆங்கிலேயரைத் தமக்கு உதவி செய்யும்படி வேண்டினுர். ஆங்கிலேயர்கள் அதற்கிணங்கி, கி. பி. 1802ல் பீஷ்வாவுடன் **பஸ்ஸீன்** என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன்படி ஆங்கிலேயர் அவருக்கு மீண்டும் பீஷ்வாப் பட்டத்தைப் பெற உதவி செய்ய ஒப்புக்கொண்டார்கள். பீஷ்வா இதர மகாராஷ்டிரத் தலைவர்களுடனே அல்லது மற்ற எந்த ஐரோப்பியர்களுடனே ஆங்கிலேயரின் உத்தரவின்றி யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை என்று ஒப்புக்கொண்டார். தமது தலைநகரில் ஓர் ஆங்கிலேய உதவிச் சேனையை வைத்துக்கொள்ளுவதாகவும், அதன் செலவுகளுக்காக வருஷத்திற்கு 26 லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார் ; சூரத்துப் பட்டணத்தை ஆங்கிலேயர்களுக்கு விட்டுவிடவும் சம்மதித்தார். பீஷ்வாவைப் பின்பற்றி, பரோடா அரசரான கெயிக்வாரும் ஆங்கிலேயருடன் உதவிச் சேனை உடன்படிக்கை செய்துகொண்டார்.

மகாராஷ்டிரர்களின் தலைவராகிய பீஷ்வாவும், கெயிக்வாரும் ஆங்கிலேயருடன் உதவிச் சேனை ஏற்பாட்டைச் செய்துகொண்டதை இதர மகாராஷ்டிரத் தலைவர்கள் வெறுத்தார்கள். அவர்களுக்குச் சுதேச மன்னர்களின் உரிமைகளைக் குறைத்து அவர்களை ஆங்கிலேயருடைய அதிகாரத்திற்கு அடங்கி நடக்கும்படி செய்த வெல்லெஸ்லியின்மீது கோபம் மூண்டது. அதனுல் அவர்கள் ஆங்கிலேயருடன் போர் தொடுத்தார்கள். சிந்தியாவும், பான்ஸ்லேயும் ஒன்று சேர்ந்து, ஹோல்

காரரையும் தம்முடன் சேரும்படி அழைத்தார்கள். ஆனல் அவர் இவர்களுடன் சேராமல் தனியே இருந்தார். கி. பி. 1803ல் வெல்லெஸ்லி பிரபுவின் சகோதரரான **ஆர்தர் வெல்லெஸ்லி** (பிற்காலத்தில் டியூக் ஆவ் வெல்லிங்டன்) ஒரு பெரும்படையுடன் சென்று **ஆமது நகரைப்** பிடித்துக்கொண்டார். பிறகு புனுவிற்குச் சென்று இரண்டாம் பாஜிராவை மீண்டும் பீஷ்வா ஆக்கினர். பிறகு சிந்தியாவையும், பான்ஸ்லேயையும் அஸ்ஸே என்னுமிடத்தில் தோற்கடித்தார். சில மாதங்களுக்கெல்லாம் அவர் பான்ஸ்லேயை மாத்திரம் **ஆர்காம்** என்னுமிடத்தில் மறுபடியும் தோற்கடித்தார். பான்ஸ்லே **தேவகான்** என்னுமிடத்தில் ஆங்கிலேயருடன் உதவிச் சேனை ஏற்பாட்டைச் செய்துகொண்டார். அதன்படி தம் நாட்டில் ஆங்கிலேய உதவிச் சேனையையும், ஸ்தானீகரையும் ஏற்றுக்கொண்டார். பீராரை நிஜாமுக்கும், ஒரிஸ்ஸாவை ஆங்கிலேயருக்கும் கொடுத்தார்; நிஜாம் நாட்டில் சௌத்து வரி வசூலிப்பதில்லை என்றும் ஒப்புக்கொண்டார்.

ஜெனரல் லேக்கு என்னும் ஆங்கிலேயத் தளகர்த்தர் சிந்தியாவை **லாஸ்வாரி** என்னுமிடத்தில் தோற்கடித்தார். பிறகு ஆக்கிராவையும் டில்லியையும் பிடித்துக்கொண்டார். டில்லியில் சிறைப்பட்டு, கண்களை யிழந்து, விருத்தாப்பிய தசையிலிருந்த மொகலாய சக்கரவர்த்தியான ஷா ஆலத்தை ஆங்கிலேயர்கள் விடுவித்து அவருக்கு மூன்று லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். அப்பால் சிந்தியாவும் ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு **அர்ஜான் கான்** என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி அவர் ஆங்கிலேயத் துணைப்படையையும், ஸ்தானீகரையும் ஏற்றுக்கொண்டு டில்லி, ஆக்கிரா, கங்கை யமுனை நதிகளுக்கு இடையிலுள்ள பிரதேசம், ஆமது நகரம், புரோச்சு முதலிய இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். ஆங்கிலேய

ருடைய நண்பர்களின் நாடுகளில் சௌத்துவரி வசூலிப்பதில்லை யென்றும் ஒப்புக்கொண்டார்.

மூன்றும் மகாராஷ்டிர யுத்தம் (கி. பி. 1804): ஹோல்கார் ஒருவர் தவிர மற்ற மகாராஷ்டிரத் தலைவர்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுவிட்டனர். **ஜஸ்வந்தராவ் ஹோல்கார்** மட்டும் ஆங்கிலேயருடன் உதவிச்சேனை உடன்படிக்கை செய்து கொள்ளாமல் சுயேச்சையாய் இருந்துவந்தார். மற்றைய மகாராஷ்டிரத் தலைவர்களையெல்லாம் வென்று கீழ்ப்படியச் செய்த ஆங்கிலேயர் தம்முடன் சண்டைக்கு வருவார்கள் என்று எதிர் பார்த்து அவர் தமது சேனையைப் பலப்படுத்திக்கொண்டு யுத்தத்திற்குத் தயாரானர். ஆங்கிலேயருடன் நட்புக்கொண்டிருந்த ராஜபுதன ராஜ்யங்களிலிருந்து சௌத்து வரி வசூலிக்க முயன்ருர். ஆகவே, ஹோல்காரின் ஆதிக்கத்தையும் ஒடுக்க வேண்டுமென்று வெல்லெஸ்லி பிரபு தீர்மானித்தார். அவரை அடக்கும்படி வெல்லெஸ்லி **ஜெனரல் மான்ஸன்** என்பவரின்கீழ் ஒரு பெரும்படையை அனுப்பினர். அச்சேனை ஹோல்காரால் முறியடிக்கப்பட்டு ஆக்கிராவைநோக்கி ஓட்டம்பிடித்தது. பின்னர் ஹோல்கார் **வட மதுரை**யைப் பிடித்துக்கொண்டு, டில்லியைத் தாக்கினர். அவருக்கு உதவியாகப் பரதபுரத்தரசர் வந்தார். அச்சமயத்தில் கூர்ஜரத்திலிருந்து ஓர் ஆங்கிலேயச் சேனை வந்து ஹோல்காரின் தலைநகராகிய **இந்தூ**ரைப் பிடித்துக் கொண்டது. அதனல், ஹோல்கார் டில்லி முற்றுகையை விட்டு இந்தூருக்கு வந்தார். வழியில் ஜெனரல் **லேக்கு** என்பவர் ஹோல்காரை **பருக்காபாது, டிக்கு** என்னுமிடங்களில் தோற்கடித்தார். ஹோல்கார் பஞ்சாபுக்கு ஓடிவிட்டார். பிறகு லேக்கு **பரதபுரக் கோட்டை**யை முற்றுகை செய்தார். அக்கோட்டை களிமண்ணுல் கட்டப்பட்டு மிகவும் பலமாய் இருந்தது. ஆங்கிலேயரால் அதைப் பிடிக்க முடியவில்லை. ஆனல், பரதபுரத்தரசர் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டார்.

வெல்லெஸ்லி பிரபு மகாராஷ்டிரர்களோடும், மைசூர்ச் சுல் தானேடும் செய்த சண்டைகளினுல் கம்பெனியாருக்கு ஏராள மான பணச் செலவு ஏற்பட்டது. மேலும், ஹோல்காருடன் நடந்த சண்டையில் ஆங்கிலேயச் சேனை முறியடிக்கப்பட்டதால் இங்கிலாந்திலிருந்த மேல்விசாரணை சபையார் வெல்லெஸ்லி யைக் கி. பி. 1805ல் திரும்ப அழைத்துவிட்டார்கள்.

வெல்லெஸ்லி செய்து முடித்த வேலை: வெல்லெஸ்லி பிரபு சுதேச மன்னர்களின் சுவாதீனத்தை ஒடுக்கி இந்தியாவில் ஆங்கி லேயரின் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டினுர். அவர் ஏற்படுத் திய உதவிச் சேனை ஏற்பாட்டினுல் பிரெஞ்சுக்காரர் மீண்டும் பலம் பெறக் கூடுமென்ற பயம் அறவே ஒழிந்தது. ஆங்கிலேய ராஜ்யம் அதிக விரிவும் பலமும் அடைந்தது. இத்தகைய வெற் றிகள் அடைந்ததுமல்லாமல் வெல்லெஸ்லி சில சீர்திருத்தங் களும் செய்தார். கவர்னர் ஜெனரலுக்கு மற்றைய மாகாணங் களின்மீதிருந்த அதிகாரத்தை அதிகரிக்கச் செய்தார்; கல்கத் தாவில் ஒரு கலாசாலையை ஏற்படுத்தினுர்; நியாய சபைகளை ஒழுங்குபடுத்தினுர்.

கேள்விகள் :

1. வெல்லெஸ்லி பிரபு இந்தியாவுக்கு வந்தபொழுது இந்தி யாவின் நிலைமை எவ்வாறு இருந்தது?
2. 'உதவிச் சேனை ஏற்பாடு' என்பது என்ன? இதனுல் ஏற் பட்ட பயன்கள் யாவை? இதை முதலில் ஒப்புக்கொண்ட அரசர்கள் யாவர்?
3. நானுபர்னுவிஸ் உதவிச்சேனை ஏற்பாட்டை ஒப்புக் கொள்ள மறுக்கக் காரணமென்ன?
4. பஸ்ஸீன் உடன்படிக்கையின் முக்கியம் என்ன?
5. நான்காம் மைசூர் யுத்தம் எவ்வாறு முடிந்தது?
6. இரண்டாவது மகாராஷ்டிர யுத்தத்தில் மகாராஷ்டிரர் கள் தோல்வியடையக் காரணமென்ன?
7. சென்னை மாகாணம் ஏற்பட்ட வரலாறு யாது?
8. வெல்லெஸ்லி செய்து முடித்த வேலைகள் எவை?

29. மிண்டோ பிரபு

(கி. பி. 1807–13)

ஹோல்காருடன் சண்டை முடிவதற்கு முன்பே வெல்லெஸ்லி பிரபு வேலையை விட்டுப் போய்விட்டார். அவருக்குப் பதிலாகக் காரன்வாலிஸ் பிரபுவை இரண்டாம் முறை கவர்னர் ஜெனரலாக நியமித்து அனுப்பினர்கள். அவர் இந்தியாவுக்கு வந்த சில மாதங்களுக்குள் இறந்துவிட்டார். ஆகையால், கவர்னர் ஜெனரலின் மந்திராலோசனை சபையில் முதல் அங்கத்தினராய் இருந்த **ஸர் ஜார்ஜ் பார்லோ** என்பவர் மிண்டோ பிரபு வரும் வரையில் கவர்னர் ஜெனரலாக வேலை பார்த்தார். அவர் ஹோல்காருடன் சமாதானம் செய்துகொண்டார். அவர் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிட்டுக்கொள்ளவில்லை. அவர்காலத்தில் வேலூரில்**சிப்பாய் கலகம்** ஏற்பட்டது. சிப்பாய்கள் ஐரோப்பியர்களின் தொப்பியைப் போன்ற ஒரே விதமான தலைப்பாகைகளை அணிந்துகொள்ள வேண்டுமென்றும், தங்களது மீசைகளையும் தாடிகளையும் ஒரே விதமாய்க் கத்தரித்துக் கொள்ள வேண்டுமென்றும், நெற்றியில் தத்தம் ஜாதிக்குறியை இட்டுக்கொள்ளக் கூடாதென்றும் சென்னை அரசாங்கத்தார் சில இராணுவச் சட்டங்களை ஏற்படுத்தினர்கள். தங்களைக் கிறிஸ்தவர்கள் ஆக்குவதற்காக அந்த இராணுவ விதிகள் செய்யப்பட்டிருந்ததாகச் சந்தேகித்து வேலூரிலிருந்த சிப்பாய்கள் கலகம் செய்தார்கள். கலகம் சீக்கிரத்தில் அடக்கப்பட்டது. வேலூரிலிருந்த திப்புவின் குமாரர்கள் இக்கலகத்தில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்று சந்தேகித்து, அவர்களைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டார்கள்.

மிண்டோ பிரபு: மிண்டோ பிரபு சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிடக்கூடாது என்ற நோக்கத்துடன் இந்தியாவுக்கு வந்தார். ஆனால், இந்தியாவில் பல இடங்களில்

அமைதிக் குறைவு ஏற்படவே, அவர் தமது கொள்கையை விட்டுவிட வேண்டியதாயிற்று.

பண்டல் கண்டு பிரதேசத்தில் கொள்ளைக்காரர் உபத்திரவம் அதிகமாயிருந்தது. மிண்டோ பிரபு ஒரு சேனையை அனுப்பிக் **களஞ்சார்க்**கோட்டையைக் கைப்பற்றி,கலகக்காரரைத் தோற்கடித்து, அமைதியை உண்டாக்கினர். பீரார்மீது படையெடுத்து வந்த **அமீர்கான்** என்னும் பிண்டாரித் தலைவனை மிண்டோ தோற்கடித்துத் துரத்தினர்.

திருவாங்கூர்க் கலகம்: கி.பி. 1808ல் திருவாங்கூர் அரசர் உதவிச் சேனை ஏற்பாட்டின்படி ஆங்கிலேயருக்குக் கொடுக்கவேண்டிய தொகை பாக்கியாய் இருந்தது. மேலும், அந்த ராஜ்யத்தில் திவானய்இருந்த **வேலுத்தம்பி** என்பவருக்கும் ஆங்கிலேய ஸ்தானிகருக்கும் விரோதம் ஏற்பட்டது. ஆகவே, கி. பி. 1808ல் வேலுத்தம்பி ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கலகம் செய்யத் தொடங்கினர். ஆனல், அக்கலகம் எளிதில் அடக்கப்பட்டது.

இரஞ்சித் சிங்கு : பஞ்சாபில் சீக்கியர்கள் வலிமையடைந்து வந்தார்கள். மிண்டோ பிரபு காலத்தில் இந்த ஜாதியாருக்குத் தலைவர்ாய் இருந்தவர் **இரஞ்சித் சிங்கு** என்பவர். அவர் **சர்தார் சத்தர் சிங்கு** என்பவரின் புதல்வர். அவர் கி. பி. 1780ல் பிறந்தார். அவர் தம் பன்னிரண்டாவது வயதிலேயே சர்தார் ஆனர். அவர் வீரமும் திறமையும் பொருந்தியவர். அவர் கி.பி. 1798ல் இலாகூரின் கவர்னராக ஆப்கானிய மன்னரால் நியமிக்கப்பட்டார். நாளடைவில் அவர் மற்றைய சீக்கிய சர்தார்களை வென்று தமக்குக் கீழ்ப்படியும்படி செய்தார். அவர் காலத்தில் சீக்கியர்கள் ஒன்றுபட்டுப் பலமடைந்தார்கள். இரஞ்சித்சிங்கு பஞ்சாபு முழுவதையும் ஜயித்துக் கி. பி. 1801ல் **மகாராஜா** என்னும் பட்டம் தரித்துக்கொண்டார்அவருக்குப் **பஞ்சாபு சிங்கம்** என்னும் பெயர் ஏற்பட்டது. அவரிடம் ஐரோப்பிய முறையிற் பழக்கப்பட்ட வீரர்கள் அடங்கிய ஒரு பெரிய படை இருந்தது. அவர்

ஆப்கானியருக்குச் சொந்தமான **மூல்தான், பிஷாவர்** முதலிய நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டார். அவர் யமுனைக்கும் சட்லஜ் நதிக்கும் இடையிலிருந்த பிரதேசத்தைப் பஞ்சாபுடன் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று விரும்பினார். அங்கிருந்த சிற்றரசர்கள் ஆங்கிலேயரின் உதவியை நாடினார்கள். மிண்டோ பிரபு இரஞ்சித்சிங்கின் வலிமையைஉணர்ந்து அவருடன்சினேகமாய் இருக்க விரும்பினார். ஆகவே **ஸர் சார்லஸ் மெட்காப்** என்பவரை இரஞ்சித் சிங்கு சபைக்குத் தூதராகஅனுப்பினார். இரஞ்சித் சிங்கு ஆங்கிலேயருடன் நட்பாய்இருப்பதே சிறந்ததுஎன்று எண்ணினார். ஆகவே, கி. பி. 1809ல் **அமிர்தசரஸ்** என்னுமிடத்தில் இரஞ்சித்சிங்கு ஆங்கிலேயருடன்ஓர்உடன்படிக்கைசெய்துகொண்டார். அதன்படி அவர் சட்லஜ் நதிக்குக் கிழக்கே தாம் வருவதில்லையென்றும், ஆங்கிலேயருடன் நட்பாயிருப்பதாகவும் வாக்களித்தார். அவர் ஆயுட்கால முழுவதும் அவ்வாறே நடந்து வந்தார். சீக்கியர்கள் சிறந்த வீரர்களாய் இருந்தபடியால், ஆங்கிலேயருக்கு அன்னிய நாட்டார் வடமேற்கிலிருந்து இந்தியாவின்மீது படையெடுப்பார்கள் என்ற பயம் நீங்கிற்று.

அயல் நாடுகளுடன் உடன்படிக்கை: மிண்டோ பிரபு காலத்தில் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் கடும்போர் நடந்துகொண்டிருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் ருஷியாவுடன் நட்புச் செய்துகொண்டு இந்தியாவின்மீது படையெடுத்து வரக்கூடுமென்ற பயமிருந்தது. ஆகவே, மிண்டோ பிரபு பாரசீகம், ஆப்கானிஸ்தானம், ஸிந்து மாகாணம் ஆகியவற்றை ஆண்ட அரசர்களிடம் தூதரை அனுப்பி, அவர்களுடன் சிநேக உடன்படிக்கைகள் செய்துகொண்டார். அதனால் பிரெஞ்சுத் தலைவரான நெப்போலியன் தரை மார்க்கமாய் இந்தியாவின்மீது படையெடுக்க முடியவில்லை.

வர்த்தகச் சாஸனம் புதுப்பிக்கப்படல்: கி. பி. 1813ல் கம்பெனியாரின் வர்த்தகச் சாஸனம் புதுப்பிக்கப்பட்டது. அதன்

படி கம்பெனியார் மாத்திரந்தான் இந்தியாவில் வியாபாரம் செய்யலாம் என்ற தனி உரிமையை இழந்துவிட்டார்கள். எந்த ஆங்கிலேயரும் இந்தியாவில் வியாபாரம் செய்யலாம் என்னும் விதி ஏற்பட்டது.

கேள்விகள் :

1. வேலூர்ச் சிப்பாய் கலகத்தின் காரணங்கள் எவை ?
2. மிண்டோ பிரபு தலையிடாக் கொள்கையைக் கைவிடக் காரணமென்ன ?
3. திருவாங்கூர் கலகம் ஏற்படக் காரணம் என்ன ?
4. அமிர்தசரஸ் உடன்படிக்கை யார் யாருக்கு எந்த வருஷம் ஏற்பட்டது ? அதன் பயன் யாது ?
5. வடமேற்கு எல்லைகளின் பாதுகாப்பின்பொருட்டு மிண்டோ பிரபு செய்த ஏற்பாடுகள் எவை ?

30. ஹேஸ்டிங்ஸ் பிரபு

(கி. பி. 1813–23)

மிண்டோ பிரபுவுக்குப் பின் ஹேஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜெனரலானார். அவர் சிறந்த போர் வீரர். அவர் காலத்தில் ஆங்கிலேயர்கள் மறுபடியும் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிட்டுக்கொண்டார்கள். ஹேஸ்டிங்ஸ் அநேக யுத்தங்கள் செய்து, ஆங்கிலேயருடைய ஆட்சியைப் பலப்படுத்தி, ராஜ்யத்தையும் பெரிதாக்கினார்.

நேப்பாள யுத்தம் (கி. பி. 1814–16) : இமயமலையின் கீழ்ப்பாகத்தில் ஹிந்துஸ்தானத்திற்கும், திபேத்திற்கும் மத்தியில் **நேப்பாளம்** என்னும் ஒரு தேசம் இருக்கிறது. அதன் தென் பாகத்தில் சுமார் 500 மைல் நீளமும், 20 மைல் அகலமும் உள்ள **தரெய்** என்னும் காடடர்ந்த சதுப்பு நிலப் பிரதேசம் இருக்கிறது. அந்நாட்டைக் கி. பி. 1768ல் ராஜ புத்திரர் வமிசத்தைச் சேர்ந்த **கூர்க்கர்** என்னும் ஜாதியார் கைப்பற்றி

ஆண்டு வருகின்றனர். அவர்கள் தேக திடமும் பராக்கிரமும் படைத்த போர் வீரர்கள். அவர்கள் வசிக்கும் மலை நாட்டிற்கு அன்னியர்கள் பிரவேசித்து அவர்களை வெல்வது அரிது. கூர்க்கர்கள் தங்கள் ராஜ்யத்தைப் பெரிதாக்க எண்ணி, ஆங்கிலேயரின் எல்லைக்குள் பிரவேசித்து, அயோத்தியைச் சேர்ந்த சில கிராமங்களைப் பிடித்துக்கொண்டார்கள். ஹேஸ்டிங்ஸ் இந்தியாவிற்கு வந்தவுடன் அவர்களை அடக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அவர் ஒரு பெரிய படையைத் தயாரித்து, அதை நான்கு பிரிவுகளாகப் பிரித்து, நான்கு தளகர்த்தர்களின் தலைமையின்கீழ் வெவ்வேறு திசைகள் வழியாக நேப்பாள தேசத்திற்கு அனுப்பினர். அவற்றில் மூன்று சேனைகள் காடுகளைக் கடந்து நேப்பாளத்தை அடையமுடியாமல் கூர்க்கர்களால் முறியடிக்கப்பட்டுத் திரும்பி வந்துவிட்டன. நான்காவது சேனையின் தலைவரான **ஜெனரல் ஆக்டர்லோனி** என்பவர் தரெய்ப் பிரதேசத்தைக் கடந்து சென்று, **மாலூன்** கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு நேப்பாள தளகர்த்தரான **அமார் சிங்கு** என்பவரைத் தோற்கடித்தார். பிறகு **மக்வான்பூர்** என்னுமிடத்திலும் கூர்க்கர்களைத் தோற்கடித்து நேப்பாள நாட்டின் தலைநகரான **காட்மாண்டு**வை நோக்கிச் சென்ருர். நேப்பாள அரசர் கி. பி. 1816ல் **ஸிகௌலி** என்னுமிடத்தில் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டார். அதன்படி காளி நதிக்கு மேற்கேயுள்ள **கார்வால், குமாயன்** என்ற இடங்களையும் தரெய்ப் பிரதேசத்தில் ஒரு பாகத்தையும் கூர்க்கர்கள் ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்தனர். அந்த இடங்களிலேதான் கோடைவாசஸ்தலங்களாகிய **ஸிம்லா, நைனிடால், மிஸ்ஸௌரி** என்னும் இடங்களை ஆங்கிலேயர் ஏற்படுத்தியிருக்கின்றனர். நேப்பாளத்தின் தலைநகரில் ஓர் ஆங்கிலேய ஸ்தானிகர் வைக்கப்பட்டார். அக்காலத்திலிருந்து கூர்க்கர்கள் ஆங்கிலேயருடன் நேசமாயிருந்து வருகிருர்கள். ஆங்கிலேயரின் படைகளில் பல கூர்க்க வீரர்கள்

சேர்ந்து பல வீரச் செயல்களைப் புரிந்து புகழ் பெற்று வருகிறார்கள்.

பிண்டாரி யுத்தம் (கி. பி. 1817): மத்திய இந்தியாவில் பலமான அரசாங்கம் இல்லாததால் பிண்டாரிகள் என்னும் ஒரு கூட்டத்தார், கொலை களவுகளைச் செய்தும், கிராமங்களைக் கொள்ளையடித்தும் ஜனங்களை இம்சித்து வந்தார்கள். வெல்லெஸ்லியின் உதவிச் சேனை ஏற்பாட்டினால் அநேக இந்திய சிப்பாய்கள் சுதேச மன்னர்களின் சேனைகளிலிருந்து தள்ளப்பட்டார்கள். அவர்கள் வேறு தொழிலின்றிக் கூட்டமாய்ச்சேர்ந்து கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டார்கள். அவர்களுடன் தண்டனைக்குப் பயந்து தப்பியோடிய பலரும் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் தங்கள் கூட்டத்திற்குச் சில தலைவர்களை ஏற்படுத்திக்கொண்டு நாட்டின் நாநாபக்கங்களிலும் பரவிச் சென்றார்கள். நாளடைவில் அவர்கள் அறுபதினாயிரம் பேர்களடங்கிய ஒரு பெருங்கூட்டமானார்கள். அவர்களுடைய தலைவர்களில் முக்கியமானவர்கள் அமீர்கான், கரீம்கான், சிட்டு என்பவர்கள்.

கி.பி.1812ல் பிண்டாரிகள் பீஹார் மாகாணத்தில் கொள்ளையிட ஆரம்பித்தார்கள். தென்னிந்தியாவில் நிஜாம் ராஜ்யத்திலும், வட சர்க்கார் ஜில்லாக்களிலும் பிரவேசித்துக் கிராமங்களைக் கொள்ளையடித்து ஜனங்களைத் துன்புறுத்தி வந்தார்கள். ஹேஸ்டிங்ஸ் பிரபு அவர்களை அடியோடு ஒழிக்கத் தீர்மானித்தார். ஆகவே, அவர் ஒரு பெரிய சேனையை அனுப்பிப் பிண்டாரிகளை நாநா பக்கமும் சூழ்ந்துகொள்ளும்படி செய்தார். பிண்டாரிகள் மாளவ நாட்டில் ஓடி ஒளிந்துகொண்டார்கள். ஆங்கிலேயப் படைகள் மாளவத்தை எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டன. பிண்டாரிகள் தப்ப வழியில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அவர்கள் தலைவர்களான **கரீம் கான்** என்பவனும், **அமீர்கான்** என்பவனும் ஆங்கிலேயரிடம்

சரண் புகுந்தனர். **சிட்டு** என்பவன் தப்பியோடிச் சென்று காட்டில் ஒரு புலியால் கொல்லப்பட்டு இறந்தான். மற்றவர்கள் போன இடம் தெரியாமல் ஓடிவிட்டார்கள். அமீர்கானை ஆங்கிலேயர்கள் ராஜபுதனத்தில் **டாங்கு** என்னும் நாட்டிற்கு அரசனாக்கினார்கள். இவ்வாறு கி. பி. 1817ஆம் ஆண்டிற்குள் பிண்டாரிகள் அடியோடு தொலைக்கப்பட்டார்கள்.

நான்காவது மகாராஷ்டிர யுத்தம் (கி. பி. 1817-18) : பீஷ்வா இரண்டாம் பாஜி ராவ் **பஸ்ஸீன்** உடன்படிக்கை செய்து கொண்டு ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டது முதல் அவர்கள்மீது வெறுப்புக்கொண்டு சுயாதீனம் அடைவதற்குத் தக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். மற்றைய மகாராஷ்டிரத் தலைவர்களும் ஆங்கிலேயரின் அதிகாரத்தைத் தொலைத்துவிட்டுச் சுயேச்சை பெற விரும்பினார்கள்.

ஆங்கிலேயர் பிண்டாரிகளோடு சண்டை செய்து வருகையில்பீஷ்வாஆங்கிலேயருக்கு விரோதமாகக்கிளம்பித்திடீரெனப் புனாவிற்கு அருகிலுள்ள **கர்க்கி** என்னுமிடத்திலிருந்த ஆங்கிலேய ஸ்தானிகரையும் அவரது உதவிப்படையையும் தாக்கினார். ஆனால், பீஷ்வாவின் சேனை தோற்கடிக்கப்படவே, அவர் நாட்டைவிட்டு ஓடிவிட்டார். ஆங்கிலேயர் புனாவைக் கைப்பற்றிக் கொண்டனர்.

பின்பு பீஷ்வா தெற்கே சென்று மறுமுறையும் ஆங்கிலேயரைத் தாக்கினார். அதிலும் தோல்வியடையவே, ஆங்கிலேயரிடம் சரணமடைந்தார். ஹேஸ்டிங்ஸ் பீஷ்வாவின் நாடு முழுவதையும் எடுத்துக்கொண்டு அவருக்கு வருஷத்திற்கு எட்டு லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அவரைக் கான்பூருக்கு அருகிலுள்ள **பித்தூர்** என்னுமிடத்திற்கு அனுப்பிவிட்டார். அவருடைய ராஜ்யம் பம்பாய் ராஜதானியில் சேர்க்கப்பட்டது. இத்துடன் மகாராஷ்டிரரின் ஆதிக்கம் முடிவடைந்தது.

பீஷ்வா ஆங்கிலேயரை ஏதிர்த்ததை அறிந்த நாகபுரி அரசரான **அப்பா சாகிபு பான்ஸ்லே** என்பவரும் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பினர். அவர் தமது தலைநகரத்தின் அருகிலிருந்த **சித்தபால்டி** என்னுமிடத்தில் வசித்து வந்த ஆங்கிலேய ஸ்தானிகரைத் திடீரென்று தாக்கினர். ஆனால், ஆங்கிலேயர் அவரைத் தோற்கடித்துத்துரத்திவிட்டனர். அவர் பதவியினின்றும் நீக்கப்பட்டு மற்றொரு சிறுவர் நாகபுரிக்கு அரசராக நியமிக்கப்பட்டார். அவருடைய நாட்டின் பெரும்பகுதி ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டது.

கி. பி. 1811ல் **ஜஸ்வந்தராவ் ஹோல்கார்** இறந்த பிறகு அவரது மனைவி **துளசி பாய்** இந்தூர் ராஜ்யத்தை ஆண்டு வந்தாள். அவள் முதலில் ஆங்கிலேயருக்கு விரோதமாகப் பீஷ்வாவுக்கு உதவி செய்தபோதிலும்,பின் ஆங்கிலேயருடன் நட்புச் செய்து கொண்டாள். இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் போர் வீரர்களுக்கும் அது பிடிக்கவில்லை. அவர்கள் ராணி துளசி பாயைப் பிடித்துக் கொன்றுவிட்டு, ஆங்கிலேயரை எதிர்க்க ஆரம்பித்தார்கள். ஆங்கிலேய தளகர்த்தரான **ஸர் ஜான் மால்கஸ், மாஹிட்பூர்** என்னுமிடத்தில் இந்தூர்ச்சேனையைஎதிர்த்துத் தோற்கடித்தார். ஹேஸ்டிங்ஸ பிரபு ஜஸ்வந்த ராவ் ஹோல்காரின் புதல்வரான **மல்ஹாரி ராவ்** என்னும் சிறுவரை இந்தூர் அரசராக்கி அந்நாட்டின் பெரும்பகுதியை ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். இதுவே கடைசி மகாராஷ்டிர யுத்தம்.

பம்பாய் மாகாணம்: கி. பி. 1802ல் பஸ்ஸீன் உடன்படிக்கையின் மூலம் பம்பாய்க்கு அருகிலுள்ள சில நாடுகள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. கடைசி மகாராஷ்டிர யுத்தத்தின் முடிவில் பீஷ்வாவிடமிருந்து கைப்பற்றப்பட்ட நாடும் சேர்ந்து ஹேஸ்டிங்ஸ் காலத்தில் பம்பாய் மாகாணம் ஏற்பட்டது.

ஹேஸ்டிங்ஸ் காலத்திற்குள் அநேகமாக எல்லாச் சுதேச மன்னர்களும் உதவிச்சேனை ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டனர். ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஸிந்து தேசம், பஞ்சாபு, காஷ்மீரம், நேப்பாளம் நீங்கலாக இந்தியாவின் மற்றப் பாகங்கள் எல்லாம் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.

ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் சீர்திருத்தங்கள்: ஹேஸ்டிங்ஸ் பிரபு தம் ஆட்சியின் பெரும்பாகத்தை யுத்தங்கள் நடத்துவதில் கழித்த போதிலும், ஜனங்களின் நன்மைக்காகப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் கல்வி அபிவிருத்திக்காகப் பல பாடசாலைகளை ஏற்படுத்தினார். அவர் காலத்தில்தான் கல்கத்தாவில் ராஜதானிக் கல்லூரியும், ஹிந்து காலேஜும் ஏற்பட்டன. அவர் போக்குவரவு சாதனங்களையும், நீர்ப்பாசன வசதிகளையும் செய்து வைத்தார். சுதேச பாஷைகளில் சமாசாரப் பத்திரிகைகள் பிரசுரிப்பதற்கு அனுமதி கொடுத்தார்; பஞ்சாயத்துச் சபைகளை ஏற்படுத்தி அவை நியாயவிசாரணை செய்யுமாறு ஏற்பாடுசெய்தார்; இந்தியர்களை நியாயாதிபதிகளாக நியமித்தார். கி. பி. 1823-ஆம் வருஷத்தில் அவர்தம் வேலையை விட்டு இங்கிலாந்து சென்றார்.

கேள்விகள்:

1. நேப்பாள யுத்தத்தின் காரணங்கள் எவை? அதன் முடிவில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த இடங்கள் எவை?
2. பிண்டாரிகள் யார்? ஹேஸ்டிங்ஸ் அவர்களை எப்படி ஒழித்தார்?
3. நான்காவது மகாராஷ்டிர யுத்தத்தின் காரணங்கள் எவை? அதன் முடிவில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த நாடுகள் எவை?
4. ஹேஸ்டிங்ஸ் பிரபு செய்த சீர்திருத்தங்கள் எவை?
5. ஹேஸ்டிங்ஸ் பிரபு இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எவ்வாறு நிலை நாட்டினார்?

முக்கிய நிகழ்ச்சிகள்

கி. பி.	570	முகம்மது நபி பிறந்தது
,,	622	ஹிஜிரா சகாப்தம்
,,	997-1030	கஜினி மஹ்மூதின் ஆட்சி
,,	1001	ஜயபாலரைக் கஜினி மஹ்மூதுதோற்கடித்தது
,,	1008	அனங்கபாலரைக் கஜினி மஹ்மூதுதோற் கடித்தது
,,	1026	சோமநாதபுரப் படையெழுச்சி
,,	1175-1206	முகம்மது கோரியின் ஆட்சி
,,	1192	தானேஸ்வரச் சண்டை - கன்னோசி கோரி வசமானது
,,	1200	டில்லி கோரி வசமானது
,,	1206-1290	டில்லியில் அடிமை அரசர்களின் ஆட்சி ஆரம்பம்
,,	1206-10	குத்புதீன் ஆட்சி
,,	1210-36	அல்டாமஷ் ஆட்சி
,,	1236-40	சுல்தானா ரஜியா
,,	1246-66	சுல்தான் நாஸருத்தீன்
,,	1266-90	பால்பன்
,,	1290-1320	கில்ஜி வமிசத்துச் சுல்தான்களின் ஆட்சி
,,	1294	அல்லாவுதீன் தக்காணப் படையெடுப்பு
,,	1296-1316	அல்லாவுதீன் ஆட்சி
,,	1303	சித்தூர் முற்றுகை
,,	1307	மாலிக்காபர் தக்காணப் படையெடுப்பு
,,	1320-1414	துக்ளக்கு வமிசத்தாரின் ஆட்சி
,,	1325-51	முகம்மது துக்ளக்கு
,,	1336	விஜயநகர ஸ்தாபனம்
,,	1346	பாமனி ராஜ்ய ஸ்தாபனம்
,,	1351-88	பிரோஜ்ஷா துக்ளக்கின் ஆட்சி
,,	1398	தைமூரின் படையெழுச்சி
,,	14145-1	சையது வமிசத்தவரின் ஆட்சி
,,	1451-1526	லோடி வமிசத்தாரின் ஆட்சி
,,	1469	குரு நானக்குப் பிறந்தது
,,	1489	பாமனி ராஜ்யம் ஐந்து ராஜ்யங்களாகப் பிரிந்தது
,,	1499	வாஸ்கோடகாமா இந்தியாவுக்கு வந்தது

கி. பி.	1509-29	விஜய நகரத்தில் கிருஷ்ணதேவ ராயரின், ஆட்சி
,,	1510	கோவா போர்த்துகீசியருக்குச் சொந்தமானது
,,	1526	முதல் பானிப்பட்டுச் சண்டை-மொகலாய ராஜ்ய ஸ்தாபனம்
,,	1526-30	டில்லியில் பாபரின் ஆட்சி
,,	1527	கான்வாஹாச் சண்டை-ராணுசங்கரின் தோல்வி
,,	1530-56	ஹுமாயூன் ஆட்சி
,,	1540	கன்னோசிச் சண்டை-ஹுமாயூன் சிம்மாசன மிழந்தது
,,	1540-45	ஷெர்ஷாவின் ஆட்சி
,,	1542	அக்பர் அமரக்கோட்டையில் பிறந்தது
,,	1556-1605	அக்பரின் ஆட்சி
,,	1556	இரண்டாம் பானிப்பட்டுச் சண்டை
,,	1565	தலைக்கோட்டை-யுத்தம். விஜய நகரத்தின் அழிவு
,,	1567	அக்பர் சித்தூரைக் கைப்பற்றுதல்
,,	1595	அக்பர் ஆமது நகரைத் தாக்கியது-சாந்து பீபியின் வெற்றி
,,	1600	கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனி ஸ்தாபிக்கப் பட்டது
,,	1605–1627	ஜஹாங்கீரின் ஆட்சி
,,	1616	சூரத்தில் டச்சுக்காரர் பண்டகசாலை ஏற்படுத்தியது
,,	1615–1618	ஸர் தாமஸ் ரோ டில்லியில் தாமசித்தது
,,	1627	சிவாஜியின் பிறப்பு
,,	1627–1658	ஷாஜஹானின் ஆட்சி
,,	1637	தாஜ் மஹால் கட்ட ஆரம்பித்தது
,,	1639	ஆங்கிலேயர் சென்னையை ஸ்தாபித்தது
,,	1658-1707	ஔரங்கசீபின் ஆட்சி
,,	1659	அப்ஸல்கான் சிவாஜியால் கொல்லப்பட்டது
,,	1663	ஷெயிஸ்டகான் விரட்டப்பட்டது
,,	1664	பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்தாபனம்
,,	1668	பம்பாய் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது

கி. பி.	1674	சிவாஜி மகாராஜாவின் மகுடாபிஷேகம் புதுச்சேரி ஸ்தாபிக்கப்பட்டது
,,	1680	சிவாஜியின் மரணம்-சாம்பாஜி மகாராஷ்டிர மன்னரானது
,,	1686-87	மொகலாயர் பிஜப்பூர், கோல்கொண்டாவைக் கைப்பற்றியது
,,	1690	கல்கத்தா நகரம் ஸ்தாபிக்கப்பட்டது
,,	1708-12	பஹதூர் ஷாவின் ஆட்சி
,,	1708	சாஹு மாகாராஷ்டிர மன்னரானது
,,	1714-20	பாலாஜி விஸ்வநாத்து முதல் பீஷ்வா
,,	1712-19	பரூக்ஸியரின் ஆட்சி
,,	1719-48	முகம்மது ஷாவின் ஆட்சி
,,	1720-40	பாஜிராவ் இரண்டாம் பீஷ்வா
,,	1723	ஹைதராபாது ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது
,,	1739	நாதர்ஷா இந்தியாவின்மீது படையெடுத்தது
,,	1741-45	டியூப்ளே புதுச்சேரிக் கவர்னரானது
,,	1744	அன்வருதீன் கர்நாடக நவாபானது
,,	1748	நிஜாம்-உல்-முல்கின் மரணம்-இரண்டாவது கர்நாடக யுத்தம்
,,	1751	கிளைவ் ஆற்காட்டைப் பிடித்தது
,,	1748-54	ஆமது ஷாவின் ஆட்சி
,,	1754-59	ஆலம்கீரின் ஆட்சி
,,	1759-1806	ஷாஆலம் டில்லியில் ஆண்ட கடைசி மொகலாய அரசர்
,,	1757	பிளாஸிச் சண்டை
,,	1757-60	கிளைவ் வங்காளக் கவர்னர்
,,	1758	வட சர்க்கார் ஆங்கிலேயர் வசமானது
,,	1759	வந்தவாசிச் சண்டை
,,	1761	மூன்றும் பானிப்பட்டுச் சண்டை
,,	1762	ஹைதர் அலி மைசூரில் மன்னரானது
,,	1764	பக்ஸார்ச் சண்டை
,,	1765	அலஹபாது உடன்படிக்கை
,,	1767-69	முதலாவது மைசூர் யுத்தம்
,,	1772	வாரன்ஹேஸ்டிங்ஸ் வங்காளக்கவர்னரானது
,,	1773	ரெகுலேட்டிங் ஆக்டு
,,	1774-86	வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜெனரல்

கி. பி.	1778-82	முதல் மகாராஷ்டிர யுத்தம்-ஸால்பை உடன்படிக்கை
,,	1780	இரண்டாவது மைசூர் யுத்தம்
,,	1784	பிட்டு இந்தியா சட்டம்-மங்களூர் உடன்படிக்கை
,,	1786-93	காரன்வாலிஸ் பிரபு
,,	1790-92	மூன்ருவது மைசூர் யுத்தம்-ஸ்ரீரங்கபட்டண உடன்படிக்கை
,,	1793	சாசுவத நிலவரிச் சட்டம்
,,	1793-98	ஸர் ஜான் ஷோர்
,,	1795	கர்தாச் சண்டை
,,	1796	பீஷ்வா இரண்டாம் பாஜிராவ்
,,	1798-1805	வெல்லெஸ்லி பிரபு
,,	1799	நான்காவது மைசூர் யுத்தம்
,,	1800	நாஞ பர்ஞவிஸ் மரணமடைந்தது
,,	1801	கர்நாடகம் ஆங்கிலேய ஆட்சிக்குள் வந்தது
,,	1802	பஸ்ஸீன் உடன்படிக்கை
,,	1802-05	இரண்டாவது மகாராஷ்டிர யுத்தம்
,,	1805-17	ஸர் ஜார்ஜ் பார்லோ
,,	1807-13	மிண்டோ பிரபு கவர்னர் ஜெனரல்
,,	1809	இரஞ்சித் சிங்குடன் உடன்படிக்கை
,,	1813-23	ஹேஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜெனரல்
,,	1814-16	நேப்பாள யுத்தம்
,,	1817	பிண்டாரி யுத்தம்
,,	1817-18	கடைசி மகாராஷ்டிர யுத்தம்—பீஷ்வா ஆட்சியின் முடிவு-பம்பாய் ராஜதானி ஸ்தாபிக்கப்பட்டது.